உ

கணபதி துணை

திருவாவடுதுறையாதீனத்துத்

தொட்டிக்கலைச்

சுப்பிரமணியமுனிவர்

இயற்றிய

திருவாவடுதுறைக்கோவை.

இது

சிதம்பரம்

ஸ்ரீமீனாக்ஷி தமிழ்க் காலேஜ் பிரின்ஸிபாலாகிய

மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி

உ. வே. சாமிநாதையரால்

அரும்பதவுரை முதலியவற்றுடன்

சென்னபட்டணம்

கமர்ஷியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

அக்ஷய ௵ ஆனி௴

1926

இரண்டாம்பதிப்பு.

விலை அணா - ௧0.

Copyright Registered.

இப்புத்தகத்திலடங்கியவை.

க. நூற்பெயர் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி, v—vi.

உ. முகவுரை, vii—viii.

ங. நூலாசிரியர் வரலாறு, ix—xvi.

ச. நூலாராய்ச்சி, xvii—xxiv.

ரு. பிழையுந் திருத்தமும், xxiv.

சா. திருவாவடுதுறைக்கோவையும் அரும்பதவுரையும், க—எரு.

எ. அரும்பதவுரையின் அநுபந்தம், எசா—சூஅ.

அ. தினவிக்கோத்து, சூசா.

கூ. செய்யுண் முதற்குறிப்பகராதி, கoக—கoச.

நூற்பெயர் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி.

அகநா - அகநானூறு.

அம்பிகாபதி - அம்பிகாபதிகோவை.

அருணைக் - அருணைக்கலம்பகம்.

ஐங்குறு - ஐங்குறுநூறு.

கந்த - கந்தபுராணம்.

கந்தர்கலி - கந்தர்கலிவெண்பா.

கம்ப - கம்பராமாயணம்.

கலி - கலித்தொகை.

கலைசைச்சிலேடை - கலைசைச்சிலேடைவெண்பா.

காஞ்சி - காஞ்சிப்புராணம்.

குற்றாலப் - திருக்குற்றாலப்புராணம்.

குறுந் - குறுந்தொகை.

சிலப் - சிலப்பதிகாரம்.

தண்டி - தண்டியலங்காரம்.

சீவக - சீவகசிந்தாமணி.

தஞ்சை, தஞ்சைவாணன் - தஞ்சைவாணன்கோவை.

திணைமா - திணைமாலை நூற்றைம்பது.

திருச்சிற் - திருச்சிற்றம்பலக்கோவையார்.

திருநாகை - திருநாகைக்காரோணப்புராணம்.

திருவா - திருவாசகம்.

திருவிளை - திருவிளையாடல்.

நள - நளவெண்பா.

நால்வர்நான்மணி - நால்வர் நான்மணிமாலை.

நாலடி - நாலடியார்.

நான்மணி - நான்மணிக்கடிகை.

நைடத - நைடதம்.

பட்டின - பட்டினப்பாலை.

பத் - பத்துப்பாட்டு.

பரி - பரிபாடல்.
பி.ம் - பிரதிபேதம்.
பிரபுலிங்க - பிரபுலிங்கலீலை.
பிரபோத - பிரபோதசந்திரோதயம்.
புறநா - புறநானூறு.
பு-வெ - புறப்பொருள்வெண்பாமாலை.
பெரிய - பெரியபுராணம்.
பெருங் - பெருங்கதை.
பொருந - பொருநராற்றுப்படை.
மணி - மணிமேகலை.
மலைபடு - மலைபடுகடாம்.
மீனாட்சியம்மை - மீனாட்சியம்மைபிள்ளைத்தமிழ்.
முருகு - திருமுருகாற்றுப்படை.
மேற் - மேற்கோள்.
யா - யாப்பருங்கலம்.
வியாசைக் - வியாசைக்கோவை.
வி - பார, வி - பாரதம் - வில்லிபுத்தூராழ்வார்பாரதம்.
வெங்கைக் - வெங்கைக்கோவை.

கணபதிதுணை.

முகவுரை.

கோவையென்பது, தமிழ்ப்பாஷைக்குரிய தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று; காட்சிமுதலிய துறைகள் முறையே கோக்கப்பட்ட நூலென்பது இம்மொழியின்பொருள்; இஃது ஐந்திலக்கணங்களுட் பொருளின்பகுதியாகிய அகப்பொருளிலக்கணத்திற்கு இலக்கியமாக அமைந்துள்ளது; குறிஞ்சித்திணைமுதலிய ஐந்திற்கும் உரியனவாக முன்னோர்கள் விதித்த முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள்முகமாகத் தலைவன்தலைவிகளுடைய ஒழுக்கங்களை உலகவழக்கம் செய்யுள்வழக்கமென்னுமிரண்டிற்கும் ஒப்ப நன்குதெரிவிப்பது; இதனால் இந்நூல் **ஐந்திணைக்கோவையென்றும்** பெயர்பெறும். பன்னிருபாட்டியல் முதலிய பாட்டியல்களில் இப்பிரபந்த இலக்கணமும், தொல்காப்பியம் இறையனாரகப்பொருள் முதலிய நூல்களில் இதிலுள்ள அகப்பொருளமைதிகளும் கூறப்பட்டுள்ளன. கட்டளைக்கலித்துறைச்செய்யுளாற் செய்யப்படவேண்டுமென்பதும், அச்செய்யுள் நானூற்றிற்குக் குறையாமலிருக்கவேண்டுமென்பதும், இன்னுஞ்சிலவும் இந்நூலுக்குரியவிதிகள். தாம் வழிபடுதற்குரிய தேவர்கள்மீதும் தம்மை ஆதரிக்கும் பிரபுக்கள்மீதும் பண்டைக்காலந்தொடங்கிப் பலபெரியோர்களாற் செய்யப்பட்டுப் பற்பல நூல்கள் இப்பிரபந்தவகையில் வழங்கிவருகின்றன. **திருச்சிற்றம்பலக்கோவையார், தஞ்சைவாணன்கோவை** முதலிய கோவைகளில் இவ்விருபகுதிகளும் மற்றை அமைதிகளும் அறியற்பாலன. அவற்றுள்,—

திருவாவடுதுறைக்கோவை யென்பது திருவாவடுதுறையிற் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மாசிலாமணியீசர்மீது திருவாவடுதுறையாதீனத்துச் **சுப்பிரமணியமுனிவர்** இயற்றியது; இது **துறைசைக்கோவை**யெனவும் வழங்கும். [துறைசையென்பது திருவாவடுதுறையென்னும் பெயரின் மரூஉ.] இதில் ௪௫௯-செய்யுட்களுள்ளன; இன்றியமையாத ஓசையினிமை, எதுகைநயம், மோனை

நயம், வழியெதுகை, வழிமோனை, முரண், மடக்கு, யமகம், திரிபு, சிலேடை முதலியனவும், உள்ளுறையுவமமுதலியனவும், தொனியும் இந்நூலிற் பரக்கக்காணலாம்.

அன்றியும் இத்தலத்தின் விசேடமுதலியவற்றையும் இத்தலத்தில் வழிபட்டோர்கள் அடைந்த பெரும்பேறுகளையும் சைவசாஸ்திரக் கருத்துக்கள் முதலியவற்றையும் இந்நூலில் ஆங்காங்கு நூலாசிரியர் விளக்கிக்காட்டியிருத்தல் மிக வியக்கற்பாலது. இதுநிற்க.

இந்நூல் அரும்பதவுரை முதலியவற்றுடன் 1903-ஆம் வருடம் முதன்முறை பதிப்பிக்கப்பெற்றது. இப்பதிப்பில், அரும்பதவுரையும், பிரதிபேதமும் அவ்வப்பக்கத்தில் அடிக்குறிப்பாகச் சேர்க்கப்பெற்றுள்ளன. நூலும் உரையும் முடிந்தபின், வேறுசில குறிப்புக்களிருந்தால் படிப்பவர்களுக்கு உபயோகமாக இருக்குமென்று தோற்றினமையால் அவை எழுதப்பெற்று 'அரும்பதவுரையின் அநுபந்தம்' என்றபெயருடன் பின்னே சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த ஆதீனசம்பந்தமான நூலைப் பதிப்பிக்கும்படிசெய்த நல்வினையின்பால் மிக்க நன்றியறிவுடையேன்.

திருச்சிற்றம்பலம்.

தேவாரம்.

கங்கை வார்சடை யாய்கண நாதா காலகாலனே காமனுக் கனலே
பொங்கு மாகடல் விடமிடற் றானே பூத நாதனே புண்ணிய புனிதா
செங்கண் மால்விடை யாய்தெளி தேனே தீர்த்த னேதிரு வாவடு துறையு
ளெங்க ளுவெனை யஞ்சலென் றருளா யாரெனக்குற வமரர்க ளேறே.

சென்னை,
19—6—26.

இங்ஙனம்,
வே. சாமிநாதையன்.

நூலாசிரியர் வரலாறு.

இந்நூலாசிரியராகிய **சுப்பிரமணியமுனிவர்.** சிதம்பரத்தைச் சார்ந்த **காட்டுமன்னார்கோயிலில்,** ஸ்ரீவீரநாராயணப்பெருமாள் கோயில் மேலைவீதியின் கீழ்ச்சிறகிலுள்ளதொருவீட்டிற் **கார்காத்த வேளாளவருணத்திற் பூநோடையார் கோத்திரத்தில்** ஜனித்தவர்; துறவறம் பூண்டொழுகியவர்; சித்தாந்த சைவர்; முருகக்கடவுளை உபாசித்து மந்திரசித்தி பெற்றவர். இவர் பிறந்தவருடமும், இவருடைய இல்லற வரலாறுகளும் இப்பொழுது தெரியவில்லை. ஆனாலும், விசுவாவஸு வரு [சாலிவாகன சகாப்தம் ௧௭௦௮; கொல்லமாண்டு ௯௬௦-௯௬௧, கி. பி. ௧௭௮௬ -௮௭] சித்திரைமீ பரிபூரணமான **ஸ்ரீசிவஞானமுனிவருடைய** பிரிவையாற்றாது, "நினைக்காற் சகிக்கப்போமோ" என்னும் கீர்த்தனையை இயற்றியிருப்பதோடு, ஆவினன்குடிப் பதிற்றுப்பத்தந்தாதியை, பின்னர் கீலக வரு [சாலி. ௧௭௧௧; கொல்லம். ௯௬௩-௪; கி. பி. ௧௭௮௮-௯] தைமீ த்தில் *அரங்கேற்றியதாகத் தெரிகின்றமையாலும் இவர் இற்றைக்கு ஏறக்குறைய ௧௫௦ வருடங்களுக்கு முன்வரையில் இருந்தாரென்று ஒருவாறு தெரிகின்றது.

[வித்தியாகுரு]

இவர், சிவஞானபோதத்தின் திராவிட மகாபாஷ்ய கர்த்தராகிய திருவாவடுதுறை ஸ்ரீ **சிவஞானமுனிவரிடம்** தமிழ்ப்பாஷையிலுள்ள **இலக்கண** இலக்கியங்கள் பலவற்றையும் உரைநடைகளையும் சைவ சாஸ்திரங்களையும் முறையே கற்றுப்பயின்று அவருடைய மாணாக்கர்கள் பன்னிருவர்களுள் ஒருவராய்ச் செய்யுள்செய்தலிலும் மிக்க வன்மையுடையவராயினார். அம்மகானை வித்தியா குருவாகப்பெற்ற இவர் கற்றமுறையைச் சொல்லவும் வேண்டுமோ! இவர் கல்விபயின்றது அப்பெரியோருடைய வாழ்நாட்களுட் பிற்காலம் அஃது அவர் தொட்டிக்கலையில் இருந்தகாலமென்று தெரிகிறது. [தொட்டிக்கலையென்பது தொண்டைநாட்டிலுள்ளதோரூர்.] அவரிடம் இவருக்கிருந்த மெய்யன்பிற்கு எல்லையின்று; அவர்மீது இவரியற்றிய †'கருணைபொழி திருமுகத்தில்", "திண்ணமின்பச் சேவடியும்", "ஓதரிய வாய்மை" என்னுஞ் செய்யுட்களும், அவர் பரிபூரணமானது தெரிந்து ஒருவாற்றானும் பிரிவாற்றாதுவருந்தி இவரியற்றிய, "நினைத்தாற் சகிக்கப்போமோ வென்சுவாமியை" என்னுங் கீர்த்தனையும் இதனை நன்கு புலப்படுத்தும். பின்னும், அவருடைய பிரிவாற்றாத இவர் தொட்

* அரங்கேற்றிய காலவிவரத்தை xvi-ஆம் பக்கத்திற்காண்க.

† இச்செய்யுட்கள் சிவஞானமுனிவர் பிரபந்தத்திரட்டிலுள்ளன.

டிக்கலைச் சிதம்பரேசர் திருக்கோயிற் சந்நிதிமண்டபத்தில் அவருடைய திருவுருவமைப்பித்து அதனை நாள்தோறும் போற்றி வழிபட்டு வந்தனரென்றுஞ் சொல்லுவர்; இது மேற்கூறிய செய்யுட்களுள், "ஓதரிய வாய்மை" என்பதிலுள்ள,

"அழகுபொலி கலைசைச் சிதம்பரேசுராடிக்
கதிமதர கவிதைமாரி
மாதவர் வழுத்தப் பொழிந்தருளி யென்றுமவர்
மன்னிவளர் சந்நிதியிலோர்
மணிவிளக் கென்னவளர் சிவஞான மாதவன்
மலர்ப்பதம் வணங்குவாமே"

என்பதனால் தெரிகின்றது.

[ஞானதரு.]

திருவாவடுதுறையாதீனத்தில் கங-ஆம் பட்டத்திருந்த அம்பலவாணதேசிகரிடத்துச் சைவசந்நியாசமும் சிவதீக்ஷையும் ஞானோபதேசமும் பெற்றவர். இவர் இவைகள்பெற்றது, திருச்சிற்றம்பலதேசிகர் பெரியபட்டத்திலும் அம்பலவாணதேசிகர் சின்னப்பட்டத்திலுமுள்ள காலமென்று தெரிகிறது. [திருச்சிற்றம்பலதேசிகர் எப்பொழுதும் சிவாகம ஆராய்ச்சியையே செய்துவந்தாரென்றும், அதனால், அவர்செய்தற்குரிய காரியங்களிற் பெரும்பாலனவற்றை அவர்கட்டளையால் அம்பலவாணதேசிகர் செய்துவந்தாரென்றும் சொல்லுவர்.] இவர் திருச்சிற்றம்பலதேசிகர்மீது சிந்துமுதலியன செய்திருத்தலும் இவரியற்றிய நூல்கள்வரைந்துள்ள ஏட்டுப்புத்தகங்கள் சிலவற்றில், 'திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறை நமச்சிவாயகுருமரபில் அம்பலவாணதேசிகருடையஞானபுத்திரனான சுப்பிரமணிய தம்பிரான்செய்தது இந்நூல்' என்று வரையப்பட்டிருத்தலும் இதற்குத் தக்கசான்றாகும். [ஞானாசிரியரை ஞானபிதாவென்றலும் ஞானோபதேசம் பெறறுக்கொண்ட சிஷ்யரை ஞானபுத்திரரென்றலும் மரபு.]

[கல்விவளர்ச்சி.]

ஆதீனத்தில் தம்மைப்போன்றவர்களும் தமக்கு மேலானவர்களுமாக இருந்த பல கல்விமான்களோடு இடைவிடாது பழகுதலும் மாணாக்கர்களுக்குப் பாடஞ்சொல்லுதலும் அவைக்களத்திற் பிரசங்கித்தலும் ஆகிய இவைகள் புண்ணிய மிகுதிபற்றி இவர்க்கு வாய்த்திருந்தனவாதலால், இவருடைய புலமை மேன்மேலும் மாட்சிமையுற்றுவிளங்கிற்று; "அவ்வினை யாளரொடு பயிலவகை யொருகாற், செவ்விதி னுரைப்ப வவ்விரு காலு, மையறு புலமை மாண்புடைத் தாகும்" என்றாரன்றோ.

[விசேடகுணங்கள்.]

வித்தியாகுருவினிடத்தும் ஞானாசிரியரிடத்தும் இடைவிடாத மெய்யன்புடைமை, சிவபக்தி, அடியார்பக்தி, கல்விமான்களை ஆத

ரித்தல், நன்றிமறவாமை, மேன்மேலும் நூல்களை ஆராய்தல், அழுக்காறின்மை, பிறர்பாலுள்ள குணங்களைப் பாராட்டல், ஸ்தல யாத்திரையில் விருப்பம், யாவர்க்கும் பொருள்விளங்க எளியநடையாக விரைவில் எவ்வகையான செய்யுட்களையும் செய்யும்வன்மை, சங்கீதப்பயிற்சி ஆகிய இவைகள் இவர்பால் அமைந்திருந்த விசேட குணங்கள். இவர் இவற்றையுடையராயிருந்தமை இவருடைய சரித்திரத்தையும் இவரியற்றிய செய்யுட்களையும் உற்றுநோக்குவோர்க்கு நன்குவிளங்கும்.

[சிறப்புப்பெயர்.]

கேட்டவர்கள் வியக்கும்படி மிகவும் இனிமையான செய்யுள் செய்தலில் வல்லுநராயிருந்ததுபற்றி, இவர் மதுரகவியென்று ஆதீனத்திற் சிறப்புப் பெயர்பெற்று விளங்கினர். தொட்டிக்கலையிற் பெரும்பாலும் இருந்தமையின், தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவரெனவும் தொட்டிக்கலைச் சுப்பிரமணிய தம்பிரானெனவும் இவர்பெயர் வழங்கும்.

[இவர்காலத்திருந்த தமிழ்வித்துவான்கள்.]

சிவஞானமுனிவருடைய மாணாக்கர் பன்னிருவருள் இவர் ஒருவரென்று தெரிதலால், அம்முனிவரும், அவருடைய மற்ற மாணாக்கர்களாகிய இலக்கணம் சிதம்பரநாதமுனிவர், கச்சியப்பமுனிவர், இராமநாதபுரம் சோமசுந்தரம்பிள்ளை, காஞ்சீபுரம் சரவணபத்தர் (ஏனை எழுவர்பெயரும் தெரியவில்லை) முதலியவர்களும், சென்னையில் ஸ்ரீ கச்சியப்பமுனிவர் விநாயகபுராணமியற்றும்போது இருந்தவரென்று சொல்லப்படும் சீகாழி வடுகநாததேசிகரும் இவர் காலத்திலிருந்த தமிழ்வித்துவான்களென்று தெரிகிறது.

[ஆதரித்த பிரபுக்கள்.]

தொட்டிக்கலைக் கேசவமுதலியார், *வேதாசலமுதலியாரென்னுமிருவரும் இவரை மிகப் பாராட்டிவந்ததன்றி ஷை ஊர்ற கோயில் கொண்டெழுந்தருளிய ஸ்ரீ சிதம்பரேசர் சந்நிதியினருகே மடமொன்று கட்டுவித்து அதில் இருக்கும்படிசெய்து ஆசிரியராகக் கொண்டு குறிப்பறிந்தொழுகி மிக்க பணிவுடன் ஆதரித்துவந்தார்கள்; "தொட்டிக், கலைகேசவன்மெய்ப் புகழ்போல விளங்குங் கதிர்ப் பிறையை" என்றும், "வேதாசலத்தன் புகழ்போல விளங்குக வெண்சங்கமே" என்றும் தாம்பாடிய கலைசைக்கோவைச் செய்யுட்களில் இவர் அவர்களைப் பாராட்டியிருத்தல் இதனை வலியுறுத்தும். அவ்வூரில் இவரிருந்தமடம் இப்பொழுதும் சாமியார்மடமென்று வழங்கப்படுகின்றது.

---

*இந்த வேதாசல முதலியார் படத்தை, சப - வருடங்களுக்குமுன்பு பூண்டி ஸ்ரீஅரங்கநாத முதலியாரவர்கள் [எட-ஏ] வீட்டிற் கண்டதுண்டு,

[சஞ்சரித்த இடங்கள்.]

இவர் இடையிடையே சென்று சிற்சிலவருடங்கள் தொட்டிக்கலையில் இருந்துவந்ததன்றித் திருச்செந்தூர், திருக்குற்றாலம், பழநி, திருத்தணிகை, வடதிருமுல்லைவாயில், திருவொற்றியூர், ஆயலூர், ஆவினன்குடி, திருவல்லிக்கேணி முதலிய ஸ்தலங்களுக்கும் யாத்திரையாகச் சென்றுசென்று அவ்வவ்விடத்தே சிலசிலநாள் தங்கிவந்தனர். இதனை இவரியற்றிய பிரபந்தங்களும் தனிச்செய்யுட்களும் தெரிவிக்கின்றன.

[சிலபாடல்கள்.]

இவர் அவ்வச்சமயங்களிறசெய்த அழகிய தனிப்பாடல்கள் பல. அவற்றுட் சில வருமாறு:—

இவர் விரைவிற் பாடுதலைக்கேட்ட அம்பலவாணதேசிகர், ஒரு சமயத்தில், "நம்முடைய ஆசிரியராகிய திருச்சிற்றம்பலதேசிகர்மேல், 'குருதிருச்சிற் றம்பலவெங் கோ' என்பதை ஈற்றடியாகவைத்து நேரிசைவெண்பா ஒன்றியற்றுக" என்று கட்டளையிட, உடனே இவர் பாடியது:—

முனிக்குமுனி யானை முனிந்தே பொதியின்
முனிக்குமுனி யாதளித்த மூர்த்தி - முனிக்குப்
பொருகளிறு நீருட்டும் பொன்னித் துறைசைக்
குருதிருசசிற் றமபலவெங் கோ.

[முன் இக்கு முனியானை முனிந்து - முன்பு கரும்பு வில்லையுடைய மன்மதனைக் கோபித்து; முனி - வில். பொதியின்முனி - அகத்தியர். முனி - யானைக்கன்று. பொன்னி - காவிரி.]

ஆதீனத்தில தேவாரப்பணிவிடைசெய்யும் ஓதுவார்களுட் குருசாமியோதுவாரென்று ஒருவருண்டு; அவர் சங்கீதத்தில் நல்ல பயிற்சியுடையவர்; இனிய சாரீரமுடையவர்; இவர்பால மிக்க அன்பினர்; இவரியற்றிய பழநிக் குழந்தைவேலர் பஞ்சரத்தினமாலை முதலிய பிரபந்தங்களை இசைவரம்புடன் பாடி உவப்பித்து வருபவர். அவர் வழக்கப்படி ஒருநாள் அம்பலவாணதேசிகருடைய பூஜாகாலத்தில் மற்றவர்களோடுசேர்ந்து தேவாரங்களைப் பண்ணுடன் ஓதுவாராயினர்; அப்பொழுது தரிசனத்திற்குச்சென்ற இவர், அவருடைய இனியசாரீரம் மற்றையோர் சாரீரங்களிலும் மிகச்சிறந்துவிளங்குதலை அறிந்து,

கட்டளைக்கலித்துறை.

ஒருசாமி வாழ்திருக் கோமுத்தி யூர்தனி லுற்பவித்து
வருசாமி யெங்கள் வயித்திய லிங்கம் வலம்புரிந்து
தருசாமி முத்தமிழ்ச் சங்கீத சாமிநற் சாந்தகுணக்
குருசாமி நின்குர லெங்காளுஞ் சோகிலங் கோகிலமே

என்னும் செய்யுளையியற்றி, பூசைமடத்திலிருந்து வெளிப்பட்ட ஆசிரியர்க்கு விண்ணப்பஞ்செய்து உவப்பித்தனர். [வைத்தியலிங்கமென்பது குருசாமியோதுவாருடைய தந்தையார் பெயர்.]

தொட்டிக்கலை முதலிய இடங்களிற் சிலவருடந் தங்கிவிட்டுவந்த பொழுது மடத்திலிருந்த அன்பர்கள் இவரைநோக்கி, 'தேவர் இந்த இடத்தை மறந்தீர்போலும்' என்றுசொல்ல, அப்பொழுது பின்னுள்ள இரண்டு பாடல்களையும் இவர் இயற்றினர்:—

(விருத்தம்.)

க. தெய்வப் பொன்னித் திருநதிசூழ் சிறப்பு மிருகான் கொருகோடி
சித்தர் வாழுந் திருவரசு மதனுக் கொருமா சிலாமணியு
மைவைத் தனைய விருட்டறையிற் றுரந்தா மாறு மான்மாக்கண்
மலநோ யகற்றுங் கதியளிப்பான் வந்தவ் வவர்புன் றலைமீது
கைவைத் தருளி முறையேபொற் கழலுஞ் சூட்டுங் கோமுத்திக்
கருணைக் கடலுஞ் சாசகரதே சிகன்சீ ரடியார் கலந்திருக்குஞ்
சைவத் திருவோ லக்கமுமங் கண்டேனக் கைலை தனையொருகாற்
சார்ந்து மீளவேன் மற்றிங்குத் தரியே னிங்குத் தரியேனே.

வேறு.

உ. எத்தலமு மெங்கதியு மெத்தளியு நிருமூர்த்த மெனைத்தும் போதி
மெய்த்தருவோங் கியதுறைசைத் திருநகருங் காவிரியும் விடையு றுச்சோ
வத்திருக்கோ யிலுமாசி லாமணியு மதனருகா னந்த வைப்பி
னுத்தமபஞ் சாக்கரசற் குருமணியு மாகியெனை யுருக்கு மன்றே.

[விடையுறுச்சோ - நந்திகளில்லாத திருமதில். நாரசிங்கனென்னும் கொடிய அரசனொருவனை வெல்லும்படி, ஸ்ரீ கோமுத்தீசர் திருக்கோயிலின் மதிலின் மேலிருந்த இடபங்களைத் திருமாளிகைத் தேவர் ஒருருவாக்கி அனுப்பினரென்பர்; இதனை, "மதின்மேனந்திகளைவர வழைத்தும்" என்னும் திருமாளிகைத்தேவர் திருவிருத்தத்தாலு முணர்க.]

இக்கோவையை இவர் அரங்கேற்றிக்கொண்டு வருகையில், நாள் தோறும் வந்து கேட்டுக்கொண்டு இன்புற்றிருந்த அன்பர்களுள் ஒருவர், 'பிறர்க்கு எளிதிற் பொருள்புலப்படாதபடி அகப்பொருட்டுறையை அமைத்து, அம்பலவாணதேசிகர்மீது செய்யுள் செய்து தருக' என்று வேண்ட, இவரியற்றிய வெண்பாக்கள் வருமாறு:—

வெறிவிலக்கல்.

க. இத்தை யனையவுரு வில்லாளை வடுமலரே
வைத்தகரை யோட்டுக்க மாட்டாதே - நித்தநித்த
மங்கமுகங் காத்துறைசை யம்பலவா ணன்புயத்திற்
செங்கழுநீர்த் தாரளையே தேடு.

[இத்தையலனைய - இப்பெண் மெலியும்படி. மலரேவை - மலர்ப்பாணத்தை. தகர் - ஆடு. அணிய செங்கழுநீர்த்தாரைத் தேடு.]

உ. இந்தவச மந்தவசந் தம்மையெல்லாத் தக்குசெயு
மொத்தவச முற்றுமேக் கொக்குமோ - பைந்தொடியா
யாண்டகுருத் தென்றுறைசை யம்பலவா ணன்புயத்திற்
பூண்டசெங் கழுநீர்ப் பூ.

[இந்த அசம் - இந்தஆடு. வசந்தன் - மன்மதன். பைந்தொடி- விளி. செங்கழுநீர்ப்பூவை ஆய்வாயாக; ஆய்தல் - ஈண்டுத் தேடிக் கொணர்தல்.]

திருவொற்றியூர் சிவபெருமான்மீது இயற்றிய வெண்பா.

வல்லவகு ளத்திருக்கு மன்னவா வீரசமலி
நல்லவகு ளத்திருக்கு நாதனே - மெல்ல
வடிவாளைக் கொண்டமண வாளா கணிச்சி
வடிவாளைக் கொண்டெனிடர் மாற்று.

[குளத் திருக்கு - நெற்றிக்கண். வகுளம் - மகிழமரம்; இது திருவொற்றியூர்த் தலவிருக்ஷம். கணிச்சி - மழு. வடிவாளை - வடிவாளென்னுந் திருநாமமுடைய உமாதேவியாரை,கூரிய ஆயுதத்தை.]

சென்னையிலிருக்குநாட்களுள் ஒருநாள் இவர் தம்மையழைத்த சில பிரபுக்களுடன்சென்று திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாளைத் தரிசித்து, அவர்கள் விரும்பியவண்ணம் அப்பெருமாள் மீதுபாடிய கட்டளைக்கலித்துறை:

பாங்கிகூற்று.

திருவல்லிக் கேணி வடிவந் தனஞ்சொற்கட் சீர்ச்சிலம்ப
திருவல்லிக் கேணி யலருமுன் னேயருள் செய்யவெழுந்
திருவல்லிக் கேணிபஞ் சொல்லிர்கண் முத்தங்கள் சிந்துங்கண்டாய்
திருவல்லிக் கேணி மருவிய சங்கத் திருக்கரனே.

[திருவல்லிக்கேணி மருவியசங்கத திருக்கரனே— திரு வல் இக்கு ஏணி- முறையே திருமகளையும் சூதாடுகருவியையும் கரும்பையும் மானையும்போன்ற, வடிவம் தனம் சொல் கண் - வடிவத்தையும் தனத்தையும் சொல்லையும் கண்ணையுமுடைய, சீர் சிலம்பு அதிர் உ வல்லிக்கு - சிறப்புப்பொருந்திய சிலம்புகள் முழங்கப்பெற்ற இந்தக் கொடிபோல்வாளாகிய தலைவிக்கு, ஏணி அலரும் முன்னே - சூரியன் உதிக்குமுன்னே, அருள்செய்ய எழுந்திரு—; வல்லிக்கேள்- விலங்கைப்போல்ச் சூழ்ந்துவருத்தும் உறவினர், நிபம சொல்லின்- பழிமொழிகளைக் கூறுவாராயின், கண் முத்தங்கள் சிந்தும்—. ஏணியென்பது எல்லையையுணர்த்த, எல்லையெனபது சூரியனையுணர்த்திற்று; நிபம் - திசைச்சொல். 'வல்லிக்கேள்' என்பதை வலிய இந்தக்கேளென்றும், உயிர் முதலாக்கி அல் இக்கேளென்றும் பிரித்துப் பொருள்கூறுதலுமுண்டு.]

பின்பு இவர் அவர்களுடன் தம்மிடஞ்சென்றபொழுது, ஆங்குள்ளோர்களிற் சிலர், 'விஷ்ணுவைத் தேவர் பாடலாமோ?' என்று வினவ, இவர் 'நான சிவவிஷயமாகவேதான் பாடினேன்' என்று சொல்லி, உடனே அச்செய்யுளின் முன்புள்ள எல்லாப்பாகத்திற்கும் முன்பு குறித்தவாறே பொருள்கூறி, 'சங்கத்திருக்கரனே' என்பதை மட்டும் சங்கம் திருக்கு அரனே என்றுபகுத்து, நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானே யென்று வேறு பொருள்கூறித் தமது ஆற்

நிலை விளக்கி அவர்களுக்குப் பெருவியப்பை விளைவித்தனர். [சங்கம்-நெற்றி.]

இங்ஙனம் சமயோசிதமாக இவரியற்றிய தனிச்செய்யுட்களும் கீர்த்தனைகளும் பற்பலவுண்டென்பர்.

[இவர் நூல்களுக்குள்ள மதிப்பு.]

இவரியற்றிய நூல்களுட் கலைசைச்சிலேடை வெண்பா சை ஆதீனத்தும் அதிற் கல்விபயின்ற தமிழ்வித்துவான்களிடத்தும் கற்கும் மாணாக்கர்களுக்கு முதன்முறை கற்பிக்கப்பட்டுவருகின்றது. திருவாவடுதுறைக்கோவைச் செய்யுட்கள் அத்தலத்து ஸ்ரீ தியாகேசப் பெருமான் சந்நிதியில் ஒவ்வொரு தினத்திலும், திருக்குற்றாலச்சித்திர சபைத்திருவிருத்தமும் திருத்தணிகைத்திருவிருத்தமும் ஆதீனத் தலைவர்கள் வருடந்தோறும் ஐப்பசிமாதத்திற் காலையிற் காவேரி ஸ்நானஞ்செய்து மீண்டுவருங்காலத்திலும், அம்பலவாணதேசிகர் ஆனந்தக்களிப்பு அவர்கள் சிவதரிசனமும் குருதரிசனமுஞ்செய்து மீண்டு வந்து ஒடுக்கத்திற் பீடத்திருந்து அடியார்களுக்கு விபூதி யளிக்குங்காலத்திலும், மற்றவைகள் உரிய ஒவ்வொருகாலத்திலும் ஓதுவார்களால் ஓதப்பட்டு வருகின்றன. இவ்வழக்கம், இவ்வாதீனத் தலைவர்கள் முதலியோர்கள் இவருடைய நூல்களிடத்து வைத்திருந்த நன்மதிப்பைச் செவ்விதாக விளக்குகின்றது.

[இவரைநிகர்ந்தோர்.]

முதன்முறை ஒருவகையாகப் பொருள்கொள்ளும்படி இயற்றிய செய்யுளுக்குப் பின்பு சமயோசிதமாக வேறுபொருள்கூறிப் பிறரை மகிழ்விக்கும் ஆற்றலால் காளமேகம் முதலியோர்களையும், இயற்றமி ழிசைத்தமிழ்க் குரிய பலவகையான செய்யுட்களையும் நூல்களையும் எளியநடையினவாகச்செய்யும் வன்மையால் மேலகரம் திரிகூட-ராசப்பக்கவிராயர், சீகாழி - அருணாசல கவிராயர் முதலியோர்களையும் இவர் ஒப்பர்.

இவரியற்றிய நூல்கள்பல; அவற்றுள் இப்பொழுது தெரிந்தவை:

க. திருவாவடுதுறைக்கோவை.
உ. திருக்கலைசைக்கோவை.
ங. திருக்கலைசைச்சிலேடைவெண்பா.
ச. திருக்கலைசைச்சிதம்பரேசர்சந்நிதிமுறை.
(இதில் பத்தொன்பது பிரபந்தங்கள் அடங்கியுள்ளன.)
ரு. திருக்கலைசைச்சிதம்பரேசர்வண்ணம்.
சு. திருக்கலைசைச்சிதம்பரேசர்பஞ்சரத்தினம்.
எ. திருக்கலைசைச்சிவகாமியம்மைபஞ்சரத்தினம்.
அ. திருக்கலைசைச்சிதம்பரேசர்பரணி.
கூ. திருக்கலைசைச்சிதம்பரேசர்கட்டியம்.
கO. திருக்குற்றாலச்சித்திரசபைத்திருவிருத்தம்.
கக. பழநிக்குழந்தைவேலர்பஞ்சரத்தினமாலை.

கஉ. ஸ்ரீசுப்பிரமணியர்திருவிருத்தம்.
கங. திருத்தணிகைத்திருவிருத்தம்.
கச. வடதிருமுல்லைவாயிற்கொடியிடையம்மை பிள்ளைத்தமிழ்.
கரு. ஆயலூர் முருகர்பிள்ளைத்தமிழ்.
கசு. திருச்செந்திற்சந்தவிருத்தம்.
கஎ. ஆவினன்குடிக்கைலாயநாதர்பதிற்றுப்பத்தந்தாதி.
கஅ. திருமாளிகைத்தேவர்விருத்தங்கள்.
கசு. திருச்சிற்றம்பலதேசிகர்சிந்து.
உ0. திருச்சிற்றம்பலதேசிகர் சந்தவிருத்தம்.
உக. அம்பலவாணதேசிகர்பஞ்சரத்தினமாலை.
உஉ. அம்பலவாணதேசிகர்வண்ணம்.
உங. அம்பலவாணதேசிகரானந்தக்களிப்பு.
உச சிவஞானமுனிவர்துதிவிருத்தங்கள்.
உரு. சிவஞானமுனிவர்கீர்த்தனை.

மேற்கூறியவற்றுள் ஸ்ரீ சுப்பிரமணியர்திருவிருத்தமும், திருத்தணிகைத்திருவிருத்தமும் தம்பாலன்புடைய இருவர்களுக்கு முறையே நேர்ந்திருந்த குட்டரோகத்தையும் அந்தகத்தன்மையையும் நீக்கியருளும்படி முருகக்கடவுளைப்பிரார்த்தித்து முறையே இவராற் பாடப்பட்டனவென்பர்.

[திருக்கலைசை - கொட்டிக்கலை ; ஆயலூர் - தொண்டைநாட்டிலுள்ளதோரூர் ; ஆவினன்குடி-இங்கே பழநிபன்று ; இவ்வூர் தொண்டைநாட்டிற் பாலாற்றின் வடகரைக்கண்ணதென்று ஷை நூலின் காப்புச்செய்யுள் தெரிவிக்கின்றது; இவ்வூர்ப் பதிற்றுப்பத்தந்தாதிக் கையெழுத்துப் பிரதியில், 'கீலக (ஹு) தைமீ உகஉ சுக்கிரவாரம், உத்திராஷாத்திரத்தில் இந்நூல் அரங்கேற்றப்பட்டது' என்ற வாக்கியம் எழுதப்பட்டுள்ளது.]

[இவர் வரலாறு தெரிந்துகொண்டதற்கு ஆதாரங்கள்.]

திருவாவடுதுறையாதீனத்தில் கசு-ஆம் பட்டத்திலிருந்த ஸ்ரீசுப்பிரமணிய தேசிகரவர்களாலும், ஷை ஆதீனவித்துவான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் முதலியோர்களாலும், பின்னும் பலர்கூறிய கர்ணபரம்பரைச் செய்தியாலும், இவரியற்றிய நூல்கள்வரைந்துள்ள கையெழுத்துப் பிரதிகளிலிருந்த குறிப்புக்களாலும் ஷை நூல்களாலும் இவர்வரலாறு ஒருவாறு தெரிந்தது.

[இவருடைய நூல்கள்கிடைத்தவிடம்]

இவரியற்றிய நூல்களியாவும் ஒருங்கே எங்கும் கிடைக்கவில்லை; அவற்றுள் சிற்சிலநூல்கள் திருவாவடுதுறை புஸ்தகசாலையிலும், ஷை ஊரிலுள்ள சில ஓதுவார்கள் வீடுகளிலும், சென்னை இராஜாங்கத்துப் பழைய கையெழுத்துப் புஸ்தகசாலையிலும், மதுரைப் பாண்டியன் புஸ்தகசாலையிலும், வேறு சிலவிடங்களிலும் இப்பொழுது கிடைக்கும்.

நூலாராய்ச்சி.

இக்கோவையில் நூலாசிரியர் பலவண்ணமாக எடுத்தாண்டு பாராட்டியிருக்கிற இத்தலவிசேடங்களை முதலில் அறிந்துகொள்ளுதல் இந்நூலைப் படிப்போர்க்கு இன்றியமையாததாதலின், அவை இத்தலபுராண முதலியவற்றிலிருந்தெடுத்து இங்கே எழுதப்படுகின்றன.

தலவிநாயகர்கள் இருவர்:—(க) துணைவந்தவிநாயகர்; இவர் அம்பிகை பசுவடிவங்கொண்டு வந்தபொழுது துணையாகவந்தவர்; (உ) அழகியவிநாயகர்; இவர் அகத்தியமுனிவர்க்குப் பஞ்சாக்ஷரோபதேசம் செய்தவர்.

ஸ்வாமியின் திருநாமங்கள்:—ஸ்ரீ ஸ்வயம்பியக்தேசுவரர், பிரகாசமணிநாதர், மாசிலாமணியீசர், கோமுக்தீசர், கோகழிநாதர், அணைத்தெழுந்தநாயகர், பூகைலாஸேசுவரர், புத்திர த்தியாகர், போதிவனநாதர், போதியம்பலவாணர், மஹாதாண்டவேசுவரர், அர்த்தத்தியாகர், முத்தித்தியாகர், சிவலோகநாயகர் என்பனவும், இவற்றின் வேறு பரியாய நாமங்களுமாம்.

தேவியார் திருநாமங்கள்:—அதுலகுசநாயகி, ஒப்பிலாமுலையம்மை, ஒப்பிலாள் என்பன.

தலத்தின் திருநாமங்கள்:—கோமுத்தி, கோகழி, திருவாவடுதுறை, பூகைலாஸம், நந்திநகர், தியாகபுரம், போதிவனம், அரசவனம், மஹாதாண்டவபுரம், வேதபுரம், ஸித்தபுரம், நவகோடிஸித்தபுரம், முக்திக்ஷேத்திரம், சிவபுரம் என்பனவும், இவற்றின் வேறு பரியாய நாமங்களுமாம்.

தீர்த்தங்கள் மூன்று:—(க) முக்திதீர்த்தம் அல்லது கோமுத்திதீர்த்தம், (உ) கைவலயதீர்த்தம், (ஙு) பத்மதீர்த்தம் என்பன. இவை முறையே திருக்கோயிலின் எதிரிலும், திருக்காவிரியிலும், ஸ்ரீகொங்கணேசுவரர் கோயிலின்பக்கத்திலுமுள்ளன.

விருக்ஷம்:—திருவரசுகள் படர்ந்துவிளங்குதலால் இவை படர்ந்த அரசுகளென்றும், நிலவரசுகளென்றும் வழங்கப்படும்.

ஸபை.—போதியம்பலம் அல்லது அரசம்பலம்.

நந்தி.—தருமநந்திதேவர்.

இத்தலத்தில் **சிவபெருமான் நிகழ்த்தியருளிய விசேடங்கள்:**—

க. லீலார்த்தமாகநேர்ந்த பசுவடிவத்தை உமாதேவியார்க்குநீக்கி அணைத்தெழுந்துநின்று இத்தலத்தைக்கைலையங்கிரியாகக்காட்டினர்.

உ. தமது கட்டளைப்படி தேவர்கள் படர்ந்த அரசவிருக்ஷங்களாகத்தோன்றி விளங்க அவற்றின் நிழலில் எழுந்தருளியிருந்தனர்.

C

௩. மகப்பேறுகருதிவந்த முசுகுந்தசக்கரவர்த்திக்கு இந்தத் தலத்தைத் திருவாரூராகவும் தம்மைத் தியாகேசராகவுங் காட்டிப் புத்திரப்பேறும் அளித்தனர்.

௪. தம்மைப்போற்றிய தருமதேவதையை இடபவாகனமாகக் கொண்டதன்றிச் சந்நிதியில் அரசவிருக்ஷத்தின் நிழலில் கோயில் கொண்டிருக்கும்படிக்கும் வரமளித்தனர்.

௫. தேவர்களும் முனிவர்களும் செய்த பிரார்த்தனைக்கு இரங்கி அரசவிருக்ஷத்தினிழலில் அமைந்த அம்பலத்தில் மஹாதாண்டவம் புரிந்தனர்.

௬. திருமூலநாயனாரைத் தடுத்தாட்கொண்டு ஆகமஸாரமாகிய திருமந்திரத்தை வெளிப்படுத்தத் திருவருள்புரிந்தனர்.

௭. திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருக்குப் பொற்கிழியளித் [தனர்.

௮. சில முனிவர்களுக்குச் சிவஞானோபதேசம் செய்தருளினர்.

௯. சில அந்தணர்களுக்கு வேதத்தை ஓதியருளினர்.

௧௦. போகர் முதலிய ஸித்தர்களுக்கும் நவகோடி ஸித்தர்களுக்கும் அவர்கள் விரும்பியவண்ணம் அட்டமாஸித்திகளையும் பிறவற்றையும் அருளினர்.

[இந்த விசேடங்களால், மேற்காட்டிய ஸ்வாமியின் திருநாமங்கள் முதலியவற்றுட் பெரும்பாலன காரணப்பெயர்களாதலை அறிந்துகொள்க.]

அன்றியும் இத்தலத்தில் கோச்செங்கட்சோழநாயனார் திருப்பணிசெய்து பேறுபெற்றனரென்றும், ஸித்தர்கள் பலர் எப்பொழுதும் தங்கியிருக்கின்றார்களென்றும் புராணங்கூறும்.

ஸ்ரீஅணைத்தெழுந்தநாயகர்:—இவர் உமாதேவியாரை அணைத்தெழுந்தகோலமாக எழுந்தருளியிருப்பவர். உத்ஸவாந்தத்தில் கோமுத்தி தீர்த்தத்தில் தீர்த்தங்கொடுத்தருள்பவர் இவரே.

ஸ்ரீதியாகராஜர்:—முசுகுந்தருக்குச் சிவபெருமான் திருவாரூர்த் தியாகராஜராகக் காட்சிகொடுத்ததுதொடங்கி இவர்சந்நிதி இங்கே உளதாயிற்று; இவர் வீரசிங்காதனமுடையார். இவருடைய நடனம் ஸுந்தரநடனம். உத்ஸவத்தில் திருத்தேரூர்ந்தருள்பவர் இவரே. இவரது பந்தர்க்காட்சி மிக அற்புதமானது; திருவாரூரில் ஸ்ரீ தியாகராஜர்க்குள்ள சிறப்புக்கள் இங்கும் உள்ளன.

இதுகாறுங்கூறிய விசேடங்கள் இக்கோவையில் பலவண்ணமாக அங்கங்கே அமைந்திருப்பவற்றுள், ஒவ்வொருபகுதி இனி எடுத்துக்காட்டப்படும்:—

(ஸ்ரீ மாசிலாமணியீசர் உமாதேவியாருடைய பசுவடிவை நீக்கி அணைத்தெழுந்தது)

(௧௪) "கோவைக் கரந்தொட்பி லாமுலையைக் காட்டிநின்றீர்"
(௧௪௩) "அரகூசணைத்த, நாயகனார்திருக் கோலமுமாய்"
(௩௮௫) "ஆனா் துவச னணைத்தெழு நாயகன்."

(முசுகுந்தருக்குப் புத்திரப்பேறளித்தது)

(உஎ) "மின்னுக் கதிர்வடி வேன்முசு குந்தன்முன் வேண்ட
(உசஞ) "அளியா வடுதுறைப் புத்திரத் தியாகர்." [வருள்"

(மகாதாண்டவம்புரிந்தது)

(கச) "துறைசை யாட்டினார"
(உ0டு) "ஆட்டுகந் தாடுந் துறைசையெங் கோமுத்தி யப்பர்"
(ஙஅங) "கோமுத்திக் கூத்தர்"
(சசஞ) "குனித்தருள் கோமுத்தி நாதன்"

(ஆகமஸாரமாகிய திருமந்திரம வெளிப்பட்டது)

(கஞடு) "ஆகமநற, சாக்கார் துறைசை"
(உஞஙு) "மூலாக மங்கண் முழங்குந துறைசை"

(திருஞானசமபந்தமூர்த்திநாயனார்க்குப பொற்கிழியளித்தது)

(கஙச) "காழிமன் னர்க்கருள் செம்பொற றியாகர்"

(கடுங) "தோணிபுரத, திறையவ னார்சொன்ன செந்தமிழ்க் காக வினிதளித்த, நிறையுல வாக்கிழிச் செம்பொற றனமது நேரி மையாய், குறையினு முன்பொற றனமொரு நாளுங் குறைவிலதே"

(உடுக) "சொன்னத் தியாகரிற காணலக, வயலார் கிருது கின்றார்"

(உஅடு) "வண்டார் செருந்தி தியாகேசர் நல்குல வாக்கிழி போற், றண்டா தவிழ்பொன் றருமர சூரர்"

(ஙஉச) "சண்பை யாண்டகைககோ, ராயிரம் பொன்னருள் சொன்னத் தியாகர்"

(சடுக) "ஒப்பி லாமூல நாயகரும், பொன்னுலன் றேபுகழ்ப் பேர்படைத் தாண்டனர் பொற்பரசே"

(முனிவரர் வழிபட்டது)

(உசச) "உயருந் தவததுனா சொனனத் தியாகரொ ராயிரநற், பெயரும் பரசுந் துறைசை"

(அவர்களுக்கு ஞானோபதேசம்புரிந்தது)

(சஞ) "பண்பணாககு, ஞானத துரளருள் செம்பொற றியாகர்."

(வேதம் ஓதியருளியது)

(எஉ) "இருக்கா லுங ்கோமுதது."

(கோச்செங்கட்சோழநாயனார்க்கு அருள்செயதது)

(உ0ஞ) "கதிர்மகுட, முடிவள வனமேறுமூனு செம்பொற றியாகர்"

(உகரு) "சென்னிக் கருள்செய்த சொன்னத் தியாகர்"
(சஉ௯) "ஆரனே யாதருள் கோமுத்தி யீசர்."
(இங்கே ஸித்தர்கள் வாஸஞ்செய்தல்)
(கஉ) "எத்திறச் சித்தரும் வந்தறியாச், சித்திரக் காவுமுண்டு"
(எஎ) "நவகோடிசித்த, ரிருக்குந் துறைசைப் பதிமாசி லாமணி யீசர்வெற்பி, லுருக்குமச் சித்துச் சுனோநாலு மாடுவன்"
(உகூங) "துறைசையில்வாழ், சித்தர்தம் விஞ்சையின்."
(தீர்த்தவிசேடங்கள்)
(சஎ) "திருத்தத் துறைசை"
(எஉ) "திருக்கா விரித்திருத் தம்படிந்தோ."
(திருக்காவிரியினியல்புகள்)
(கூஎ) "இருகோ டிவர்புனற காவிரி"
(கக0) "திருத்துறைசைக், காவேரி யங்கயற் கண்ணுள்"
(உககூ) "உன் பதிவினவி,யங்கே வரவெண்ணி னேம்பொன்னி யாற்றினுக் கஞ்சினமே"
(உகூஎ) "காவிரி யாடி யிரவுதங்கி"
(ஙகூகூ) "கான்சென்ற வெப்பாறச் சீதளக் காவிரி தோய்ந்து"
(ச0எ) "பொன்னி, நுரையா மெனும்வெள் ளுடுக்கை யுடீஇ"
(சஉ0) "துறைசை, மங்கைய ராட மணங்கூர்பொன் னித் துறைவா"
(சஉக) "காவிரி தோய்ந்துவப் பார்தோய்வ ரோசிறு காற் [புனலே."
(திருவரசுகளின் இயற்பெயர்)
(ரு0) "சிலவரசார், தலக்கோயில்."
(அவற்றின்நிழலில் ஸ்வாமி எழுந்தருளியிருத்தல்)
(உஅங) "அரசிடத்தி, னீடுமென் செம்பொற் றியாகேசர்"
(ஙஎ0) "அரசந், தருவது சேர்திருக் கோமுத்தியீசர்"
(சருக) "ஆண்டனர் பொற்பரசே." (சிலேடை)
(அவை சந்நிதியினிற்றல்)
(ஙகஉ) "கோமுத்தி நாதன்முன் போதி யருள்பெறுவா, னெடியவ னின்றென நிற்குந் துறைசை."
(மகப்பேறுகருதினோர் அவற்றை வலம்வருதலும, அவற்றினடியில் வரங்கிடத்தலும, கூறுவோர் அவற்றை நோக்கிக்கூறுதலும்)
(ஙஉஅ) "இணையிலெம் மூர்நல லரசினைச் சூழுங்கொ லென்றனர்"

(௯௫க்) "புத்ரத் தியாக ராசடிக்கீழ், வரங்கிடந் தேழை யுயிர்த்தே ணொருமகள்"

(௯கக) "செம்பொற் றியாகர் திருத்துறைசை, வாயமு காருமரசினை நோக்கி மறைமொழிபோற், காயமுல் வேலன்பர் யானக லேனென்று கட்டுரைத்து, நீயழச் சென்றனரே."

(ஸபை)

(கூகூ) "துறைசைமன்றிற், றீட்டிய பாவையன்னீர்"

(களஉ) "மன்றேறி யாடிய செம்பொற் றியாகர்"

(களச) "செம்பொற் றியாகரைத் தண்வரைக்கோ, தண்டாமன் றுவெனப் போற்றன்பர் வாழ்துறைசை"

(௯௫கூ) "துறைசைமன்று,ளுடக மாடிய செம்பொற் றியாகர்."

(ஸ்ரீ தியாகராசருடைய திருநடனம்)

(ச௫௫) "தொம்மென வாட்டயர் சொன்னத் தியாகர்."

(அவருடைய வீரசிங்காதனம்)

(கக) "கோகழிச் செம்பொற றியாகர்வைகு, மம்மணி யாசனங் கண்டீ ரவங்க ளடைவுறவே, தம்முது காறபிற பல்லா யிரமுகந் தாங்கிநிறகு, மிம்மட வார்த மிடைக்கிடை யாவள மெய்துதற்கே."

(அவருடைய சிலம்பொலி)

(ககூகூ) "செம்பொற றியாகேசர் பாதச் சிலம்பொலிபோ, லோர்தங்கு தார்மன்னர் தேர்மணி யோசை யிருசெவியும், வோர்தங்கு மாறென வீழ்குக'

(உஅச) "சிலம்புஞ் சிலம்படிச் செம்பொற் றியாகர்."

(அவருடைய பந்தர்க்காட்சி)

(௯ச) "சிற்பரர் செம்பொற் றியாகேசர் காட்சியிற் செல்வமின்னார், பற்பலர் போற்றிடுங் கற்பகக் கொம்பின் பரிசு."

(திருவிளக்குச் சிறப்பு)

(கஅக) "துறைசைப், பதுவைதத தீபமன்னாள்"

(௯௫அ) "கோமுதந்தி யீசன் றுறைசை விளக்கனையாள்."

(அன்பர்கள தோடுகட்டிச்சாத்தும் பணிச்சிறபபு)

(உஅ) "பறவாக் குளவயை வண்டோடு கட்டிப் பணித்திடவே."

இப்படியே மறறவிசேடங்களும் இந்நூலுட் பலஇடங்களிற் பாராட்டப் பட்டிருத்தலைக் கண்டுகொள்க.

இந்நூலாசிரியர் இக்கோவையில ஸ்ரீ பஞ்சாக்ஷர தேசிகருடைய பெருமையையும, அவர் எழுந்தருளியிருக்கும மடத்தின சிறப்பையும, அதிலுள்ள திருக்கூட்டததாரின இயல்பையும்,

புலவர்களின் விசேடத்தையும், தமிழின் வளர்ச்சியையும், தமிழ்வேதம் ஓதப்படுதலையும், ஓதுவார் களிருத்தலையும் கூறியிருக்கும் அருமை மிகப் பாராட்டற்பாலது. அவை வருமாறு:—

(ஸ்ரீ பஞ்சாக்ஷரதேசிகர்பெருமை)

(கஎசு) "நறுந்துறைசை, யஞ்செழுத் தெங்குரு நாதன் றனதடியார்க் கொழித்த, சஞ்சிதம் போலத் தினைமுற்று மாள"

(சருஎ) "எங்கள்பஞ் சாக்கர தேசிகன் மாமரபு வாழி."

(மடம்)

(கூசக) "மெய்ஞ்ஞானச் செல்வர் திருமடமும்."

(திருக்கூட்டத்தாரினியல்பு)

(கஉச) "அவநெறியிற், செலவார்கள் வாழுந்துறைசை"

(உசுசு) "தவமேரு வாந்தொண்டர் வாழ்திருவாவடு தண்டுறை"

(கூகூசு) "தியாக ரடிவணங்கித், தொக்குரவோர்மன் றுறைசை"

(கூருo) "திருத்துறைசை, யுற்றிடு மாதவர் போலத் தவஞ்செய்து."

(புலவர்களின்விசேடம)

(கசo) "ஆவடுதுறை யொண்புலவோர், படிக்கத் தருங்குள கக்கவி போலவிப் பைந்தழைநீ, முடிக்கத தரும்"

(சகூஉ) "செந்நாப் புலவர் துதிக்குந் திரவியத் தியாகர்."

(தமிழினவளர்ச்சி)

(சச) "முத்தமிழ் தெள்ளுந் திருவா வடுதுறை"

(கூஎo) "தமிழ்த் துறைசை"

(சருகூ) "தமிழரசூர்."

(தமிழ்வேதம் ஓதப்படுதல்)

(கூகo) "சுகந்தா விலாததமிழ் வேதங்க ளோதுந் துறைசை."

(ஓதுவார்களிருத்தல்)

(கசுo) "துறைசை, யூரோது வார்வினை வீழ்ந்தென." (சிலேடை.)

பலவகையான பிரயோகங்கள் இந்நாலில் வந்துள்ளன: அவற்றுள்,

செய்யுளின் எண்.	வெளிப்படையாற் பொருளுணர்த்துவன:
உஅ	பறவாக்குளவி — மலைமலலிகை.
அரு	பாயாதவேங்கை — வேங்கைமரம்.
	பாயுமவேங்கை — புலி.
சருஉ	உரையாத்தனம் — கொங்கை.
	உரைக்குந்தனம் — பொன்.

(குறிப்பாற் பொருளுணர்த்துவன)

கரு. 'முல்லாய் நின்பேர்க்குணம்'—பேர் - கற்பு.

அஅ. ஒற்றிடையாரும் அதி=அத்தி - யானை.

உ0அ. 'வண்டின்பெயர்பெற்றன வொன்றற வொன்றடினும்'—பெயர்=தும்பி, அரி என்பன; பெற்றன முறையே யானையும் சிங்கமும்.

சஉகூ. 'கோமுத்தி யீசரவர்க்குரிய பேரனையாய்'—பேர் - மாசிலாமணி.

(தோழிபூத்தருபுணர்ச்சியால் அறத்தொடுநிற்றல்:)

ருகக. 'நீடுநின் கண்ணுக்கு நேரிது பாரென்று நின்மகட்கு
நாடுமொ ராடவன் வந்தீறில் காவிரி நல்கினனற்
றேடுறு நீள்செவிச் சொன்னத் தியாகர் துறைசை யுள்ளா
ராடுமவ் வாற்றின் றலையெழுத் தூடுநின் றூடிடத்தே.'

ஈறில்காவிரி=காவி - நீலோற்பலமலர்; அவ்வாற்றின் தலையெழுத்து=கா - சோலை.

இந்நூலில் ஆங்காங்கே இவர் அமைத்திருக்கும் சைவ நூற் கருத்துக்கள் முதலியன நோக்கற்பாலன. அவற்றுள்,—

(சைவநூற் கருத்துக்கள்)

அ0. 'முத்தியென் னப்படு மங்கையைச் சேர முயல்பவருஞ்
சத்தியென் னப்படு மீச னருளன்றிச் சார்தலுண்டோ'

கூரு. 'அருளா வடுதுறைச் செம்பொற் றியாக ரடியவரைவிட்
டிருளா ணவங்கழிந் தோடுத லெய்ப்ப'

கருச. 'சொன்னத் தியாகரை வாழ்த்தலர்நெஞ், சல்லா
யிருண்ட வணரார் குழலி'

உகூகூ. 'ஈட்டும் வினைதவிர்த் தன்பர்க் கருளெனு மின்னமிர்த
மூட்டிடுஞ் செம்பொற் றியாகேசர்'

ருகஅ. 'என்சென்னியிற் பங்கயப்பா, தஞ்சூட்டுங் கோகழிச்
செம்பொற் றியாகர்.'

(இலக்கணக்கருத்து)

உச. "அணியியன் முற்றும் படித்தலினால்'

எக 'எல்லா வெழுத்திற்கு நாயக மாமவ் வெழுத்தினென்றி, னல்லா லவைக்குச் சிறப்புளதோ'

கருள. 'நீயுன் னருள்பெற்ற மின்னினையு, நேரிய லாக வரு
மொழியோடு நிலைமொழிக்கோர், சாரியை போனடு நின்
றேனையுமெண்ணித் தாங்குகவே.'

(இசைநூற்கருத்து)

௪௧௫. 'உகந்தவர் பாற்பாடு பாடினி தோடிறையே.

(மந்திரவாதம்)

௧௯௦. 'ஐந்தலை நாக மகன்முழைக் கண்டஞ்சு மன்றுதங்கை,
தந்தலை யேயெலன்றோர் மந்திரங்கூறித் தடுத்தளித்த,
வெந்தலைவர்'

௩௮௯. 'அவர்சொன்ன பதமனுவால்.'

இந்நூலில்வந்துள்ள சிலமொழிகள்:

எத்து - ௨௪௧
ஒருக்கால் - ௭௨
கோட்டி - ௧௬௩, ௩௫
சரி - ௧௦௮
சரிப்பட்டது - ௨௪
சொக்கு - ௭௫
தயவு - ௨௫௫
தனகு - ௪௩௩
பற்பம் - ௨
பெற்று - ௩௪௬
ஏடு - ௩
உழப்பு - ௩௮௬
ஒப்பினள் - ௧௮௯
கூட்டுறவு - ௯௬
சஞ்சீவனி - ௧௧௩
சதிர்ப்பாடு - ௮௨
சரக்கு - ௧௯௫
சானு - ௨௧௯
சேப்பு - ௭௮
தணை - ௧௦௯
நீங்கள் - ௩௩௪
பத்மம் - ௧௫௬
மார்க்கம் - ௧௮௨
வெள்ளீட்டி - ௧௩௧

பிழையுந் திருத்தமும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௪௩	௩௫	வோற	வோரத்
௫௮	௨௯	ரீரெனறு	ரீரென்னு
௯௪	௨௧	கூருரனு	கூர்வரனு
௮௯	௪௦	மாதவருரை	மாதவரை

கணபதிதுணை.

திருவாவடுதுறைக்கோவை.

விநாயகவணக்கம்.

நறைக்கோவை யன்னசெவ் வாயொப்பி லாமுலை நன்னுதலிற்
பிறைக்கோவை யக்கணி வான்றரு மைங்கர பேணுமன
வறைக்கோவை யாதரித் தன்போ டுரைக்குநல் லாவடுதண்
டுறைக்கோவை பாடத் துறைதோறு நின்னடி தோன்றிடுமே. (க)

நின்றுறைசைக் கோவைமுன்னே நிற்கவைத்த பேர்நிரம்பத்
தென்றுறைசைக் கோவைதனைச் செப்பவே—[1]நன்றுறைசை
யாதிபனே யெங்க ளழகியநற் குஞ்சரமே
கோதறவென் னெஞ்சிற் குடி. (உ)

நூல்.

கைக்கிளை.

காட்சி.

நீர்கொண்ட செம்பொற் கமலமு நீலமு நீங்கரிய
வார்கொண்ட முல்லையுங் கோங்குமென் காந்தளு மல்கியொல்கிச்
சீர்கொண்ட வாவடு தண்டுறைச் செம்பொற் றியாகர்வெற்பி
லேர்கொண்ட தெய்வ மலர்ப்பூங் கொடியொன் றெதிருற்றதே.* (க)

ஐயம்.

பாதல மோதிருப் பாற்கட லோசங்க பற்பநிதி
மீதல மோவிஞ்சை யோர்தல மோவிரி நீருடுத்த

அரும்பதவுரை.

விநாயகவணக்கம்.

க. கோவையன்ன - கொவ்வைக் கனியையொத்த. கோவை அக்கு - கோக்கப்படுதலையுடைய அக்குமணிகள். மன அறைக் கோ - மனமாகிய அறையிலெழுந்தருளிய சிவபெருமான்; அறை - பாறையுமாம்.

உ. துறைசை - திருவாவடுதுறை. கோ - பசு. பேர் - துணைவந்த விநாயகரென்பது. அழகிய நற்குஞ்சரம் - அழகிய விநாயகர். பேர்நிரம்ப என்னெஞ்சிற் குடியாக நன்றுறை. சையம் - மலை; ஒருமலையுமாம்.

நூல்.

உ. பற்பம்=பத்மம் - தாமரை; "பற்பநாப னுயர்வற வுயரும் பெருக்

(பிரதிபேதம்.) 1 நன்றுறைசெய்,

பூதல மோதிருக் கோமுத்தி யீசர் பொருப்பின்மய
லாதல மோகத் [1]தவரு முறுமிவ ளார்தலமே. (உ)

துணிவு.

வாடாத போதிமை யாடாத போதிந்த மாநிலத்திற்
சூடாத போதழ லோடாப்பொற் பூணுமில் சோருநெஞ்சே
யீடார் துறைசைப் பதிமாசி லாமணி யீசர்வெற்பில்
வீடா விளக்கனை யார்க்கிடம் வேறில்லை மேதினியே. (௩)

குறிப்பறிதல்.

தென்னா வடுதுறைச் செம்பொற் றியாகர் செழுங்கிரிமே
லன்னா ளமரர்க்குப் பொன்னாழி முன்ன ரடுத்ததொரு
கொன்னார் விடந்தந்து பின்னா ரமுதங் கொடுத்ததிந்த
மின்னார் கடலி லிரண்டுமோர் காலை விளங்கியவே. (௪)

இயற்கைப்புணர்ச்சி.

இரந்துபின்னிற்றற்கெண்ணல்.

திருவா வடுதுறைச் செம்பொற் றியாகர் செழுஞ்சிலம்பி
லொருவாமை வம்பிற் புதைக்குந் தனங்களா லூற்றிருந்து
வருவா யமிர்தமு மென்றுமுள் ளாருண் மகிழ்ந்துநெஞ்சே
தருவார் களிப்புறச் சார்ந்திரந் தார்க்கிந்தத் தையலரே. (௫)

இரந்துபின்னிலைநிற்றல்.

இருந்தா மரையனம் பாணிறப் பேட்டுக் கிறவருத்திப்
பொருந்தா வடுதுறைச் செம்பொற் றியாகர் பொருப்பிலரு
மருந்தா யெனக்கின்று வாய்த்தவ ரேமன் மதன்கணைக்கு
விருந்தாய் வருந்தி மெலிவேன் பிணியை [2]விலக்கிடுமே. (௬)

முன்னிலையாக்கல்.

துண்டப் பிறைச்சடைச் செம்பொற் றியாகர் துறைசைவெற்பிற்
றண்டைக் கிணங்கிய தாளுடை யீர்சகி மாருடனே
கெண்டைத் தடஞ்சுனை நீர்குடைந் தாடு கிலாமலிங்கென்
பண்டைத் தவப்பயன் போனிற்கு மாறு பகருமினே. (௭)

திறலோ - னெற்பரன்'' என்பது திருவாய்மொழி. கோமுத்தி - திருவாவடு துறை. அமோகத்தவரும் மயலாதலுறும்.

௩. போதும் போதும் போதுமென எண்ணும்மை விரிக்க. இல் - இல்லை.

௪. பொன்னாழி - திருப்பாற்கடல். மின்னார்கடல் - தலைவியின்கண்கள். இரண்டு - விடமும் அமுதமும்.

௫. வம்பிற்புதைக்குந் தனங்கள் - சிலேடை. ௬. இறவு - இறாமீன்.

(பி - ம்.) [1] அவர்க்குமுறும். [2] விலக்குவரே.

வண்டோச்சி மருங்கணைதல்.

நாகத் திருவரைக் கோமுத்தி யீசர் நறுந்துறைசை
மாகத்தண் சோலை மதுகரங் காளந்த வைப்பகன்று
பாகொத் தமிர்தொத்த சொல்லியற் கொல்லியம் பாவையன்னாண்
மேகத்தைச் சூழ்ந்தென்கொன் மின்னுக் கிடுக்கண் விளைக்கின்றதே.

இதுவுமது.

வண்ணச் சடாமுடிச் செம்பொற் றியாகர் வளர்துறைசைப்
பெண்ணிற் சிறந்தவர் நூலுண ராமற் பெரிதுமந்தோ
பண்ணிற் பழகிய பாட்டளி காள்பைத்த பாயிருள்வாய்க்
கண்ணிக்குள் ளேயகப் பட்டீரென் றும்மைக் கடத்துவனே. (கூ)

மெய்தொட்டுப்பயிறல்.

கட்டா ரணிகுழல் கட்டா நிரைவளை கைத்திருத்திப்
பட்டாடை யிற்பட்ட நுண்டுக ணீவிப் பரமதத்தார்
சுட்டாப் பரம்பொருள் செம்பொற் றியாகர் துறைசையன்னார்
கிட்டாப் பதமுமென் கையால் வருடக் கிடைத்ததுவே. (க0)

பொய்பாராட்டல்.

செம்மலர் மாதுறை கோகழிச் செம்பொற் றியாகர்வைகு
மம்மணி யாசனங் கண்டீர வங்க ளடைவுறவே
தம்முது காற்பிற பல்லா யிரமுகந் தாங்கிநிற்கு
மிம்மட வார்த மிடைக்கிடை யாவள மெய்துதற்கே. (கக)

இடம்பெற்றுத்தழால்.

துத்தி யராவணி செம்பொற் றியாகர் துறைசையன்னாள்
வைத்தகண் ணோட்டமுண் டெத்திறச் சித்தரும் வந்தறியாச்
சித்திரக் காவுமுண் டுள்ளூறும் வேட்கைச் செழுங்கடலை
நித்திலப் பூண்முலைப் பொற்குடங் கைக்கொண்டு நீந்துவமே. (கஉ)

வழிபாடுமறுத்தல்.

நல்லா வடுதுறைச் செம்பொற் றியாகர்த நற்பொருணூல்
கல்லாதவரிற் கவலாம லென்னுயிர் கால்விழுந்த
செல்லாரைக் கண்டு செழித்தே யசோகத்தைச் சேர்ந்தகொடி
முல்லாய்நின் பேர்க்குணம்பெற்றேற் கிடந்தந்தென் முன்னிற்பையே.

அ. கொல்லியம்பாவை - கொல்லிமலையில் அமைந்துள்ள பாவை. மேகம் - கூந்தல். மின் - இடை.

கூ. நூல் - நூல்போன்ற இடையும் படித்தற்குரிய நூல்களும். இருள் - கூந்தல். கண்ணி - மாலையும் வலையும். க0. கள் தார். கட்டா - கட்டி.

கக. கோகழி - திருவாவடுதுறை. கண்டீரவம் - சிங்கம். பிற, அசை. உகம் - யுகம். இடைதல் - பின்னிடல்.

கங. பொருள்நூல் - இறையனாரகப்பொருள். கால்விழுந்த செல்லார் - காலிறங்கிய மேகம், வணங்கிய பகைவர். அசோகம் - சோகமின்மை, ஒரு மரம். பேர்க்குணம் - கற்பு.

இடையூறுகிளத்தல்.

பாட்டரி யாலிக்கும் பங்கே ருகத்தைப் பழித்துவனத்
தோட்டிய வத்தத்திற் கோவைக் கரந்தொப்பி லாமுலையைக்
காட்டிநின் றீர்மட வீரத ஞற்கவி ஞர்துறைசை
யாட்டினர் செம்பொற் றியாகேச ரேயென்ன வாயினிரே. (௧௪)

இதுவுமது.

தொழுதவர்க் கின்பருள் செம்பொற் றியாகர் துறைசையங்கா
மழலைவண் டாடுங் குழன்மட வீர்கையில் வைத்திருக்கு
முழுவது நீர்மறைத் துக்கொண் டிரந்து மொழிந்திடுமிப்
பொழுதும தாகமுன் றந்தத்தைக் காட்டல் புகழல்லவே. (௧௫)

நீடுநினைந்திரங்கல்.

சூட்டம் புயங்கத்தர் செம்பொற் றியாகர் துறைசைவெற்பில்
வாட்டம் பெறப்புத்தி மான்றனைப் போர்க்கண் வலைபரப்பி
வேட்டஞ் செயத்தளர்ந் தெய்த்தேனெப் போதென் விடாய்முழுது
மோட்டந் தரவுங்க ளோட்டந் தருமமிர் துண்பதுவே. (௧௬)

மறுத்தெதிர்கோடல்.

வீணர்க் கருமையர் செம்பொற் றியாகர் வியன்றுறைசை
யாணர்க் கெளியர் வரைமேன் முராரி யடன்மகனார்
கோணைப் படைவந்து சூழ்ந்ததென் றன்பர் குதுகுதுத்தா
ணாற் கபாட மினிநிற்கு மோசொல்லு நன்னெஞ்சமே. (௧௭)

வறிதுநகைதோற்றல்.

விண்ணுற் றறலை யரசிலை தோய்த்தள்ளி வீசுகின்ற
தண்ணா வடுதுறைச் செம்பொற் றியாகர் தடஞ்சிலம்பி
லுண்ணாண் முழுதும் வெளிதாய் வெளிப்புறத் தூற்றதுபோற்
பெண்ணா ரமுதொண் முகத்திள மூரல் பிறந்ததுவே. (௧௮)

---

௧௪. வனம் - நீர், காடு. அத்தம் - கை. கோ - கண்கள், பசு. சிவபெருமான் அம்பிகையின் பசுவடிவத்தை நீக்கியருளிய கதையை இக்கவியில் அமைத்துக்கூறிய அழகு மிக வியக்கற்பாலது.

௧௫. வைத்திருக்குமுழுவதும் - சூரியகண்கள் முழுவதையும், வைத்திருக்கும் எல்லாப் பொருள்களையும். உமதாகமுன்றந்தத்தை - உம்முடைய மார்பினிடத்தேயுள்ள யானைக்கொம்பு போன்ற தனங்களை, உமக்கே யுரித்தாகக் கொடுத்தபொருளை.

௧௬. புத்திமான் - புத்தியாகியமான், அறிவுடையவன் (தன்மை). கண்வலை - கண்களாகிய வலை, கண்களையுடையவலை. ஓட்டந்தர - ஓட. ஓட்டம் - உதடு, எப்போது உண்பது.

௧௭. ஆணர் - அன்புடையவர். மகனார் - மன்மதன்.

முறுவற்குறிப்புணர்தல்.

அள்ளற் பழனத் துறைசையெங் கோமுத்தி யப்பர்சென்னிப்
பிள்ளைப் பிறைநுத லாடிரு வாயிற் பிறந்தகிலா
வெள்ளத் தனையுமென் றாழ்க்கக லாவென் மனத்திருளை
விள்ளக் கடிந்தத ரோவென்சொல் வேனிந்த விம்மிதமே. (௧௯)

முயங்குதலுறுத்தல்.

இருங்கன்னி யிஞ்சித் துறைசையெங் கோமுத்தி யீசர்வெற்பின்
மருங்கண்ணி வென்மதன் மாட்டம ரேதினி மன்னுயிர்போ
லொருங்கிவர்க் காத்தநன் றேணெடுங் காவ லுடைப்புண்டதா
லருங்கொம்மைக் கோட்டைநங் கையாற் பிடித்தர சாளுவமே. (௨௦)

புணர்ச்சியின்மகிழ்தல்.

சிட்டர்கொண் டாடுந் துறைசைத் திரவியத் தியாகர்வெற்பிற்
சட்டக வெற்புத் துளைதொறுந் தித்திக்கத் தாமரைநீண்
மொட்டென்ற பூண்முலை யாளெனக் கீந்த முருக்கலர்வாய்
மட்டின் சுவைக்கின்ன மட்டென்று சொலல வரம்பில்லையே. (௨௧)

புகழ்தல்.

சோணாடர் போற்றிய செம்பொற் றியாகர் துறைசைவெற்பிற்
காணா மருங்குனின் பூணாரக் கொங்கையைக் கண்டழிந்த
நாணாற் புவியி லொருவர்தங் கண்ணுக்கு நண்ணரிதாய்ச்
சேணார் விசும்பிடைச் சக்கர வாகந் திரிகின்றதே. (௨௨)

ஏற்புறவணிதல்.

பொற்றேர்க்குப் பட்டுநல் யானைக் கணிகளும் பூஞ்சிலம்பி
னற்றூட் குருளுந் தலைக்கலங் காரமு நான்புனையக்
கற்றார் துறைசைக் கனகத் தியாகர் கருணையன்னீர்
வற்றாத முற்பலன் கைப்பல னுவின்று வாய்த்ததுவே. (௨௩)

வன்புறை.

அணிந்துழி நாணியதுணர்ந்து தெளிவித்தல்.

ஓங்கிய செம்பொற் றியாகேசர் கோமுத்தி யூர்வரைமேல்
வாங்கிய சிற்றிடை நாணியஞ் சேன்முன்னம் வாய்த்திடுகின்
பாங்கியும் யானு மணியியன் முற்றும் படித்தலினாற்
றாங்கணி முன்னுக்குப் பின்வில காது சரிப்பட்டதே. (௨௪)

---

௨௦. மருங்கு அண்ணி. கொம்மைக்கோட்டை - கொங்கைகளாகிய கொம்பினை, வட்டமாகிய கோட்டையை. கை - கையும் சேனையும்.

௨௧, மட்டு - கள், அளவு. ௨௨, சக்கரவாகம் - ஒரு பறவை.

௨௩, உருள் - ஓராபரணம், புனைய வாய்த்ததென்க.

௨௪. சிற்றிடை, விளி.

பெருநயப்புரைத்தல்.

தொடுக்குங் கடுக்கையர் செம்பொற் றியாகர் துறைவசைவண்டு
படுக்குங் குழலிதன் செவ்வாய்க் குமுதப் பனிமலர்போ
லடுக்குங் கலைத்திங்க ளன்றியெப் போது மருந்தநறுக்
கொடுக்குங் குமுதமுண் டோவண்டு காணுங் குறுஞ்சுனைக்கே. (உரு)

தெய்வத்திறம்பேசல்.

துப்பார் திருவுருச் செம்பொற் றியாகர் துறைசைவெற்பிற்
செப்பார் முலைக்கொடி வாடுவ தென்றென் கடலுருளின்
மைப்பாய் வடகட லச்சிலையைந் தென்ன மணத்தல்செய்த
விப்பா லினைநமக் கப்பால் விலக்குவ ரேவர்களே. (உசு)

பிரியேனென்றல்.

மின்னுக் கதிர்வடி வேன்முசு குந்தன்முன் வேண்டவருள்
பொன்னித் துறைசைநஞ் செம்பொற் றியாகர் பொருப்பிடைநின்
றன்னைப் பிரிந்தக லேன்பிரிந் தாலுயிர் தாங்குவனோ
வென்னுக் கிரங்கல் சுடர்நிற்கு மோதிரி யின்றிமின்னே. (உஎ)

பிரிந்துவருகென்றல்.

பிறவா நெறியருள் செம்பொற் றியாகப் பிரான்றுறைசை
யுறவாரிற் போகி வருவலின் னேயென் னுயிர்க்குயிரே
நிறவாரி சத்துத் திருவனை யாயிங்கு நீபறிக்கும்
பறவாக் குளவியை வண்டோடு கட்டிப் பணித்திடவே. (உஅ)

இடமணித்தென்றல்.

நஞ்சிக் கொடிக்குந் துறைசையெங் கோமுத்தி நாதர்வெற்பி
லஞ்சிக் கொடியவர் போற்கவ லேலெனக் காரமுதாம்
வஞ்சிக் கொடியிடை வெய்யோன் விலக வளர்ந்தவெம்மூ
ரிஞ்சிக் கொடிசெயு நும்மூர்க்கெப் போது மிளநிழலே. (உகூ)

இதுவுமது.

மூப்பா யிளையரு மாகிய கோமுத்தி முத்தர்பணிக்
காப்பார் துறைசையெம் மூர்ச்செந்நென் முத்துங் கருப்புமுத்துந்
தேப்பான லங்கண்ணி வந்தங்கு வாரித் தினங்கொடுபோய்க்
கோப்பாரு மூர்வரை நித்திலத் தோடுங் கொடிச்சியரே. (௩0)

உசு. பால் - நல்வினை. உஎ. என்னுக்கு - யாதினுக்கு. சுடர் - தீபம்.

உஅ. பறவாக்குளவி - மலைமல்லிகை, மலைப்பச்சை. வண்டோடு-வண்டுகளோடு, வளவிய தோடு. பணித்திடவருவலென்க.

உகூ. நஞ்சிக்கு - நமது சிக்கை. கொடியிடை, விளி.

௩0. "மூப்பா னிளையவன் முன்னவன் பின்னவன்" (கோவையார்.) தேப்பா னலங்கண்ணி - தேனையுடைய கருங்குவளை மலர்போலுங் கண்களையுடையாய்.

தெளிவு.

நடத்திற் சிறந்தவர் செம்பொற் றியாகர் நறுந்துறைசை
யிடத்திற் சிறந்தவர் போய்வர வேண்டுமென் றெண்ணியந்தோ
திடத்தினிற் றேற்றுவித் திட்டிங் குரைக்கவென் சித்தமென்னுங்
குடத்திற் கலங்கிய நீர்தெளி வாம்வண்ணங் கூடியதே. (௩௧)

பிரிவுழிமகிழ்ச்சி.

செல்லுங்கிழத்திசெலவுகண்டு உளத்தொடுசொல்லல்.

நன்னத்தின் முத்து வடமலே தாங்கி நடுநுடங்கப்
பின்னுற்ற பார்வையு முன்னுற்ற காலும் பெயரநெஞ்சே
யென்னத்தர் மின்னத்தர் சொன்னத் தியாக ரெழிற்றுறைசை
யன்னத்தின் மென்மேலச் செல்கின்ற வாநம தாருயிரே. (௩௨)

பாகனொடுசொல்லல்.

பல்லார வண்டலிற் சிற்றடி போர்த்துப்பின் பார்த்துமுன்பார்த்
தெல்லார்க்கு நாணித் திருமுகங் கோட்டி யிளங்கொடிபோ
னல்லா வடுதுறைச் செம்பொற் றியாகர் நளிர்வரைமே
லுல்லாசத் தேகுதல் காண்வல வாவென் னுயிர்த்துணையே. (௩௩)

பிரிவுழிக்கலங்கல்.

ஆயவெள்ளம்வழிபடக்கண்டிது மாயமோவென்றல்.

நற்பல தேவர் முடித்தலே தாழ்க்கநன் னுந்துறைசைச்
சிற்பரர் செம்பொற் றியாகேசர் காட்சியிற் செல்வமின்னார்
பற்பலர் போற்றிடுங் கற்பகக் கொம்பின் பரிசிதென்றூற்
சொற்பன மோவென்ன வற்புத மோவங்குத் தோன்றியதே. (௩௪)

வாயில்பெற்றுய்தல்.

ஆவித் துணையெனக் கெப்போது மீங்கிவ ளாமெனவே
காவித் துணைவிழி காட்டிப்பொற் றேட்டைக் கடந்துலவும்
வாவித் துறைசைச் சிவலோக நாயகர் மால்வரைமேற்
பாவித் துளையுநெஞ் சேயுய்ய லாமிவள் பாலடுத்தே. (௩௫)

இதுவுமது.

குயிற்குல நாணுஞ்செவ் வாய்மொழி யாளைநங் கோமளத்தி
னுயிர்க்குயி ராமென் றுணர்ந்துநெஞ் சேயிடை யூறுளதோ

௩௧. தேற்றுவித்திட்டு - தெளிவித்து, தேற்றாங்கொட்டையால். உரைக்க- சொல்ல, தேய்க்க. நீர் - குணம், புனல்.

௩௨. நத்து - சங்கு. மின் அத்தர் - உமையை இடப்பாதியில் உடையார்,

செயிர்க்குல நீக்கித் துறைசையி லானந்தத் தேன்வ ழங்கு
மயிற்பெடை வாமத்தர் கோமுத்தி யீசர் வரையிடத்தே. (௩௬)

பண்புபாராட்டல்.

சீரொப்பில் கோகழிச் செம்பொற் றியாகர் திருவரசு
மேரொப்பி லாளல்குல் போன்றிலே யீனரி தின்சொலேப்போற்
பேரொப்பி லாமுலே யேந்துகைக் கிள்ளையும் பேசரிதாற்
பாரொப்பி லாளுறுப் புக்கவை யேயொப்புப் பார்த்திடிலே. (௩௭)

பயந்தோர்ப்பழிச்சல்.

தென்னு வடுதுறைச் செம்பொற் றியாகர் சிலம்பிடத்தென்
மன்னுவி யைத்தந்த தக்கோ ரிருவரும் வாழியரோ
பொன்னுடை ரேக்குறப் போதன் படைப்பறப் பூவைமல
ரன்னுன் பழிச்சிடத் தங்கே ரிலாதிவ் வகலிடத்தே. (௩௮)

கண்படைபெருதகங்குதைல்.

நத்துறை யாவித் துறைசையெங் கோமுத்தி நாதர்வெற்பி
லுத்தி யராகிதம் பத்தாளென் னெஞ்சு முறக்கமுந்தான்
கைத்தலங் கொண்டுகைம் மாறுத்தன் குந்தளக் காரிருளே
வைத்தெங் ககன்றன ளோவற நீளுமிம் மைக்கங்குலே. (௩௯)

இதுவுமது.

சேலாடு கண்ணியை நீங்கிக் கருங்கங்குல் சேரக்கண்டு
மாலாய்த் துயிலற் றிமையா தழுங்கலின் வான்றுறைசைச்
சூலா யுதக்கரர் செம்பொற் றியாகர் துணையிழந்தே
யாலாலங் கண்டச் சுறுமிமை யோரையொப் பாயினனே. (௪0)

இடந்தலைப்பாடு.

தந்ததெய்வந்தருமெனச்சேறல்.

நானேது மெண்ணி முயலா திருக்க நயந்துமுன்னந்
தானே தடுத்துத் தருந்தெய்வ மின்றுந் தருநெஞ்சமே
தேனேறு கொன்றையர் செம்பொற் றியாகர் திருத்துறைசை
வானேறும் வாச மலர்க்காவிற் சேறும் வருதியொத்தே. (௪௧)

முந்துறக்காண்டல்.

மாசிலேக் காமன் றெழுந்தெய்வ மோவவன் வாசமுறும்
பாசறைக் கேற்று மணிவிளக் கோவெனப் பல்பொறியார்
தேசரா ணைங்குந் துறைசைத் திராவியத் தியாகர்வெற்பின்
மூசலர்க் காவில்வந் தென்பெரு வாழ்விங்கு முன்னின்றதே. (௪௨)

௪௨, வாசம் - மணம், தங்குதல், பொறி - யந்திரம்,

முயங்கல்.

கற்கண்டு வெற்பின் மதக்கொண்டல் பெய்து கரைந்தொழுகி
நிற்கின்ற வாறெக்கு நீக்கற் றிரண்டற்ற நேசமொடு
மற்கண்டர் கோகழிச் செம்பொற் றியாக ரடுக்கலினுன்
பொற்கென்ற பூண்முலை யாளைக் கலந்து புணர்ந்ததுவே. (௪௩)

புகழ்தல்.

முத்தமிழ் தெள்ளுந் திருவா வடுதுறை முக்கணக்க
ரத்தர்நஞ் செம்பொற் றியாகேசர் வெற்பி லணியிழைநின்
வித்தக வல்குற் றடந்தேரைக் கண்டுமுன் வெள்கியன்றோ
சித்தசன் றேரின்னுங் காற்றாய் விசும்பிற் றிரிகின்றதே. (௪௪)

இதுவுமது.

மன்னிரு வாணி துறைசையெங் கோமுத்தி வள்ளல்வெற்பிற்
பின்னிருங் கூந்தலுன் மென்சாய லின்வளம் பெற்றிடவே
முன்னிரு நான்குகண் ணானைச் சிறையிட்டு முற்றுங்கண்ட
பன்னிரு தோளனை யின்னமுந் தோகை பரிக்கின்றதே. (௪௫)

உடன்புணராயத்துய்த்தல்.

வண்டில தால்விரைச் செண்பகப் பூம்பொழில் வான்றருவாக்
கண்டிட நின்சகி மார்தெய்வ தப்பெண் களிற்கனுலத்
தொண்டெனைக் கொண்டவர் சொன்னத் தியாகர் துறைசைவெற்பிற்
றெண்டிரைத் தெள்ளமு தேநீ சசியிற் சிவணுகவே. (௪௬)

பாங்கற்கூட்டம்.

தலைவன்பாங்கனைச்சார்தல்.

திருத்தத் துறைசையிற் செம்பொற் றியாகரைச் சிந்தைசெய்யார்
கருத்திற் கவலையு றேனெஞ்ச மேகருங் கல்லினுநா
ருரித்துத் தருநம் முயிர்ப்பாங்க னைக்கண்டிவ் வுண்மைசொன்னேன்
மருத்துப் பயோதரத் தாலநங் காங்கியை மாற்றுவனே. (௪௭)

பாங்கன் தலைவனை உற்றதுவினவுதல்.

பன்னுமத் தெய்வப் படையயின் றேவெம் பகைதுமித்துத்
தன்னா ருயிரிற் றிசைபுரந் தோசெந் தமிழ்வடித்தோ
மின்னார் துறைசையிற் செம்பொற் றியாகர்தம் வெற்பண்ணலே
யென்னா டகவரைத் தோளினை யாம விளைத்ததுவே. (௪௮)

---

௪௪. சித்தசன் தேர் - தென்றல்.

௪௫. கூந்தல் - விளி. இருநான்குகண்ணன் - பிரமன். பன்னிரு தோளன் - முருகக்கடவுள்.

௪௭. திருத்தம் - புண்ணிய தீர்த்தம். மருத்துப்பயோதரம் - அமுதத்தையுடைய கொங்கை, காற்றோடுகூடிய மேகம். அநங்காங்கி - காமத்தீ.

௪௮. வடித்தோ - ஆராய்ந்தோ.

தலைவன் உற்றதுரைத்தல்.

பானத் துலாம்வயற் கோமுத்தி யூர்நண்ப பண்பினர்க்கு
ஞானத் திரளருள் செம்பொற் றியாகர் நளிர்வரைமேல்
வானத்திற் சஞ்சரி யாப்பே ரெழிலி வளர்குறிஞ்சிக்
கானத்தில் வந்துண்ணை வற்றிய தாலென் சலைக்கடலே. (௪௯)

கற்றறிபாங்கன்கழறல்.

நிலக்கோர் பசும்பொட் டொளிர்குவ தென்ன நிலவரசார்
தலக்கோயின் மேவிய செம்பொற் றியாகர் சயிலத்தஞ்சை
வலக்கோதைப் பேதைக் கனலரக் காகி மறுகலென்னே
யிலக்கோ விதுபுவ னத்தொப் பிலாவெம் பிரான்றனக்கே. (௫0)

கிழவோன்கழற்றெதிர்மறுத்தல்.

தோணு விரண்டுள செம்பொற் றியாகர் துறைசைவெற்பிற்
கோணர் பிறைநுதற் கோகன கைக்குங் குலதெய்வத்தைப்
பூணு ரிளமுலைக் கொம்பினை யான்செய்த புண்ணியத்தைக்
காணுய்கண் டாயெனின் வீணுவிவ் வீரங் கழறலையே. (௫௧)

கிழவோற்பழித்தல்.

ஆசிலக் கன்னிக்கு மீதுசென் ருேங்கர சார்துறைசைத்
தேசிகப் பொற்சடைச் செம்பொற் றியாகர் சிலம்பிலொரு
பாசிழைக் காநெஞ் சிளகிற்றென் ருயண்ணல் பண்ணிருப்பி
ஞசிவைக் கோவயி ரப்பொருப் புத்துளை யுண்பதுவே. (௫௨)

கிழவோன் வேட்கை தாங்கற்கருமைசாற்றல்.

சுற்றுஞ் சடிலத்தர் கோமுத்தி யீசர் துறைசைவெற்பிற்
குற்றும் புதுமலர்க் காவூடு வந்தவள் கோக்கடல்வீழ்ந்
தெற்று மவாவலை யாற்சுழல் வேனுக் கினியவடன்
பற்றுந் தனக்கல னன்றிப்பின் வேருெரு பற்றில்லையே. (௫௩)

பாங்கன்தன்மனத்தழுங்கல்.

சூலேந்து செம்பொற் றியாகேசர் கோகழித் தொல்லரசின்
மேலேயெக் காலுமின் மாலேறக் கண்டன மெய்ம்மையது
போலேநஞ் சீரா சின்றலை மீதும் புனத்தொருமின்
மாலே றிடின்மட நெஞ்சே யிருந்தென்ன வாய்நமக்கே. (௫௪)

---

௪௯. பேரெழிலி - பேரழகையுடையாள், பெரிய மேகம்.

௫0. நிலவரசு - படர்ந்த அரசமரம் அல்லது கொடியரசு. அம் சைவலம்.

௫௧. கோகனகை - திருமகள்.

௫௨. கன்னி - ஓரிராசி. தேசிகப்பொன் - ஒருபொருட் பன்மொழி. ஊசி வை - ஊசியின் கூர்மை.

௫௩. குற்றும் - பறிக்கப்படும். கோ - கண்கள். கலன் - கப்பல்.

௫௪. சூல் - சூலம். அரசு - அரசமரம், தலைவன். மின்மால் - மின்னலை யுடைய மேகம், தலைவியாலுண்டாகிய காம மயக்கம்.

பாங்கன் தலைவனோடுமுங்கல்.

விளக்க மருத துறைசையெங் கோமுத்தி மெய்யர்வெற்பி
லளக்கரி தாயநின் கல்வியுஞ் சீலமு மாண்மையுமோர்
குளக்கனி வாய்மொழிக் கள்ளிக்குக் கொள்ளை கொடுத்துநெஞ்சந்
துளக்க முறுநிற்றி யேந்தாலஃ தென்னுடைத் தொல்வினையே.(நரு)

பாங்கன் எவ்விடத்து எவ்வியற்றென்றல்.

பைம்போதி மாநகர்ச் செம்பொற்றியாகர்பற் றுரையொறுக்
கும்போதி லேந்துங் கொடுமர மோவவர் கோறுயிலு
மம்போதி யோவிடம் யாதுன்னை யிவ்வண்ண மாகக்கண்ட
வம்போதி மான்வண்ண மென்னிறை வாசொல் வகையெனக்கே. ()

தலைவன் அஃது இவ்விடத்து இவ்வியற்றென்றல்.

துளவே யணிவிடைச் சொன்னத் தியாகர் துறைசைவெற்பிற்
களவே பயில்கருங் கண்ணுலென் னுள்ளங் கவர்ந்தவட்குத்
தளவே நகைதந் தளவே யிடுகிடை தண்மதியின்
பிளவே நுதல்செண்ப காடவி யேயிடம் பெண்கொடிக்கே. (நஎ)

பாங்கன் இறைவனைத்தேற்றல்.

தேன்வருங் காவிடை [1]நின்னுவிக் காவியைச் சென்றுகண்டு
நான்வருங் காறும் பளிக்கறை மேனிற்றி நற்றவர்வாழ்
வான்வருங் கோகழிச் செம்பொற் றியாகர் வரையிலன்னந்
தான்வருங் காறுந் தரித்துநிற் குந்நளன் றுனென்னவே. (நஅ)

பாங்கன் குறிவழிச்சேறல்.

மயில்போ னடந்துபந் தாடுவ ரோபன் மலர்பறித்துக்
குயில்போன் மிழற்றிநிற் பாரோ வறிகிலன் கொளளைவண்டு
துயில்போங் கடுக்கையர் சொன்னத் தியாகர் துறைசையண்ண
லயில்போல் விழியு மலைபோன் முலையுமுண் டானவரே. (நசு)

பாங்கன் இறைவியைக்காண்டல்.

பனிச்சந் திரமுக மண்டல மீதரைப் பாம்பிதுசி
ரனிச்சம் பொருத வடித்தா மரையிவை யாந்துறைசைத்
தனிச்சங் கரரெங்கள் செம்பொற் றியாகர் தடங்கிரிமே
லினிச்சங்கை யில்லை யிவரே யிறைசொன்ன வேந்திழையே. (சுo)

நரு. குளம் - வெல்லம்.

நசு. போதி - அரசு. ஒறுக்கும்போதில் - சண்டைசெய்யும்பொழுது. கொடுமரம் - வில், மேரு. கோல் - அம்பு, திருமால். அம்போதி - கடல். வம்போதி - மணத்தையுடைய கூந்தல்.

நஅ. பளிக்கறை - பளிங்குப்பாறை. வாழ்வான் - வாழும்பொருட்டு. என்ன நிற்றி.

(பி - ம்.) [1]நின் னுயிர்க்காவியை.

பாங்கன் இகழ்ந்ததற்கு இரங்கல்.

துதியைப் பெறுங்கழற் சொன்னத் தியாகர் துறைசையிலெம்
பதியைப் பகர்ந்திகழ் வாருமுண் டோவெண்ணிப் பார்த்திலன்வே
றுதியைப் பொருங்கண்ணி வாழைக்குட் பாம்பிது நோக்கினவர்
மதியைக் கவர்ந்து விழுங்கா திராதெனின் வையகத்தே. (௬௧)

பாங்கன் தலைவனை வியத்தல்.

நடங்கொண்ட செம்பொற் றியாகேசர் காவிரி நாடனையா
ளிடங்கொண்ட வல்குற் படங்கொண் டவளிறு மாந்தகொங்கைத்
தடங்கண்ட கண்ணுூர் தடங்கண்ட தோவென் றலைவ னென்ன
திடங்கொண்டு வந்தன னேவறி யேனென்னைத் தேடிக்கொண்டே. ()

பாங்கன் தலைவியைவியத்தல்.

தாயினு மின்பருள் செம்பொற் றியாகர் தடந்துறைசைக்
கோயிலு மென்னெஞ்சுங் கொண்டோர் வரையினங் கொற்றவற்கு
நோயினு நோயளிப் பாருஞ்சற் றேதிரு நோக்களித்தை
வாயிலுங் கொள்ளு மருந்தாகு வாருமிம் மாணிக்கமே. (௬௩)

பாங்கன் தலைவன்றனக்குத் தலைவிநிலைகூறல்.

தோரணி வீதித் துறைசைத் திரவியத் தியாகர்வெற்பிற்
றூரகை மூவொன் பதுமொப்பி டாவொரு தாரகைதான்
வாரணி பக்கங் குறையாத சோமன் வரவதுபார்த்
தோரணி காவிடை நிற்கக்கண் டேனென் னிறையவனே. (௬௪)

தலைவன்சேறல்.

தென்னவிர் கோகழிச் சொன்னத் தியாகர் சிலம்பினிரு
பொன்னடி நோவத் தனிநின்று காவிற் புனமயில்போன்
முன்னையின் மிக்க திருவிளை யாடல்செய் மோகமொடு
மென்னையு நோக்குங்கொ லெங்குந்தித் திக்கு மிளங்கரும்பே. (௬௫)

தலைவன் தலைவியைக்காண்டல்.

உரக்கும்வண் போதி வனமாசி லாமணி யும்பர்வெற்பி
லரக்குங் கறுக்குநற் செவ்வா யிதழி யமிழ்தவெள்ளஞ்
சுரக்குங் கடைக்கண் விழிசாரி போதவென் சோருமுயிர்
புரக்குஞ்சஞ் சீவினி போனின்ற வாவிப் பொழிலிடத்தே. (௬௬)

---

௬௧. பதி - அரசன். ௬௨. தடம் - மலை, வழி.

௬௩. நோய்கள் பலவற்றுள்ளும் சிறந்த நோயாவது காமம். ஐவாயில் - ஐம்பொறி; ''கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு, மொண்டொடி கண்ணே யுள'' (திருக்குறள், ௧௧௦௧) என்பது இங்கே அறியற்பாலது.

௬௪. பக்கம் குறையாத சோமன் - தலைவனுக்கும் சந்திரனுக்கும் சிலேடை.

௬௫. தென் - அழகு, தென்னை.

௬௬. இதழி - இதழையுடையாள். சோரும் உயிர் புரக்கும் சஞ்சீவினி - மிருதசஞ்சீவினியென்னும் ஔஷதி.

கலவியின்மகிழ்தல்.

இருகோ டிவர்புனற் காவிரிக் கோமுத்தி யீசர்வெற்பி
லொருகோடி மால்வண் டொருகோடி மேகத் துருவெடுத்தே
வருகோ டிவர்கின்ற தேன்வாரி வாரி மடுத்தலொக்கு
மருகோ டியகண்ணி ஞானத் திளைத்துண்ட வானந்தமே. (சுஎ)

புகழ்தல்.

விடையார் துறைசைக் கனகத் தியாகர்தம் வெற்பிலென்று
முடையாத நீர்நின்று நோற்பவர் போற்குழை யோடிகலும்
படையார் விழியுன் னிதழ்நலம் பார்த்துட் பசையறுசெங்
கிடையார் கிடைப்பதற் கேநெடு நாளறற் கீழ்நிற்பதே. (சுஅ)

சொன்னேச ருக்கருள் சொன்னத் தியாகர் துறைசையன்ன
பொன்னேநின் னேருத ரத்துக்கொவ் வாத புரையறிந்தா
றன்னே ரிலையை மறைப்பது போலுஞ் சமர்கடந்த
கொன்னேமி யான்பள்ளி கொள்ளிட மாகக் கொடுத்ததுவே. (சுகூ)

தலைவியைப் பாங்கியொடுவருகெனப்பகர்தல்.

அடையார் புரஞ்செற் றரசாளுங் கோமுத்தி யப்பர்வெற்பிற்
புடையா ரிளங்கொங்கை நல்லீ ரினிவரும் போதினிய
மடையார் குவளை விழிப்பாங்கி யோடிங்கு வாரும்வந்தாற்
கடையா தமிர்தம்வந் தாற்போ லிருக்குமென் காதலுக்கே. (எ௦)

தலைவியைப்பாங்கிற்கூட்டல்.

நல்லா வடுதுறைச் செம்பொற் றியாகர் நளிர்வரைமே
லெல்லா வெழுத்திற்கு நாயக மாமவ் வெழுத்தினொன்றி
னல்லா லவைக்குச் சிறப்புள தோவது போலடுத்து
வல்லா ரிளமுலை மாதேநின் னைய மருவுகவே. (எக)

பாங்கிமதியுடன்பாடு.

ஐயமுற்றோர்தல்.

திருக்காவி ரித்திருத் தம்படிந் தோசெழுந் தேன்பிலிற்று
மருக்கா விரிமென் மலர்பறித் தோவண்ட லாட்டயர்ந்தோ
விருக்காலுங் கோமுத்தி யூர்மாசி லாமணி யீசர்வெற்பி
லொருக்காலு நானறி யாமெலி வான துவள்வடிவே. (எ௨)

சுஅ. செங்கிடையார் - செக்கெட்டி.

சுகூ. ஆல் - ஆலமரம். நேமியான் - திருமால். எ௦. புடை - பருத்தல்.

எக. அவ்வெழுத்தின் - அகரத்தோடு. அவைக்கு - அவ்வெழுத்துக்களுக்கு.

எ௨. கா விரி - சோலைகளில் விரிந்த. இருக்கு ஆலும் - வேதங்கள் முழங்கும்.

இதுவுமது.

மழைதருங் கந்தம் பெறும்புத் தெழில்வனப் பாரொழுக்கங்
கழிவுறு முண்டி கரக்குந் தொழிலினங் கையகற
வுழைநிற்ற லோடு தியாகேசர் கோமுத்தி யூர்வரைமே
லெழுவகைத் தன்மையு மெங்குற்ற வாவெங்க ளேந்திழைக்கே. ()

ஐயந்தீர்தல்.

பெண்ணுழை யாளர் துறைசையெங் கோமுத்திப் பிஞ்ஞகனார்
பண்ணுழை வேதனுங் காணு முடியிற் பரித்தலினாற்
கண்ணுத லாரவர் செம்மார்பிற் கோடன்ன காட்சியினாற்
றண்ணுறை வெண்பிறைக் கேசெங்கை கூப்பத் தகுந்திருவே. (எச)

இதுவுமது.

தக்கோர் பணிகழற் செம்பொற் றியாகர் தடந்துறைசை
முக்கோ வுடையர் சடிலவட் டத்தின் முளைமதிபோற்
சொக்கோடு செக்கர்ச் சுடர்வானில் வெண்பிறைத் தோற்றங்கண்டாற்
கைக்கோ கனக மலரே குவியுநங் காரிகைக்கே. (எரு)

சுனையப்புரைத்தல்.

எண்ணிய வெண்ணிய வெல்லாந்தந் தொண்டர்க் கினிதளிக்கும்
புண்ணியர் கோகழிச் செம்பொற் றியாகர் பொருப்பினில
வண்ணிய முத்தமுத் தாகவிக் கோவையக் கோவையதாப்
பண்ணிய தோகன்னி நீபடிந் தாடிய பைஞ்சுனையே. (எசு)

சுனைவியந்துரைத்தல்.

பருக்குந் தனச்சந் தனமுமைம் பாலிற் பரிமளமுங்
குருக்குமெய் வேர்வும் பெறலா மெனினவ கோடிசித்த
ரிருக்குந் துறைசைப் பதிமாசி லாமணி யீசர்வெற்பி
லுருக்குமச் சித்துச் சுனைநாணு மாடுவ ணொண்ணுதலே. (எஎ)

தகையணங்குறுத்தல்.

மாமேனிக் குள்ள குழைவுங்கட் சேப்பு மணிமுருக்கின்
பூமேல் வெளுப்பும் புறம்பணைங் கேமற்றப் பொற்பனைத்துந்
தேமேவு பூமத்தர் கோமுத்தி யீசர் சிலம்பிலெங்கள்
பாமே கலையிள மான்வடி வாம்வரப் பார்த்தகலே. (எஅ)

எ௩. மழை - கூந்தல். கந்தம் - மணம். எழுவகைத் தன்மை - மழை தருங்கந்தம் முதலியன; "பூங்கேச மன்றல் புனையா ரெழில்வெண் புதுமதி கண், டாங்கே யிகழ்த லருகிய வுண்டி யருஞ்செலவு, நீங்கே கரத்த லொரு வயி னேசென்று சென்றுநிற்ற, லாங்கே வலமல்ல வந்ததென் னேவிந்தத் தையலுக்கே. (அம்பிகாபதிகோவை, எச) என்பது இச்செய்யுளுடன் ஒப்புநோக்கற்பாலது. எச. கோடு - பன்றிக்கொம்பு.

எரு. முக்கோ - மூன்றுகண்கள். சொக்கு - பேரழகு.

எசு. முத்தம் - கீழுதடு. இக்கோவை - இக்கண்களை. அக்கோவையதா - அந்தக் கொவ்வைக்கனியாக. எஅ. முருக்கின் பூ - கீழுதடு.

நடுங்கநாட்டம்.

தடக்கும்ப ராசி தொடுமா சூர்க்குத் தலைவர்விடங்
கிடக்குந் திருமிடற் றம்பொற் றியாகர் கிரியிற்கொம்பா
னடக்கு மொருவரை குத்திற்றந் தோதுப்பி னன்றதன்வீ
றடக்கு மொருவரை வேலொடு கண்டன ஞரணங்கே. (எகூ)

பெட்டவாயில்பெற்றுஇரவுவலியுறுத்தல்.

முத்தியென் னப்படு மங்கையைச் சேர முயல்பவருஞ்
சத்தியென் னப்படு மீச னருளன் றிச் சார்தலுண்டோ
சுத்திபெற் றூர்தொழுஞ் சொன்னத் தியாகர் துறைசைவெற்பிற்
சித்திர தீபத் துயிர்ப்பாங்கி யாற்சுகஞ் சேருதுமே. (அ0)

இதுவுமது.

உம்பர்க் கரசென்றுள் ளோனையில் லோன்சென் றுரைப்பதுபோற்
கொம்பைப் பொருமிடைப் பாங்கிக் கினியவை கூறியிரந்
திம்பர்க் கரிய வெழுதரும் பாவையை யெய்துவம்யாஞ்
செம்பொற் றியாக ருறையுந் துறைசைச் சிலம்பிடத்தே. (அக)

ஊர்வினாதல்.

துதிப்பார்க் கருள்செயுஞ் சொன்னத் தியாகர் துறைசைவெற்பிற்
சதிர்ப்பா டிலாது நெறிதப்ப விப்புனஞ் சார்ந்தனன்யான்
கதிர்ப்பூண் முலைமட வீர்களின் னேவழி காட்டியுங்கள்
பதிப்பே ருரையு முரைத்தா லுமக்கொர் பழியில்லையே. (அஉ)

பெயர்வினாதல்.

ஓராழி யங்கையன் பங்கயன் றேட வுமையுடனே
சீரா வடுதுறை மேவிய செம்பொற் றியாகர்வெற்பிற்
கூராரும் வேல்விழி யீருங்க ளூர்குரு மந்திரமேன்
மாராய மாயுங்கள் பேராயி னுஞ்சொல்லும் வாய்திறந்தே. (அங)

வேழம்வினாதல்.

பதவா ரணத்தர சூரொப்பி லாமுலை பாகர்வெற்பி
லிதவா ரணவு மிளமுலை யீர்தெவ்வர்க் கீடழிந்து
சிதவா ரணமொன்று கையான் புனத்திடைச் சேறலைப்போன்
மதவா ரணமொன்று வந்ததுண் டோவுங்கள் வான்புனத்தே. (அச)

வேங்கைவினாதல்.

சேயான மேறுந் துறைசைத் திரவியத் தியாகர்வெற்பிற்
சாயா முலைக்கின மென்றுரை யாடிவிர் தந்திதனைக்

எகூ. நடக்கு மொருவரை - யானை. கொம்பாற் குத்திற்று.

அ0. சித்திர தீபம் - தலைவி. அங. மாராயம் - மகிழ்ச்சி.

அச. பத ஆரணம் - பதங்களையுடைய வேதம். இத வார் அணவும் - இன்பத்தைச் செய்யும் கசசைப்பொருந்திய. ஈடு - வலி. சிதவாரணம் - வெள்ளிய சங்கம். கையான் - திருமால். மத வாரணம் - மதயானை.

அரு. சே யானம் - இடபமாகிய ஊர்தி. சாயா - காசாமரம். புனத்தால் - புனத்தின்கண். பாயாத வேங்கை - வேங்கைமரம்.

காயா மலர்க்குழ லீர்வந்த தோஷிக் கடிப்புனத்தாற்
பாயாத வேங்கையுட் பாயுமொர் வேங்கை படருழந்தே. (அரு)

கலைவினாதல்.

தொத்திட்ட கொன்றையர் செம்பொற் றியாகர் 1துறைசையெண்ணு
வெத்திட்ட நெஞ்சுடைக் கள்வரைப் போற்பிழைத் திப்புனத்தே
மூத்திட்ட வெண்ணகை யீர்வீர பாண மூனையழுந்தத்
தைத்திட்ட தோர்கலை கண்டதுண் டோவின்று தான்வரவே. (அசு)

வன்றிவினாதல்.

பொன்னோதி வில்லத்தர் சொன்னத் தியாகர்தம் பூந்துறைசை
யின்னோதி மங்கற்கு நன்னடை யீர்சர மேற்றவன்றி
முன்னோட வென்மனம் பின்னோடி வந்ததிம் மொய்புனத்தே
யன்னோ வவைகண்டி லேன்கண்டி ரோசொல்லு மாதரித்தே. (அஎ)

இடைவினாதல்.

சுற்றிய வார்சடைச் செம்பொற் றியாகர் துறைசைவெற்பி
லெற்றொடி யேந்துகை யீரின்று நான்வனத் தெய்தவெய்த
வொற்றிடை யாரு மதிகலை வேங்கை யொருவினபோற்
சிற்றிடைச் சிங்கமெங் கேநுங்கள் பால்விட்டுச் சென்றதுவே. (அஅ)

மொழியாமைவினாதல்.

திரையார் புனற்சடைச் செம்பொற் றியாகர் திருத்துறைசை
வரையா ரமுதனை யீர்வரை யாரங்கள் வட்குமென்றோ
விரையாரும் வாய்முத்தங் காட்டிலிர் காட்டா விரதங்கொண்டா
லிரையார் கிளியின மெப்படி யோட்டுவ திப்புனத்தே. (அகூ)

யாரே யிவர்மனத்தெண்ணம் யாதெனத்தேர்தல்.

பதியாதென் பாருங்கள் பேரென்னென் பார்பின் படிப்படியா
முதியானை யோடு பிறவும் வினுய்கிற்பர் மூதறிவோர்
வதியா வடுதுறைச் செம்பொற் றியாகர் வரையிலிந்த
விதியாளர் யாரிவர் யாதோ விவரெண்ணம் விள்ளரிதே. (கூ0)

எண்ணந்தெளிதல்.

ஆறேந்து சென்னியர் செம்பொற் றியாகரொ ராயிழையைக்
கூறேந்து வாரா சூர்வரை மேன்முறி கொண்டுவந்து
மாறே யிவர்சொன்ன வார்த்தையெல் லாமறி வாய்நெஞ்சமே
வேறேது மில்லை யிவர்கொண்ட கோலமிம் மின்பொருட்டே. (கூக)

அஎ. பொன் ஓதி - பொன்மலை; மேரு. வில் அத்தர். வன்றி - பன்றி.

அஅ. ஒற்று இடை ஆரும் அதி - அத்தி=யானை.

அகூ. வரை ஆரங்கள் - மூங்கிலிற்றோன்றிய முத்தங்கள்.

கூ0. முதுமை யானை. கூக. முறி - தளிர்.

(பி - ம்.) 1 துறைசையென்னு.

இருவருமுளவழி ஒருமைபிற்போதல்.

பிரியாது வள்ளிக் கொடியையுந் தெய்வப் பிடியையும்போ
லுரியா ரிருவரு மொத்திருந் தாரா ரூருகந்த
வரியா ரதனுடைச் செம்பொற் றியாகர் வரைக்கணினித்
தரியா தியாஞ்சென்று கண்டுகொண் டாடுஞ் சமயமிதே. (௩௨)

கையுறையேந்திநின்று அவ்வகைவினுதல்.

அருளா வடுதுறைச் செம்பொற் றியாக ரடியரைவிட்
டிருளா ணவங்கழிந் தோடுத லேய்ப்பவென் னேவுங்கொண்டு
மருளா வுதிர வருவியி னோர்கைம் மலைவந்ததோ
சுருளார் கருங்குழற் கட்டழ கீரிச் சுனைப்புனத்தே. (௩௩)

எதிர்மொழிகொடுத்தல்.

காயத் திருஞ்சிறை தீர்ப்போர் துறைசைக் கருத்தர்சிதா
காயத் திரவியத் தியாகர்பொன் னாகத்தெங் கார்ப்புனத்தே
காயத்தி கண்டதுண் டல்லா லொருவர்செங் கைக்கணைதான்
காயத்தி வந்திடக் கண்டோ மிலையொரு காலமுமே. (௩௪)

இறைவனை நகுதல்.

அரந்தொட்ட வேற்கண்ணி யிவ்வீர ரின்றெய்த வாம்பனெடுங்
கரந்தொட்ட மாவிலை யம்பொடுஞ் சேட்செலக் கற்றதனால்
வரந்தொட்ட கோகழிச் செம்பொற் றியாகர் மதுரைச்சிங்க
சரந்தொட்டு முன்னெய்த மாயக் களிற்றினுந் தான்சதிர்த்தே. (௩௫)

மதியினின் அவரவர்மனக்கருத்துணர்தல்.

தினைக்காடு காக்குங் கருத்தே யிவட்கின்று தேரிலவர்
முனைக்கோட் டிரலையெய் வாருமன் றூலன்பர் மொய்யரசூர்ப்
புனற்கோட்ட மார்சடைப் புத்ரத் தியாகர் பொருப்பிருவர்
மனக்கூட் டுறவினுக் கொற்றுயொத் தாடு மலர்க்கண்களே. (௩௬)

பாங்கியிற்கூட்டம்.

தலைவன் உட்கோள்சாற்றல்.

தொழும்புசெய் வார்க்கருள் சொன்னத் தியாகர் துறைசைவெற்பிற்
செழுங்கொடி யீர்விண்ணிற் றூரா கணத்தையுந் திங்களையுங்
கழங்கென வாடவு மாடியு மாகக் கடைந்துமக்கு
வழங்கவும் யான்வல்ல னேவல்கொள் வீர்திரு வாய்மலர்ந்தே. (௩௭)

---

௩௨. வள்ளிக்கொடி - வள்ளியம்மை. தெய்வப்பிடி - தெய்வயானை.

௩௩. கைம்மலை - யானை.

௩௪. காயத்திருஞ்சிறை - தேகபந்தம். சிதாகாயம்-ஞானகாயம். நாகம்-மலை. காய் அத்தி - காய்த்த அத்திமரம், கோபிக்கப்பட்ட யானை.

௩௫. ஆம்பல் - யானை. ௩௬. ஒற்று - ஒற்றியெடுத்தலை.

௩௭. தாராகணத்தைக் கழற்சிக்காயாகவும் திங்களைக் கண்ணுடியாகவும் கடைந்து கொடுக்க வல்லேன்.

பாங்கி குலமுறைகிளத்தல்.

உள்ளாரை யோட்டி யுலகம் புரக்கு முயர்மன்னனீ
புள்ளாய மோட்டிப் புனங்காக்கு மாதெங்கள் புன்குறமான்
றுள்ளாடு மானத்தர் சொன்னத் தியாகர் துறைசைவெற்பில்
வள்ளாலுன் கோதையெம் பேதைக்குச் சூட்டன் மரபல்லவே.(௯அ)

தலைவன் தலைவிதன்னை யுயர்த்தல்.

தோட்டெருக் கந்தொடைச் செம்பொற் றியாகர் துறைசைமன்றிற்
றீட்டிய பாவையன் னீர்தெய்வ ராசன் றிருமகளை
வேட்டிருந் தும்முரு கோன்மீட் டொருகுற மின்னைமணந்
தீட்டிய கீர்த்தியன் றேரேவெழு லோகமு மேறியதே. (௯௯)

பாங்கி அடியாள்போன்றுவினுதல்.

தொல்லா வடுதுறைச் சொன்னத் தியாகர் சுடர்க்கிரிநீர்க்
கல்லாரங் குற்றுவெண் முத்தூச லாடுவர் காவகத்திற்
பல்லாயி ரந்தைய லார்யார்மண் காத்திடும் பார்த்திவநின்
வல்லாண்மை யைக்கவர்ந் திம்மால் கொடுத்த மடமங்கையே. (௧00)

இறையோன் இறைவிதன்மை யியம்பல்.

பஞ்சடி தாமரை யல்குல்பொற் றேர்த்தட்டுப் பைங்கழைதோள்
வஞ்சிமென் சிற்றிடை கொங்கைபொன் மேரு மதிவதனஞ்
செஞ்சடைக் கோலத்தர் கோகழிச் செம்பொற் றியாகர்கண்டத்
தஞ்சனக் கூர்விழி மாதே யெனக்கமு தானவட்கே. (௧0௧)

பாங்கி தலைவியருமை சாற்றல்.

சூடா மணியினை யாந்தொழப் பெற்ற சுடர்த்தொடியைக்
கோடார் விலங்கலெங் கோமா னருமைக் குமாரியைநீர்
நாடா தெளியளென் றெண்ணுதிர் கோமுத்தி நாதர்வைகும்
பீடார் துறைசைப் புரவல ரேசில பேதம்வைத்தே. (௧0௨)

தலைவன் இன்றியமையாமை இயம்பல்.

கோங்கே ரிளமுகை கும்பிடுங் கொங்கைக் கொடியினுக்கா
வீங்கே யுனையொரு தஞ்சமென் றேற்கிரங் காதொழிந்தாற்
றீங்கேத நீக்கு மரசூரர் செம்பொற் றியாகர்வெற்பிற்
றூங்கே னுயிரிமைப் போதுஞ் சாதந் தளிரியலே. (௧0௩)

பாங்கி நின்குறை நீயேசென்றுரையென்றல்.

மறைகட் கரிய பிரான்மாசி லாமணி வள்ளல்வைகுந்
துறைசைக் கதிபவுன் னுள்ளத்தி னின்று துளும்புகின்ற
குறையெத் தனையத் தனையுமெம் பாவைக்குக் கூறுகநீ
யறையக் கடவதன் றுலெம்ம னோர்க்கிங் கறிந்தருளே. (௧0௪)

௯அ. துள்ளாடும் - துள்ளும்.

௯௯. தெய்வராசன் திருமகள் - தெய்வயானை. ௧00. மங்கை யார்.

பாங்கியைத் தலைவன் பழித்தல்.

வடிக்கணல் லாடனக் கென்காத லோதி மனக்குறையை
முடிக்கவல் லாயென் றுனையிரந் தேனின்று மூதரசூர்
நடிக்கவல் லாரெங்கள் செம்பொற் றியாகர் நறும்பதத்தைப்
பிடிக்கவல் லார்தமைப் போன்மொழிந் தாய்நன்று பெய்வளையே. ( )

பாங்கி பேதைமையூட்டல்.

காதும் பாசர் துறைசையெங் கோமுத்திக் கத்தர்வெற்பி
லோதுந் தினைத்தடஞ் சாரலி லூர்முகி லேக்கதையான்
மாதுன் புறப்புடைக் குந்தன் றமையரின் மற்றிவளு
மேதும் பிறர்வருத் தம்மறி யாத வியல்பினளே. (கடுசு)

காதலன் தலைவி மூதறிவுடைமைமொழிதல்.

சீரே றுயர்த்தவர் கோகழிச் செம்பொற் றியாகர்வெற்பி
னீரேது சொற்றனிர் நான்றஞ்ச மற்றங்கு நிற்குமப்போ
தேரேறு தாரிற்றன் பேரூ ருறத்தொடுத் தீந்தனளா
லாரே யுலகி லவளுக்கொப் பான வறிவினரே. (கடுஎ)

பாங்கி முன்னுறுபுணர்ச்சி முறையுறக் கூறல்.

உமக்கேமுன் னட்பந்த வொண்டொடி யாளுள ளாயிருந்தா
லெமக்கேன் பிறருக்கெ னல்வார்த்தை சொல்வ தெழிற்றுறைசைத
தமக்கேயொப் பானவர் செம்பொற் றியாகர் சயிலத்துனீர்
நமக்கே சரியில்லை யென்பவ ளோடின்ப நண்ணுகவே. (கடுஅ)

தலைவன் தன்னிலைசாற்றல்.

கார்நாட்டு கூந்தன்மின் னுகந் தழாவிடிற் காதல்வெப்பஞ்
சீர்நாட்டு மாவடு தண்டுறைச் செம்பொற தியாகர்பொன்னி
நீர்நாட்டி லுள்ளதண் ணெல்லாமெய் யேற்பினு நீங்கரிதால்
வார்நாட்டு கொங்கைநல் லாயுன்ன லாலினி வாய்ப்பதின்றே. (கடுகூ)

பாங்கி உலகியலுரைத்தல்.

சேவேறு செம்பொற் றியாகேசர் செல்வத் திருத்துறைசைக்
காவேரி யங்கயற் கண்ணு ளிளமுலை காமுறினீ
கோவே வரைந்தனை கொண்மோசெந் தீவலங் கொள்ளன்முன்னு
மாவேத நீதி யொழுகல்பட் டாங்கிந்த வையகத்தே. (கக0)

தலைமகன்மறுத்தல.

விற்படும் வெப்பினின் றெய்த்திளைப் பார்க்கு விடாயறவிண்
கற்பகக் காக்கொணர்ந் தின்னீழல் செய்யக் கருதலொப்பாம்
பொற்பமர் கோகழிப் புத்தரத் தியாகர் பொருப்பின்மின்னே
யற்புதக் கொம்பைமுன் வேட்டுப்பின் கூடென்ற வாதரவே. (ககக)

கடுரு. வல்லார்-வல்லமையுள்ளார், வல்லமையில்லார். கடுஅ. சரி-ஒப்பு.
கடுகூ. வெப்பம் நீங்கரிது. ககக. ஆதரவுகருதல் ஒப்பாம்.

பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்.

நம்மாசி லாமணி நாதன் றுறைசை நளிர்வரைமேல்
வெம்மாலை வந்தி யாங்கள்செல் வேமெங்கள் வேடர்கண்டா
லம்மா பொருரின்று சும்மா வரும்பழி யாதலினு
னிம்மா தனிப்புனம் விட்டைய நீயு மெழுந்தருளே. (கக௨)

தலைவன் கையுறைபுகழ்தல்.

தொனிகொண்ட வார்கழற் சொன்னத் தியாகர் துறைசையிற்செங்
கனிகொண்ட வாயன்ன மேதரிக் கத்தகுங் காணற்சஞ்சீ
வனிகண்ட செம்பொ னிமயா சலத்தில் வளர்ந்ததனுற்
பனிகண்ட தன்றி வெயில்கண்ட தின்றிப் பசுந்தழையே. (ககங)

பாங்கி கையுறைமறுத்தல.

நறையா ரிதழியர் செம்பொற் றியாகர்நல் லாவடுதன்
னுறையா திபகை யுறையாகத் தந்தவை தூமொழியாள்
குறையாத வல்குற் றடத்தெமர் காணிற் குறித்தயிர்ப்பார்
முறையாக யாங்கள்கைக் கொள்ளேநின் கையின் முழுத்தழையே. ()

ஆற்றுநெஞ்சினோடு அவன்புலத்தல்.

மனையா வடுதுறை கொண்மாசி லாமணி யார்வரைமே
னனையார் மலர்க்குழன் மானுர் திருவுள்ள நம்மிடத்தி
லினையா திருந்தது நெஞ்சேயப் பூவை யிடங்கொளல்குற்
சுனையாட லின்றிநங் கைம்மாந் தழையுந் துவள்கின்றதே. (ககரு)

பாங்கி ஆற்றுவித்தகற்றல்.

துய்யவெண் ணீற்றினர் செம்பொற் றியாகர் துறைசைவெற்பி
லைய விராவிலெந் தையலை வேண்டி யருள்பெறுவேன்
பொய்யல வைகறை போய்க்கதிர் தோன்றும் பொழுதிங்குவா
கையுறை யேற்கமுன் வந்துநிற் பேணிந்தக் காவகத்தே. (ககசு)

இரந்துகுறைபெறாதவருந்தியகிழவோன் மடலேபொருளெனமதித்தல்.

தோற்றமுங் கேடுமில் சொன்னத் தியாகர் துறைசைவெற்பி
லாற்றருங் கேத முறுநெஞ்ச மேநடை யன்னமன்னாள்
கூற்றெனுங் கண்ணிணை தந்தவெங் காமக் கொடும்பிணியை
மாற்றுதற் கேம மடலல்ல தில்லை [1]வழிநமக்கே. (ககஎ)

இதுவுமது.

இணையார் திருவடி யென்றலை மேல்வைத் திரவுபகற்
றுணையாகி நின்றருள் [2]சொன்னத் தியாகர் துறைசையன்னார்
கணையார் விழிதந்த காமக் கடலைக் கடக்கநெஞ்சே
புணையாகக் கோடன் மடலன்றி வேறு பொருளில்லையே. (ககஅ)

ககங. சஞ்சீவனி - மிருதசஞ்சீவினியென்னும் ஔஷதி (மோனை.)

(பி - ம்.) 1 'வலிநமக்கே' 2 'செம்பொற்றியாகர்'

பாங்கிக்கு உலகின்மேல் வைத்துரைத்தல்.

சுழியொன்று நீர்ச்சடைச் சொன்னத் தியாகர் துறைசையன்னாய்
மொழியொன்று கேண்மட வார்காம வெள்ளத்தின் மோதலுற்றார்
கிழியொன்று கைப்பிடித் தேமட லேறுவர் [1]கேண்மையற்றார்
பழியொன்று மெண்ணில ராய்ப்பறம் பேறியும் பாய்வர்களே. (௧௧௯)

அதனைத் தன்மேல்வைத்துச் சாற்றல்.

தூவேத வாசியர் சொன்னத் தியாகர் துறைசையன்ன
வேவேய்கண் ணாளைக் கிழியூ டெழுதிக்கொண் டேயினிநான்
பூவே [2]யெருக்கென்பு பூண்டுவெண் சாந்தமும் பூசிமடன்
மாவேறி நாளை வருவேனும் மூர்க்குண் மடமயிலே. (௧௨௦)

பாங்கி தலைமகள் அவயவத்தருமை சாற்றல்.

துவ்வா விடமுண்ட செம்பொற் றியாகர் துறைசை வெற்பா
வவ்வாண்மை நன்று படமீ தெழுத வவண்மருங்கு
லிவ்வா றிருக்கு மெனவுண ராயன்றி யீர்ம்பவளச்
செவ்வா யெழுதி னமிர்தமெங் கேயினித் தேடுவையே. (௧௨௧)

தலைமகன் தன்னைத் தானே புகழ்தல்.

ஆராக வென்றன்னை நீர்நினைந் தீரென் னருமைசற்றும்
பாரா துரைத்தனிர் பாருமிப் போதுபொற் பார்துறைசை
யூராளுங் கோமுத்தி யீச ரருளா லுருவெழுதி
வாரார் முலைமட வீருயிர் கூட வருவிப்பனே. (௧௨௨)

பாங்கி அருளியல்கிளத்தல்.

வெள்ளாங் குருகிட்ட முட்டையுங் கோடி வியங் குடம்பை
யுள்ளா திறகன்றிற் பிள்ளையுந் தூக்கணத் தொண்சினையுந்
தள்ளாநற் கோமுத்தி யீசன் றுறைசைச் சயிலத்தரே
கொள்ளார் பனைமடன் மாநெஞ்சி லேயருள் கொண்டவரே. (௧௨௩)

இதுவுமது.

வில்லார வேழத்தன் காகள வீக்குச் செவிலியென்னு
மல்லார் கொடியின் கரும்பார்ப்பு வாட வவநெறியிற்
செல்லார்கள் வாழுந் துறைசைத் திரவியத் தியாகர்வெற்பா
புல்லாரைக் கோற லருளுடை யார்க்குப் புகழல்லவே. (௧௨௪)

---

௧௨௦. வெண்சாந்தம் - திருநீறு.

௧௨௩. வெள்ளாங்குருகு - நெய்தனிலத்துக்கு உரியதொரு பறவை; நற்றிணை, ௭௦; ஐங்குறு, ௧௫௮ - ௬௦.

௧௨௪. வேழத்தன் - மன்மதன். காகளவீ - குயிற்பறவை. கொடி - காக்கை. புல்லார் - புறக்காழையுடைய பனை, புன்மையையுடையார்.

(பி - ம்.) 1 'கேண்மையற்றாத்' 1 'எருக்கெனப்பூண்டு'

பாங்கி கொண்டு நிலைகூறல்.

பிறைவார் நுதன்முலைப் பெண்ணையிப் போது பெறுவிடிற்கண்
ணிறைவாங் குரும்பை முலைப்பெண்ணை நீகொண்டு நின்குறையை
யிறைவா முடிமதி செம்பொற் றியாகர்க் கினியபொன்னித்
துறைவாய்முத் தாருந் [1]திருவா வடுதண் டுறைநகர்க்கே. (கஉரு)

தலைவியிளமைத்தன்மை பாங்கி தலைவற்குணர்த்தல்.

முடித்திட மென்குழல் பற்றுது சற்று முலைக்குறிகள்
பொடித்தில முத்தங் குமுதத் திலகண்கள் புன்களவு
படித்தில கோகழிச் செம்பொற் றியாகர்வெற் பாவுடைகொய்
துடுத்திட வும்மறி யாட்கென்னை நீயிரந் தோதுவதே. (கஉசு)

தலைவன் தலைவி வருத்தியவண்ணமுரைத்தல்.

வெங்கட் கரிவந் ததிர்ப்படி லீன்றவவ் வேளையிலே
சிங்கக் குழவி யடிமாறு கேட்டுந் தெரிந்திலையோ
துங்கப் பொருவிடைச் செம்பொற் றியாகர் துறைசையன்னாய்
மங்கைக் கரசியன் றேவென்னை வாட்டிய வாணுதலே. (கஉஎ)

பாங்கி தலைவி செவ்வியருமைசெப்பல்.

கொய்யாள் குவளையு முல்லையும் பூந்தொடை கூந்தலின்மேல்
வையா டுறைசைக் கனகத் தியாகர் வரையிலிடை
பொய்யா ணறுந்தளிர் மெய்யாள்பந் தாடப் புனத்தினடை
செய்யாள்செய் யாளனை யாட்கெந்த வாறு தெரிவிப்பதே. (கஉஅ)

தலைவன் செவ்வியெளிமைசெப்பல்.

தென்னர சூர்வளர் செம்பொற் றியாகர் சிலம்பின்மின்னே
பொன்னனை யாளுக் கியான்வந்த வாறு புகலுதியேற்
பின்னடை யாளங்கள் கேளா னெழுந்து பிரியமுடன்
சொன்னநின் வாயிற் கனகமு முத்துஞ் சொரிந்திடுமே. (கஉகூ)

பாங்கி என்னை மறைப்பின் எளிதென நகுதல்.

தண்ணங் குமுதமு மால்வண்டு மொன்றினுந் தாதுறுந்தேன்
விண்ணம் பொலிநில வின்றியுண் ணாது வியன்றுறைசைப்
பண்ணஞ் சொலாளொப் பிலாமுலை பாகர்வெற் பாவுனதுள்
ளெண்ணந் தனைமுடித் தற்கேனு மோவிங் கெனைமறைத்தே. (கங0)

அந்நகைபொறாது அவன்புலம்பல்.

உள்ளீட் டினர்தொழுஞ் சொன்னத் தியாக ருறைதுறைசை
நள்ளீட் டியபொரு ளன்னாள் பொருட்டு நலிதல்கண்டும்
வள்ளீட்டி குத்திய புண்மேன் மறுவலும் வாளெரிதோய்
வெள்ளீட்டி யிட்டதொப் பாமங்கை நீசெய்த வெண்ணகையே. ()

கஉரு. முலைப் பெண்ணை - கற்பையுடைய தலைவியை. பெண்ணை - பனை. மதி, முன்னிலையசை. கஙக. உள்ளீடு - அறிவு.

(பி - ம்.) 1 'திருவாவடுதண் டுறைக்கரசே'

பாங்கி தலைமகளைத்தேற்றல்.

மின்னோது மிட்டிடைப் பாங்கியர் பற்பலர் மேவினுந்தா
னென்னோக்க மெப்படி யப்படி யே[1]வரு மெங்கள்செல்வி
தொன்னோ யொழித்தருள் சொன்னத் தியாகர் துறைசையுற்றார்
பின்னோர் குறையில ராலினி யேங்கல் பெருந்தகையே. (௧௩௨)

பாங்கி கையுறையேற்றல்.

ஓங்குமெங் குன்றத் திறையாஞ்செவ் வேளை யுயிர்த்தருளுந்
தேங்கும் புனல்வயற் கோகழிச் செம்பொற் றியாகர்பன்னி
யாங்குங் குமமுலை யாளைத் தரும்வெற் படுத்தலினால்
வாங்குங் கடனுண் டரோவைய நீதரு மாந்தழையே. (௧௩௩)

கிழவோன் ஆற்றல்.

காழிமன் னர்க்கருள் செம்பொற் றியாகர் கவின்றுறைசை
வீழியஞ் செங்கனி வாயாளுக் காந்தழை வேண்டிக்கொண்ட
தோழிதன் வாண்முகச் செந்தா மரைகண்டு சோகமற்று
வாழியிப் போதென்ற னுள்ளச் சுரும்பு மகிழ்வுற்றதே. (௧௩௪)

இறைவன்றனக்குக் குறைநேர்பாங்கி இறைவிக்கு அவன் குறையுணர்த்தல்.

குழையேறு காதரெங் கோமுத்தி யீசர் குளிர்துறைசை
மழையேறு சாரலின் மாதே யொருவர் வருவர்வந்தென்
னுழையே யடுப்பர் முகம்பார்த்து நிற்பர்பின் னொன்றுரையார்
தழையே மிகத்தரு வாரென்னை யாஞ்செயத் தக்கதுவே. (௧௩௫)

இறைவி அறியாள்போன்று குறியாள் கூறல்.

நலம்பாவு நம்பொருப் பெல்லாமுந் தாழி னடிக்குமந்திக்
குலம்பாய முத்தஞ் சொரிந்து நிலாக்கொப் புளித்திடலா
லலம்பாய் கழனி யரசூரர் கோமுத்தி யப்பர்வெள்ளிச்
சிலம்பா யிருக்கின்ற தாலேல வார்குழற் றேமொழியே. (௧௩௬)

பாங்கி இறையோற்கண்டமை பகர்தல்.

[2] சுரும்பாடு தும்பையர் செம்பொற் றியாகர் துறைசைவெற்பில்
விரும்பா தவரின் மறைப்பதென் னேயென் விளங்கிழையா
யிரும்பா சிலைபிடித் தன்றுவந் தார்தம்மை யின்றுகண்டே
னரும்பார் தருமுத்தி யானத்தி னும்பண்ணை யாடிடத்தே. (௧௩௭)

பாங்கியைத் தலைவி மறைத்தல்.

மடங்காத பேரருட் கோமுத்தி யீசர் வளர்துறைசைத்
தடங்கா விரித்திரு நாட்டி லடாதசொற் றன்குடங்கைக்
கடங்கா விழிவஞ்சி நீசொல் வதுநமக் காவதன்றே
கடங்கால் கரிதிரி காவிற்செல் வோர்களைக் கண்டுவந்தே. (௧௩௮)

---

௧௩௩. பன்னி - பத்தினி. தரும் வெற்பு - இமயம்.
௧௩௪. காழிமன்னர் - திருஞானசம்பந்த மூர்த்தி.
௧௩௭. உத்தியானம் - சோலை. [தியாகர்'
(பி - ம்.) 1 'இனியெங்கள்' 2 'சுரும்பார்கொன்றைச் சடைச்சொர்ணத்

பாங்கி என்னைமறைப்பது என்னெனத்தழால்.

மைவண்ண வார்குழன் மாதே பரிவு வரவுரைத்து
மவ்வண்ண மேது மறிந்திலர் போலணி யார்துறைசைச்
செவ்வண்ண வார்சடைச் செம்பொற் [1]றியாகர் செழுங்கிரிமே
லிவ்வண்ண நீமறைத் துண்மைசொல் லாததென் னென்னுடனே.()

பாங்கி கையுறைபுகழ்தல்.

பிடிக்கத் தரும்பொருள் செம்பொற் றியாகர் பிறங்கலுள்ள
தொடிக்கத் தருவதன் றுலா வடுதுறை யொண்புலவோர்
படிக்கத் தருங்குள கக்கவி போலவிப் பைந்தழைநீ
முடிக்கத் தருமுன் [2]னரசிலை யோடு முகிழ்நகையே. (கசo)

தோழி கிழவோன் துயர்கிளத்தல்.

ஆயினங் கோகழிச் செம்பொற் றியாக ரடுக்கலிற்றே
னீயினம் வீசிக்கை யேற்றுக் களிறொன் றிரும்பிடியின்
வாயினங் கூட்டிடக் [3]காணூஉ மயங்குபு மற்றெனையும்
பாயின மேகலை பார்த்தயர் வானொரு பார்த்திபனே. (கசக)

மறுத்தற்கருமை மாட்டல்.

அனமும் [4]பிடியு மனநடை யாயடி யேனுடைய
மனமுந் துறைசையும் வாழ்மாசி லாமணி வள்ளல்வெற்பர்
தினமுந் தனிவந்து வாடுதல் காண்டலிற் [5]சேர்ந்ததினைப்
புனமும் பொருதினி மேலினி நானென் புகல்வதுவே. (கசஉ.)

தலைவன் குறிப்புவேறாக நெறிப்படக்கூறல்.

ஆயவெண் ணீறெருக் கங்கம் புனைந்தர சூரணைத்த
நாயக னார்திருக் கோலமு மாய்ப்பொன்னி நாட்டிறைவன்
தூயவஞ் சிக்கர சாரம் [6]பரிக்கத் துணியுங்கொலோ
மாயம் பிறிதென்ன செய்யுங்கொ லோவினி வாணுதலே. (கசங)

தலைவியை முனிதல்.

வடுப்பான்மை யாகிய வம்ப லுருமல் வகையறிந்தே
தடுப்பார்க் கருளுதி யெம்பெரு மாட்டிதந் தொண்டரைவந்
தெடுப்பார் துறைசையெங் கோமுத்தி யீசரை யேத்தலர்போல்
விடுப்பா யினியென்னை யான்சொன்ன தீங்கொடு மெல்லியலே. ()

தலைவி பாங்கியை முனிதல.

வேய்வந்த தோண்மங்கை நீயேவல் செய்திட மேவியெங்கும்
போய்வந்திந் நாள்வரை யொன்று மிருக்கவிப் போதொருதா
யாய்வந் தருளர சூர்த்திருக் கோமுத்தி யப்பர்வெற்பில்
வாய்வந்த சொல்வதென் னோவென்றுன் வார்த்தை மறுத்ததுவே. ()

கசக. இன்னம் ஆய். கசங. வஞ்சிக்கு அரசு ஆரம் - பனை.

(பி - ம்.) 1 'தியாகர்சிகரவெற்பில்' 2 'அரசிலையோடெங்கண் மொய்குழலே' 3 'காணு' 4 'பிடியுநதொழுநடை' 5 'செய்யதினை' 6 'பறிக்க'

தலைவி கையுறையேற்றல்.

தழையெடுத் தாலலர் தாமெடுப் பார்தமர் தாங்கிலமேற்
றழையெடுத் தார்பின் மடலெடுப் பார்தையல் சாற்றுவன்னித்
தழையெடுக் குஞ்சடைச் செம்பொற் றியாகர் தடந்துறைசைத்
தழையெடுப் பாமென்னு முன்னேகை யேற்றிடத் [1]தாவினவே. ()

இறைவி கையுறையேற்றமை பாங்கி இறைவற்குணர்த்தல்.

என்[2]னூ தியமெனுஞ் சொன்னத் தியாக ரெழிற்றுறைசை
யுன்னூர்த் தழைதர யான்போய்க் கொடுத்தன ளெண்ணுதலாண்
மின்னூர் வடமணி யானையி லேற்றித்தன் மெய்ம்மறந்து
தன்னூரு முற்றும் வலம்வரச் செய்து தரித்தனளே. (கசஎ)

பாங்கி தலைமகற்குக் குறியிடங்கூறல.

இலங்கிய வாவடு தண்டுறைக் கோமுத்தி யீசர்வெற்பா
வலங்கிய வாரத்தி னீனிறப் பௌவத் தவிர்மதிபோற்
றுலங்கிய பாசடை யூடேசெந் தேனடை தோன்றுங்கண்டாய்
பலங்கொளும் யாங்கள் பகல்விளை யாடும் [3]பசும்பொழிற்கே. (கசஅ)

பாங்கி குறியிடத்து இறைவியைக்கொண்டுசேறல்.

நந்தா வளத்தர சூர்மா சிலாமணி நாதர்வெற்பின்
மூந்தாவி மூழ்கி மயிலாடல் பார்த்து முருகவிழ்ந்த
செந்தா தலர்குற்றுப் பொன்னூச லாடிச் சிலம்பெதிர்கூய்க்
கொந்தார் பொழில்விளை யாடுகம் வாவெங்கள் கோமளமே. (கசகூ)

பாங்கி தலைவியைக் குறியிடத்துய்த்துநீங்கல்.

செழிக்குந் துறைசைக் கனகத் தியாகர் சிலம்பினுன்னின்
மொழிக்குடைந் திட்ட விறூற்றே னொழுகி முழுகியறை
வழுக்கிய தாற்றைய னீயிங்கு நிற்க மலர்களுநின்
விழிக்குடை காவியும் போய்க்கொய்து நாணிங்கு மீள்குவனே. (க௫0)

இறையோனிடத்து எதிர்ப்படுதல்.

இன்பார் துறக்கமிப் பூதர மாக்கி யெனையுமொரு
நன்பாரி சாத மெனநினைந் தோபொன்னி நாடர்தொழு
மன்பா வடுதுறைச் செம்பொற் றியாக ரடுக்கலிலென்
றன்பார்வை காண வொருகாம வல்லி தனிநின்றதே. (க௫க)

இயைதல்.

இருந்தா ரணிபுகழ் கோமுத்தி யூரில்வந் தேத்தினர்பின்
வருந்தா தருள்புரி செம்பொற் றியாகர் மணிவரைமேற்
றிருந்தா ரணங்கிவள் செவ்வாய்வற் றூறுந் [4]தேஞ்சுனையா
மருந்தாகந் தீர வருந்திடு நாளெ ரவாக்களிறே. (க௫உ)

கசகூ. அலர் - பலரறிந்துகூறும் பழிமொழி. வன்னித்தழை - வன்னி மரத்தின் இலை.

கசஎ. ஊரு - துடை, ஊர். கசஅ. தேனிறாலுக்கு மதி உவமம்.

(பி - ம்.) [1]'தாவியதே' [2]'ஊதியமென' [3]'பசும்பொழிலே' [4]'தேன்சுனை'

புகழ்தல்.

துறைசையுண் மேவிய சொன்னத் தியாகர்முன் றோணிபுரத்
திறையவ ரூர்சொன்ன செந்தமிழ்க் காக வினிதளித்த
நிறையுல வாக்கிழிச் செம்பொற் றனமது நேரிழையாய்
குறையினு முன்பொற் றனமொரு நாளுங் குறைவிலதே. (கருங)

ஆயத்துவிடுத்தல்.

மல்லார் மலைவில்லர் சொன்னத் தியாகரை வாழ்த்தலர்நெஞ்
சல்லா [1]யிருண்ட வணரார் குழலியுன் னையந்தன்னை
வில்லாருஞ் சேர்கரைக் காவிரி நாட்டினின் மேதகுசீ
ரெல்லா நகர்க்குமிக் காமர சூரென்ன வெய்துகவே. (கருச)

பாங்கி மெல்லியற்சார்ந்து கையுறைகாட்டல்.

வடியிட்ட தேன்மொழி யான்கொணர்ந் தேன்பிண்டி வண்டளிர்பார்
தொடியிட்ட நின்கைக் [2]கிணைதோன் றிப் போதிவை சோதியுண்கண்
படியிட்ட வுற்பலப் போதிவை காண்டி படிவத்தில்வெண்
பொடியிட்ட கோகழிச் செம்பொற் றியாகர் பொருப்பினின்றே. ()

பாங்கி தலைவியைப் பாங்கிற்கூட்டல்.

செம்பாத பத்ம ராசூர்த் திரவியத் தியாகர்வெற்பில்
வம்பான் மறைத்த வனமுலை யாய்பன் மலர்களுமுன்
னைம்பா னிறைய வலங்கரித் தேனம தாயமின்னார்
தம்பால் விரைந்துசெல் வாமினி நாமிந்தத் தாவகன்றே. (கருசு)

பாங்கி தலைவியைநீங்கித் தலைவற்கு ஓம்படைசாற்றல்.

[3] சீரிய லாவடு தண்டுறைச் செம்பொற் றியாகர்வெற்பா
வீரிய மாயென்று நீயுன் னருள்பெற்ற மின்னினையு
நேரிய லாக வருமொழி யோடு நிலைமொழிக்கோர்
சாரியை போனடு நின்றே னையுமெண்ணித் தாங்குகவே. (கருஎ)

பாங்கி தலைமகனை உலகியல்மேம்பட விருந்துவிலக்கல்.

தேனுங் கிழங்குந் தினைப்போ னகமுஞ் செழித்தமறி
யூனு மருந்த விருந்திடு வேமவை யுண்டளகை
மானுந் துறைசைக் கனகத் தியாகர் வரையிலெம்மூர்க்
கூனு மிலைப்பெய் குடிற்றங்கி யேகுவிர் கோநகர்க்கே. (கருஅ)

விருந்திறை விரும்பல்.

திண்மூ தரணை சூர்த்திருக் கோமுத்திச் செல்வர்வெற்பிற்
கொண்மூ வனைய குழன்மட வீருங்கள் கொவ்வைச்செவ்வாய்
வெண்மூரல் கண்டு விடாய்தணிந் தேனின்னு மென்றினைச்சூட்
டுண்மூ ரலுமற்று நீரளித் தாலும்ப ருண்ணனக்கே. (கருகூ)

கருங. தோணிபுரம் - சீகாழி.

கருரு. படி - ஒப்பு. கருகூ. மூரல் - பல், சோறு.

(பி - ம்.) 1 'இருண்டமலர்க்குழலாயுனது' 2 'இணைகாந்தள்' 3 'ஆரியை பாகர் துறைசையெங் கோமுத்தி யப்பர்வெற்பா'

பகற்குறி.

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுதுகண் டிரங்கல்.

பாரோர்விண் ணோர்பணி கோமுத்தி நாதநம் பன்றுறைசை
யூரோது வார்வினை வீழ்ந்தென வாழியொன் றுள்ளதடந்
தேரோன் கருங்கடல் வீழ்ந்தொளித் தானன்பர் [1]சேணகன்றார்
வாரோ டிகன்முலை யாய்பைபுண் மாலை வளைந்திட்டதே. (௧௬௦)

பாங்கி புலம்பல்.

விடவாள் விழியன்பர் நீங்கவென் றின்றேர் விரைந்தெழுத்துக்
குடவால் வளையொலி கூர்மாலை நண்ணக் குடகடல்விண்
கடவாவுற் றீர்துறை சைக்கோ கழியரற் கண்ணலர்போல்
வடவா நலத்தின் வெதுப்புறு வீர்பச்சை மாவினமே. (௧௬௧)

தலைவனிடத் தலைவி வருந்தல்.

சொன்னலந் தாங்கிய சொன்னத் தியாகர் துறைசையன்னார்
மன்னலங் கையுறை காணுமுன் காண வருகிலரா
லென்னலந் தாமைம் புலன்களு மார வினிதருந்தி
நென்னலம் போதந்தி வெய்யோ னுடன்சென்ற நெஞ்சினரே. (௧௬௨)

இதுவுமது.

சூளா மணியெங்கள் சொன்னத் தியாகர் துறைசையன்பர்
வாளார் மடற்கண்ட னீழல்வந் தென்னை மணந்தகன்றார்
மீளாரென் கண்ணுங் கடலபோ லுறங்கில மீன்படுக்குந்
தாளாண்மை யெம்மையர் திண்டிமின் மீளுமித் தண்டுறைக்கே. ()

தலைவியைப் பாங்கி கழறல்.

கூத்தாட வல்லவர் செம்பொற் றியாகர் குவட்டிறைவா
நீத்தா ரெனையென்று நீநைவ தேனிறை நெஞ்சினிற்கக்
காத்தார் துறைசை யரசொன்றல லாது கயலவிழியாய்
பூந்தாங் கரசென்ப தெல்லாம் பிரிந்தெங்கும் போய்வருமே. (௧௬௪)

தலைவி முன்னிலைப்புறமொழி மொழிதல்.

அப்பற்ற செய்யிற பசுங்கூ ழெனநெஞ் சயர்வதொன்றே
யொப்பற்ற மன்ன ரொருவிலென் னுமுயர் வான்றுறைசை
யெப்பற்று மற்றவர் காண்மாசி லாமணி யீசர்வெறபிற்
செப்பற்ற முற்றவர் போலுரைப் பாருள்ளந் தேர்கிலமே. (௧௬௫)

---

௧௬௧. என்றின் தோ - சூரியனுடைய தேர்.

௧௬௨. கையுறை-பகைவாகொடுக்குந திறை. ஆர-நிறைய. வெய்யோன்-சூரியன், கொடியோன்.

௧௬௩. எம் மையர் - தமையன்மார். திமில்-மீன்பிடிக்கும் படகு.

௧௬௪. பூத தாங்கு அரசு - பூமியைததாஙகும் அரசன, மலர்களைத்தாங்கும் அரசென்பது மற்றொருபொருள.

(பி - ம்.) 1 'சேய்த்தகன்றார்'

தலைவி பாங்கியொடு பகர்தல்.

தனத்தோ டணையினும் புல்லாப் பொழுதினுந் தம்மடியார்
மனத்தோ மகற்றி யருண்மாசி லாமணி வள்ளல்கதி
ரினத்தோங் கிருகட் சுடர்தருந் தன்மையு மெய்துவிப்பார்
கனத்தோடொக் குங்குழ லாய்திருக் கோகழிக் காவலரே. (கசுசு)

தலைவியைப் பாங்கி அச்சுறுத்தல்.

மருவிய காதலர் [1]பான்மனம் வைத்தென்னை மற்றிருவர்
துருவியுங் காணருஞ் சொன்னத் தியாகர் துறைசைவெற்பி
லருவியஞ் சார விருவியுந் தோற்றின வல்லுமெல்லுங்
கருவியங் கைக்கமர் வேட்டந் திரிவர் கனங்குழையே. (கசுஎ)

நீங்கற்கருமை தலைவி நினைந்திரங்கல்.

சிலைமேரு வாக்கொண்ட செம்பொற் றியாகர் செழுந்துறைசை
மலைமேற் கணவர்ப் பிரிந்தார் தனித்து [2]வருந்தமின்னார்
தலைமேற் கொழுந னெழுதுங் கரவினைத் தானறிந்தே
கலைமே யவளவன் வாய்த்தால விடாளெந்தக் காலமுமே. (கசுஅ)

தலைவிக்கு அவன்வரல் பாங்கிசாற்றல்.

வார்தங்கு கொங்கைநின் கண்ணீர் துடைத்தருள் வான்றுறைசைச்
சீர்தங்கு செம்பொற் றியாகேசர் பாதச் சிலம்பொலிபோ
லேர்தங்கு தார்மன்னர் தேர்மணி யோசை யிருசெவியும்
வேர்தங்கு மாறெண வீழ்குந கேட்டருள் வெள்வளையே. (கசுகூ)

தோழி சிறைப்புறமாகத் தலைமகட்குச் செறிப்பறிவுறுத்தல்.

மாட்சியென் சொல்லுவல் சொன்னத் தியாகர் வளர்துறைசைக்
காட்சியின் மிக்க மடமான் கிளிக்கதர் காட்டியப்பான்
மீட்சியில் லாம னமக்குந் தினைக்கும் விடைகொடுத்திங்
காட்சிகொள் வேங்கை விடைதரும் போலும்பின் றொண்டகைக்கே. ()

தோழி முன்னிலைப்புறமொழிமொழிந்து இற்செறிப்புணர்த்தல்.

நாவியம் பூங்குழ லெம்பெரு மாட்டியை நந்தமக்கோ
ராவியன் றெனென்று சொன்னார் மறக்கினு மஞ்சுகங்காள்
வாவிய மானினங் காளெம்மை நீவிர் மறக்கப்பெறீர்
[3] மேவிய பூந்துறை சைக்கோ கழியான் வெற்பிடத்தே. (கஎக)

பாங்கி தலைமகன்முன்னின்று இற்செறிப்புணர்த்தல்.

மன்றேறி யாடிய செம்பொற் றியாகர் வளர்துறைசைக்
குன்றே றிருங்கணி யார்போது காட்டக் குறித்தெமர்க

கசுசு. கட்சுடர் - சந்திர சூரியர். தருந்தன்மை - தட்பமும் வெப்பமும்.

கசுஅ. தால் - நா.

கஎ0. வேங்கை - வேங்கைமரம். இதுபூத்தால் தினைக் கதிர்கொய்வர்.

(பி - ம்.) 1 'மேன்மனம்வைத்துமென்' 2 'வருந்துமின்னார்' 3 'மேவிய கோகழி முத்தித் தியாகர்தம்'

ளொன்றேன லங்குர லொன்றேனு மின்றி யொருங்குகொய்தா
ரின்றே யொழிந்தனம் யாம்புனங் காவ லிறையவனே. (களஉ)

பாங்கி தலைமகன்முன்னின்று இற்செறிப்புணர்த்தி ஓம்படைசாற்றல்.

மையார் கருங்கண்டர் செம்பொற் றியாகர் மகிழ்ந்தெனையு
மெய்யாமற் காத்தருட் கைதரு மீச ரெழிற்றுறைசை
யுய்யானஞ் [1]சேர்தரு நாடிவள் யானொரு வேலியென்றும்
பொய்யா தொழுகும் புனற்பொன்னி நீமன்ன போற்றுகவே. (களங)

தலைமகன் தஞ்சம்பெறாது நெஞ்சொடுகிளத்தல்.

தண்டா தகிபுனை செம்பொற் றியாகரைத் தண்வரைக்கோ
தண்டாமன் றூவெனப் போற்றன்பர் வாழ்துறை சைப்பொருப்பிற்
றண்டாம லேனலைக் காத்தமின் ஞார்தணந் தார்கள்வல்லி
தண்டா னலாதிங் கினியாரைக் காண்பம்வந் தானெஞ்சமே. (களச)

பகற்குறி இடையீடு.

இறைவனைப் பாங்கி குறிவரல்விலக்கல.

மருதாளு மூரரெங் கோமுத்தி யீசர் வளர்துறைசை
விருதாள வல்ல விறன்மன்ன ரேமென் றினைக்குரல்கொய்
தொருதாளு மின்றி யுடங்குழு வாரெம ருப்புனத்தி
லிருதாளு நோவவந் தென்பல காலுமக் கென்சொல்வதே. (களரு)

இறைவியைப் பாங்கி குறிவரல்விலக்கல.

அம்பலம் புஞ்சடைச் செம்பொற் றியாக ரணியரசூர்க்
கொம்பலங் காரக் கொடியிடை யாயுட் குறிப்பறியேன்
வெம்பலங் குற்றன்னை வெய்துயிர்த தாள்விளை யாடமுன்போல்
வம்பலர் மாதவிப் பந்தரின் வாயினி வாரற்கவே. (களசு)

இறைமகள ஆடிடநோக்கியழிதல்.

புள்ளிப் புலியதட் செம்பொற் றியாகர் புகழ்த்துறைசை
வெள்ளிப் பொருப்பு மருவிச் சுனையும் விரைப்புனமுந்
தெள்ளித் தரளத திழைத்தவிச் சிற்றிலுஞ் சேர்ந்துபின்னர்த்
தள்ளிப் பிரிந்தவர் நெஞ்சிலுண் டோவொரு தண்ணளியே. (களஎ)

களஉ. சணியார் - வேங்கைமரம், சோதிடநூல் வல்லார். போது - மலர், காலம். குரல் - கதிர்.

களங. 'பொய்யா தொழுகும் புனற்பொன்னி': பட்டின. ரு - கூ.

களச. தண் தாதகி - தண்ணிய திருவாத்திப்பூ. வரைக்கோதண்டா - மலையை வில்லாகவுடையாய். தண்டாமல் - தணியாமல். வல் இதண் அலாது - வலிய பரணை யல்லாமல்.

களரு. மருது ஆளும் ஊர் - திருவிடைமருதூர். தாள் - தினைத்தாள், பாதம்.

(பி - ம்.) 1 'சேர்திருநாடு'

பாங்கி ஆடிடம்விடுத்துக்கொண்டு அகறல்.

நம்மனை யாந்துறை சைத்திருக் கோமுத்தி நாதர்வெற்பி
லம்மனை யானவ ளாணையி னலணி யார்மயில்கா
ளெம்மனைக் கேகுதும் யாமிப் பாணிடத் தெய்திவருஞ்
செம்மனை யாமலெஞ் சீறா ரிதுவென்று செப்புமினே. (௧௭௮)

பின்னாள் நெடுந்தகை குறிவயின் நீடுசென்றிரங்கல்.

நஞ்சமு தாக்கொண்ட செம்பொற் றியாகர் நறுந்துறைசை
யஞ்செழுத் [1]தெங்குரு நாதன் றனதடி யார்க்கொழித்த
சஞ்சிதம் போலத் தினைமுற்று மாளத் தளர்வடைந்தீர்
மஞ்சிவர் பூம்புனங் காளென்கொ லோவந்த வாறுமக்கே. (௧௭௯)

தலைமகன் வறுங்களநாடி மறுகல்.

தினைபோகத் தாள்வைத்துச் சென்றன ரோதென் றுறைசைவெற்
சுனைபோய் வரும்பம ரங்காண் மதனன் றுரகதங்கா [பிற்
ளனைபோ லருள்புரி செம்பொற் றியாகருக் கன்புசெய்வார்
வினைபோல வெய்த்திட நானிங்கு வாழ்ந்த விரைக்கொம்பரே. (௧௮௦)

தலைமகன் தலைமகள் வாழும் ஊர்நோக்கி மதிமயங்கல.

மதிவைத்த வார்சடைச் செம்பொற் றியாகர் வளர்துறைசைப்
பதிவைத்த தீபமன் னானு ரிதுசெயற் பாலதின்று
ணிதிவைத்த விஞ்சிப் [2]புறத்தோர் வறியனின் றேங்கியென்ன
விதிவைத்த வாறறி யாதென்ற னாவி மெலிகின்றதே. (௧௮௧)

இ ர வு க் கு றி.

இறையோன் இருட்குறிவேண்டல்.

மாற்கந் தரணியிற் காணவொண் ணாதிருண் மண்டுகங்குற
கூற்கந் தரம்பெயுஞ் சொன்னத் தியாகர் துறைசைச்சங்கம்
போற்கந் தரமுடை யீரத னாலும் பொருப்பினில்வாழ்
வேற்கந் தரன்பன் விருந்தாய்வந் தே[3]னும் வியன்பதிக்கே. (௧௮௨)

பாங்கி நெறியினதருமைகூறல்.

பருங்கங்கு லாவுகைச் செம்பொற றியாகர் பதியரசூர்
வருங்கங்கு லாங்கறை வேலண்ண லேகரி வாய்க்கவரி

---

௧௭௮. செம்மலை யாமல - தலைவன் வருநதாதவண்ணம்.

௧௭௯. அஞ்செழுத தெங்குருநாதன் - ஸ்ரீபஞ்சாக்கரதேசிகர்.

௧௮௦. பமரம் - வண்டு. மதனனுடைய துரகதம் - கிளி.

௧௮௧. இஞ்சி - மதில.

௧௮௨. கநதரம் - கழுத்து. கந்தருடைய அன்பன்.

௧௮௩. பருகம் - பருத்த தலை. கஙகு (பருந்து) உலாவும் கறைவேல. அரி - சிங்கம்.

(பி - ம்.) 1 'என்குருநாதன்' 2 'புரத்' 3 'உங்கண்மென்பதிக்கே'

யொருங்கங்கு லாவுஞ் சிலைமால்வெந் தீயி னுருமுருக்குங்
கருங்கங்கு லானதில் யார்வரு வாரெங் கடிநகர்க்கே. (௧௮௩)

தலைவன் நெறியினது எளிமைகூறல்.

சித்துக் கியான்மிக வல்லனங் காயுங்கள் செல்விநிதம்
பத்துக் கிடைக்குக்கொங் கைக்குக் குழற்குப் பணிந்தபுயங்
கத்துக் கரிக்குக் கரிக்கந்த காரத்துக் கஞ்சலன்கோ
முத்திப் பதிக்குட் கனகத் தியாகர் முதுகுன்றிலே. (௧௮௪)

பாங்கி அவனாட்டணி இயல் வினாதல்.

பொன்னணி யாது புனையாடை யாது புதுமலரு
நன்னகிற் பூசுங் களபமும் யாது நறும்பொழில்யா
தின்னமு தேயன்ன சொன்னத் தியாக ரெழிற்றுறைசை
மன்னவ ரேயுங்கள் காவிரி நாட்டுறை மங்கையர்க்கே. (௧௮௫)

தலைவன் அவளாட்டணி இயல் வினாதல்.

தொங்கலைம் பான்மங்கை சொன்னத் தியாகர் துறைசையைச்சூ
ழெங்கள்பொன் னாட்டி னணியியல் கூறியின் றென்பயன்கா
1 ணுங்கண்மன் னாட்டின் மடவார்க ளாடிட மொண்கலன்பூ
மங்களப் பூந்தழை சாந்தொடெல் லாஞ்சொல்லு வாயெனக்கே. ()

தலைமகற்குப் பாங்கி தன்னாட்டணி இயல் சாற்றல்.

சூட்டழற் கண்ணுதற் சொன்னத்தியாகர் துறைசைவெற்பா
சேட்டிளங் காந்தளுஞ் சந்தனப் பூச்சுஞ்செம் மாந்தழையுங்
கோட்டுமுத் தோடு குருவிந்த மாலையுங் கொண்டணிந்தென்
னாட்டுறை மாதர் விளையாடுஞ் சோலைநன் னாகங்களே. (௧௮௭)

பாங்கி தலைமகட்குத் தலைமகன் குறையறிவுறுத்தல்.

இறைவளை யாய்தென் றுறைசையெங் கோமுத்தி யீசர்வெற்பி
னறையடைந் தேறி யதிர்கருங் கொண்டலை யாங்குலவுங்
கறையடி தாமென்று கண்டீர வங்கள்கண் டீர்ந்ததிரு
நிறையிருட் கங்குலின் வாய்வரு வான்பன்னு நின்னிடத்தே. (௧௮௮)

நேராதிறைவி நெஞ்சொடுகிளத்தல்.

தரையவர் மாதரைப் பேதைய ரென்னுஞ்சொல் சாதநெஞ்சே
நிரைசெறி வேங்கைகள் பாய்சிற் றதரி னெடுந்துறைசை
யுரையத ளாடையர் செம்பொற் றியாகருக் கன்பிலர்போற்
புரையிருள் வாயன்பர் தாம்2வர லொப்பினள் பூங்கொடியே. (௧௮௯)

---

௧௮௩. ஒருங்கு அங்கு உலாம். மால் - மேகம்.

௧௮௪. இடை இரண்டடிகளும் நிரலநிறை. முதுகுன்று-விருத்தாசலம்.

௧௮௭. நாகம் - சுரபுன்னை.

௧௮௮. அறை - பாறை. கண்டீர்ந்து - தாட்சணியமொழிந்து.

(பி - ம்.) 1 'உங்கண்மன்னாட்டின்' 2 'வரவொப்பினள்'

தலைமகள் நேர்ந்து பாங்கியொடுரைத்தல்.

நந்தலை வாவித் துறைசையெங் கோமுத்தி நாதர்வெற்பி
லைந்தலை நாக மகன்முழைக் கண்டஞ்சு மன்றுதங்கை
தந்தலை யேலென்றோர் மந்திரங் கூறித் தடுத்தளித்த
வெந்தலை வர்க்கினி நான்சொல்லு மாறென்கொ லேந்திழையே. ()

தலைமகனேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக்குணர்த்தல்.

வாமத்தி லோர்பெண்ணர் கோமுத்தி யீசர் வளர்துறைசை
நாமத்தை வேலண்ண லுன்பொருட் டாக நயப்பினிற்றை
யாமத்தென் பாவைக்குக் கற்றவெல் லாஞ்சொல்லி யானிரந்தேன்
தாமத்தைம் பாற்றலை சாய்க்கப்பெற் றேனற் றயாவினையே. (௧௯௧)

பாங்கி தலைமகனைக் குறியிடத்து நிறுத்தித் தாய்துயிலறிதல்.

குயிலாய சொல்வல்லி செம்பொற் றியாகர்தங் கோமுத்தியூர்க்
கயிலாய வெற்பிற் பணிப்படங் கீண்டு கவண்களுக்கு
வெயிலார் மணிதந்த தோகைக டேக்கின் வியன்குடம்பைத்
துயிலாத வண்ணங் களின்றோன் றுரிஞ்சிச் சுலாய்வருமே. (௧௯௨)

பாங்கி தலைமகட்குத் தலைமகன் வரவறிவுறுத்தல்.

எண்கோட்டு சாரல்வந் தின்புற் றகன்றவ ரின்றுதந்தி
வெண்கோட்டு வேலி மனைக்கேவந் தாரென்றன் வெவ்வினைநோய்த்
திண்கோட்டி தீர்த்த துறைசைத் திரவியத் தியாகர்வெற்பிற்
றண்கோட்டுச் சாந்தந் தருந்[1]தழை தந்தவர் தாழ்குழலே. (௧௯௩)

பாங்கி தலைமகளைக் குறியிடத்துக்கொண்டுசேறல்.

கையாழி நன்மணித் தீபத்தில் வந்தனர் காதலர்போர்
செய்யாழி மாற்கருள் செம்பொற் றியாகர் திருத்துறைசை
யையாழி னின்மொழி வாவொல்லைப் போதுக மாதரவாய்
மையாழி நீருண்ட மஞ்சின் மயில்[2]கள் வளர்பொழிற்கே. (௧௯௪)

பாங்கி தலைமகளைக் குறியிடத்து உய்த்துநீங்கல்.

உரற்காற் கரிமருப் பார்முலை யாயுன்செவ் வாய்க்குடைந்த
வரக்காம்ப லிங்கிவை காணினி நானரு ளாகமநற்
சரக்கார் துறைசைக் கனகத் தியாகர் சயிலத்துன்றாள்
பொரக்காட்டு மாம்பல் லவங்கொய்து வந்து புனைகுவனே. (௧௯௫)

---

௧௯௦. கைதந்து அலையேலென்று.

௧௯௩. எண்கு - கரடி. கோடு - தந்தம், கிளை. கோட்டி - கூட்டம், துன்பம். தந்தவர் வந்தார்.

௧௯௪. ஆழி-மோதிரம், சக்கரம், கடல். ஐயாழின் இன்மொழி-அழகிய யாழோசை போலும் இனியசொல்லாய். பொழிற்குப் போதுகம்.

௧௯௫. பல்லவம் - தளிர்.

(பி - ம்) 1 'தழைதந்தனர்' 2 'கண்வளர்'

தலைமகன் தலைமகளைக் குறியிடத்து எதிர்ப்படுதல்.

இடையா வருக்குந் தெரியாய் மதியின் னெழின்முகத்துக்
குடையா வகன்றனை யோவெத னுளுன் னுறையுள்சற்று
மடையா திருந்தது வோமாசி லாமணி யாரருள்போற்
றடையாது மின்றிவர் தாயர சூர்வரைத் தண்டலைக்கே. (௧௯௬)

தலைமகள் ஆற்றினது அருமைநினைந்திரங்கல்.

பைஞ்சூரன் மண்டிய கான்யாறுந் தீய பரனெறியும்
வெஞ்சூர் வழங்கு மிசும்புங் [1]கடந்திருள் வேலையிடைத்
துஞ்சூரெம் மில்லிடைச் சொன்னத் தியாகர் துறைசைவளர்
மஞ்சூர் மலையன்ப நீவந்த வாறெங்ஙன் மாலறவே. (௧௯௭)

தலைமகன் தலைவியைத் தேற்றல்.

நீலார் முகின்மின்னுங் கைவேற் சுடருமுன் னீயெறிந்த
நாலாந்திக் குற்ற கவண்மணிக் காந்தியு நானிலத்து
மேலா வடுதுறைச் செம்பொற் றியாகர்தம் வெள்ளிவெற்பி
னூலான நுண்ணிடை யாயந்த காரத்தை [2]நுங்கியவே. (௧௯௮)

புணர்ச்சியின் மகிழ்தல்.

சோகந் தவிர்த்தருள் சொன்னத் தியாகர் துறைசையந்தேன்
பாகந் தருஞ்சொல் லிவளைப் புணர்தொறும் பண்டையிலுந்
தாகந் தவிர்சுக மேற்பட வாற்கொங்கை தன்னுளதி
போகந் தருநற் குளிகைவைத் தான்கொலப் போதயனே. (௧௯௯)

புகழ்தல்.

இகத்திலு மெய்தும் பரத்திலு மண்டர்க் கிருந்துறைசை
யகத்திருந் தின்பருள் செம்பொற் றியாக ரசலத்திந்து
முகத்தினல் லாயுன் மிடற்றெழில் கண்டபின் மூரிமுந்நீர்ச்
சகத்திடை யில்லை முகஞ்சுரி யாதநற் சங்கங்களே. (௨௦௦)

தலைமகனைத் தலைமகள் குறிவரல்விலக்கல்.

குவலையந் தாங்குங் குவலையத் தோளன்ப கோளரிபா
யவலையுந் தாண்டி வினையேன் பொருட்டர சூரன்பர்பா
சவலையைத் தீர்த்தருள் செம்பொற் றியாகர் சயிலத்தில்வேய்க்
கவலையி னூடு கவலையின் வாரலிக் கங்குலிங்கே. (௨௦௧)

---

௧௯௭. சூரல் - பிரம்பு. பரல் - பருக்கைக்கல். சூர் - தெய்வப்பெண். இசும்பு - வழுக்குநிலம்; ஏற்றிழிவையுடைய நிலமுமாம்.

௧௯௯. குளிகை - சித்தகுளிகை; அது மாத்திரை வடிவாகவுள்ளது.

௨௦௧. குவலயம் - பூமி, குவளைப்பூ. அவல் - பள்ளம். பாசமாகிய வலையை. கவலை - கவர்த்தவழி, துன்பம்.

(பி - ம்.) [1] 'கடந்திவ்விருளெவரும்' [2] 'நுங்கியதே'

தலைமகன் தலைமகளை இல்வயின்விடுத்தல்.

கற்பா ருமைபங்கர் செம்பொற் றியாகர் கலைமுழுதுங்
கற்பார் துறைசைக் கரும்பன்ன சொல்லிநின் கைத்தளிராற்
கற்பார் முகையுந் தளிருங்கொய் யாதுன் கமலவில்லிற்
கற்பா ரடிவைத்துச் சென்றுசெய்ம் மோவினிக் கண்படையே. ()

பாங்கி தலைமகளை யெய்திக் கையுறைகாட்டல்.

முற்று முலைக்கு நகைக்குநின் வாய்க்கு முழுப்பகையாம்
பொற்று மரைமுல்லை சேதாம்ப லுங்கொய்து போந்தனன்காண்
மற்று ரணங்குநின் வார்குழற் காமெழு வான்பொழிற்கும்
பற்றுந் துறைசையெங் கோமுத்தி யீசர் பருப்பதத்தே. (௨௦௩)

பாங்கி தலைமகளை இற்கொண்டகறல்.

செங்காவி வாவித் துறைசைத் திரவியத் தியாகர்வெற்பி
லிங்கா ரிருளி னினமாங் குவளைகொய் தீரென்றன்னை
யங்கா மனந்தற் குவளை விழித்தச் சுறுத்துமுன்னே
நங்கா யுனது திருமனைக் கொல்லை நடந்தருளே. (௨௦௪)

பாங்கி தலைமகனைப் பின்சென்று வரவுவிலக்கல்.

ஆட்டுகந் தாடுந் துறைசையெங் கோமுத்தி யப்பர்வெற்பா
கோட்டிருஞ் சாந்து மகிலுங் குறவர் குறைத்தெரிவாய்
மாட்டும் புகையிற் றிகைதெரி யாவெல்லி வாரலிங்கே
பூட்டிடும் பொன்னுறை கோயிலுக் காயிரம் பொற்கதவே. (௨௦௫)

தலைமகன் மயங்கல்.

எண்ணும் புகழ்த்துறை சைத்திருக் கோமுத்தி யீசர்வெற்பிற்
கண்ணு மணியுமொத் தம்மானு நானுங் கலந்துநல
முண்ணும் பரிசை யுணர்ந்துநெல் லிக்கனி யூடுநஞ்ச
நண்ணுமெட் டிக்கனி யிட்டனை போலு நறுநுதலே. (௨௦௬)

தோழி தலைமகள் துயர்கிளந்து விடுத்தல்.

அறியாமை நீக்குந் துறைசையெங் கோமுத்தி யப்பர்வெற்பா
நெறியாது மின்றிக் கருங்கேழல் கிண்டிடு நீண்டவிருள்
செறியாம முன்னிரை வாளுய்ய நின்னகர்ச் சேர்ந்தபின்னர்க்
குறியாவெம் பாவைக் கறிவிக்க வேண்டுநின் கோட்டொலியே. (௨௦௭)

---

௨௦௨. கற்பு ஆர் உமை. கற்பார் - படிப்பவர்கள். கற்பு-முல்லைக்கொடி. கல் பார் - கல்லையுடைய பூமி.

௨௦௩. முதலிரண்டடி நிரனிறை.

௨௦௪. அனந்தற்குவளை - துயிலுதலையுடையகண்ணாய குவளை; உருவகம்.

௨௦௫. திகை - திசை. ௨௦௭. கோட்டொலி - கொம்பின் ஓசை.

திருமகட்புணர்ந்தவன் சேறல்.

உருவார்வண் டின்பெயர் பெற்றனை வொன்றற வொன்றடினும்
வெருவாதெம் மூர்செலற் கையமின் றேழையன் மெய்யடியார்
மருவா வடுதுறைச் செம்பொற் றியாகர் வரையின்மங்கை
திருவாய் நகைவெண் ணிலாவிருள் சீத்திடுஞ் சென்னெறிக்கே. ()

இரவுக்குறி இடையீடு.

இறைவிக்கு இகுளை இறைவரவுணர்த்தல்.

பிடிவள மென்னடை யாயேது வென்னைகொல் பேட்டுடனே
கடிவளர் புன்னையங் காவிற் றுறைசைக் கதிர்மகுட
முடிவள வன்றொழுஞ் செம்பொற் றியாகரை முன்னலர்போல்
விடிவள வுந்துயி லாதலம் வந்தன வெள்ளன்னமே. (௨0௯)

தான் குறிமருண்டமை தலைவி பாங்கிக் குணர்த்தல.

மாண்டகு பூங்குழல் வந்தே னயர்த்துமற் றோர்குறியை
யாண்டகை யின்குறி யாமென்று சென்றணி யார்துறைசைத்
தாண்டவ மாடிய சொன்னத் தியாகர் சரணமலர்
காண்டலில் லாத கசடரைப் போலக் கருத்துடைந்தே. (௨௧0)

பாங்கி தலைமகன் றீங்கெடுத்தியம்பல்.

எளியார்க் கிரங்குந் துறைசையெங் கோமுத்தி யீசரடிக்
களியார் மலரிட் டறியா தவரி னணங்குநின்கண்
டெளியாரத் தோள்வளை சோரநெஞ் சாரத் துணிந்திரவிற்
றெளியாக் குறியினைத் தீயோர் நமக்கின்று செய்தனரே. (௨௧௧)

தலைமகன் புலந்துபோதல்.

என்புகல் வேனுன்னை யேழைநெஞ் சேநள் ளிருளிலென்னைத்
துன்புற மற்றவ ணெஞ்சுநின் போலெனச் சூழ்ந்தறியா
தின்புற வெண்ணித் துறைசையெங் கோமுத்தி யீசரடிக்
கன்புசெய் யாதவர் தீவினை போல வலைத்தனையே. (௨௧௨)

புலர்ந்தபின் வறுங்களம் தலைவிகண் டிரங்கல்.

ஆர்ப்பர வஞ்செய் தடிதாழச் சங்க மலர்நகையாற்
கார்ப்பர வைத்துறை வாழ்புன்னை காள்கைதை காடுறைசை
யூர்ப்பரன் கோமுத்தி யீசற்கு நேசரி னெண்கழித்தண்
சேர்ப்பரன் போடெல்லி வந்தன ரோவுண்மை செப்புமினே. (௨௧௩)

---

௨0௮. வண்டின்பெயர்: தும்பி, அரியென்பன. பெற்றவைகள் முறையே யானையும் சிங்கமும்.

௨0௯. வளவன் - கோச்செங்கட் சோழநாயனார்.

௨௧௩. சங்கம் அடிதாழ.

தலைமகள் பாங்கியோடுரைத்தல்.

கடப்பந் தொடையரிற் கைவே லொடுமன்பர் கானலிற்போந்
தடப்பம் பொழினின்று சொன்னவை யாவும்பொய் யாயினவாற்
கெடப்பந்த நீத்தருள் செம்பொற் றியாகர் கிளர்துறைசைத்
தடப்பங் கயமுகப் பாவாயுன் சிற்றிடைத் தன்மையொத்தே. (உ௧௪)

தலைமகளலம் பாங்கிதணித்தல்.

சென்னிக் கருள்செய்த சொன்னத் தியாகர் செழுந்துறைசைப்
பொன்னித்தெண் ணீத்தமு நம்மன்பர் வாய்ச்சொலும் பொய்ப்பதன்று
னுன்னிக் குறியிழைத் தாரென் றிரங்க லொளிவளையாய்
கன்னிப்புன் னைக்கருங் காவிச்செங் காவியைக் காவியதே. (உ௧௫)

இறைவன்மேற் பாங்கி குறிபிழைப்பேற்றல்.

இங்கேத சாகரத் தெங்களை வீழ்வித்தங் கேகிச்சொன்ன
சங்கேதந் தப்ப விருந்தனை யேதண் டுறைசைமங்கை
பங்கேயுஞ் செம்பொற் றியாகர்வெற் பாவுன் பதிவினவி
யங்கே வரவெண்ணி னேம்பொன்னி யாற்றினுக் கஞ்சினமே. (உ௧௬)

இறைவிமேல் இறைவன் குறிபிழைப்பேற்றல்.

விறப்பறி யாமையை நீக்கியென் றீவினை வேருடனே
யறப்பறித் தாண்ட துறைசையெங் கோமுத்தி யப்பர்வெற்பிற்
சிறப்பறி வுள்ள திருமா தயர்ப்பினுஞ் சேயிழையான்
மறப்பறி யேன்மண்ணி லின்னுமொர் சன்ம மருவினுமே. (உ௧௭)

தலைமகள்குறிமருண்டமை தோழி தலைமகற்குணர்த்தல்.

செறிதேம் பொழிலிற் சுனைக்கெண்டை பாய்தொறுந் தெள்ளிருளிற்
பிறிதேது நின்குறி யேயென்று சென்று பெருங்கரத்தின்
மறிசேர் துறைசை யணைத்தெழுந் தாரருள் வாய்த்திலர்போல்
வெறிதேபின் மீண்டன ளானின்று பார்த்தன்ப மின்னிடையே. ()

அவன்மொழிக்கொடுமை சென்று அவள் அவட்கியம்பல்.

வார்க்கும்ப மென்முலை சானுவெல் லாமெண்கு வண்குரும்பி
பேர்க்கு மிருள்வந் துறங்காது புள்ளினம் பேட்டொடழிந்
தார்க்கும் படிசெய் தலம்வந்து கோமுத்தி யப்பரர
சூர்க்குப்பின் போயின மென்றுருன் னுசை யுடையவரே. (உ௧௯)

என்பிழைப்பன்றென் றிறைவிநோதல்.

தேமாங் கனிதண் கயத்திடை வீழ்தொறுஞ் சிந்தித்தெண்ணி
யேமான் மனத்தொ டிருந்தனன் யானள் ளிரவிலிங்கே
மாமா சிலாமணி யாரர சூரன்பர் வந்துகொன்னே
போமாறு செய்தன ரென்று லினியென் புகல்வதுவே. (உ௨௦)

உ௧௪. கடப்பந்தொடையர் - முருகக்கடவுள். [சுமந்தது.
உ௧௫. கருங்கா - கரியசோலை. செங்காவி - செங்கழுநீர். காவியது -
உ௧௭. விறப்பு - நடுக்கம். அற - அறம்படி.
உ௧௯. சானு - மலைப்பக்கம். குரும்பி - புற்றும்பழஞ்சோறு.
உ௨௦. எண்ணியே மாலுகின்ற மனத்தோடு.

தாய் துஞ்சாமை.

வெள்ளிப் பிறையணி செம்பொற் றியாகர் வியன்றுறைசை
யுள்ளிப் பணிந்தறி யார்நெஞ் சமுக்கி னுலகடங்க
வள்ளிக் கொள்வன்ன நிறையிருள் யாமத்து மன்னேகண்க
ளௌ்ளிற் பகவள வுந்துஞ்சி டாவஞ்சி யென்செய்வமே. (உஉக)

நாய் துஞ்சாமை.

சீயாது செய்வனிப் பெண்ணென் பிறவிக்கென் செல்வர்வரத்
தூயார் துறைசைநஞ் சொன்னத் தியாகர்க்குத் தொண்டுசெய்யாப்
பேயான வாதிகள் வாய்குரைத் தாங்கிப் பெருங்கங்குறு
யோயாதை யோகுரைத் தாய்துஞ்சி றுலு முறங்கிலவே. (உஉஉ)

ஊர் துஞ்சாமை.

தொழக்கேத நீத்தருள் சொன்னத் தியாகர் துறைசையுறூர்
சழக்கே யுரைத்துச் சிலைத்தலை மானத் தயங்குவெள்ளி
கிழக்கே யுதிக்கும் வரையுமிவ் வூரர் கெழுமிமத
வழக்கே யுரைத்துறங் கார்மறங் காலயின் மைக்கண்ணியே. (உஉஙூ)

காவலர்கடுகுதல்.

செப்பறை பூண்முலை செம்பொற தியாகர் திருத்துறைசை
யொப்பறை வேன்மன்னர் தேரொலி கேட்கவொட் டாமணிநி
வைப்பறை காப்பவர் மானவிவ் வூர்வளை காவலர்தங்
கைப்பறை யோசைக் கடுங்கனல் வீழுநங் காதகத்தே. (உஉச)

நிலவுவெளிப்படுதல்.

வெட்டும் படைக்கண்ணி கோமுத்தி யீசர் விரைமலர்த்தாள்
பெட்டும்பர் போற்றுந் துறைசைநம் வேந்தர்தம் பேரொலித்தேர்க்
கட்டும் பரிகள் கடந்தெங்ங னேவருங் கண்டனிக்கோ
ரெட்டுங் கதிர்வெண் ணிலாவலை வீசி யிருக்கின்றதே. (உஉரு)

கூகை குழறல்.

ஈகையர் வாழுந் துறைசையெங் கோமுத்தி யீசர்மெய்ந்நூ
லோகையிற் றேறப் பெருமத்தர் பித்துரை யொத்துமின்னே
வாகையி லேறிநம் முள்ளந் திடுக்கிட மல்கிருள்வாய்க்
கூகையெல் லாங்குழ றுகிற்கு மானற் குறியல்லவே. (உஉசா)

கோழி குரற்காட்டுதல்.

சேவார் பதாகைத் துறைசைத் திரவியத் தியாகர்வெற்பர்
பூவா ரயிலொளி கண்டே பொழுது புலர்ந்ததென்றூ
வாவா வதிசயம் பாரு ளிரவி லகனகரைக்
கூவா வெழுப்புஞ்செஞ் சூட்டுமுட் டாள்வன் குருகுகளே. (உஉஎ)

உஉக. வெள்ளி-வெள்ளை. அள்ளிக்கொள்வன்ன இருள்; நளவெண்பா, சுயம்வர. ககங. உஉஉ. சீ: இகழ்ச்சிக்குறிப்பு.

உஉஙூ. சழக்கு - வழகுக்கு மாறுபட்டது. சிலைத்தல் - முழங்குதல். வெள்ளி-சுக்கிரன். உஉஎ. கூவா-கூவி. முள்தாள் வன்குருகுகள்-கோழிகள்.

வரைதல் வேட்கை.

தலைமகளைப் பாங்கி பருவரல்வினுதல்.

தடுத்துரை யாதநல் லாயத்துண் டோசெய் தவறுநெஞ்சங்
கடுத்தன ளோவன்னை சொன்னத் தியாகர் கவின்றுறைசைத்
தொடுத்தவெண் முல்லை யிலம்பகஞ் சூட றுறந்தனைநெஞ்
சடுத்ததிங் கேது விடுத்தருள் வாய்பெண் ணரசெனக்கே. (உஉ௮)

தலைமகள் அருமறைசெவிலி அறிந்தமைகூறல்.

நீதித் துறைசைநங் காதலர் தம்மை நினைந்துநினைந்
தாதித் தனைக்கண்ட வம்புலி போல வயர்ந்துமுகம்
பேதித் திருத்தலிற் கோமுத்தி யீசர் பிறங்கலன்னை
சோதித் தறிந்தவள் போலறிந் தாணந் தொடக்கினையே. (உஉ௯)

தலைமகள் தலைமகன்வருந்தொழிற்கருமைசாற்றல்.

சொரிந்தசொல் வாயன்னை ஞாளியிவ் வூர்விழி துஞ்சினுமூர்த்
திரிந்தவெங் காவலர் சீறுவர் கான்றிடுந் திங்கணிலா
வரிந்தமென் கொங்கை குடிஞையுங் கோழியும் வாயடையா
பிரிந்தனங் கோமுத்தி யீசன் றுறைசையெம் பெட்பனையே. (உ௩0)

தலைவி தலைமகனூர்க்குச்செல்ல ஒருப்படுதல்.

அருங்கடி யாயி னெடுங்காவ னீவிரும் மாசைதள்ள
நெருங்கடி யார்தண் டுறைசையெங் கோமுத்தி நித்தர்வெற்பின்
மருங்கடி யார நடந்துவந் தென்னை மணந்தவரூர்க்
கிருங்கடி யார்குழ லாய்செல்வ மோவுட னெய்துதற்கே. (உ௩௧)

பாங்கி இறைவனைப் பழித்தல்.

கடுக்கண்ட னையனங் கோமுத்தி யீசன் கவின்றுறைசை
வடுக்கண் டனைய விழிமொழி யாய்மற வார்மறந்தே
யிடுக்கண் டனைவிளைத் தாரினி யாரரு ளல்லிவழி
நடுக்கண் டனையறி யாதெய்தி நாமங்கு நண்ணுவதே. (உ௩உ)

உஉ௮. கடுத்தனளோ - ஐயமுற்றுளோ. முல்லை இலம்பகம் - முல்லை மலராலாகிய நெற்றிமாலை.

உ௩0. திங்கள் நிலாக் கான்றிடும். வரிந்த - கோலஞ்செய்த. கொங்கை: விளி. குடிஞை - கோட்டான். பெட்பன - விருப்பமுடைய தலைவன்.

உ௩௧. கடி - காவல். அடியார்-நெருக்கு. மருங்கு - இடம், பக்கம்.

உ௩உ. கடுக் கண்டன் ஐயன் - வடுவைப்போன்ற விழியையும், கண்டைப் போன்ற மொழியையுமுடையாய். இடுக்கண்தனை - துன்பத்தை, நடுக்கண் தனை-நடுவிடத்தை. அங்கெய்தி நாம் நண்ணுவது யாரருள்; இனியாரருளெய்தி யெனவுமாம்.

தலைமகள் இயற்படமொழிதல்.

துறந்தன ரேயென் றினையன் மின்னேகண் சொரிமழையு
நிறந்தபு மேனியு நீங்கா விருளு நினைத்தலின்றிச்
சிறந்ததென் னைவடு தண்டுறைச் செம்பொற் றியாகர்வெற்பர்
மறந்தது வேறில்லை யாற்றொல்லை நாஞ்செய்த வல்வினையே. (௨௩௩)

தலைமகள் கனவுநலிவுரைத்தல்.

அரிதாந் துயிலொன் றதிசய மாய்வர வங்ஙனம்யான்
பெரிதாய் வருந்தப் பிரிந்தார்வந் தொன்றவும் பெற்றின்புறு
தெரிதாங்கு கையர் துறைசையெங் கோமுத்தி யீசர்வெற்பிற்
சரிதாங்கு கைகொ டமளிதை வந்தனன் றாழ்குழலே. (௨௩௪)

கவினழிபுரைத்தல்.

தவத்தின்மிக் காமென் றலைவருண் ணைமற் றடுத்திடையே
பவத்தின்மிக் காமென் னலத்தையெல் லாமிப் பசலையுண்டே
சிவத்தர சூர்வளர் செம்பொற் றியாகரைச் சேர்ந்திறைஞ்சா
வவத்தரைத் தேய்க்கு மருவினை போல வரிக்கின்றதே. (௨௩௫)

தலைமகள் தன்றுயர் தலைவற்குணர்த்தல்வேண்டல்.

ஆரத் தலர்முலை யாயிழை யூரற் கலம்புபொன்னித்
தீரத் தலர்தென் றுறைசைத் திரவியத் தியாகர்வெற்பிற்
பீரத் தலர்சில கொண்டின்ன ளாயினள் பெண்கொடியென்
றீரத் தறைகுநர் தாமுள ரேலுய்யு மென்னுயிரே. (௨௩௬)

தன்புறுபாங்கி சொல்லெனச்சொலலல்.

நெறிவார் குழலி திருவா வடுதுறை நேசரென்னை
முறிவாங்கி யாட்கொண்ட செம்பொற் றியாகர்நம் முத்தர்வெற்பர்
பிறிவாரி னீங்கியென் னுள்ளே யொளித்தென் பிணியையெல்லா
மறிவா ரவர்க்கென்கொல் யான்புகு தாவின் றறிவிப்பதே. (௨௩௭)

தலைமகள் அலர்பார்த்துற்ற அச்சக்கிளவி.

செய்யலர் வாசத் துறைசைத் திரவியத் தியாகர்வெற்பின்
மையலர் வீழு மதர்விழி யாயடன் மாமதனுந்
தையல ருங்கையின் வாயிற் றொடுத்திடுந் தையலர்க்குக்
கையலர் [1]வண்டுக ளைகிழித் தோடுமென் கட்புனலே. (௨௩௮)

---

௨௩௪. சரி - கைவளை. தைவருதனன் - தடவினேன்.

௨௩௫. சிவம் - நன்மை, மங்களம். அவத்தர் - பொய்யர், வீணர்.

௨௩௬. பீரத்தலர்-பீர்க்கம்பூ; இது பசலைக்குவமம்; குறுந்தொகை, ௯௮.

௨௩௭. முறி - அடிமைபோலே. பிறிவாரின் = பிரிவாரின் - பிரிவார்போல.

௨௩௮. செய் - வயல. மையலர் வீழும் - கருங்குவளை மலரையொக்கும். மதன்கையாற் றொடுத்திடும் மலர்ப்பாணம்; தையலர் (மகளிர்) வாயாற் றொடுத்திடும் பழிமொழி; தையலர் - தைக்கும் மலரம்பு, தங்கும்பழிமொழி. வண்டு - வளையல்.

(பி - ம்.) [1] 'வண்டுதமைக்கழித்தோடும்'

ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி.

ஆருச் சினத்தரி யார்க்கின்ற சாரலி லாடருவி
யாறு யிரங்கடந் தன்பர்வந் தேகி லணங்கரசு
ராறுறுக் கப்புற மாய்நின்ற கோமுத்தி யப்பர்வெற்பி
லாறு நிருட்டுணை யாவர்கொல் லோவென வஞ்சுதுமே. (௨௩௯)

காமமிக்க கழிபடர்கிளவி.

பானலம் போற்கண்டர் செம்பொற் றியாகர் பதியரசூர்க்
கானலம் போதினங் காள்வண்டு சாள்கண்டல் காளெனையின்
றேனலம் போக வழுதியென் னீர்நன் றிருந்துறைவன்
றானலம் போதக் கரைவரு நாளென்று சாற்றுமினே. (௨௪௰)

தன்னுட் கையாறெய்திடுகிளவி.

சத்தாமெங் கோமுத்தி யீசன் றுறைசைத் தடந்துறைவாய்க்
கொத்தார்பைஞ் ஞாழல் கரியாப் புளினத்திற் கூடிநம்மை
யெத்தாற் பிரிந்தவர் வாரா விடிலிங் கினிநெஞ்சமே
தொத்தா ரழற்றளி ராவதல் லாது சுகமுளதே. (௨௪௧)

தலைமகள் நெறிவிலக்குவித்தல்.

தோட்டார் கதுப்பிளந் தோகாய்பொற் பாதந் தொழுதுபொன்னி
நாட்டா வடுதுறைச் செம்பொற் றியாகர் நடநவிலுங்
காட்டார் கழுது மியங்கா விழுதிருட் கங்குலின்வாய்
வாட்டானை வேந்தர் வருமா றெழிநம் மனையகத்தே. (௨௪௨)

தலைமகள் குறிவிலக்குவித்தல்.

அளைவா யரவும் பிறையுஞ் சடைக்கணிந் தன்பர்துன்பத்
தளைவாங்கு கோமுத்தி யீசன் றுறைசைச் சயிலத்தன்னை
விளைவாந் தினையின் னுங் காக்கச்செல் கென்றனண் மெல்லியலா
யுளைவா யரையிருள் வாரன்மி னென்றன்பர்க் கோதுகவே. (௨௪௩)

வெறிவிலக்குவித்தல்.

உயருந் தவத்தினர் சொன்னத் தியாக ரொராயிரநற்
பெயரும் பரசுந் துறைசைநன் னாடன் பெரிதருளாற்
றுயரும் படிசெய்த நோயறி யாதன்னை சூழ்வெறியாட்
டயரு மணங்கணங் கிற்றன் றெனவுரை யாயிழையே. (௨௪௪)

---

௨௩௯. ஆறுறுக்கு - முப்பத்தாறு தத்துவத்திற்கு. அரசூர் நின்ற. ஆறு - வழி. இருட்டுணையாவர் ஆர்.

௨௪௰. பானல் - கருங்குவளை மலர். கானல் - கடற்கரைச் சோலை. நலம் போக ஏன் அழுதி. துறைவன்றான் அலம்பு ஓதக்கரையில்வருநாள்.

௨௪௧. ஞாழல் - புலிநகக்கொன்றை. எத்தால் - ஏய்ப்பால்.

௨௪௨. கழுது - பேய். இழுது - நெய். [வருத்தமுடையாய்.

௨௪௩. அளை - புற்று. தளைவாங்கு - பந்தத்தை நீக்குகின்ற. உளைவாய் -

௨௪௪. ஆயிரம்பெயரையும் தவத்தினர் பரசும். அணங்கு அணங்கிற் றன்று - தெய்வம் வருத்தவில்லை.

பிறர்விலக்குவித்தல்.

முத்தலை வேலர் துறைசையெங் கோமுத்தி முத்தர்வெற்பிற்
பைத்தலை நாகந் தருமணிப் பேழை பலவுங்கொண்டே
யத்தலை வந்தன ரேதில ரென்ன வழற்பகழி
தைத்தலை மானுமென் காதா டினவண்டு தாழ்குழலே. (௨௪௫)

குரவரைவரைவெதிர்கொள்ளுவித்தல்.

நிந்தை யுறுமனங் கற்பா நிமித்தமு நீருகற்குத்
தந்தைநங் கோமுத்தி யீசன் றுறைசைத் தடஞ்சிலம்பி
லெந்தையும் யாயு மறிவா னுரைக்கி யியம்பலையேற்
சிந்தைவெந் நோயிற் பழியுயிர்க் கேதமுஞ் சேருமின்னே. (௨௪௬)

வரைவுகடாதல்.

வினவியசெவிலிக்கு மறைத்தமை விளம்பல்.

அறைவாயி லன்னைமின் னேயயர் வேதென்ன வாரணங்க
ளறைவான் றுறைசைக் கனகத் தியாகர்வெற் பார்பளிங்கி
னறைவாய் மிதித்து விளையாடத் தாள்கொப்பு ளாயிற்றென்று
ளறைவார் கழலன்ன லேபின்னை யென்செயு மாரணங்கே. (௨௪௭)

அலரறிவுறுத்தல்.

காரொன்று காலனைக் காய்ந்தருள் கோமுத்திக் கத்தர்பைஞ்சூற்
காரொன்று சோலைத் துறைசைவெற் பாவெங்கள் காரிகைக்கு
நாரொன்று கொண்டலர் நீதொடுத் தீந்தவந் நல்லருளா
லூரொன்றி லாம லலர்தொடுப் பாரிந் நகரவரே. (௨௪௮)

தாயறிவுறுத்தல்.

கிளியா கமங்கள் கிளத்திடப் பூவைகள் கேட்டுருகு
மளியா வடுதுறைப் புத்ரத் தியாகர்வெற் பாவளித்த
வெளியார் பருதி யிளங்கதிர் நாணவில் வீசுமணி
யொளியாற் களவையெல் லாமுணர்ந் தாளன்னை யுப்பொழுதே. ()

வெறியச்சுறுத்தல்.

மணிப்பாந்த ளாரத்தர் சொன்னத் தியாகர் மலத்தளையைத்
துணிப்பார் துறைசைவெற் பாமுன்பு நீதந்த சூழ்மயக்கைப்
பிணிப்பால வென்று பெருஞ்சங்கை பூண்டெம் பிராட்டிமெய்ந்நோய்
தணிப்பான் றொடங்கின ரால்வெறி யாடலைத் தாயர்களே. (௨௫௦)

௨௪௫. முத்தலைவேல் - சூலம். மணிப்பேழை - மாணிக்கப்பெட்டி.
௨௪௬. நிமித்தமும் நீ உரைத்தி.

௨௪௭. அறைவாயில் - அறையின் வாயில். அறைவாய் - பாறையின்கண். அறை - ஒலிக்கின்ற.

௨௪௮. நார் - மலர் தொடுக்கும் நார், அன்பு. அலர் - பூ, பழிமொழி.

பிறர்வரைவுணர்த்தல்.

வயலாம்பல் புன்கலர் வண்டொலி தீப்பொரி மந்திரமா
வியலா யனமணஞ் செய்பொன்னி நாட வெழிற்றுறைசைக்
கயலாய கண்ணிக்குச் சொன்னத் தியாகரிற் காணநல்க
வயலார் கருதுகின் றார்முயல் வாயுன்னி னாவதின்றே. (௨௫௧)

வரைவெதிர்வுணர்த்தல்.

இழிவழி நாடி யிளைத்தேனை யாண்டவெங் கோன்றுறைசை
வழிவழி மாலயன் றொண்டுசெய் கோமுத்தி வள்ளல்வெற்பா
பிழிவழி தார்மறை யோருட னீதுன்னிற் பின்னருன்றன்
மொழிவழி நிற்பரெங் கேளிரெல் லாரு முகமலர்ந்தே. (௨௫௨)

வரையுநாளுரைத்தல்.

ஆராயு நாண்மற்றென் வேங்கைகள் வேங்கை யளித்தனவேல்
வீரா துறைசையிற் செம்பொற் றியாகர்தம் வெண்குழையை
வாரார் சடைக்கொன்றை மாலைமுன் னான்று வளர்ந்தொப்ப
வேரார்வெண் டிங்களு மூர்கோ ளடுத்துவந் தெய்தியதே. (௨௫௩)

தலைமகளறிவு தலைமகற்கு அறிவுறுத்தல்.

பண்ணையம் பார்க்குந் துறைசைப் பரமர்நற் பாண்டரங்கம்
பண்ணையர் கோமுத்தி யீசர்வெற் பாவுன் பழியையன்னை
பண்ணைமின் னாரென வேயறி யாவகை பார்த்தெனையும்
பண்ணையுந் தேமொழி நாணா மறைத்தனள் பாங்குறவே. (௨௫௪)

குறிபெயர்த்திடுதல்.

கோன்மாறி டாவில்லர் செம்பொற் றியாகர்தென் கூடன்மன்றிற்
கான்மாறி யாடிமுன் காத்தார் துறைசைகண் ணார்வினைகள்
போன்மாறி மாறி வருவார் சிலருண்டிப் பூம்பொழினீ
தான்மாறி வேறோர் பொதும்பர்சென் றாடத் தயவுசெய்யே. (௨௫௫)

பகல்வருவானை இரவுவருகென்றல்.

முன்னந் தடவரை விற்கொண்ட கோமுத்தி மூர்த்தியெங்கோன்
பொன்னந் தடந்துறை சைக்கா விரிப்புனல் போர்த்தநெய்தற்
பன்னந் தடம்படி முத்தீன முட்டை பலமறைய
வன்னந் தடவுந் துறைவா பகல்வரி னாம்பழியே. (௨௫௬)

---

௨௫௧. ஆம்பல் தீயாக, அலர் பொரியாக, ஒலி மந்திரமாக. காணம் - பொற்காசு.

௨௫௩. வேங்கை - ஒருமரம், பொன்.

௨௫௪. பண்ணை அம்பு ஆர்க்கும்-வயல்களில் நீர் முழங்கும். பண் ஐயர். பண்ணை - கூட்டம். பண் ணையும் - இசை வருந்தும்.

௨௫௬. பல் நந்து அடம்பு அடி - பலசங்குகள் அடப்பமரத்தினடியில்.

இரவுவருவானைப் பகல்வருகென்றல்.

சிலவங்க மாலையர் செம்பொற் றியாகர் திருத்துறைசைப்
பலவங்க மாருங் கடற்றுறை வாவின்னும் பைந்தளிர்போற்
குலவங்க மாதின் மொழிக்கிடை கிள்ளைக் குழாம்பயிலு
மிலவங்க வெற்பிற் றினைகாத்து நீவந் தெமக்கருளே. (௨௫௭)

பகலினும் இரவினும் பயின்றுவருகென்றல்.

புகலுந் துதிக்கருள் செம்பொற் றியாகர்தம் பூந்துறைசை
யகலும் பராரைத் தடஞ்சிலம் பாமைக்க ணொலிசிந்த
விகலுங் கரும்பன் பெரும்போர்க் கிளைக்கு மிவள்பொருட்டாற்
பகலு மிரவும் பயின்றுவந் தின்னருள் பாலிப்பையே. (௨௫௮)

பகலினும் இரவினும் அகலிவணென்றல்.

பொற்பயன் மால்பணி புத்ரத் தியாகர் புகழ்த்துறைசை
வெற்பய னீவரல் வேந்தே பகலெங்கும் வீணலரா
மிற்பய நீக்கிடுங் காவலா கொட்புற் றிராத்துயிலார்
நற்பய னேதுமின் றாலிரு போதினு நந்தமக்கே. (௨௫௯)

உரவோனூரும் ஊரும் குலனும் மரபும் புகழும் வாய்மையும் கூறல.

இருமைக்கு மின்பருள் செம்பொற தியாக ரெழிற்றுறைசை
யொருமைக குணததர் மருவுநின றூட்டிறகு மூர்க்குமுங்க
ளருமைக் குலதிறகு மாமர பிறகு மளவிலபுகழ்ப்
பெருமைக்கும் வாயமைக்கு மேலாது நீகொண்ட பெற்றிமையே. ()

ஆறுபாரததுறற அச்சங்கூறல.

காதாடும் வெண்குழைச் செம்பொற றியாகாபைங் காத்துறைசைச்
சீதாரி வாசனு செறிவெற்ப நீயலவி சிறறதரிற
பாதாள மட்டவற கான்யாறு நீந்துயெம் பாலவரலா
லேதாம் பழிகொலென் றெண்ணு தனவெண்ணு மிட்டிடையே, ()

ஆற்றருததன்மை ஆறறககூறல்.

தழுங்கும் பிரசத் திருன்மான குளம்பினிற் றுய்த்துவைத்திட்
டியஙகும் பொருபப துறைசைத தியாகரை யேததலர்போ
லுயஙகும் படிவெய துயிக்கும் விழுமமுழ முளருருகு
மயஙகுந தெளியும் வளைசோரச் சோரு மலாகமொடியே. (௨௬௨)

காவனமிகவுரைததல.

1 திக்காடை யாக்கொண்ட கோகழிச் செம்பொற தியாகர்வெற்பா
வககார மென்மொழி யாள்பொருட் டாவரி யேறதிர்நது
மைக்கா ரிருள்வலசி தேர்வாற றூறதா வாராறுடிக்
கைககா வலாதுஞசி னுலுந்துஞ சாளனனை கண்முகிழ்த்தே. (௨௬௩)

---

௨௫௭. மொழிக்கு இடை - சொல்லுக்குத்தோற்ற. காத்தும்-காப்பும.
௨௬௧. சீதாரி - ஒரு வாசனைமரம். அவல - பள்ளம். [பொருப்பு.
௨௬௨. தாவிககுளம்பினில இருலைத் துவைததிட்டு மான் இயஙகும
(பி - ம்) 1 'இககாலை யோசைத துறைசையென கோமுத்தி யீசர்வெற்பா'

காமமிகவுரைத்தல்.

1 நன்மா னிடம்வைத்த செம்பொற் றியாகர் நறுந்துறைசைப்
பொன்மா மணித்துறை வாவுன தன்பின் புனன்மடுத்து
நின்மார்ப வெற்பண்ண வெண்ணும்வெங் காம நெடுங்கனலான்
மென்மாந் தளிர்வண்ணம் வெண்கொண்ட லாகி மெலிபவளே. ()

கனவுநலிவுரைத்தல்.

சிரத்தார் தரித்த துறைசைத் திரவியத் தியாகர்தந்த
வரத்தா லுதித்தென்ன வந்தவட் கோர்துயில் வந்திடநீ
கரத்தா லணைக்குமுன் கண்டன ளாய்ப்பின்னைக் கண்டிலளாய்
மரத்தா லியன்றதொர் பாவையொத் தேங்கினண் மன்னவனே. ()

கவின்ழிவுரைத்தல்.

தவமேரு வாந்தொண்டர் வாழ்திரு வாவடு தண்டுறையிற்
சிவமே தருமெங்கள் செம்பொற் றியாகர்தென் னஞ்சிலம்பா
நவமே கலைமங்கை கொங்கைபுல் லாமையி னுளுக்குநா
ளவமே தொலைகின்ற தாற்பசும் பீருண் டணிநலமே. (௨௬௬)

ஒருவழித்தணத்தல்.

தன்பதிகககற்சி தலைவன்சாற்றல்.

ஒற்றைப் பொருவிடைப் புத்ரத் தியாக ருறைதுறைசைக்
கிற்றைத் தினஞ்சென்று காவிரி யாடி யிரவுதங்கி
மற்றைப் பகலிங் கியான்வரு கேன்வரு மட்டுமின்னே
கற்றைக் குழலி கலங்காம லாற்றுங் கடனுனக்கே. (௨௬௭)

பாங்கிவிலககல்.

உன்னருஞ் சொன்னத் தியாகேசர் கோமுத்தி யூர்மயிலு
மன்னமு மன்னவ ளல்குற பெருநகட லாடலனறி
யின்னமும் மூர்வயின் வேறுசென் றுடு மிடமுளதேற்
றன்னமும் யாங்க டவிர்க்கறி யேஞ்செல்லுந் தாழ்வின்றியே. (௨௬௮)

தலைவன நீககலவேண்டல.

இடர்கெடுத் தாளுந் துறைசையெங் கோமுதத்தி யீசர்வெற்பிற்
சுடர்விளக் கன்ன மடந்தைநல லாயொரு தொலவினை யென்
பிடர்பிடித் துந்தலி னெம்மூ ரகஞ்சென்று பின்னருச்சி
யடர்கதி ரோன்வரு முனவரு வேன்மனத தையுறம்ல. (௨௬௯)

தலைவனைப் பாஙகிவிடுத்தல்.

அழுந்தவிங் கேதுமக் கியான்சொல்லு மாறென்று மாருணீர்
செழுந்தளிர் வல்லிக்குப் பெய்கொண்ட னீரிது மேதறிங்லாக்

---

௨௬௫. ஆர் தரிதத - ஆததபபூவை யணிநத. ௨௬௬. பீா - பசலை.
(பி - ம்.) 1 'என்மா லொழுததருள சொாணத் தியாக ரெழிற்றுறைசை'

கொழுந்தணி வேணியர் கோமுத்தி யீசர் குளிர்துறைசைக்
கெழுந்தருள் வீரன்ப ரேயெம்மை நெஞ்சி லெழுதிக்கொண்டே. ()

பாங்கி தலைவிக்கு அவன்செலவுணர்த்தல்.

வாளொன்று கண்மட மாதேயொன் றுட்கொண்டு மன்னர்நம்மை
நாளொன் றிடைவிட் டகலவும் வேண்டினர் நந்தலில்லாத்
தாளொன்று சஞ்சத் தயன்மால்புத் தேளிர் தடமுடிப்பொற்
றாளொன்று பாதத்தர் சொன்னத் தியாகர் துறைசையிலே. (௨௭௧)

தலைவி நெஞ்சொடுபுலத்தல்.

தொண்டா நமைக்கொண்ட சொன்னத் தியாகர் துறைசைவெற்பிற்
கண்டாரொன் றாயென் முலைத்தட மூழ்கியென் காமநல
முண்டா ரளித்தஞ்ச லென்றாரென் னெஞ்ச முறுகவலை
விண்டாரிப் போதொளித் தாரென்கொ லோவிளை யாட்டவர்க்கே. ()

சென்றோனீடலிற் காமமிக்க கழிபடர்கிளவி.

கூற்றாண்மை மாற்றிய கோமுத்தி யீசரைக் கோதிலன்பர்
போற்றா வடுதுறைப் பொன்னித் துறைவர்க்குப் பொற்பசலை
யேற்றா ளுடம்பெங்கு நீத்தா டுயிலிடை யெல்லியிவ
ளாற்றா ளினித்துய ரென்றுரை யீர்துஞ்சு மஞ்சங்களே. (௨௭௩)

தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தல்.

வேண்டும் பதந்தருஞ் சொன்னத் தியாகர் விரைமலர்த்தா
ளீண்டும்பர் போற்றுந் துறைசை யுறாரி னினையலிவ்வான்
நீண்டு நெடுமணற் குன்றேறி நாமன்பர் தேர்வரவு
காண்டுங் கனங்குழை வாவவர் தார்வம்புங் கந்தித்ததே. (௨௭௪)

பாங்கி தலைமகட்குத் தலைமகன் வந்தமையுணர்த்தல்.

தங்குவந் தாரணி மேலுயிர் தாங்கித் தரித்தினிநா
மங்குவந் தாரிய நாடுசென் றார்மயி லாடும்பொழிற்
கொங்குவந் தாதென் றுறைசைமெய்ங் கோமுத்திக் கூத்தர்வெற்பி
லிங்குவந் தாருன் பசலையு நோயு மிரிந்திடவே. (௨௭௫)

வந்தோன் றன்னொடு பாங்கி நொந்துவினாதல்.

மழுவல னேந்திய செம்பொற் றியாகர் மருவியபொற்
கொழுவலஞ் சேர்வயற் கோமுத்தி யூர்கொண்ட கோல்வளையை
யுழுவலன் போடு மணப்பாயெவ் வாறங் கொழிந்திருந்தாய்
தழுவல றாதுகண் முத்தந் துடைத்துத் தணந்தவனே. (௨௭௬)

---

௨௭௩. இடை எல்லி - பாதியிரவு.

௨௭௪. இனையல - வருந்தாதே. கந்தித்தது - மணம் வீசியது.

௨௭௫. ஆரியநாடு - வடக்குள்ளதொரு தேயம்.

௨௭௬. கொழுஅலம் - கொழுவையுடைய கலப்பை.

தலைவன் பாங்கியொடு நொந்துவினாதல்.

திருவீற் றிருந்த துறைசைத் திரவியத் தியாகர்கஞ்ச
மருவீரத் தாளை வணங்காரின் மாதர்கள் வாயிடத்திற்
பெருவீரை நஞ்சம் பிறந்தென்னத் தோன்றிடும் பேரலரோ
டிருவீரு மெம்மைவிட் டெவ்வண்ண மாற்றி யிருந்தனிரே. (௨௭௭)

பாங்கி தலைவியை ஆற்றுவித்திருந்த அருமை தலைமகற்குச் சொல்லல்.

ஏணித் தடங்கையர் கோமுத்தி யீச ரெழிற்றுறைசை
வாணித் திலங்க ளெறிபொன்னி நாட நின் வாய்மொழியைப்
பேணித் தனியிளங் கொம்பினை நீயுன் பெரும்பதியிற்
பாணித் திருந்தமட் டும்பாது காத்தனன் பாலிருந்தே. (௨௭௮)

வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல்.

என்பொருட்பிரிவுணர்த்து ஏந்திழைக்கென்றல.

மாவேரிக் கொன்றையர் செம்பொற் றியாகர் வளர்துறைசைப்
பூவேரி நாட்டகம் போயுமர் வேண்டும் பொருள் கவர்ந்து
தூவே ரிலங்கிழை யாய்பொன் முகந்து சுமந்துவரும்
காவேரி போல்வரு வேனிது கூறவள் காதினுக்கே. (௨௭௯)

பாங்கி நின்பொருட்பிரிவுரை நீயவட்கென்றல.

துள்ளும்பொன் மான்கையர் செம்பொற் றியாகர் துறைசைவெற்பா
வுள்ளு மெவையுநின் மேலன வாநஞ்ச மொத்த வெண்ணந்
தெள்ளு மமிழ்தற் கனிந்தசொற் பாவை திருவுளத்திற்
கொள்ளும் படிவல்லை யேற்சொல்லி யேகு குறித்ததற்கே. (௨௮௦)

நீடேனென்றவன் நீங்கல்.

தோடேறு கன்னத்தர் சொன்னத் தியாகர் துறைசைப்பொன்னி
நாடேயொப் பாய்பரித் தேர்பண்ணி யின்று நடுச்சுரம்போய்
மாடே யிருநிதி யீட்டிநுங் கேளிர் வழுத்தநும்மூ
ரூடே வருகுவல் யான்மாலை யம்பொழு துண்மையிதே. (௨௮௧)

பாங்கி தலைமகட்குத் தலைமகன் செலவுணர்த்தல.

மெல்லத ரத்தங் கனையேயுன் கொங்கை விலைக்குநிதி
பல்லத ரத்தங்கள் செம்பொற் றியாகர் பதியரசூர்ச்
செல்லத ரத்தம் பொலிதழல் வெப்பஞ்சிச் சோர்ந்தறியாக்
கல்லத ரத்தங் கடந்தார் துணிந்துநங் காதலரே. (௨௮௨)

---

௨௭௮. ஏணி - மான். பாணித்தது - தாமதித்தது.

௨௮௨. மெல் அதரத்து அங்கனையே. பல்ல தர - பலவற்றைக் கொணர. செல்லது - மேகமானது; அது; பகுதிப்பொருள்விகுதி. அரத்தம் - செம்மை. கல் அதர் அத்தம் - கற்களை செறிந்த வழியையுடைய காடு.

தலைமகளிரங்கல்.

1 ஆடுமென் றேகை யனையாய் துறைசை யரசிடத்தி
னீடுமென் செம்பொற் றியாகேசர் வெற்பினென் னேசமுகங்
கோடுமென் றேசொல்லிற் கூடவந் தென்னுயிர் கொண்டெறிக்கண்
வாடுமென் றேவன்பர் வாளா கடந்தனர் வன்சுரமே. (௨௮௩)

பாங்கி கொடுஞ்சொற் சொல்லல்.

உலம்பும் பருமணித் தேரேறி யன்பரின் றுன்பொருட்டுச்
சிலம்புஞ் சிலம்படிச் செம்பொற் றியாகர் திருத்துறைசை
யலம்பும் பருமால் லாயகன் றூரதற் கஞ்சிமிகப்
புலம்பும் பரிசென் வறிதேயிவ் வூரலர் பொங்கையிலே. (௨௮௪)

தலைவி கொடுஞ்சொற் சொல்லல்.

2 வண்டார் செருந்தி தியாகேசர் நல்குல வாக்கிழிபோற்
றண்டா தவிழ்பொன் றருமா சூரர் தணந்திவளை
யிண்டார் கடங்கடந் தாரென்கி லார்மற் றெனைப்பசப்புக்
கொண்டாளென் பாரன்றி யான்படு நோயைக் குறிக்கிலரே. (௨௮௫)

வருநவர் மீண்டமைப் பாங்கி வலித்தல்.

எட்டாந் திருவுருச் செம்பொற் றியாக ரெயிற்குலங்க
ளட்டார் துறைசை யணங்கய ரேல்செவ் வரக்குருக்கி
விட்டா லனெறி வெஞ்சுரத் தன்றிலவிள் ளாமுபக்க
முட்டாது காண்குவர் மீள்வர்கண் டாய்நம் முதன்மையரே. (௨௮௬)

பருவங்கண்டு பெருமகள் புலம்பல்.

மருக்கொண் டிடக்கொன்றை வண்டொடாக துயிர்த்ததண் மாமலர்போ
லுருக்கொண் டிடவென் முலைமயி லோகையுற் றாங்ககவத்
திருக்கொண்ட கோகழிச் செம்பொற் றியாகர் சிலம்பிற்கொண்மூக்
கருக்கொண்டு வந்தின் னம்வந்தி லார்நமைக் காப்பவரே. (௨௮௭)

இகுளைவம்பென்றல்.

ஐவனம் வித்திய செவ்வேட் பராய்நம ரார்த்திடநீ
ரைவன மேகஞ் சொரிந்தது கோமுத்தி யப்பர்வைகு
மைவன மாடத் துறைசையொப் பாயணங் கேலதுகண்
டைவனஞ் சேர்மயி லெல்லாஞ் சிறைவிரித் தாடினவே (௨௮௮)

---

௨௮௪. உலம்பும் - முழங்கும்.

௨௮௫. செருந்தி - ஒருமரம். இண்டு - ஒருவகை முடகொடி.

௨௮௮. ஐவனம்-மலைநெல், அழகிய எழுத்துக்கள், ஐந்துநிறம். வேனைப் பரவ மழைபெய்தல் இயல்பு. ஐங்குறு. உருக; திருச்சிற். கருக - பார்க்க. பராய் - வழிபட்டு. நீரை அழகியமேகம் சொரிந்தது.

(பி - ம்.) 1 'ஆடும் பணிக ளணிமாசி லாமணி யார்துறைசை, நீடுந தடத் துறைச் செங்கயற் கண்ணி' 2 'வண்டார்தொற் கொன்றை வனைமாசி லாமணி யார் துறைசைத், தண்டா தருவி சொரிவெற்ப ரின்று தணந்து'

இறைமகள் மறுத்தல்.

அங்கோ கழிநகர்ச் செம்பொற் றியாக ரசலத்துவர்ச்
செங்கோட லுற்கையென் றூர்கோப மாங்கதன் றீப்பொறியென்
றுங்கோ விடக்கரை மீகேறு மோதமுள் வாங்கக்கண்டு
மெங்கோதை யோதிவம் பென்றாய்சென் றார்சொல்லி னீதுமொன்றே.

அவர்தூதாகி வந்தடைந்தது இப்பொழுதெனத் துணைவி சாற்றல்.

நகிற்கொடி வாமத்தர் கோமுத்தி நாதர் நறுந்துறைசை
யகிற்புகை நாறுங் குழலாய் வெருவ லன்பரின்னே
துகிற்கொடித் தேரின் வருவ ரவர்தூ துரைப்பமுன்னே
முகிற்குலம் வந்தன காண்மின்ன லோடு முழக்கங்கொண்டே. ()

தலைமகள் ஆற்றல்.

ஒன்று மிருதலைப் புள்ளி னிருவர்க்கு மோருயிரே
யென்றுசொன் னார்நம் வினையாற் பிரிந்தன ரின்பதுன்ப
நன்று மவர்க்கு முளவாமிக் காரிடை நண்ணுவராற்
றென்றுதொட் டாட்கொளுஞ் சொன்னத் தியாகர் துறைசையிலே.

அவள் அவட்புலம்பல்.

காரொத்த வார்குழல் சோரக்கண் ணீர்குடங் கைவழியே
வாரத் தனித்து வழிதேயப் பார்த்து மறுகியர
சூரத்தர் சொன்னத் தியாகர்த் கொழாரிற் றுவளுமின்னை
யாரத் தருணத்தி லஞ்சே லெனவெடுத் தாற்றுவரே. (உகூஉ)

மீண்டுவருகின்றகாலத்துத் தலைமகன் பாகனொடு சொல்லல்.

சுத்தருக் கின்பருள் செம்பொற் றியாகர் துறைசையில்வாழ்
சித்தர்தம் விஞ்சையின் வாசியைத் தூண்டினித் தேர்வலவா
வெத்தனை யோவுண்மை சொல்லிவந் தேன்முன்ன மென்னுயிருக்
கத்தனை சொல்லும்பொய் யாகாமற் செய்வதுன் னங்கைகளே. ()

தலைமகன் மேகத்தொடு சொல்லல்.

இரவியந் தேரெழு மாவிறு மாப்பற வீர்த்திடுமெம்
புரவியந் தேரின்முன் போமுகில் காள்பொற் கிழியளித்த
திரவியத் தியாகர் திருவா வடுதுறை சேர்ந்துநின்றென்
வரவியம் பும்பசும் பீர்பூத்த மேனி மயிலைக்கண்டே. (உகூச)

பாங்கி வலம்புரிகேட்டு அவன் வரவறிவுறுத்தல்.

சலம்புரி செஞ்சடை மேல்வைத்த கோமுத்திச் சங்கரன்வாழ்
பொலம்புரி சைத்துறை சைப்பான்மின் னேயுன் பொருமலற
நிலம்புரி யன்பர் வருகின் றனரென்று நன்மைசொல்லும்
வலம்புரி யோசை யமிர்தஞ் செவியில் வழிகின்றதே. (உகூரு)

உகூக. ஒன்றும்...ஓருயிரே:—"ஓருயிர்ப் புள்ளி னிருதலையுள் ளொன்று, போரெதிர்ந் தற்றால்" (கலி. அகூ); 'யானென்புழி இருதலைப்புள்ளின் ஓருயிரேனாகிய யான்' திருச்சிற். கஉ - உரை. உகூங. விஞ்சை - வித்தை.

வலம்புரிகிழத்தி வாழ்த்தல்.

மூலாக மங்கண் முழங்குந் துறைசையின் முக்கணனார்
நாலார ணஞ்சொன்ன சொன்னத் தியாகர்நல் லூர்தியெனும்
பாலாய [1]சேக்கைப் பதத்தினில் வாழும் பணிலத்தினு
மேலா யவர்மெய் யருள்போல் விளங்குக வெண்சங்கமே. (௨௯௬)

தலைமகன்வந்துழிப் பாங்கி தம்மைநினைத்தமை வினாதல்.

நந்தித் தனிவிடைச் செம்பொற் றியாகர் நறுந்துறைசை
வந்தித்துன் னாதவர் செல்லுங் கொடிய வனங்கடந்து
சந்தித்த வவ்வய னாட்டுழி வாகையந் தார்புனைவீர்
சிந்தித்து நெஞ்சி லறிதிர்கொல் லோவெங்கள் செல்வியையே. ()

தலைமகன் நினைத்தமைசெப்பல்.

சுவையா ரமிர்தன்ன சொன்னத் தியாகர் துறைசைவெற்பி
னவையாது மின்றி வளர்கொம்ப னீரும்மை நான்பிரிந்து
கவையார் மனத்தொடு மந்நாட்டிற் சென்றுழிக் கண்டகண்ட
வனைவையா வையுநின் மடந்தையு நீயு மலாதில்லையே. (௨௯௮)

தலைமகளை ஆற்றுவித்திருந்த அருமை பாங்கிகூறல்.

ஈட்டும் வினைதவிர்த் தன்பர்க் கருளெனு மின்னமிர்த
மூட்டிடுஞ் செம்பொற் றியாகேசர் கோமுத்தி யூரவெங்கண்
மாட்டுற வேறொன்றுங் கண்டில முன்றன் வடிவெழுதிக்
காட்டிடு மென்பணி யும்பொன்ன னாள்கண்ணிற் காண்பதுமே. ()

வரைவுமலிவு.

காதலன் முலைவிலைவிடுத்தமை பாங்கி காதலிக்குணர்த்தல்.

முடியாறு கொண்ட துறைசையெங் கோமுத்தி முத்தர்வெற்பர்
முடியா மெனுநின் முலைவிலை யாகநம் முன்கடைக்கண்
முடியா நிதிய மளந்து சொரிந்தனர் முல்லையந்தார்
முடியா ரளகத்து மின்னிடை யாகுக முன்வண்ணமே. (௩௦௦)

காதலி நற்றாயுள்ளமகிழ்ச்சியுள்ளல்.

மாமன்றற் கைதையங் கன்னிதன் மொக்குள் வனமுலைமேற்
பூமன்றற் புன்னை யரும்புமுத் தேந்திடும் பூந்துறைவர்

---

௨௯௬. சேக்கை பதத்தினில - இடபத்தின் கையிடத்தில்; திருமாலின் கையில்.

௩௦௦. முடி ஆறு கொண்ட - திருமுடியில் ஆகாய கங்கையை யணிந்த. முடி - கிரீடம். முடியா - அழியாத. முடி ஆர் அளகம் - முடித்தலையுடைய அரிய கூந்தல்.

௩௦௧. "மேதகு முள்ளெயிற் றொண்முகைக் கொங்கைவெண் டோட்டு (பி - ம்.) 1 'சேக்கைப்பதுமத்தில்'

சோமன் றலைக்கணி சொன்னத் தியாகர் துறைசைவரி
ஞமன்ற னல்லணி கண்டின் புறுநம்பி னன்னையுமே. (௩௦௧)

பாங்கி தமர்வரைவெதிர்ந்தமை தலைமகட்குணர்த்தல்.

பரசம் புயமலர்ப் பரவாய் பவளம் படாடம்பின்
பிரச மலர்மணி மாறுத் துறைவர்க்குப் பேதமில்லா
தரசமர் கோமுத்தி யம்மான் றுறைசை யணிநகரின்
முரசறைந் தார்நம ருள்ளங் களிப்புற முன்னெதிர்ந்தே. (௩௦௨)

தலைமகள் உவகையாற்றாது உளத்தொடுகிளத்தல்.

இன்றள வுஞ்சொன்ன விவ்வூ ரலருமற் றேதுக்களும்
பொன்றநின் பாலுள சிந்தையெல் லாங்குடி போகநெஞ்சே
நின்றருள் கோமுத்தி நாதன் றுறைசைநங் கண்ணனையார்
மன்றன் மணமுர சார்க்கின்ற தானம் மணிநகர்க்கே. (௩௦௩)

தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.

மைப்போ தனமிடற் றூர்மாசி லாமணி யார்துறைசை
யொப்போது தையலுக் கப்போ தலர்புனை யுன்கைநலங்
கைப்போதில் வேலனும் வள்ளியும் போலுற்ற காட்சியினு
லிப்போ தறிந்தன மாலென் றும் வாழி யிறையவனே. (௩௦௪)

தலைவி மணம்பொருட்டாக அணங்கைப் பராநிலை பாங்கி தலைமகற்குக்காட்டல்.

சுராதிபர் போற்றிய சொன்னத் தியாகர் துறைசைவெற்பி
லராவன்ன வல்குனல் லாளுன் பொருட்டுமெய் யன்புடனே
மராவுங் குராவும் வளர்கின்ற சாரலில் வாழணங்கைப்
பராய்வரம் வேண்டுதல் பார்த்தருள் வாயெங்கள் பார்த்திபனே. ()

அணங்கைப் பராநிலைகண்டதலைமகன் மகிழ்தல்.

முதுக்குறை விங்கிவட் கெவ்வண்ண முற்றது மூதரசூர்
விதுக்குறை சூடிய செம்பொற் றியாகர்தம் வெள்ளிவெற்பிற்
பொதுக்குறை தீர்நம் மணம்பொருட் டாகப் புரிகுழலாண்
மதுக்குறை யாமலர் தூஉய்த்தெய்வம் வாழ்த்தி வணங்குதற்கே. ()

மென்பூக், தோகையென்று நல்லாய்'' (தஞ்சைவாணன். ௧௬௪) என்பதும் இதன் முதலடிப்பொருளும் ஒத்திருக்கின்றன. சோமன் - சந்திரன், ஆடை.

௩௦௪. மைப்போது - கருங்குவளைமலர். ''எரிமருள் வேங்கை'' (ஐங் குறு. ௨௬௪) என்பது இச்செய்யுளின்பொருளை வலியுறுத்துகின்றது.

௩௦௬. விதுக்குறை - சந்திரகலை.

(பி - ம்.) 1 'இன்றளவூரவர்தூற்றலர்வாட'

அறத்தொடுநிற்றல்.

கையறுதோழி கண்ணீர் துடைத்தல்.

நல்லோர் பரசுந் துறைசையெங் கோமுத்தி நாதர்வெற்பி
லில்லோர் செயிர்த்திடு மேதுவொன் றில்லை யிழைத்தவண்டல்
கல்லோலம் வந்து கரைத்தன வோகண் கலைவதென்னே
மெல்லோ திம[1]நடை யாயுள்ள வாறு விளம்பெனக்கே. (௩௦௭)

தலைவி கலுழ்தற்காரணங்கூறல்.

சதுவேதர் செம்பொற் றியாகேச ராவடு தண்டுறையின்
மதுவே யலங்கற் சுடர்வேல வயங்கிட வந்தொருவர்
புதுவேங்கை நீழற் றனித்துழி யென்னைப் புணர்ந்தொளித்தா
ரிதுவே கலுழ்கின்ற காரணங் காணென் னிளங்கொடியே. (௩௦௮)

தலைவன் தெய்வங்காட்டித் தெளிப்பத் தெளிந்தமை எய்தக்கூறல்.

மெய்வாரந் தந்தருள் செம்பொற் றியாகர் வியன்றுறைசை
நெய்வழி வேற்கொண்கர் தோய்ந்தவஞ் ஞான்றுமுந் நீர்த்துறைவாய்த்
தெய்வமுங் காட்டித் தெளிப்பத் தெளிந்தனன் சிற்றறிவேன்
பொய்வரு மென்றறி யேனவர் சொல்லினும் பூங்கொடியே. (௩௦௯)

தலைவி தலைமகன் இகந்தமை இயம்பல்.

சுகந்தாவி லாத்தமிழ் வேதங்க ளோதுந் துறைசைநக
ருகந்தாளுஞ் செம்பொற் றியாகேசர் காவிரி யொண்டுறைவா
யகந்தாங் கரிநமக் கென்றே வருட்டி யருள்புரிந்தா
ரிகந்தா ரினியணங் கேயவர் போலில்லை யேதிலரே. (௩௧௦)

பாங்கி இயற்பழித்துரைத்தல்.

சேயழ லேந்திய செம்பொற் றியாகர் திருத்துறைசை
வாயழ காரு மரசினை நோக்கி மறைமொழிபோற்
காயழல் வேலன்பர் யானக லேனென்று கட்டுரைத்து
நீயழச் சென்றன ரேநன்று நன்றவர் நீதியதே. (௩௧௧)

தலைமகள் இயற்படமொழிதல்.

அடிகளெங் கோமுத்தி யீசன்முன் போதி யருள்பெறுவா
னெடியவ னின்றெனை நிற்குந் துறைசைநெய் தற்புலம்பர்
கொடியவ ராயினு மாகமுந் நீர்க் குவலயத்திற்
கடிகம ழோதி யவரே யென[2]துயிர்க் காவலரே. (௩௧௨)

---

௩௦௭. கல்லோலம் - அலை.

௩௧௦. சுகம் - கிளி. அகந்தாங்கரி - மனமேசாட்சி; அருணைக்கலம்பகம், ௩௨-ஆம் பாடல் பார்க்க. வருட்டி-வயமாக்கி; பெருங். ௨. ௧௦: ௭௨.

௩௧௨. சந்நிதியில் இடபதேவரது மண்டபத்தின்மேல் மிகவுயர்வுள்ளதாகப் படர்ந்திருந்த அரசமரமொன்றிருந்தது. ௪௫ - வருடங்களுக்குமுன் பணிசெய்தற்கு அம்மண்டபத்தை இடிக்கும்பொழுது சிதைந்துபோயிற்று.

(பி - ம்.) [1]'நடையாயவந்தகாரணம் விள்ளெனக்கே' [2]'உயிர்க்காதலரே'

தெய்வம்பொறைகொளச் செல்குவமென்றல்..

மூவா முதல்வரெங் கோமுத்தி யீசர் [1]முருகலர்ந்த
காவா வடுதுறைக் காவலர் தாஞ்செய்த கைதவத்தா
லோவா வெகுளிகொள் ளேலெனத் தெய்வமு ணெண்பலிதூஉய்
நீவா ழியவென வேத்துவம் வாசென்று நேரிழையே. (௯௩௩)

இல்வயிற்செறித்தமை சொல்லல்.

நீருண்ட வார்சடைச் செம்பொற் றியாகர் நெடுந்துறைசைக்
காருண்ட வேலைக் கரைமணற் கொப்புறுங் கங்குலிலோர்
தேருண் டெனவிளை யாடற் கினிப்புறஞ் செல்லலென்றாள்
வாருண்ட கொங்கைநல் லாயன்னை நின்னுரு மாசுகண்டே. (௯௩௪)

செவிலி கனையிருளவன்வரக் கண்டமை கூறல்.

தொடைத்தே னருமுடிச் சொன்னத் தியாகர் துறைசைப்பண்ணை
மடைத்தேங் குவளைக்கண் ணுய்நென்ன லந்திமன் னூழையினோர்
புடைத்தே மலங்கலந் தோளா ணொருவன் புகுந்திடக்கண்
டடைத்தேன் கதவென் றெனக்குரைத் தாளன்னை யையமுற்றே. ()

செவிலி தலைமகள்வேற்றுமைகண்டு பாங்கியை வினுதல்.

குறிதாம் பிறைமுடிக் கோமுத்தி யீசர் குளிர்துறைசைக்
கறிதாவும் வெறபிலென் காரிகை யாயிரு கண்ணுமெய்யும்
பிறிதாய்க் கரியுண்ட வெள்ளிற் கனியெனப் பெண்ணமிர்தம்
வறிதா யிருக்கின்ற தென்னோ வறிகிலன் வந்துற்றதே. (௯௩௬)

வெறிவிலக்கல்.

ஒருகேள்வி [2]கேட்ப விவருடை யாவியை யுண்ணுதற்கோ
வருகே தரும்பலி யாலிவள் பண்டைய ளாம்படிக்கோ
குருகேறும் வாவித் துறைசைக் கனகக் கொடையர்வெற்பின்
முருகே யெளியர் மனைவந்த வாறு மொழிந்தருளே. (௯௩௭)

வெறிவிலக்கியவழிச் செவிலி தோழியைவினுதல்.

பஞ்சூட்டு மெல்லடிப் பாவாயென் சென்னியிற் பங்கயப்பா
தஞ்சூட்டுங் கோகழிச் செம்பொற் றியாகர் தடங்கிரிமே
னஞ்சூட்டி யன்னகண் மாதர்முன் சூர னடுங்கக்கொன்ற
செஞ்சூட்டு வாரணத் தான்வந்த தேதென்ற சித்தமென்னே. (௯௩௮)

---

௯௩௫. நூழை - சிறுவாயில். மடையில் நீர் நிலைபெற்றிருக்கும். [கோய்.

௯௩௬. கறி - மிளகுகொடி. கரி - யானை யென்னும் பெயரினதொரு

௯௩௭. இவ்வருடை ஆவியை - இந்த ஆட்டினுயிரை.

௯௩௮. பாதம் சூட்டும். வாரணத்தான் - முருகவேள்.

(பி - ம்) 1 'முருக்கலர்ந்த' 2 'கேட்கவுற்றே னுன்னை யிம்மை யுயிருண்ணவோ'

தோழி பூத்தருபுணர்ச்சியால் அறத்தொடுநிற்றல்.

நீடுநின் கண்ணுக்கு நேரிது பாரென்று நின்மகட்கு
நாடுமொ ராடவன் வந்தீறில் காவிரி நல்கினனாற்
றோடுறு நீள்செவிச் சொன்னத் தியாகர் துறைசையுள்ளா
ராடுமவ் வாற்றின் றலையெழுத் தாடுநின் றுடிடத்தே. (௩௧௯)

புனறருபுணர்ச்சியால் அறத்தொடுநிற்றல்.

மாணார் கடும்புன லாடமின் னொருடன் மங்கைகொங்கை
காணக் குமிழி யுடையத்தண் ணீர்பகை காட்டிடுங்காற்
சோணாடர் சூழ்கழற் சொன்னத் தியாகர் துறைசையின்கட்
பூணாக மாரத் தழீஇயெடுத் தானொரு புண்ணியனே. (௩௨௦)

களிறுதருபுணர்ச்சியால் அறத்தொடுநிற்றல்.

கருப்பாசந் தீர்க்குந் துறைசையெங் கோமுத்திக் கத்தர்வெற்பிற்
றிருப்பாவை கொங்கைக்குத் தன்கோடு தோற்றவத் தெவ்வைமதப்
பொருப்பா வயினொன்று தீர்ப்பா னெதிர்வரும் போதிவளை
யொருப்பா டுடனணைத் தத்தோல் பொருத வொருவருண்டே. ()

தலைமகளாவேற்றுமைகண்டு நற்றாய்செவிலியைவினாதல்.

சீரா டரவர் துறைசைத் திரவியத தியாகர் வெற்பில்
வேறான சிந்தைய ளாயின ளென்மகண் மெய்யுங்கண்ணு
மாறா யினமுன்னை வண்ணமன் றாறகன் மணியனையாய்
நூறா யிரமெண்ணு மென்னெஞ சடங்க நுவலுகவே. (௩௨௨)

செவிலி நற்றாய்க்கு முன்னிலைமொழியான் அறத்தொடுநிற்றல்.

திருநா ணரவர் துறைசைத் திரவியத் தியாகர்வெற்பில்
வருநாண் மதிநுத லாய்களி றொன்றொரு மான்வினவிக்
குருநாண் மலர்ப்பொழில் வந்துநம் மாணிக்கக் கொம்பின்முலை
யொருநாண் முயங்கின ராலவிது கூட்ட வொருசெலவமே. (௩௨௩)

உடன்போக்கு.

பாங்கி தலைவற்கு உடன்போக்குணர்த்தல்.

ஆயிர மெண்ணமென் மின்னொ டொருடனர சூர்க்கையநீ
யாயிரங் குன்றுங் கடந்தே குகசண்மை யாண்டகைக்கோ
ராயிரம் பொன்னருள் சொன்னத் தியாக ரருளினம்பொ
னாயிர நல்கினுங் கொள்ளார் முலைவிலை யாமெமரே. (௩௨௪)

---

௩௧௯. ஈறில் காவிரி - காவி; கருங்குவளை; அதன் தலையெழுத்து: கா-
௩௨௦. மின்னொருடன் ஆடாநிற்க. உடைய - உடைத்தலால். [சோலை,
௩௨௧. மதப்பொருப்பு-யானை. ஆவயினை-அவ்விடத்தே. தெவ்வைத்தீர்ப்
பான்-பகையை ஒழிக்கும்பொருட்டு. ஒருப்பாடு-ஒருமைப்பாடு. தோல்-யானை,

தலைவன் உடன்போக்குமறுத்தல்.

கூற்றமு மஞ்சும்வெங் கானமு துன்னிற் குடிகெடுந்தொண்
ணூற்றறு காதத்துக் கப்புற மென்னகர் நுண்ணிடையாய்
போற்றா ரூர்வளர் செம்பொற் றியாகரைப் புந்திசெய்யா
மாற்றறு கண்ணரின் யாரே நடப்பரிம் மாதுடனே. (௩௨௫)

பாங்கி தலைமகனை உடன்படுத்தல்.

பரம்பு மலர்க்கொண்டை கொங்கையுந் தாங்கிப் பரற்பயம்பு
முரம்பு மிதித்துச் சுரம்போதும் போதின் முறையுங்கற்பு
வரம்புமுள் ளாளுக் கரசூரெங் கோமுத்தி வள்ளல்வெற்பா
நிரம்பு முன தருளேநிழ லாவெங்கு நின்றிடுமே. (௩௨௬)

தலைவன் போக்கு உடன்படுதல்.

வெப்பார் வடவைக்கும் வித்தாந் தழலத்த மெல்லச்செல்ல
விப்பாவி நெஞ்ச மியைந்தன்று கோமுத்தி யீசர்க்கென்று
மொப்பாந் துறைசையு ளன்னத்தின் றாவி யுறினும்பொன்னஞ்
செப்பார் முலையா ரடிகூ சுதல்கண்டுஞ் சில்வளையே. (௩௨௭)

பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தல்.

அணைமலர்க் கஞ்சிய செஞ்சீ றடிகல் லழல்வழிச்சென்
றிணையிலெம் மூர்நல் லரசினைச் சூழுங்கொ லென்றனர்பெண்
டுணையுட னீடிய சொன்னத் தியாகர் துறைசைவெற்பிற்
பணைமுலைப் பாவை யறியே னவர்மனப் பாவனையே. (௩௨௮)

தலைவி நாணழிபிரங்கல்.

வருமந்த மாதி யிலாமா சிலாமணி வள்ளற்பிரான்
பொருமந்த காரி துறைசை யுருத புறத்தரைப்போ
லருமந்த நாணந் துறப்பது வேண்டலி லப்பிறப்பிற்
றருமந்த வஞ்செய் திலேன்பெண் ணெனும்பவந் தள்ளுதற்கே. ()

கற்புமேம்பாடு பாங்கிகூறல்.

உயிரிற் சிறந்தன்று நாண்மட வார்களுக் கோததனிற்
செயிரற்ற கற்புச் சிறந்தன்று காண்செந்நெல் செங்கருப்பம்
பயிரிற் சிறந்த துறைசையெங் கோமுத்திப் பண்ணவனூர்
வயிரத் தடவரை மேலெழு தாத மணிவிளக்கே. (௩௩௦)

தலைவி ஒருப்பட்டெழுதல்.

வன்புடன் சுட்டு விரன்மூக்கி னுச்சியில் வைத்துப்பெண்டிர்
கொன்பழி தூற்றப் பயந்தார் சினத்தீக் குளித்துநின்றே
னென்பர வம்புனை செம்பொற் றியாக ரெழிற்றுறைசைக்
கன்பரொ டியான்செல்ல னிவ்வூ ரொழிக வலர்சுமந்தே. (௩௩௧)

---

௩௨௬. பயம்பு - பள்ளம். முரம்பு - பருக்கைக்கற்களாலாகிய மேடு.

௩௩௦. "உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" தொல். களவியல், ௨௨.

௩௩௧. "சிலரும் பலருங் கடைக்க ணோக்கி, மூக்கினுச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி மறுகி" நற்றிணை, ௧௪௯.

பாங்கி சுரத்தியல்புரைத்தழித் தலைமகள்சொல்லல்.

வெங்காள நஞ்சுண்ட செம்பொற் றியாகர் வியன்றுறைசைக்
கங்காளர் காவிரி நாடனை யாயிது கண்டிலைநீ
பொங்காவிவ் வூரவர் நாவாற் சுடப்பட்ட புண்ணுடையேற்
கங்கா ரழற்சுரங் கங்கா சலமென வாயிடுமே. (௩௩௨)

பாங்கி தலைமகளைத் தலைமகற்குக் கையடைகொடுத்தல்.

ஒருதிருக் கோமுத்தி யூர்மா சிலாமணி யுக்கமனார்
சுருதியின் வாய்மைய னீயென் றிவளைக் கொழுகளித்தேன்
குருதிகொள் வேலண்ண லுன்னருண் மாறவுங் கூடியதேற்
பருதியுந் திங்களுங் காணப் பெறுதிந்தப் பாரிடமே. (௩௩௩)

பாங்கி வைகிருள்விடுத்தல.

புயலாய் மிளிர்கண்டர் புத்ரத் தியாகர்தம் பூந்துறைசை
வயலாம்பல் வாய்ச்சியிவ் வைகிரு ணீங்கண் மகிழ்ந்துசெல்லு
மியலான தாரிவர் தெய்துவல் யான்கிளைக் கேற்பவுரைத்
தயலாற் பழிசொல்லு மவ்வவர் வாயை யடக்குவித்தே. (௩௩௪)

தலைவியைத் தலைவன்சுரத்துய்த்தல்.

நிதிவளர் கோகழிச் செம்பொற் றியாகர்மெய்ந் நீற்றொளிபோ
லதிசய மாவொளிர் வெண்மணல் யாறு மலர்சடைநீர்க்
கதிர்வெண் டுளியிற் குளிர்கூ ரிளமரக் காவுமுதிர்
வெதிர்முத்த முங்கண்டு நீமெல்ல மெல்லச்சென் மெல்லியலே. ()

தலைமகன் தலைமகளசைவறிந்திருத்தல்.

அக்குர கம்புனை செம்பொற் றியாக ரடிவணங்கித்
தொக்குர வோர்மன் றுறைசையன் னாய்நின் றுணை டிப்பூ
மிக்குர மானகல் வேல்போலத் தைக்க வெதும்பியவா
லிக்குர வந்தருக் கீழிருப் பாஞ்சற் றிளைப்பறவே. (௩௩௬)

தலைமகன் தலைமகளை உவந்தலர்சூட்டி உண்மகிழ்ந்துரைத்தல்.

நிவந்த மராமர நீழலிற் கோமுத்தி நித்தமொன்றாய்
நவந்தரு பேதமு மானார் துறைசைநல் லூரனையாள்
சிவந்தபொற் காலு நுதலவேர்வு நீவிச் செறிந்தவைம்பாற
குவந்தலர் சூட்டவும் யான்செய்த மாதவ மொன்றல்லவே. (௩௩௭)

கண்டோரயிர்த்தல்.

அகளனெங் கோமுத்தி யம்மான் றுறைசை யரோவுரிக
ளகளுமிக் கானிற்செல வாரிவர் யாவர்கொ லும்பர்பிரான்
மகளெனி னீங்கிவள் கற்பகஞ் சூடிலள் வள்ளலவன்
றுகளின் மருகனென் றுன்மார்பி னீபத் தொடையில்லையே. (௩௩௮)

---

௩௩௨. காளம் - கருமை. ௩௩௪. தாரி - வழி.

௩௩௬. தொக்கு - கூடி. உரவோர்-அறிவுடையோர். உரமான-வன்மை யுடைய. பூ வெதும்பிய. குரவந்தரு - குராமரம். ௩௩௮. அரோ: அசை.

கண்டோர் காதலின்விலக்கல்.

பூமாரன் றேவியும் போல்வரு வீரினன் புக்கொளித்தான்
மாமா சிலாமணி யார்பூந் துறைசையை வாழ்த்திலர்போம்
பேமா ரணிய மினிச்செல் லொணுது பெருமரைப்பால்
வாமான் றசையுண் டிராத்தங்கு வீரெம் மனையிடத்தே. (௩௩௯)

கண்டோர்தம்பதி அணிமைசாற்றல்.

தேன்றுஞ்சு பூங்குழற் செல்வியு நீயுந் தெரியும்வெற்பு
மூன்றுங் கடந்துசென் ருற்குளிர் காவு முழுமதியூர்
வான்றுங்க வண்ண மதிலுங் கிடங்கும் வளைந்தெதிரே
தோன்றுங் கனகத் தியாக ரரசுந் துறைசையுமே. (௩௪0)

தலைவன் தன்பதியடைந்தமை தலைவிக்குணர்த்தல்.

வேர்சூழ்ந்த கானந் தொலைத்துவந் தெய்தின மெல்லியலாய்
சீர்சூழ்ந்த பொன்னியு மெய்ஞ்ஞானச் செல்வர் திருமடமு
மேர்சூழ்ந்த செய்குன்று மாடமுஞ் சூழ்ந்தொளி ரிப்பதியே
தார்சூழ்ந்த செம்பொற் றியாகேச ராவடு தண்டுறையே. (௩௪௧)

கற்பொடுபுணர்ந்த கவ்வை.

செவிலி பாங்கியைவினுதல்.

கொங்குற்ற கூந்தலென் பிள்ளை மதிநுதற் கோகிலமின்
றெங்குற் றதுதனி யேயொப் பிலாமுலை யேந்திழையோர்
டங்குற்ற கோமுத்தி யீசன் றுறைசை பணிந்திலர்போற்
சங்குற்ற செங்கைநல் லாயென்கொல் வாடித் தளர்கின்றதே. (௩௪௨)

பாங்கி செவிலிக்குணர்த்தல்.

தாளையன் பர்க்கருள் செம்பொற் றியாகர் சமரமத
வேளைமுன் காய்ந்தவர் கோமுத்தி யூர்விரும் பாரினன்னே
வாளையர் கேளிர் மறுத்தார் [1]மணமென்று வள்ளிலைவேற்
காளைபின் பாலைக் கடங்கடந் தாளுன் கனிமொழியே. (௩௪௩)

பாங்கியினுணர்ந்தசெவிலி தேற்றுவார்க்கு எதிரழிந்து மொழிதல்.

மஞ்சன மாட்டி முலையமிர் தூட்டி மணிவிழிகட்
கஞ்சனந் தீட்டி யறிவே கொளுத்தி யளித்ததற்கோ
வெஞ்சல மாற்றுந் துறைசையெங் கோமுத்தி யீசர்வெற்பீர்
நஞ்சினென் ருவெனைக் கண்டே கினளென் னறுநுதலே. (௩௪௪)

---

௩௩௯. மாரனும் தேவியும். பேம் - அச்சம். ௩௪௨. சங்கு - வளையல்.
௩௪௩. வாள் ஐயர் - வாட்படையையுடைய தமையன்மார்.
(பி - ம்) [1]'மணமென்று மங்கையங்கோர், காளைபின் மாலைக்கொண் டுசென் றாளக் கடுஞ்சுரமே'

செவிலி தன்னறிவின்மைதன்னை நொந்துரைத்தல்.

வேலைநஞ் சுண்டருள் செம்பொற் றியாகர் வியன்றுறைசைச்
சோலையம் பூங்குழ லாளையன் னேகுளிர் தோயமுறாப்
பாலைவன் னிக்கு விடுவாயென் றென்னைப் பார்த்துநென்னன்
மாலையில் யானச்சொ லோர்ந்திலன் பேதையன் வஞ்சமென்றே. ()

செவிலி தெய்வம்வாழ்த்தல்.

பற்றேது மின்றி யலமரு வேனுய்யப் பையவஞ்சங்
கற்றே திலன்பின் னடந்தாளை மீட்டின்று காட்டுதியாற்
பெற்றேறு கோமுத்தி யீசன் றுறைசைப் பெருவரைமேற்
குற்றேவல் கொண்டென்று மெங்களைக் காக்குங் குலதெய்வமே. ()

செவிலி நற்றாய்க்கு அறத்தொடுநிற்றல்.

அந்நாள் வருங்களி றட்டுயிர் காத்த வவனிருக்க
விந்நாட் பிறர்கைப் பொருளேற்று நல்க விசைந்தனமென்
றுன்னுக் கனகத் தியாகேசர் கோமுத்தி யூரன்னநின்
பொன்னை யனவள்சுரத் தூடே விடலைபின் போயினளே. (ருசஎ)

நற்றாய் பாங்கிதன்னொடுபுலம்பல்.

அன்றுமென் பூத்தந் தவற்குரி யேனென் றணங்குரைத்தா
ளென்றுமுன் மையையியம் பாமலன் றேசுரத் தேகவிட்டாய்
நன்றுநன் றுன்மதி கோமுத்தி நாதர் துறைசைநல்லா
யொன்று நினைக்கமற் றென்றாய் முடிந்ததென் னூழ்வினையே. ()

நற்றாய் பாங்கியர்தம்மொடுபுலம்பல.

கல்லா லுகந்தவர் செம்பொற் றியாகர் கவின்றுறைசைத்
தொல்லாய முற்று மிரங்கவெங் கானிற் சுடர்நெடுவேல்
வல்லா னொருவன்றன் வாய்மொழித் தெய்வ மதிமயக்க
நில்லா தகன்றன ளோநங்கை மீரென் னிரைவளையே. (ருசகூ)

நற்றாய் அயலார்தம்மொடுபுலம்பல்.

தெற்றிய வார்சடைச் செம்பொற் றியாகர் திருத்துறைசை
யுற்றிடு மாதவர் போலத் தவஞ்செய் தொருமகள்யான்
பெற்றிருந் தேனவ ளோர்காளை பின்பெருங் கள்ளியும்பால்
வற்றிய பாலையிற் சென்றாண் மறுகவிம் மாநகரே. (ருடுo)

ருசரு. தோயமுறாப் பாலை வன்னிக்கு விடுவாய் - நீர் கலவாத பாலினைக் கிளிக்கு விடுவாய்; நீரில்லாத பாலைநிலத்தின் தீவெப்பத்தின்கண் என்னைச் செல்லவிடுவாயென்பது மற்றொருபொருள்.

ருசசு. பெற்று=பெற்றம் - இடபம்; "பெற்றேறி" தேவாரம்.

ருசஎ. விடலை - பாலைநிலத்தலைவன். நின் பான்னனவள் - நின்மகள்.

ருசகூ. கல்லால்-ஒருவகை ஆலமரம். வாய்மொழித்தெய்வம் - மந்திரம்; "மொழிப்பொருட் டெய்வம் வழித்துணை யாகென" சிலப். நாடு - 400.

ருடுo. தெற்றிய - பின்னிய. காளை - பாலைநிலத்தலைவன்.

இதுவுமது.

அரங்கவை யேகொண்ட புத்ரத் தியாக ராசடிக்கீழ்
வரங்கிடந் தேழை யுயிர்த்தே னொருமகண் மற்றவடோ
ளுரங்கெழு காளைபி னுள்ளினு முள்ளஞ் சுடுங்கொடுந்தீச்
சுரங்கடந் தாளம்ம வந்தியென் பார்க்கித் துயரில்லையே. (௩௫௧)

நற்றாய் தலைமகள்பயிலிடந்தம்மொடுபுலம்பல்.

நட்டமே செயவல்ல செம்பொற் றியாகரை நல்லரசூர்
வடமேரு வில்லரை வாழ்த்தாரி னென்னைவைத் தாளெழுதும்
படமே படம்வைத்த சிற்றில்ல மேநொச்சிப் பந்தர்களே
தடமே யுமதிட மேயாடு மோவினுந் தையல்வந்தே. (௩௫௨)

நிமித்தம்போற்றல்.

பணிக்கட கம்புனை செம்பொற் றியாகர்பைம் போதிவனத்
தெணிக்கட மான்பைந் நிணப்பலி யென்று மிடுவல்பசிப்
பிணிக்கொடி யாதுண்ண லாமிரு கண்ணும் பிறழுமொரு
மணிக்கொடி யேயென் மடக்கொடி தன்னை வரக்கரையே. (௩௫௩)

நற்றாய் சுரந்தணிவித்தல்.

நளியற்ற வெஞ்சுர நாடுதண் காவிரி நாடெனலாய்த்
தெளியுற்ற நீர்த்தண் டுறைசைத் தியாக திருவருளா
லொளியுற்ற நின்வலப் பார்வையி னுலுயங் காதவண்ணங்
குளிருற் றிடச்செய்க மாகொடி யேன்பெற்ற கொம்பினுக்கே. ()

நற்றாய் தன்மகள் மென்மைத்தன்மைக்கிரங்கல்.

சிரமாலை பூண்ட துறைசைத் திரவியத் தியர்கர்முன்னாட்
புரமாயக் கொண்ட குறுநகை போலழல் பொங்குவெங்காட்
டரமாய கற்றிரட் காற்றின வோபொன்னி னம்மனைசேர்
விரண்மானின் பஞ்சிக்கு மஞ்சிப்பின் வாங்கிய மெல்லடியே. (௩௫௫)

நற்றாய் தன்மகள் இளமைத்தன்மைக்கு உளமெலிந்திரங்கல்.

ஆடவ ரீர்குர வம்பாவை காளென் றழைத்துமுத்தஞ்
சூடவ ரீரென்று மென்னிளம் பாவை துறைசைமன்று
ளாடக மாடிய செம்பொற் றியாகர்நன் னாடவன்பாற்
பாடக மான தொடர்புற வெங்ஙன் பழகினளே. (௩௫௬)

---

௩௫௨. சிற்றில்லமே நொச்சிப்பந்தர்களே: நற்றிணை. ௧௪௩, ௧௮௪, ௩௦௫; தஞ்சை. ௩௩௩ - ஆம் பாடல்களைப் பார்க்க.

௩௫௩. எணி - எண்ணி. ஒடியாது - மெலியாமல். இருகண்ணும் பிறழுமொரு மணிக்கொடி-காக்கை; "காகத்திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கு" திருச்சிற். ௭௧.

௩௫௪. நளி - குளிர்ச்சி. வலப்பார்வை - சூரியன்.

௩௫௬. குராமரத்தின் பூவைப் பாவையென்றல் மரபு (௩௬௩); "குரவம் பயந்தசெய்யாப்பாவை" ஐங்குறு. ௩௪௪.

நற்றாய் தன்மகள் அச்சத்தன்மைக்கு அச்சமுற்றிரங்கல்.

வில்விலங் கும்புரு வத்தா ணடக்குமவ் வெஞ்சுரத்திற்
கொல்விலங் கொல்லென் றதிர்குரல் கேட்டொறுங் கோட்டிமலத்
தொல்விலங் கைத்தெறுஞ் சொன்னத் தியாகர் துறைசையன்னாள்
பல்விலங் கற்கண் வெரூஉமென்றென் னெஞ்சம் பதைக்கின்றதே. ()

கண்டோரிரக்கம்.

காந்திகொள் பூண்முலைப் பாங்கிய ரேங்கிக் கவலைவெள்ள
நீந்தறி யாரெமை நீத்தகன் றாளென நீர்ச்சடில
வேந்தனெங் கோமுத்தி யீசன் றுறைசை விளக்கனையா
ளேந்திளம் பாவையைக் கண்டுயிர் சோர்ந்திடு மீன்றவளே. (௩௫௮)

செவிலி ஆற்றுத்தாயைத் தேற்றல்.

ஒள்ளொளி மன்றத் தலர்தூற்று மாதர்முன் ஞெங்காசூர்
வெள்ளொளி நீற்றுருச் செம்பொற் றியாகர்தம் வெள்ளிவெற்பின்
றெள்ளொளி பாய்ந்த திகந்தழும் போய்நனி தேர்ந்துகண்டியா
னள்ளொளி மேகலை யாளைத் தருவ லணங்கலன்னே. (௩௫௯)

ஆற்றிடை முக்கோற்பகவரை வினாதல்.

செப்பநன் மாளிகைக் கோகழிச் செம்பொற் றியாகர்வெற்பின்
மைப்படி நோக்கிளங் கொம்பொரு காளைபின் வன்சுரத்தே
வெப்பழ லாற்றெதிர் சென்றனளேகுடை மேற்கவித்து
மூப்பகை யுங்கெட முக்கோல் பிடித்த முனிவர்களே. (௩௬௦)

மிக்கோர் ஏதுக்காட்டல்.

வருணத்திற் போதுந் தருத்தரும் போது மலர்ந்தவந்தத்
தருணத்திற் சூடுநர்க் கல்லா தவைக்கவை தாமென்செயுங்
கருணைத் திரவியத் தியாகேசர் கோகழிக் காரிகையா
யருணத் திலவித ழாருமங் நீர்மைய ரன்பினர்க்கே. (௩௬௧)

செவிலி எயிற்றியொடு புலம்பல்.

அயிற்றிரி சூற்படை யார்மா சிலாமணி யார்துறைசை
வெயிற்றனி வேலொர் விடலையொ டென்மகள் வேட்கையென்னுங்
கயிற்றினிற் கட்டுண்டிக் கான்போகக் கண்டனை யேபுலியி
னெயிற்றிருந் தாலிக் கழுத்தி னெயிறறி யெனுமகளே. (௩௬௨)

செவிலி குரவொடுபுலம்பல.

விழிகாட்டு நெற்றியர் கோமுத்தி யீசர் விளங்குபொன்னிச்
சுழிகாட்டு முந்தியெந் தோகையொர் தோன்றலபின் றொல்குடிக்கோர்
பழிகாட்டி யிந்தச் சுடுபாலை நீந்திப் படர்ந்தவந்த
வழிகாட் டிடாய்பல பாவைக ளோடிங்கு வாழ்குரவே. (௩௬௩)

---

௩௬௦. செப்பம் - செம்மை. முப்பகை - காமம் வெகுளி மயககம்.

௩௬௧. வருணம் - நீர். இச்செய்யுளின்பொருள் கலித்தொகை, ௬-ஆம் பாட்டின் தாழிசைப்பொருள்களையும், திருச்சிற். ௨௪௮-ஆம்பாடலின் பொருளையும் தழுவியுள்ளது.

௩௬௩. தோன்றல் - பாலைநிலத்தலைவன்.

செவிலி சுவடுகண்டிரங்கல்.

கவையே யழற்கண் ணெயினரி னஞ்சுங் களிற்றடிக
ளவையேயெங் கோமுத்தி யீசன் றுறைசையக் கள்வனடி
யுவையேசெம் பாரிடைப் பொற்றா மரையி னுதித்திருந்த
விவையே வினையே னெடுத்தமின் பொன்னடி யின்சுவடே. (௫௬௪)

செவிலி கலந்துடன்வருவோர்க் கண்டுகேட்டல்.

எம்போ லினங்களு மீன்றாளுந் தேடி யிடரழுந்த
நும்போல் வனப்பெய்தி யிச்சுரம் போயினர் நோக்கினிரோ
வெம்போர் மழுப்படைச் செம்பொற் றியாகர் வியன்றுறைசைக்
கம்போ கமுகோ வெனுங்கழுத் தாளுமோர் காளையுமே (௫௬௫)

கலந்துடன்வருவோர் புலம்பதேற்றல்.

அதரெதிர் யான்கண்ட சிங்கமன் னாளு மழகியவென்
மதர்விழி மான்கண்ட மானனை யாளு மதிக்கிலன்னே
கதழெரிக் கான்சென்ற வெப்பாறச் சீதளக் காவிரிதோய்ந்
திதமுறக் கோமுத்தி யீசன் றுறைசையை யெய்துவரே. (௫௬௬)

செவிலி புதல்வியைக்காணாது கவலைகூர்தல்.

தூண்டற் கருஞ்சுடர் சொன்னத் தியாகர் துறைசையுறாத்
தாண்டற் கரும்வினை யோரிற் றிரிந்து சலித்தவென்கா
லீண்டற் புடன்கலந் தேகுநர்ப் பார்த்துக்கண் ணீடிழுந்த
காண்டற் கரிதரி தான்மட மானையிக் கானகத்தே. (௫௬௭)

மீட்சி.

தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தல்.

தண்டுறை சைத்திருக் கோமுத்தி யீசர் தமைப்பணியாப்
பண்டுசெய் தீவினை யோர்குடி வாழும் பழுவத்தும்போய்
வண்டுறை பூங்குழன் மாதைத் தரீஇயன்னை வாடிவந்தேன்
கொண்டுசென் றனனெண் டிசையுங் கடந்தொரு கொற்றவனே. ()

தலைவன் தம்மூர்சார்ந்தமை சாற்றல்.

காம்பார் வரையின்முன் னீதோய் சிவமது கங்கையிது
பூம்பா திரிமலர் கொய்யும் பொழிலுவை பொன்னியிதே
யாம்பாடுங் கோமுத்தி யீசன் றுறைசையை யேத்தலர்போற்
றேம்பா தெழுந்தருள் சேல்விழி யாய்நந் திருநகர்க்கே. (௫௬௯)

தலைவி முன்செல்வோர்தம்மொடு தம்வரவு பாங்கியர்க்கு உணர்த்திவிடுத்தல்.

ஒருவது வைக்கிசை யாரைத் தணந்துசென் றுற்றரசந்
தருவது சேர்திருக் கோமுத்தி யீசர் தமிழ்த்துறைசைத்

௫௬௪. களவனென்றது தலைவனை. ௫௬௫. கம்போ - சங்கமோ.
௫௬௯. சிவமதுகங்கை - ஒருதீர்த்தம். பொன்னி - காவிரி.

திருவது லன்னுமற் றியானுமிக் கானகந் தீர்ந்தினிதா
வருவது கூறுமுன் செல்வீரென் றுய மடந்தையர்க்கே. (௩௭௦)

முன்சென்றோர் பாங்கியாக்கு உணர்த்தல்.

முன்வரக் கண்டறி யாதவொ ரோகையின் மூழ்குவிராற்
பொன்வரக் கண்டன பூங்குழ லாளொர் புரவலன்றன்
பின்வரக் கண்டனஞ் செம்பொற் றியாகர் பெருந்துறைசை
மின்வரக் கண்டபொற் பூண்முலை யீர்நல் விருந்தென்னவே (௩௭௧)

பாங்கியர்கேட்டு நற்றாய்க்குணர்த்தல.

சரியோ மறுகிடை யென்றிருந் தேமச் சமழ்ப்பறவே
யுரியோ னொருவன்பி னுன்மகள் கானிகந் தொண்பொழில்சூ
ழரியோசை நம்பதிக் கம்பொற் றியாக ரணியரசூர்ப்
பெரியோர் வருமென்று சொற்றனர் கேட்டின்பு பெறறனமே. ()

நற்றாய் தலைமகனுளங்கோள் வேலனை வினாதல்.

மணந்தரு கோகழிச் செம்பொற் றியாகர் வரையிலெல்லா
முணர்ந்தருள் வேல சுரம்போகி மீளு மொருவனின்னே
கொணர்ந்திடு மோவென் மனைக்கேயென் மாதைக் குறைவில்வளந்
தணந்தறி யாத்தன் மனையுய்க்கு மோவொன்று சாற்றுகவே. ()

தன்மனைவரைதல்.

பணிமொழி நற்றாய் மணமனையர்வேட்கையிற் செவிலியை வினாதல்.

காதரந் தீர்த்தருள் செம்பொற் றியாகர்கண் ணார்துறைசைப்
பூதர மேலன்பர் தாமாக மேவினும் பூங்குழையாய்
மாதர்நல் லாளைநம் மாமனைக் கேவந்து மன்றல்செய்வா
ளுதர வாயவர் தாயருக் கோதிலெ னங்கணந்தே. (௩௭௪)

செவிலிக்கு இருவர் வரைந்தமை யுணர்த்தல்.

நற்றாய்க் கினியன்னை யென்னென் றியம்புவ நாந்துறைசைப்
புற்றா டரவணி புத்ரத் தியாகர் பொருப்பின்மன்ன
ருற்றார்க ளோடின்று நம்மட மாதை யுவந்துநன்றாட்
பற்றா வரைந்துகொண் டாரென்று தூதர் பகர்ந்தனரே. (௩௭௫)

வரைந்தமை செவிலி நற்றாய்க்குணர்த்தல.

ஆன்றவர் வந்துநின் றூற்ற மணநல மங்கணெய்தித்
தோன்றல்பின் னுகநுஞ் சொன்னத் தியாகர் துறைசையன்னு
ளீன்றவட் காணிய விம்மனைக் கேவரு மென்றுநல்லா
யூன்றரு வாட்சில வொற்றர்முன் னேவந் துரைத்தனரே. (௩௭௬)

௩௭௨. மறுகிடைச்சரியோம். சமழ்ப்பு - நாணம்.

௩௭௪. காதரம் - அச்சம்.

தலைவன் பாங்கிக்கு யான்வரைதமை நுமர்க்கியம்புகென்றல்.

பெருந்தவர்க் கின்பருள் செம்பொற் றியாகப் பிரான்றுறைசைத்
திருந்தெம தூரகம் போய்மீண்டு வன்னிமுன் செவ்விளநீர்
பொருந்தன பாரங்கொண் மங்கைக்குப் பொன்னுண் புனைந்ததிறங்
கருந்தடங் கண்ணிநின் கேளிர்க்கெல் லாஞ்சென்று கட்டுரையே. ()

பாங்கி தான் அது முன்னே சாற்றியதுரைத்தல்

செங்கைத் தினத்தர் துறைசைத் திரவியத் தியாகவெற்பா
மங்கைப் பருவ மயிலைக்கொண் டேகிநின் மாமனைவா
யங்கைத் தலம்பற்றி நுங்கேண்முன் னீபொன் னணிந்ததுநான்
சங்கைப் படாதநிந் தன்றே யுரைத்தனன் றாயருக்கே. (௩எஅ)

உ ட ன் போ க் கி டை யீ .டு.

நீங்குங்கிழத்தி பாங்கியர்தமக்குத் தன்செலவுணர்த்திவிடுத்தல்.

என்போ டணியுந் துறைசையெங் கோமுத்தி யீசர்வெற்பில்
வன்போ தகந்திரி கானங் கடந்தோர் வினைகழலான்
பின்போ யினளென்று சொல்வீரெம் மூர்ச்செலும் போரந்தணீர்
துன்போ டிரங்கித் தெருமந் திடுமென் றுணைவியர்க்கே. (௩எசு)

தலைமகள் தன்செலவு ஈன்றாட்குணர்த்திவிடுத்தல்.

கையார நும்மைத் தொழுதிரந் தோதுவல் காமனம்பு
தையாத மாதவத் தாழ்சடை யீர்சென்று சாற்றுமின்யான்
மெய்யாகக் கோமுத்தி நாதன் றுறைசையொர் வீரனொடே
யையாறு தேர்மிசைச் செல்வதென் னீன்ற வவடனக்கே. (௩அ0)

நற்றாய்க்கு அந்தணர்மொழிதல்.

பரிவே மருவி வரிசிலை யேந்துகைப் பார்த்திவன்பின்
பிரிவே கருதிப் புலிவழங் கத்தநின் பேதைசென்றா
ளரிவேதன் போற்றரா சூர்மாசி லாமணி யாரையுன் னித்
திரிவேது மின்றி யனையே யிருந்திடு தேற்றமுறறே. (௩அக)

நற்றாய் அறத்தொடுநிற்றலின், தமர் பின்சேறலைத் தலைவற்குணர்த்தல்.

தேனக்க பூங்கொன்றைக் கோமுத்தி யீசனைத் தென்றுறைசை
யானைப் பரசு மரசவிவ் வாரணி யத்திறவா
தூனக்க வாண்மின் னுடன்பற் கடித்திடித் தொண்பகழிச்
சோனைப் படைமுகில் பொற்றேர்ப் பருதியைச் சூழ்கின்றதே. ()

௩எஅ. செங்கைத்தினம் - திருவாதிரைநாள்; "செங்கையாட்டினுர்" திருநாகைக்காரோணப்புராணம், கைமிச. க.

௩எசு. என்பையும் ஓட்டையுமணியும். ௩அ௨. இறவாது-கடவாதபடி.

தலைவியைத் தலைவன் விடுத்தகறல்.

கமரேயிக் கான்வருங் கானவ ராமைக் கடலையென்கைச்
சமரேய் கணைத்தெய்வ மொன்றே குடித்திடுந் தையனல்லாய்
குமரேச ரத்தீர் துறைசையெங் கோமுத்திக் கூத்தர்வெற்பி
னமரேற் கொலைக்கஞ்சு வேன்செல்க நீயிது நோக்கின்றே. (௩௮௩)

தமருடன்செல்பவள் அவன்புறநோக்கிக் கவன்றாற்றல்.

ஏதத் துடனஞ்சு மெற்புறங் காத்தலி னேத்தரசூர்ப்
பூதத் திரட்படைக் கோமுத்தி யீசர் புவியெங்குமூர்
வேதத் துரகத்தின் வாழிய வெம்மையர் வில்வளையாத்
தீதத்தந் தோன்றிட வென்றந்த வீரன்றிண் டேர்ப்பரியே. (௩௮௪)

வரைதல்.

சென்றோன் மீண்டுவந்து அந்தணரையும் சான்றோரையும் முன்னிட்டு வரைந்துகொண்டுழிக் கண்டோர் மகிழ்ந்துகூறல்.

ஆனார் துவச னணைத்தெழு நாயக னாத்திமுடி
யானா தரவுறுந் தென்னா வடுதுறை யாண்டகைபோ
லானாத காதலின் யார்மணம் வேட்டன ராழிவைப்பி
லானா னிவன்றிரு மாலாயி னாண்மங்கை யச்செல்வியே. (௩௮௫)

இல்வாழ்க்கை.

தலைவன் தலைவிமுன் பாங்கியைப்புகழ்தல்.

பேதாதி பேதங்கொள் சோபான நீத்துப் பிறழ்வரிதாம்
ஆதார முற்று மலாத்தவி சேறினம் யாமரசூர்
நாதாந்தர் செம்பொற் றியாகேசர் வெறபிலங் நாண்முதலா
நீதா ணெடுத்த வுழப்பினிவ் வாறு நிலைபெற்றதே. (௩௮௬)

தலைவனைப் பாங்கிவாழ்த்தல.

முன்னாண் மறையென்ன நீசொன்ன வஞ்சின முற்றுவித்தே
யிந்நாட் கதிரவ னெங்கெழி லென்னெனு மின்புதந்தாய்
பொன்னார் துறைசை யணைத்தெழு நாயகர் போறபிரியா
தெந்நாளு மெம்பெரு மான்வாழி வாழி யிவளுடனே. (௩௮௭)

---

௩௮௪. தீது அத்தம் - வெம்மையையுடையதாகிய அருநெறி.

௩௮௫. ஆத்திமுடியான் ஆதரவுறும். ஆனாத - அமையாத. இவன் திருமாலானான் மங்கை அச்செல்வியாயினாள்; செல்வி - திருமகள்.

௩௮௭. "எங்கெழிலென் ஞாயிறு" திருவாசகம், திருவெம்பாவை. ௧௯.

வரையு நாளளவும் வருந்தாதிருந்தமை பாங்கி தலைவியை வினுதல்.

வரையும்பொற் றாணும் பொருபுய னுன்னை வரையுமிந்நாள்
வரையுமெவ் வாறிட ராற்றி யிருந்தனை மாதர்தொய்யில்
வரையுந் தனத்தி துறைசையெங் கோமுத்தி வள்ளல்வெற்பில்
வரையுமிக் கும்புரை தோளியர் தூற்றலர் வாளிகொண்டே. (௩௮௮)

தலைவி வருந்தாதிருத்தற்குக் காரணங்கூறல்.

ஏயும் விரக விடத்தையெல் லாங்கொக் கிறகறுகு
வேயுந் துறைசைக் கனகத் தியாகர்நம் வெற்பர்தந்த
பாயுங் கதிர்மணி யாலவர் சொன்ன பதமனுவால்
நீயு மொருமருந் தாயுற லான்மெல்ல நீத்தனனே. (௩௮௯)

பாங்கி தலைமகனை வரையுநாளளவும் நிலைபெறவாற்றிய நிலைமைவினுதல்.

புரைவிடை யப்பகை வென்றூர்க் கருடரும் பூந்துறைசை
நரைவிடை யம்பொற் றியாகேசர் வெற்பிலிந் நாருளநீ
வரைவிடை வைத்தக னுண்முத லாகவிம் மாதினவாத்
திரைவிடை கொண்டதெங் கேநின்ற தெங்குன் றிருவுளமே. (௩௯௦)

பாங்கி மணமனைச்சென்றசெவிலிக்கு இருவரன்புமுரைத்தல்.

தலைவனெங் கோமுத்தி யீசன் றுறைசைநந் தண்கொடிமென்
முலைமுகை காட்டி முகமலர்ந் தார்வ முருகுபொங்கத்
தொலைவரு செவ்விதழ்த் தேன்றர லாலன்னை தோய்ந்தன்பர்தா
மலைவில்வண் டாயுண் டகமகிழ் கூரு மனுதினமே. (௩௯௧)

பாங்கி இல்வாழ்க்கைநன்றென்று செவிலிக்குரைத்தல்.

ஆலடி யார்தென் னரகூரர் கோமுத்தி யங்கணனூர்
வாலடி யார்க்கன மிட்டில் லறத்தியல் வாய்ந்துகஞ்சம்
போலடி நின்மக டன்கேள் வனையென்றும் பொற்கலத்திற்
பாலடி சின்மிசை வித்துடல் பூரிக்கும் பான்மையளே. (௩௯௨)

மணமனைச்சென்றுவந்தசெவிலி பொற்றொடிகற்பியல் நற்றாய்க்குணர்த்தல்.

சிரமங்கை யாண்டவர் செம்பொற் றியாகர் திருத்துறைசை
வரமங்கை யாள்கற்பை யென்சொல்லு கேண்மனை வாழ்க்கையிற்கந்
தரமும் பொழிகவென் றுற்றுரை கான்றிடுஞ் சாய்ந்துபட்ட
மரமுந் தழைகவென் றுன்மலர் பூத்து மணந்தருமே. (௩௯௩)

செவிலி நற்றாய்க்கு மனைவாழ்க்கைத்தன்மையுணர்த்தல்.

வானும்ப ரன்புற்ற செம்பொற் றியாகர் வயல்வளைமுத்
தீனுந் துறைசையி னீயுநின் கேள்வனு மேவல்செயும்
யானு மிருப்பதின் மிக்காமில் வாழ்க்கையி னின்மகளுத்
தானுந்த னன்பனுந் தன்னைப் பணிகின்ற தையலுமே. (௩௯௪)

---

௩௮௮. வரை - மலை. இந்நாள்வரையும் - இதுகாறும். தொய்யில வரையும் - கோலமெழுதப்படும். வரையும் இக்கும் - மூங்கிலும் கரும்பும்.
௩௯௦. புரை - குற்றம். ௩௯௨. வால் - தூய்மை.

தெவிலி நற்றாய்க்கு இருவர்காதலும் அறிவித்தல்.

பல்கிய சீரர ரூரொப்பி லாமலை பாகர்வெற்பி
லொல்கிடை யாளும் பிறிதொரு தெய்வ முளத்துமெண்ணாள்
மல்கிசை யார்கடல் போல்வருந் தெம்முனை மாட்டுறினு
மல்கி வரலறி யாதண்ண றேர்மற்றெ ரல்கலுமே. (௩௬௫)

பரத்தையிற்பிரிவு.

காதலன்பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு ஏதுவிதாமிவ் விறைவிக்கென்றல்.

விடைக்கண் ணெழுந்தருள் செம்பொற் றியாகர் வியன்றுறைசை
யிடைக்கண் ணகல்வய லூரன் பவனி யினிதுவரப்
படைக்கண் வலையிற் பகற்சூறை யாடிடும் பாவையர்க்குக்
கடைக்கண் ணருள்செய்த லாலாகு மாதயர் காரணமே. (௩௬௬)

தனித்துழியிறைவி துனித்தழுதிரங்கல்.

உமையா ளொனுமொப்பி லாமலை நாயக ரோங்கரசூ
ரமையாத காத லுரியோன் பிரிய வரியவெப்பாற்
கமையாது கண்மழை யாலணை மூழ்கிடக் கங்குலெல்லா
மிமையா தழுங்குநர் யாரெனைப் போற்சில ரேழையரே. (௩௬௭)

ஈங்கிதுவென்னெனப் பாங்கிவினுதல்.

எம்பர மானந்தர் செம்பொற் றியாக ரிடங்கொடிசை
யம்பர நாதர் துறைசைநல் லூர னனுதினமுங்
கம்பமி லாமற் கவசம தாயெனைக் காக்கவுநீ
கொம்பரி லாத கொடிபோற் றவிப்பதென் கோமளமே. (௩௬௮)

இறைமகன்புறத்தொழுக்கு இறைமகளுணர்த்தல்.

கிள்ளையஞ் சொல்லிநஞ் சொன்னத் தியாகர் கிளர்துறைசை
யுள்ளல ரிற்கொடி யேனையப் பொன்மார் புவந்தளித்தான்
பள்ள வயற்செந்நெல் வீழ்த்தேகி மேதிப் பகடருகே
வள்ளை குதட்டி யருந்தூரன் சேரி மடந்தையர்க்கே. (௩௬௯)

---

௩௬௫. பல்கிய - பெருகிய. "தெய்வந்தொழாஅள்" திருக்குறள், ௫௫.

௩௬௬. ஊரன் - மருதநிலத்தலைவன். பகற்சூறை - பகற்கொள்ளை.

௩௬௭. கமையாது - பொறாது. அணை - படுக்கை, நீர்க்கரை.

௩௬௮. திசையம்பரநாதர்-திகம்பரர். "கொம்பரில் லாக்கொடி போலல மந்தனன் கோமளமே" திருவாசகம், நீத்தல். ௨௦.

௩௬௯. கொடியேன் னைய. செந்நெல் தலைவிக்கும் மேதிப்பகடு தலைவனுக் கும் வள்ளைக்கொடி பரத்தைக்குமுவமை. சேரிமடந்தையர் - பரத்தையர்.

தலைவியைப் பாங்கிகழறல்.

உவருந்தி நீருண் டுலாவிய மேக முவந்துதன்பால்
கவரும் படிவரிற் பாற்கட லானது காய்ந்திடுமோ
துவருந்து வாய்மங்கை சொன்னத் தியாகர் துறைசையன்ப
ரவரின்ன ரென்பது கற்பினிற் பாருக் கழகல்லவே. (௪௦௦)

செவ்வணியணிந்து சேடியைவிடுத்துழி அவ்வணி உழையர்கண்டு அழுங்கிக்கூறல்.

கலரா லறிதற் கரியவெங் கோமுத்திக் கண்ணுதலார்
சலராசி யன்ன கிடங்கெயில் சூழ்தண் டுறைசையன்னீர்
மலராய் மணந்தரு நுங்குல முல்லையில் வந்தவம்மா
னலராம் பெரிய சரந்தொடுப் பார்க்கெங் ககப்பட்டதே. (௪௦௧)

பரத்தையர்கண்டு பழித்தல்.

இருங்கல னோடுகொள் சொம்பொற் றியாக ரெழிற்றுறைசை
நெருங்கலங் காரநல் லூரனில் லத்துறை நேரிழையா
ரருங்கல னாகிய நாண்போக்கிச் சேரிவந் தாய்தொடியீ
ரொருங்கலர் பூத்த முருக்கிளங் கொம்பி னுதித்தனரே. (௪௦௨)

பரத்தையர் உலகியனோக்கிவிடுத்தலின், தலைவன்வரவுகண்டுவந்து வாயில்கள்மொழிதல்.

ஒண்ணந்தி கோமுத்தி யீசன் றுறைசை யுறூர்களின்மண்
விண்ணந் தினுமழி யாதகற் பாட்டி விடநடந்த
வண்ணந் திகழுருச் சேடியைச் சேரி மனையிற்கண்டு
தண்ணந் திரைப்புன லூரன்வந் தானிது தக்கதுவே. (௪௦௩)

தலைமகன்வரவு பாங்கி தலைவிக்குணர்த்தல்.

சதிர்கொண்ட வர்க்குமோர் தாழ்வுள தாந்தண்ணந் தாரெனினு
மதிர்கொண்டல் சூழர சூர்மாசி லாமணி யார்க்கன்பர்போற்
கதிர்கொண்ட வேலன்பர் தேர்மீது வந்துன் கடையினின்று
ரெதிர்கொண்டு போற்றவர் குற்றங்கொ ளாதினி யேந்திழையே. ()

தலைவனைத் தலைவி எதிர்கொண்டுபணிதல்.

கலந்தார் பெறுநலங் கூறுந் தரமன்று காதலர்தாங்
கிலந்தான் பிரிபிற் பசப்புமற் றேயின் கிளிமொழியா
யலந்தாரைக் காக்கு மரசூரர் சோமுத்தி யப்பர்வெற்பிற்
புலந்தாவ தெங்ஙன்முன் பொன்பூத்த கொங்கை புளகித்ததே. ()

---

௪௦௦. உவருந்தி - உவரையுடைய கடலில்; பாலைககவரும்படி. உவர்க் கடல் பரத்தைக்கும், மேகம் தலைவனுக்கும், பாற்கடல் தலைவிக்குமுவமை.

௪௦௧. கலர் - கீழ்மக்கள். சலராசி - கடல். குலமுல்லையில் - குலமாகிய முல்லைநிலத்தில். மானென்றது தலைவியை. சரம் - அம்பு.

௪௦௨. ஓட்டினை உண்கலனாகக்கொண்ட. ஊரனுடையவீட்டில். முருக் கிளங்கொம்பு - முள்ளுமுருங்கையின் இளங்கொம்பு.

௪௦௫. கிலம் - அற்பம். அலந்தார் - மெலிந்தார். புலந்தாவது என்ன.

புணர்ச்சியின்மகிழ்தல்.

துடியிடை யாள்கொங்கைக் கோடுக ளென்செங்கைத் தோணியதா
மடிவறு மோதத் திரையென்ன முத்து வட்டுடங்கக்
கொடிமதிற் கோகழிச் செம்பொற் றியாகரைக் கூடியசீ
ரடியவர் போலவின் புனந்த மாக்கட லாடினமே. (சOசு)

வெள்ளணியணிந்து விடுத்தல.

விரையார்ந்த மல்லிகைத் தாருமுத் தாரமும் வேய்ந்துபொன்னி
நுரையா மெனும்வெள் ளுடுக்கை யுடஇயனபர் நோற்குநல்லா
திரையார்னெங் கோமுத்தி யீசன் றுறைசையிற் சேயுதைய
முரையாட மாதர்முன் னேடின ரோசைகொண் டேரனுக்கே. (சOஎ)

வெள்ளணியணிந்துவிடுத்துழித் தலைமகன் வாயிலவேண்டல்.

இலவிதழ் மாதர்நல் லாருட னீசென் றிறைஞ்சியென்பாற்
பலவித மாக்குறை யெண்ணி மருத படியரசூர்
நிலவிய கோமுத்தி யெம்மான்கைம் மானை நிகர்விழியாள்
புலவியை யாற்றுதி கூற்றுதித் தன்னகட் பூங்கொடியே. (சOஅ)

தலைவி நெய்யாடியது இகுளை சாற்றல்

ஐயா னனத்தையர் செம்பொற் றியாக ரருட்டுறைசைப்
பையா டரவல்குல் பாலற் பயந்து பரிமளங்கூர்
நெய்யா டினளவண் மெய்யாற வேண்டு நிகழ்துனியுஞ்
சையா சலம்பொரு மார்பா தணியவும் வேண்டுமின்றே. (சOகூ)

தலைவன் தன்மனத்து உவகைகூர்தல்.

பாராட்டு நல்ல தவஞ்செய்த நானவள் பச்சுடம்புஞ்
சீராட்டு செங்கையிற் பாலனும் பான்முலைச் செபபழகுந்
தாராட்டு மார்பர் கனகத் தியாகர் தடந்துறைசை
யேராட்டி நெய்யிட்ட கோலமுங் காண்குவ னின்றுசென்றே. (சகO)

தலைவிக்கு அவன்வரல பாங்கி சாற்றல்.

தென்கோ கழிநகர்ச் செம்பொற் றியாகர் சிலம்பிலவெள்ளை
யென்கோலங் கண்டனர் சொல்லுமுன் னேகடை யெய்திநின்று
நுன்கோலக் கையுங் குழவியுங் காணநம் மூரர்நலலாய்
வன்கோடை யார்வெபப மோதட்ப மோவுன் மனத்துற்றதே. (சகக)

தலைவியுணர்ந்து தலைவனோடுபுலத்தல.

முறுவற் படையிற் புரமாய்த்த கோமுத்தி மூர்த்தியெங்கோ
னுறுவர்க் கருளர சூரி நுமக்குரி யாரிடைப்போஞ்
சிறுவற் பயந்தவென் மேனியி னையவித் தேய்வைபடின்
மறுவற்ற வும்முடை மார்பணி வீணே மறுபபடுமே. (சகஉ)

சOஎ. உடஇ - உடுத்து. நலஆதிரையான - நலலதிருவாதிரைநாளையுடையான். இறைவனுக்கு உரியநாள் திருவாதிரை.

சOகூ. ஐஆனனத்தர்-ஐந்து திருமுகங்களையுடையார். சையாசலம்-சையமலை.
சகஉ. உறுவர் - முனிவர். ஐயவித்தேய்வை - சிறுகடுகை அரைத்த

பாணனைமறுத்தல்.

மடக்கொடி பாகன் றுறைசையெங் கோமுத்தி வள்ளல்வெற்பர்
தடக்கரு மன்புநின் பாலுள ரென்பதென் றண்ணறும்பூத்
தொடுக்குந் துறையிற் றொடாக்கள்ளி வீவிற்கத் தோன்றினையோ
விடக்குதின் னிப்புலை யாபோக வேறொரு வீடறிந்தே. (௪௧௩)

வாயின்மறுக்கப்பட்ட பாணன் கூறல்.

அறிந்தில ரென்னைக் கொதித்துப் புகையுயிர்த் தம்மவென்மே
லெறிந்தகற் போது மினிக்கல் லெடேலெம் பிராட்டிபந்தம்
பறிந்திடச் செய்தருள் கோமுத்தி யீசர் பதியரசூர்ச்
செறிந்தவர் போலுன தாள்பணி வேன்கதந் தீர்ந்தருளே. (௪௧௪)

விறலி வாயின்மறை.

மூளா வழலினுள் ளங்கனல் வேன்கண்கண் மூடுதுயி
லாளாவன் றேயர சூர்மா சிலாமணி யார்புகழைக்
கேளார் செவியிற் குணம்போன தென்செவி கேழலம்போற்
றோளார்க் குகந்தவர் பாற்பாடு பாடினி தோடியையே. (௪௧௫)

கூத்தன் வாயின்மறை.

வீரிய மாக வெனைப்பணி கூத்திதென் வெவ்விருட்கோர்
சூரிய னாகிய கோமுத்தி யீசன் றுறைசையென்னும்
பேரிய லூரார்முன் சேரிப் பரத்தையர் பின்றொடர
வாரிய நீயுன் னவினயக் கூத்தையங் காடுகவே. (௪௧௬)

பாங்கி வாயின்மறை.

தண்ணார் சிறுபறை கொட்டி யுலாமித் தனிமகவைக்
கண்ணாகப் பெற்றபின் செம்பொற் றியாகர் கவின்றுறைசை
யொண்ணா ரியர்முனின் றவவோசை கேட்டுநம் மூரர்வந்தார்
புண்ணான நெஞ்சுடை யேன்பெற்ற பேறிது பொற்றொடியே. (௪௧௭)

விருந்தொடுவந்துழிப் பொறுத்தல்கண்டு தலைமகன் மகிழ்தல்.

போர்க்குஞ் சரவுரிப் புத்ரத் தியாகர்தம் பூந்துறைசை
யீர்க்கு நடுநுழை யாமுலை யாளிடத் தெய்துதுனி

குழம்பு; ஐயஇததேய்வை யென்பபிரித்து, நின் மேனியிலுள்ள அழகிய இந்தச் சந்தனக்குழம்பெனினும் பொருந்தும்.

௪௧௪. பந்தம்பறிந்திடச் செய்தருள்: திருமயிலை முதலிய தலங்களில் திருவிழாவினீற்றில பந்தம்பறியென்ற ஒரு விசேடக்காட்சி நடைபெறுகின்றது. "கொலலாண் டிலங்கு மழுப்படை யோன்குளிர் தில்லையன்னாய், வில்லாண் டிலங்கு புருவநெரியச்செவ் வாய் துடிப்பக், கலலாண் டெடேல்கருங் கண்சிவப் பாற்று கறுப்பதன்று;பல்லாண் டடியே னடிவலங் கொள்வன் பணிமொழியே" (திருச்சிற். ௨௪௮) என்பதன்பொருள் இச்செய்யுளில் வந்துள்ளது.

௪௧௫. பாடினி - பாடுபவள். தோடி - ஓர்ராகம்.

௪௧௮. ஈர்க்கும் நடுநுழையா முலையாள்: "ஈர்க்கிடை போகா வேரிள வனமுலை' (பொருந. ௩௬) என்பதன் அடிக்குறிப்பைப் பார்க்க; உ-ஆம்பதிப்பு.

தீர்க்கும் படியவள் செங்கனி வாயிற் சிறுமுறுவல்
பார்க்கும் படிவிருந் தாய்வந்த தாலென்பண் டைத்தவமே. (௪௧௮)

விருந்துகண்டொளித்தலூடல் பள்ளியிடத்து வெளிப்படத் தலைமகனைநோக்கிச்
சீறேலென்றவள்சீறடி தொழுதல்.

ஏறேறு கோமுத்தி யீசன் துறைசையி லெங்கடவுப்
பேறே யெனவரு பேராட்டி யின்றென் பிழையையெண்ணிச்
சீறேலுன் சீறடி பற்றினன் யான்சிறி யோர்பிழையோர்
நூறே செயினும் பொறுப்பரன் றேயரு ளோக்கினரே. (௪௧௯)

ஈது எங்கையர்காணின் நன்றன்றென்றல்.

கங்கையஞ் செஞ்சடைச் செம்பொற் றியாகர் கவின்றுறைசை
மங்கைய ராட மணங்கூர்பொன் னித்துறை வாவெனது
கொங்கை முயங்க வணங்கிச் சிரத்திற்கை கூப்பிநிற்ப
தெங்கையர் செங்கழு நீர்க்கண்கள் காணி னினிதல்லவே. (௪௨௦)

நின்னலது அங்கவர்யாரையும் அறியேனென்றல்.

ஆவியொன் றேயிவ் வுடலிரண் டார்வ மறப்புலந்தாற்
பாவியென் னேசெய்வன் பைந்தொடி யேபடி யேயெழுதா
வோவிய மேதிருக் கோமுத்தி யீச ருறைதுறைசைக்
காவிரி தோய்ந்துவப் பாரதோய்வ ரோசிறு காற்புனலே. (௪௨௧)

காமக்கிழத்தியைக் கண்டமைபகர்தல்.

பொன்மறு கோடித் தனிவிளை யாடும் புதல்வற்புல்ல
வுன்மக னேயிவ னேயுற னீயு முவனன்னையே
நின்மனே யேயிது வாவென நாணி நிலங்கிளையாச்
சொன்மறந் தேகினள் சொன்னத் தியாகர் துறைசையின்னே. ()

தலைவியைப் பாங்கி புலவிதணித்தல்.

ஆடிச் சிவந்தருஞ் செம்பொற் றியாகருக் கன்பருன்றாள்
சூடிச் சிவப்பொழி யென்னவும் பாராய துறைசைநல்லாய்
சேடிச் சிறுமியர் சூழ்தெய்வ குஞ்சரி தேங்கடம்பன்
வேடிச்சி கொங்கை தழீஇவந்த போதும் வெறுத்திலளே. (௪௨௩)

---

௪௨௧. படி - ஒப்பு; பிரதி. சிறுகால - சிறிய வாய்க்கால்.

௪௨௨. பொன்மறுகோடி...ஏகினள்: "பொலந்தொடிப் புதல்வனைத், தேர்வழங்கு தெருவிற் றமியோற் கண்டே, கூரெயிற் றரிவை குறுகி யாவருங், காணுந ரின்மையிற் செத்தனள் பேணிப, பொலங்கலஞ் சுமந்த பூண்டாங் கிளமுலை, வருக மாளவென் னுயிரெனப் பெரிதுவந்து, கொண்டன ணின்றோட் கண்டு...நீயுந் தாயை யிவற்கென யான்றற், கரைய வந்து விரைவனள் கவைஇக், களவுடம் படுநரிற் கவிழ்ந்துநிலங் கிளையா, நாணி நின்றோ ணிலைகண் டியானும், பேணினே னல்லனோ" அகநானூறு, ௧௬.

௪௨௩. சிவப்பு - கோபம். தெய்வகுஞ்சரி - தெய்வயானை. கடம்பன் - முருகக்கடவுள்; "கடம்பமர் செவ்வேள்" வேடிச்சி - வள்ளியம்மை.

தலைவி புலவிதணியாளாகத் தலைமகனூடல்.

கருங்காலற் செற்ற துறைசையெங் கோமுத்திக் கத்தர் வெற்பிற்
பெருங்காதல் பூண்டயர் பேதைநெஞ் சேவஞ்சம் பெற்றவிவ
ளொருங்காய நீத்தன் றுயிர்த்துணை யாநம் முடன்கலவா
வருங்கான கத்தி லடிநோவ வந்த வமிர்தலலளே. (சுஉச)

பாங்கி அன்பிலைகொடி யையென்று இணர்த்தார்மார்பனையிகழ்தல.

பாட்பார்த்த கோமுத்தி யீசன் றுறைசைப் பணிவரைமேற்
றேம்பார்த் தமிழ்தென்ன வந்நா ளருந்தினிர் தேரிலிநாள்
வேம்பா யுவர்த்தனி ரெங்கள்பொன் னூனமென் கோவியர்கைத்
தாம்பா லடியுண்ட மாயனைப் பீரும்ம தன்மைநன்றே. (சுஉரு)

பாங்கி தலைமகற்கு மகப்பொறைகூர்ந்தவண்ணமுரைத்தல்.

நவ்வியங் கையரெங் கோமுத்தி யையாநன் னீர்த்துறைசைக்
கொவ்வையஞ் செங்கனி வாயாண் மகப்பொறை கூர்ந்தவந்தச்
செவ்வியிற் றத்தநற் செவ்வியைப் பெற்றன செவ்விலவு
மைவிரி காவியு மாயோ னமளியும் வானமின் னுமே. (சுஉசு)

தலைவன் புதல்வனைக்காண்டல,

ஆடுந் திரவியத் தியாகேசர் கோகழி யந்தணர்க்கு
மாடுங்கற் றுவு மளித்திமை யோர்க்கு மலர்களும்விண்
மூடும் புகையும்பெய் தெல்லோரு மவாழ்த்தச்செய் முற்றவத்தாற்
கூடும் புதல்வனைக் கோவுங்கைக கொண்டுகொண் டாடினனே. ()

தலைவன் பள்ளியிடத்து அழுங்கல்.

சுரும்புறங் காத்தொடைச் சொன்னத் தியாகர் துறைசைநன்னாட்
டிரும்புற வப்பதி யொப்பாய்செய் பான விருதனமுங்
கரும்புறழ் தோளு மணையா ரணையக் கவினெழுதற
கரும்புற மானமெய் யோவினை யேனுக் கருளியத. (சுஉஅ)

சுஉச. அன்று - உடன்போன அந்நாள்; "டணடு பைமபொற, கழுகமூ டிடமுங் கடிமலர்க காவுங கடந்துபுள்ளும்,வழுங்கா வழிநமக் கோர்துணை யாய் வந்த மானல்லளே" (தஞ்சை. சு௦உ) எனபது இதன் பினனிரணடடிகளோடு ஒத்துள்ளது.

சுஉரு. தேம்பார்த்தது-இடம்நோக்கி. உவர்த்தனிர் - வெறுத்தீர். மாயன்-கண்ணன. 'மாயனைபபீர்' என்றது குறிப்பு. உம்ம - உம்முடைய.

சுஉசு. முன்னமே தலைவியின அதரம், கணகள், வயிறு, இடை என்னும் நான்கிற்குந்தோற்று அழகிழநதிருநத செவ்விலவம்பூ முதலிய நான்கும் இவள கருவுற்ற இநநாளில தமக்குரிய பண்டைககவினபெறறன; இவளுறுபபுகள் வேறுபட்டிருததல் ஏன்றபடி.

சுஉஎ. மாடு - பொன். கற்று - கன்றையுடையபசு. புகை - ஓமத்திற் புகைக்கப்படும் பொருள்கள்; ஆகுபெயர். வாழ்ததக கைகங்கொண்டு.

சுஉஅ. புறவப்பதி - சீகாழி. அணையார் - படுக்கை. அணையரணைய: இது சொல்முரண. இச்செய்யுள புறஙகாட்டலென்றுங கூறப்படும்,

காமக்கிழத்தி வாயில்வேண்டல்.

மாரனை நீறு படக்கண்ட கண்ணர் வளர்துறைசை
யாரனை யாகநல் கோமுக்தி யீச ரவர்க்குரிய
பேரனை யாயுன் னகத்தே கறுப்பப் பிறக்கறநா
தூரனை யாதவப் பாயெங்க ணீர்மைகொ லுன்னருளே. (௪௨௯)

மகவும் அன்னையும் வாயிலாகத் தலைமகன்வரக் கழித்தலைமகள் எதிர்கோடல்.

சூழ்ந்தார் கலியிற் பெருவேட்கை யோங்கினுந் துப்புரவோர்
தாழ்ந்தா ரிடைமனந் தாழ்ப்பர்கொல் லோசன்ம சாகரத்தில்
வீழ்ந்தாரை யேற்றுமெங் கோமுக்தி யீசர் விரும்பாரூர்
வாழ்ந்தாரும் வாழ்த்து வயலூரர் காம மதிப்பதன்றே. (௪௩௦)

தலைமகள்புணர்ந்து நீங்கியபின் வந்தபாங்கியொடு தன்மகனைப் புகழ்தல்.

உம்மைப் பிறவிக்கொன் னேபோய வேம்பவக் கொன்றுமின்பு
மிம்மைப் பிறவியி லெய்வந் தான்மைந்த னேந்திழையாய்
சும்மைப் புனற்சடைச் சொன்னத் தியாகர் துறைசையொப்பாய்
மும்மைப் புவியும் புகழூரன் மீண்டு முயங்கிடவே. (௪௩௧)

தலைவி தலைவனைப் புகழ்தல்.

செந்நாப் புலவர் துதிக்குந் திரவியத் தியாகரென்று
மன்ற வடுதுறை மன்ற தியநம் மகிழ்நர்நம்பா
லந்நாளுண் டாயநட் பிந்நாளு மோவில ராகவிறை
னன்றுளிற் கொண்டவன் போலொரு கேளிரு நாடிலின்றே, (௪௩௨)

பாங்கி தலைவியைப் புகழ்தல்.

புனலுற்ற பூம்பொய்கை யூரன் கொடுமை புரிந்தவெல்லா
மனமுற் றிடாமன் மறந்தெம் பிராட்டி வணங்குதலாற்
றனகற்ற சிந்தையர் சூழ்திரு வாவடு தண்டுறைவாழ்
கனகத் தியாகர்தஞ் சீரரு ளேயன்ன காட்சியளே. (௪௩௩)

ஓதற்பிரிவு.

கல்வியிற்பிரிவு பாங்கிக்குத் தலைவன் அறிவுறுத்தல்.

பொருவொன் றிலாதது புண்ணியக் கல்வி புகன்றிடினோர்
திருவு மமிர்துந் தருங்கடல் போலுந் தெரியினுழையா
யருவு முருவுமுள் ளார்மாசி லாமணி யார்துறைசை
மருவுந் தவத்தினர் போல்வள ராகிற்பர் வாய்த்தவரே. (௪௩௪)

---

௪௨௯. ஆரன் - ஆத்திமாலையையுடைய சோழன். பேர், மாசிலாமணி யென்பது. பேரனையாய்-குற்றமற்ற மாணிக்கம்போல்வாய் கறுப்பு-கோபம்.

௪௩௦. துப்புரவு - தூய்மை. தாழ்ப்பர் கொல்லோ - தங்கச்செய்வாரோ.

௪௩௨. "கொண்டானிற் றுன்னியகேளிர் பிறரில்லை" நான்மணி. ௫௪.

௪௩௩. தனகு - விடயக்களிப்பு; "தனகிருந்ததோர் தன்மையராகிலும்" தேவாரம்.

௪௩௪. திருவுமமிர்துந் தருங்கடல்போலும்: "அமுதமுந்திருவு முதலவுதலானும்...அளக்கராகியும்...கல்வி" கல்லாடம்.

தலைவிக்குப் பாங்கி அறிவுறுத்தல்.

சேதாம்பல் வாவித் துறைசைத் தியாகர்செய்ய
பாதாம் புயத்தைப் பரவப்பெற் றார்பெறும் பாக்கியமின்
றேதா தவர்க்கில்லை யென்றுரைத் தேகினா ரொள்ளழற்கான்
வேதா ரணியமன் னாயுன்றன் மேல்வைத்த மெய்யன்பரே. (௪௩௫)

கார்ப்பருவங்கண்டு தலைவிவருந்தல்.

கத்திகைக் கூந்தனல் லாயென்செய் கோவினிக் காத்துறைசைப்
புத்திர த்யாகரைப் போற்றார் மனத்திருள் போலக்கொண்ட
லெத்திசைக் கண்ணுமுற் றென்னா ருயிருண்ண வெய்தியதான்
முத்திறக் கல்விக் கடனீந்தப் போனவர் முன்னிலரே. (௪௩௬)

தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்.

மகரக் கருங்கட லூடன் றெழுந்து வருவிடமே
நிகரக் குயின்வந்த தேதுவென் றேங்கினை நீவடபொற்
சிகரப் பொருப்புவிற் செம்பொற் றியாகர் திருத்துறைசைத்
தகரக் குழலணங் கேயன்பர் தேரின்று தான்வரற்கே. (௪௩௭)

காவற்பிரிவு.

காவற்பிரிவு தலைவன் பாங்கிக்குஅறிவுறுத்தல்.

தேக்கந் தருவெள்ள மார்சடைச் செம்பொற் றியாகரரு
ளாக்கந் தழைத்த துறைசையன் னாய்நல் லறப்புறங்கள்
காக்கவு மல்லவை நீக்கவுஞ் செல்வது கட்டளையா
மூக்கம் படைத்தினி தாநாடு காவ லுரியவர்க்கே. (௪௩௮)

தலைவிக்குப் பாங்கி அறிவுறுத்தல்.

மலங்கா வகையுயிர் யாவையுங் காத்து வளர்துறைசைத்
தலங்காவல் கொண்டருள் செம்பொற் றியாகர் தமதருளா
னிலங்காவல் கொள்ளு நினைவின ராயினர் நீலமழைக்
குலங்காவல் கொண்டவைம் பாலெம் பிராட்டிநங் கொற்றவரே. ()

தலைவி கூதிர்ப்பருவங்கண்டு வருந்தல்.

கறைகொண்ட கண்டர் கனகத் தியாகர் கவின்றுறைசை
யிறைகொண்ட கோல்வளை மால்பொழிந் திட்டபி னெஞ்சிநின்ற
வுறைகொண்டு வாடை யலைக்குமிந் நாள்சற் றுணர்ந்திலர்கொ
றிறைகொண்டு கோல்செலுத் தாநாடு காத்திடுஞ் சிந்தையரே. (௪௪௦)

---

௪௩௬. கத்திகை - பூமாலை. முத்திறக்கல்வி - இயலிசைநாடகம்.
௪௩௭. குயின் - மேகம். ௪௪௦. உறை - துளி.

தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்.

சொல்லும் பெரும்புகழ்ச் சொன்னத் தியாகர் துறைசையர்போ
லல்லுந் தியமலர்க் கோதாய் தழைக வடியுறையா
வொல்லுநர் வைத்தவு மொல்லார் விருது மொருங்குகொண்டு
வெல்லும் படைமுர சோடன்பர் தேர்மிசை மீண்டனரே. (௪௪௧)

தூதிற்பிரிவு.

தூதிற்பிரிவு தலைவன் பாங்கிக்கு அறிவுறுத்தல்.

நீந்தா நெடும்பகை கூர்ந்திரு வேந்தர்க ணேர்ந்தமரின்
மாந்தா வகைசென்று மாற்றுதற் கேகி வருமளவுஞ்
சாந்தார் வனமுலை செம்பொற் றியாகர் தடந்துறைசைத்
தேந்தா மரைமுகத் தாள்கவ லாவகை தேற்றுகவே. (௪௪௨)

தலைவிக்குப் பாங்கி அறிவுறுத்தல்.

போதார் புரிகுழற் பொன்னேவன் றொண்டர்க்குப் பொங்கிரவிற்
றூதாய் நடந்தவர் சொன்னத் தியாகர் துறைசைநமர்
கோதார் மிகைதணி யாவிரு கோக்கள் குறித்தசமர்த்
தீதாம் பகைதணித் தற்கேக லுற்றனர் சித்தம்வைத்தே. (௪௪௩)

தலைவி முன்பனிப்பருவங்கண்டு வருந்தல்.

சுடுங்கார் விடமுண்ட சொன்னத் தியாகர் துறைசையொப்பாய்
கடுங்கா வல்பகை நீக்கப் பிரிந்தவர் கண்டிலரோ
வொடுங்கா ரொடுங்கத்தென் றிக்கோட மேக முருக்கமலம்
படுங்கால மென்னக் கருகப் பெருகும் பனியினையே. (௪௪௪)

தலைமகளைத் தோழி ஆற்றுவித்தல்.

அங்குங் குமமுலை மாதேவந் துற்றன ராழிவைய
மெங்கும் பொழிந்திடு முன்பனி நாளென் னிருதயத்திற்
றங்குந் துறைசைத் தியாகேசர் தாணிணை யார்வினைபோற்
பொங்கும் பகைமன்னர் போர்தணிப் பானன்று போனவரே. ()

துணைவயிற்பிரிவு.

தலைவன் பாங்கிக்கு அறிவுறுத்தல்.

இருந்துணை யாய்மன்னர் போர்முனை மேற்சென் றினிதினிங்கே
வருந்துணை யுங்கயற் கண்ணுய் துறைசையில் வாழ்ந்துயிர்கட்
கருந்துணை யாய்நின்ற கோமுத்தி யீச ரருளெனக்கை
தருந்துணை யாய்த்தைய லாள்வருந் தாவகை தாங்குகவே. (௪௪௫)

---

௪௪௧. ஒல்லுநர் - நட்பினர், ஒல்லார் - பகைவர்.

௪௪௩. வன்றொண்டர் - ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனர். கோக்கள் - அரசர்.

௪௪௪. பனிக்காலத்தில் மேகம் தெற்கேசெல்லும்; "மங்குன் மாமழை தென்புலம் படரும், பனியிருங் கங்குல்" அகநா. ௨௪.

தோழி அதற்கு உடம்படாமல் மறுத்தல்.

சேந்தற்கு மாமன் மகனார் செருவிற் றிகைக்குமெங்கள்
சாந்தத் தனத்திக் குதவிசெய் தாலென்ன தாழ்வுழைக்கன்
றேந்தத்தன் கோமுத்தி யீசன் றுறைசையெண் ணாரின்வெம்போர்
வேந்தர்க் குதவிசெய் வான்பிரிந் தேகுமின் வேலண்ணலே. (௪௪௭)

தலைவிக்குப் பாங்கி அறிவுறுத்தல்.

தீவாய வெஃகம் வலந்திரித் தேமன்னர் தெம்முனைமேற்
கோவாத முத்தனை யாய்படர்ந் தார்நமர் கொண்டலுலாஞ்
சோவா வடுதுறைச் சொன்னத் தியாகரைச் சூழ்கிலர்போன்
மேவா ரிடுநொச்சி யாதுகொ லாக விளைகின்றதே. (௪௪௮)

தலைவி பின்பனிப்பருவங்கண்டு வருந்தல்.

குனித்தருள் கோமுத்தி நாதன் றுறைசைக் குரீஇக்குலமுந்
தொனித்திடுந் தம்பெடை யோடினங் கூடுபு துஞ்சிருட்கூர்
பனித்திர டேங்கவென் கண்ணுறங் காமற் பனித்திரங்கித்
தனித்திருந் தேங்குக வென்றுயிர்த் தாளனைத் தாய்சுமந்தே. (௪௪௯)

தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்.

என்பணி யென்முதி ராமுலை கோமுத்தி யீசனன்பர்க்
கன்பணி மாசலை கேள்வன் றுறைசையை யாதரியா
வன்பணி யாயரைப் போலே நடுக்கஞ்செய் வாடைமிகும்
பின்பணி நாளில்வந் தார்முன்பு நம்மைப் பிரிந்தவரே. (௪௫௰)

பொருள்வயிற்பிரிவு.

பொருள்வயிற்பிரிவு தலைவன் பாங்கிக்கு அறிவுறுத்தல்.

இந்நா னிலத்தில்லை யேமத்தின் மேம்பட்ட தீட்டிலது
தன்னா லெவருஞ் சிறப்பின்மிக் காவர் தடந்துறைசை
நன்னா வியங்குழ லாயொப் பிலாமுலை நாயகரும்
பொன்னாலன் றேபுகழ்ப் பேர்படைத் தாண்டனர் பொற்பரசே. ()

---

௪௪௭. சேந்தன் - முருகக்கடவுள். மாமன்மகனார் - மன்மதன். உழைக் கன்று - மான்கன்று. மின்வேல் - ஒளியையுடையவேல்.

௪௪௮. படர்ந்தார் - சென்றார். சோ, நொச்சி - மதில்.

௪௪௯. குனித்தருள்-நடித்தருள்கின்ற. குரீஇக் குலம் - குருவியினினம். பனித்து - நடுங்கி.

௪௫௰. என்பணி - என்னபணி. அன்பன் இமாசலை (உமை) கேள்வன். வன்பு அரியாயர் - வன்மையையுடைய அரியாயர்.

௪௫௧. ஏமம் - பொன். புகழ்ப்பேர், சொன்னத்தியாகரென்பது.

பாங்கிமறுத்தல்.

நிரைக்கும் பகிரண்ட கோடியர் கோமுத்தி நின்மலனூர்
திரைக்கு மரிவளர் தென்னர சூர சிறையளிசூழ்ந்
திரைக்குங் குழலி யுரையாத் தனக்குன் றிரண்டுபெற்று
முரைக்குந் தனத்துக் கருஞ்சுரம் போக வுரைப்பதென்னே. (௪௫௨)

தலைவிக்குப் பாங்கி அறிவுறுத்தல்.

தழலத்த மேந்திய செம்பொற் றியாகர் தமிழரசூர்
நிழலத்த மன்ன கபோலத்தி சீரத்த நேடிக்கொள்ளார்
விழலத்து மன்னரென் றெண்ணிவெண் டேரைவெம் மான்புனலென்
றழலத்த நீந்தலுற் றாருனை யேபொன்னென் றேகினரே. (௪௫௩)

தலைவி இளவேனிற்பருவங்கண்டு வருந்தல்.

தைக்கின்ற வேற்கண்ணி தென்னர சூர்த்தம தன்பரைத்தாள்
வைக்கின்ற கோமுத்தி யீசர்த் தொழாத வரினமக்கோர்
திக்கின்று வேறினி யந்தோ தளிர்ததுச் சிறைநிறைந்த
கொக்கின் றலையிற் குயிலின மேறுபு கூவினவே. (௪௫௪)

தலைவியைத்தோழி ஆற்றுவித்தல்.

தொம்மென வாட்டயர் சொன்னத தியாகர் துறைசைநலலாய்
நம்மநங் கன்வசந் தத்திரு நாளிது நாட்டெவரும்
வம்மினென் றாங்கவன் காகள மார்ப்பது வாசெவிகேட்
டிம்மெனு முன்னணைந் தார்பொருட் கேகி யிருந்தவரே. (௪௫௫)

தலைமகளைக் கலந்திருந்த தலைமகன் முகிலொடுமகிழ்ந்துகூறல்.

மருவளர் கோதை மயிலனை யாள்கொங்கை வண்டரளக்
குருவள ராக முயங்கினம் யாநதிருக் கோமுத்தியூ
ரொருவன் றிரவியத் தியாகேசன் பலவுயிர்க் குஞ்சுரக்குந்
திருவருள் போல வினிப்பொழி வாழி செழுங்கொண்டலே. (௪௫௬)

வாழ்த்து.

வாழி திருவர சூரொப் பிலாமுலை வாழிபொன்னி
வாழி திரவியத் தியாகேசர் பொன்னருள் வாழியன்பர்
வாழிய வெங்கள்பஞ் சாக்கர தேசிகன் மாமரபு
வாழி துறைசைத் திருக்கோவை வாழிய வாழியவே. (௪௫௭)

திருவாவடுதுறைக்கோவை முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

௪௫௨. உரையாத்தனக்குன்று-கொங்கைகள். உரைக்குந்தனம்-பொன்.

௪௫௩. அத்தம் - கை, கண்ணாடி, பொன், காடு, அருநெறி.

௪௫௪. கொக்கு - மாமரம், ஒருபறவை; "கொக்கின்மேற் குயில்கள்கூவுங் குளிர்பொழிற் குறியுஞ் சொன்னாள்" (வி. பாரதம், கீசகன். ௫௭) என்பது இதன் நான்காமடியை ஒத்திருத்தல காண்க. ௪௫௫. அவன்காகளம்-குயில்.

அரும்பதவுரையின் அநுபந்தம்.

விநாயகவணக்கம்.

க. நுதலைப்போன்ற பிறை. பிறையையும் அக்கின்கோவையையும் அணிபவன் இறைவன்.

உ. துணைவந்த விநாயகரென்பவர், திருக்கோயிற் கோபுரவாயிற்குத் தென்பாற் கோயில்கொண்டவர். அழகிய விநாயகர், தட்சிணாமூர்த்தியின் கீழ்பாலுள்ளவர்.

நூல்.

க. கமலம், நீலம், முல்லை, கோங்கு, காந்தளென்பவற்றால் முறையே மருதம், நெய்தல், முல்லை, பாலை, குறிஞ்சியென்னுந் திணைகளைந்துங் கூறப்பட்டு, இந்நூல் ஐந்திணையொழுக்கத்தையும் புலப்படுத்துவதென்பதை விளக்குதல் காண்க.

உ. பத்மநிதிமீதலமென்றதற்கு அமராவதியென்றேனும் அளகாபுரியென்றேனும் பொருள்கொள்க. அமோகத்தவர் - நிராசையை யுடையோர்.

ந. வாடாதபோது - அணிந்த மாலையிலுள்ள பூககள். இமையாடாத போது - கண்கள், நிலத்திற் சூடாதபோது - பாதங்கள். அழல் ஓடாப்பொற்பூண் - நெருப்பிற்காய்ச்சி ஓடவைக்கப்படாத பொன்னாலாகிய ஆபரணம். இவை தேவர்க்கே உரியன. ஈடு - ஒப்பு, பிரமனத்தைக் கவருந்தன்மை. வீடாவிளக்கு - இரத்தினதீபம்; வீடுதல்-அவிதல்; "அவன்...பாசறைக் கேற்று மணிவிளக்கோ" என்பர் பின்னும், சஉ; "சூடககண் டாயடிப் பத்மங்கள் பூவினிற் சூடியபூ, வாடக்கண் டாய்வண்டு கூடக்கண் டாயிரு வாட்கணிமை, யாடககண் டாய்மன மேயிந்தக் கொம்ப ரணங்கல்லளுங், கோடக்கண் டாளுங் கைலைத் தியாக ருயர்வரைக்கே" கலைசைக்கோவை, ந.

ச. தென் - அழகு, தென்னைமரம். பொன்னூழி, எழுவாய். கோன் - அச்சம். "அன்றுகண் டோகஞ் சமுத்தத்தை யாழியி லம்புயன்மால், சென்றுகண் டோதுந்தென் னூருர்த் தியாகர் திருமிடற்றி, லொன்றுகண் டோமற்றை யொன்றுவின் னூடு ருலகிற்கண்டோ, மின்றுகண் டோநெஞ்ச மேயிவர் பாரவை யிரண்டினுமே" திருவாரூர்க்கோவை, ச.

ரு. வம்பிற் புதைக்குந் தனங்கள் - வீணே புதைத்துவைக்கப்படும் திரவியங்கள், கச்சால் மூடப்பட்டுள்ள கொங்கைகள். வருவாய் - வரும்படியுமாம்.

சா. அன்னம் பேட்டுக்கு இறலையருத்திப் பொருந்துந் தன்மையென்றது, யாமும் இவரை மகிழ்வித்துப் பொருந்தும்படி செய்யுமென்னுங் குறிப்புப் பொருளைத் தருகின்றது.

எ. தண்டை - ஒருவகைக்காலணி.

அ. கொல்லியம்பாவை - கொல்லிமலைக்கண் தெய்வத்தால் அமைக்கப்பட்டதொரு தெய்வப்பிரதிமை. இது மோகினிவடிவமென்றுங் கூறப்படும். கண்டார்க்குப் பெருங்காமத்தை விளைவித்து இறுதியிற் கொல்லுமியல்பையுடையது; தான் ஒருவகைத் துன்பமும் உறாதது; இதனை நற்றிணை, கஅரு. குறுந்தொகை; அக, சீவகசிந்தாமணி கககஎ-ஆஞ் செய்யுட்கள் முதலியவற்றால் உணர்க.

க. "கொந்தார் குழன்மணி மேகலை நூலுட்பங் கொள்ளா தெங்ஙன்" (வெங்கைக். ச0எ) என்பது இங்கே அறியற்பாலது. அந்தோ-ஐயோ. மைத்த பாயிருள் - மிகப்பரவிய இருட்டு; ஒருபொருட் பன்மொழி.

க0. பதமும் - பாதமும் பதவியும்.

கஉ. வேட்கைக்கடலைத் தனக்குடங் கொண்டு நீந்துவமென்க; "கோக்கடல் வீழ்ந்து அவா அலையாற் சுழல்வேனுக்கு அவளை தனக்கலன் அன்றி வேறுபற்றிலலை" என்பர் பின்னும்; ருக; "போர்நாடு காமவெள்ள நீந்தவொரு புணையின்றிச், சீர்நாடு மாதர்தனக் குடந்தேடித் திரிவார்க்கு, வார்நாடு தடைதீர்ந்த மலைநாடு வாய்த்ததால்" (குற்றலப். மந்தமாருத. சஅ) என்பது இதனுடன் ஒப்பிடற்பாலது.

கரு. கா - காவில.

கஎ. கோணைப்படை - மாறுபாட்டினையுடைய படை; ஐ, சாரியை. குதுகுதுத்தால்-ஆசைபட்டால; "வேசனை நாற்றங் குதுகுதுப்ப" (பரி.உ0:கரு); "தேவர்களுங் குதுகுதுப்ப" (காஞ்சி. நகரேறு. கசரு.)நாணற்கபாடம்-நாணமாகிய கதவு; "நாணெடுங் காவ லுடைப்புண்டதால" என்பர் பின்னும்; உ0.

கஅ. நீரை அரசிலையால தோய்த்துவீசுதல மங்கலமரபு. வெளிதாய் - வெள்ளிய நிறமுடையதாய்.

கக. என்றாழ் - சூரியன். நிலாக்காந்ததென்க. சூரியனால் நீக்கப்படாத அகவிருளை நிலாநீக்கியது மிக்க வியப்பென்றபடி. விம்மிதம் - விஸ்மிதமென்பதன் திரிபு.

உ0. கன்னி இஞ்சி - அழியாதமதில். இவர் எனறது தலைவியை.

உக. சட்டகம் - உடம்பு. முருக்கின் அலர்போன்ற வாய்.

உங. யானையென்றது கொங்கைகளை. நான்புனைய வாய்த்ததென்க.

உச. அஞ்சேல் - அஞ்சாதே. அணியியல - அலங்காரஞ்செய்யுமிலக்கணம்; ஒரு நூலுமாம்.

உரு. தென்கடலுருளில் வடகடலச்சு இயைந்தென்ன என்பது, "தென் கட லிட்டதோர் திருமணி வான்கழி, வடகட னுகத்துளை வந்துபட் டாங்கு" (பெருங். க. நஉ: கஎ - கஅ) என்பதில் வேறுவகையாகக் கூறப்பெற்றுள்ளது.

உஅ. இன்னேவருவல் - இப்பொழுதே வருவேன். பறவாகுளவியென்பது மலைமல்லிகையென்று பொருள்தருதலை வெளிப்படையென்பர். குளவியை வண்டென்னும் பறவையோடு கட்டியென்பது மற்றொருபொருள்.

ந0 பணிக்காப்பார் - சர்ப்பகங்கணத்தையுடையவர். கருப்புமுத்து-கரும்பின்முத்து. செநநெலும் கரும்பும் மருதநிலத்திற்குரியன; "செந்நெல் செங்கரும்

பம் பயிரிற்சிறந்த துறைசை" என்பர் பின்னும்; ௩௩; "நிலத்திற் கணியென்ப நெல்லுங் கரும்பும்" நான்மணி. ௯.

௩௧. "இல்லத்துக் காழ்கொண்டு தேற்றக் கலங்கிய நீர்போற் றெளிந்து நலம்பெற்றான்" (கலி. ௧௪௨), "இல்லின் படுகாழ்ப் படுத்துத் தேய்வுழி யுமிழ்இக், கலுழி நீக்குங் கம்மியர் போல" (பெருங். ௧. ௩௫: ௨௧௫ - ௨௧௭), "மண்மயக்கந்தேற்றுவித்தான் மாற்றுதல்போ லாரியனா, லுண்மயக்கந் தேற்றுவித்தான்" (வேங்கடவெண்பா, ௪) என்பவை இச்செய்யுளின் பின்னிரண்டடிகளுடன் ஒப்பிடற்பாலன.

௩௨. முத்துவடத்தையணிந்தமலை - கொங்கை. நடு - இடை.

௩௩. ஆரவண்டல் - முத்துக்களாலாகிய வண்டல்.

௩௪. தியாகேசர் காட்சி - தியாகேசரது பந்தர்க்காட்சி; "தியாகர் வளர் துறைசைக் காட்சியின்" என்பர் பின்னும்; ௧௭௦.

௩௫. துணைவிழி தோட்டைக்கடந்து காட்டி உலவுமென்க.

௩௬. கோமளம் - மனத்துக்கு இன்பஞ்செய்யும் அழகு; என்றது, தலைவியை. உணர்ந்தும் - அறிந்தும்.

௩௭. "முடிக்கத் தகுமுன் னரசிலை யோடு" என்பர்பின்னும்; ௧௪௦. ஈன் அரிது - பெறுதல் அரிது.

௩௮. இருவர் - தலைவியின் தாய்தந்தையர். ஏக்குற - ஏக்கமுற; ஏக்கற வெனப்பாடங்கொண்டு இளைத்து இடையவென்று பொருள் கூறுதலும் பொருந்தும்; "கடைக்கணேக்கற" சீவக. ௧௯௨௨.

௩௯. அற - மிக. கங்குல் நீளும்.

௪௧. சேறும் - செல்வேம். வருதி - வருவாய்.

௪௨. அவன் பாசறை - சோலை.

௪௩. 'நீக்கற்று இரண்டற்ற நேசமொடு......கலந்து புணர்ந்தது' என்பது, "சொற்பா லமுதிவள் யான்சுவை யென்னத் துணிந்திங்ஙனே, நற்பால் வினைத்தெய்வந் தந்தின்று நானிவ ளாம்பகுதிப், பொற்பா ரறிவார் புலியூர்ப், புனிதன் பொதியில் வெற்பிற், கற்பா வியவரை வாய்க்கடி தோட்ட களவகத்தே" (திருச்சிற். ௮) என்பதன்பொருளை ஒத்துவந்தது. பொற்கென்ற-பொன்னிற முற்ற; இது புற்கென்ற எனவும் வழங்கும்.

௪௪. முக்கண் நக்கர். அணியிழை, விளி.

௪௫. மன் திருவாணி. வள்ளல் - தியாகராசர். பின் - பின்னிய. கண்ட - படைத்த. தோகை - மயில்.

௪௬. இலதால் - இன்மையால். பெண்களின் - பெண்களைப்போல. சசி - இந்திராணி.

௪௭. திருத்தத்துறைசை - புண்ணிய தீர்த்தங்களையுடைய துறைசை; "திருக்காவிரித்திருத்தம் படிந்தோ" (௭௩) என்பர்பின்னும்; "திருத்தயாத்திரை யதிக மவற்றதிகஞ் சிவனுருவாந், திருத்தமாங் கங்கைமுதற் றிருநதிக டனித்தனி போய்த், திருத்தமா டுவ தரிது" (திருவிளை. எழுகடல். ௯.) 'கல்வியும் ஈர

ருரிப்பவன்' என்பது ஒருபழமொழி; "கன்னு ருரித்த கனியே போற்றி", "கன்னு ருரித்தென்ன வென்னையுந்தன் கருணையினுற், பொன்னுர் கழல்பணித் தாண்ட பிரான்", "கன்னு ருரித்தென்னை யாண்டு கொண்டான்" என்பனவை திருவாசகம்.

சஅ. தெய்வப்படை - தெய்வாத்திரங்கள். செந்தமிழ்வடித்தோ - செந்தமிழ்நூல்களை ஆராய்ந்தோ; "கூடலி னாய்ந்தவொண் டீந்தமிழின், றுறைவாய் நுழைந்தனையோ" (திருச்சிற். உ௦.) "தெய்வப் பாவலர்தா, முன்செய்த நூலின் முறைதெரிந்தோ" அம்பிகாபதி. ச௦.

சகூ. பால் நத்து-வெள்ளிய சங்கம். அனல் அரக்கு ஆகி. இது இலக்கோ-இது லக்ஷியமோ.

ருக. காணுய் - கண்டாயில்லை; "கடுக்கண் டனையல்லை கொங்கைகண் டாயல்லை கண்பவென்ற, வடுக்கண் டனையிப் பாவயோ தவிர்ப்பது" (புகலூரந்தாதி.) "பூணுர மென்முலை யின்பெருங் காட்சியும் பொய்யிடையின், காணுமையுங்கண் டனையாயி னண்ப கழறலையே". (வேங்கைக். சசு.)

ருஉ. தேசிகத்தைத் தேசென்பதன் திரிபாக்கி ஒளியென்றலும் பொருந்தும்; "பல்லினைத் தேசிகம்படத் துடைத்து" (சீவக. கசஅ௦) என்பதன் பொருளைப்பார்க்க.

ருங. கா-சோலை. அவா அலை-ஆசையாகிய கடல். கலன்-நீந்துதற்குரிய குடமுமாம்.

ருஎ. திருமாலாகிய விடையென்பார் 'துளவே யணிவிடை' என்றார். துளவே நகை - முல்லையரும்பே பல். தந்து அளவே இடுகிடை - நூலின் அளவாகவே உள்ளது இடை; இடுகு இடை - குறைந்த இடுப்பு.

ருஅ. நின் ஆவிக்கு ஆவிமை - உன்உயிர்க்கு உயிர்போன்ற தலைவியை. நிற்றி-நிற்பாய். அன்னம் தமயந்தியின்பால் தூதுசென்றுவந்த அன்னப்பறவை. தரித்து - துன்பத்தைத்தாங்கி.

ருகூ. மகளிர் நடைக்கு மயிலின்நடையை உவமை கூறுதல் மரபு; "மயில் கண் டன்ன மடநடை மகளிர்" (குறுந். உ௬) என்பதன் அடிக்குறிப்பைப் பார்க்க (பத். உ-ஆம் பதிப்பு.)

சு௦. அனிச்சம் பொருத அடித்தாமரையிவை: அனிச்சம் - அனிச்சமலர்; 'அனிசசமு மன்னத்தின் றூவியு மாத, ரடிக்கு நெருஞ்சிப் பழம்" (திருக்குறள், கக௨௦); "பஞ்சி யடரனிச்ச நெருஞ்சியின்ற பழமாமென், றஞ்சு மலரடிகள்" (சீவக். ருசக.)

சுக. வாழையென்றது துடையை. மதி - புத்தி, சந்திரன். இதன் பின்னடிகள், "துடைவாழை மேன்மட வாரலகுற் பாம்பு தொடமயங்கி, நடைவாய் பிணமெனப் பட்டார்" (நால்வர்நான்மணி. உசு) என்பதை ஒத்து வந்தது.

சுங. தாயினு மின்பருள் செம்பொற் றியாகர்: "தாயிற் சிறந்த தயாவான தத்துவனே", "தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்", "பாணினைத் தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்து......புறம்புறந் திரிந்த செல்வமே" என்பவை திருவாசகச் செய்யுட்கள். 'தடந்துறைசைக், கோயினு மெய்ந்நெஞ்சன்

கொண்டோர்': "அடியேனுடைய, மனமுந் தனைசையும் வாழ்மாசி லாமணி" என்பர்பின்னும்;கசஉ;''சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளு முறைவான்" திருச்சிற். உ0.

சுச. தாரகை-நட்சத்திரம்; என்றது தலைவியை. பக்கம் - அன்பு, பக்ஷம். தலைவனைச் சோமனென்றது சௌமியகுண முடையனுதல் பற்றி. சௌமியம் - சாந்தம். இப்பெயர் சோமிய மெனவும் வழங்கும். "தாரலந்திகழுஞ் சோதிச் சோமியமடைந்து நின்றான்" (வி. பாரதம். கரு ஆம்போர். கசு.)

சுசு. அரக்குங் கறுக்குநற் செவ்வாயென்றது வாயின் செம்மை மிகுதியைக் கூறியவாறு; "முருக்கின் னிதழைக் கருக்குவிக்கு முறுவற் செவ்வாய்த் திரௌபதியும்" (வி. பாரதம், தூதுவாச. க0) என்றார். சஞ்சீவினி - மிருதசஞ்சீவினி யென்னும் ஓஷதி; "நற்சஞ்சீவனி கண்ட செம்பொனிமயாசலம்" (ககங) என்பர்பின்னும்.

சுஎ. கோடு இவர்கின்ற தேன்வாரி - கொம்பிற் பரக்கின்ற தேன்கடலை. "தோலாறு தேன்பொழிய" (பெரிய். மானக்கஞ். க), கோற்புத்தேன் எல்லாத் தேன்களினும் சிறந்ததென்பர்; "கோற்றேன் கொண்டு செய்தனன்", "கோற்றேன் மொழிக் கிள்ளாய்", "கோற்றேனெனக் கென்கோ" திருவாசகம்.

சுஅ. படையார்விழி: அண்மைவிளி. அறல் - நீர்.

சுசு. ஏர் உதரம் - அழகிய வயிறு. புரை - குற்றம். ஆல் - ஆலிலை.

எ0. குவளைமலரின் செழுமை கூறுவார் 'மடையார், குவளை' என்றார். "மடைத்தேங் குவளைக்கண்ணாய்" என்பர்பின்; ருகரு; "மடையின்றி நீணெய் தல்வாடும்" நான்மணி. சக. வாரும் - வாருங்கள்.

எக. எல்லா எழுத்திற்கும்நாயகமாம் அவ்வெழுத்தென்றதை,'அகர முதல வெழுத்தெல்லாம்" (திருக்குறள், க) என்பது முதலியனவும் அவற்றின் உரைகளும் விளக்கும்.

எஉ. ஒருக்காலும் - ஒருபொழுதும்; ஒருகாலென்பது ஒருக்காலென்றும் வழங்கும்; "அருட்காமக் கொடிபாகன் திருவாணை சிதம்பரங்கண்டவர்க்கு முத்தி, யொருக்காலன் றிருக்காலு முக்காலு முண்மையீ துண்மையாமென், செருக்காலீ துரைத்தேனேற் கணைபோதிற் சிரமிற்றுச் சிதைகமுன்னை, யிருக்காதி மறைமொழிந்த திப்பரிசென் றன்சுருதி யெல்லாம் வல்லான்" சிதம்பரபுராணம், துன்மத. கஎ.

எங. "நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியுஞ்,செய்வினை மறைப்புஞ் செலவும் பயில்வுமென், றிவ்வகை யேழினு மையமுற் றோர்தலும்" என்பது, நம்பியகப்பொருள், சூ. கஙகூ.

எஎ. குருக்கும் - தோன்றும். வேர்வு - வேர்வை.

எஅ. சேப்பு - செம்மை; "சிகைகிடந்த வூடலிற் செங்கண்சேப்பூர" பரி. எ: எ0. பூமத்தர் - ஊமத்தம் பூவையணிந்தவர்; "மத்தமும் வன்னியு மணிந்த சென்னிமேற், கொத்தலர் கொன்றையர் கொள்ளிக் காடரே" தேவாரம். பா - பரப்பு.

எகூ. துப்பின்-வலியால். "தீவா யுழுவை கிழித்ததந் தோசிறி தேபிழைப்பித், தாவா மணிவேல் பணிகொண்ட வாறின்று ராணடகையே" (திருச்சிற். எஉ) என்பதும் அதன் உரையும் இச்செய்யுளின் பொருளை விளக்கும்.

அ0. முத்தி யென்னுஞ் சொல்லை மங்கையெனப் பெண்பாலாக்கியது, வடமொழிமுறை பற்றி; "முத்தித் திருவை முயங்க நல்கும் கயலார் பெருந் தடங் கண்ணிபங்கா", "நரைக்குழன்முத் தித்திருவை முயங்கிடவுங் கட வேன் கொல்லோ" காசிக்கலம்பகம். உஉ, ஙஅ.

அக. எழுதரும் பாவை - எழுதுதற்கரிய பாவைபோல்வாளை. சதிர்ப்பாடு-திறமைப்பாடு.

அங. மாராயம்-சிறப்புமாம்; சிலப். உடு: கசஉ - ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

அடு. தந்திதனை உரையாடிலிரென மாற்றிப் பொருள்கொள்க. காயா மலர்க்குழலீர் - காயாமலர்போன்ற கூந்தலையுடையீர்; "காசைசேர் குழலாள்", "காசைசெய் குழலுமை" என்பன தேவாரம்; "பாயாத மாறுைமரம் பாலும் பசுந்தோளுங், காயாவே யொக்குங் கலைசையே" (கலைசைச்சிலேடை. கஉ.) வேங்கைமரத்தைப் பாயாத வேங்கையென்றது வெளிப்படை.

அசு. எத்திட்ட - வஞ்சித்த; "எத்தாற் பிரிகதரா" (உசக) என்பர்; "வந்தியை யலைப்பான் வந்த வெத்தனோ" திருவிளை. மண்சுமந்த. சங.

அஅ. எய்த எய்த - அடைதற்கு அம்பை யெய்த. யானையின்பெயராகிய அத்தியென்பதனை 'ஒற்றிடையாகும் அதி' என்றது எழுத்துப் பெருக்கமென்னுஞ் சொல்லணி.

அகூ. வரையாரமுதனையீர் - அலையிற்றோன்றிய அமுதையன்றி மலையிற்றோன்றிய அமுதைப்போல்வீர். வட்கும்-கெடும்; "வட்கயான் பெரிது முட்கி" சீவக. சOங.

கூக. ஆறேந்து சென்னியர் - கங்கையையணிந்த தலையையுடையர்; ஏந்திய ஆறுசென்னியை யுடையரென்றுமாம்; "மழியாறு கொண்ட துறைசையெங் கோமுத்தி முத்தர்" (ஙOO) என்பர்; "அறிஞராயோர், சிந்திக்குந் தனது தொல்லைத் திருமுக மாறுங் கொண்டான்" (கந்த. திருவவதார. சங); "ஐந்து முகத்தோ டதோமுகமுந் - தந்து, திருமுகங்க ளாறாகிச் செந்தழற்க ணாறு, மொருமுகமாய்த் தீப்பொறியா றுய்ப்ப" (கந்தர்கலி. எசு - எ) என்பவற்றாலுமுணர்க.

கூஉ. வரியார் அதள் - புலித்தோல். கண்டுகொண்டாடுமெனவும், கண்டு கொண்டு ஆடுமெனவும் பிரிக்க; ஆடிதல் - சொல்லுதல், கூடிதல்.

கூங. ஏ - அம்பு. மருளா - மயங்கி. ஏய்ப்ப வந்ததோ.

கூடு. மா இலை அம்பு - மாவிலையாகிய அம்பு, பெரிய அலகையுடைய அம்பு. சேண் - நெடுந்தூரம். சிங்க சரம் - நரசிங்காத்திரம்; இதனை எய்து இறைவன் யானையைவென்றமை திருவிளையாடலில் யானையெய்தபடலத்தால் அறியலாகும்.

கூசு. இரலை - மான். கோட்டம் - நீர்நிலை. கூட்டுறவு - கூடுதல்.

கூஅ. மான் அத்தர் - மானைத்தாங்கிய கையையுடையவர்.

கOO. கல்லாரம் குற்று - செங்கழுநீர்மலரைப் பறித்து.

கOஉ. சூடாமணி - முடிமணி. இது சூளாமணியெனவும் வழங்கும்; "சூளாமணியும்பர்க் காயவன்" திருச்சிற். சஎ.

௧௦௫. வடி - மாவடுவின்பிளவு; "வடிக்கண்ணிவை" திருச்சிற். ௩௧.

௧௦௬. கதை-தண்டாயுதம். யாதுன்பு-மிக்கதுன்பம். ஏதும்-சிறிதும்.

௧௦௭. தந்நமற்று-பற்றுக்கோடு அற்று. மலர்மாலையிற் பூக்களை எழுத்து வடிவுபடவும் சொல்வடிவுபடவும் வைத்துத்தொடுக்கல் மரபு; "மருடரு மல்லிகைமாலை வல்லவன், பொருடகத் தொடுக்கன" (சீவக. ௨௪௫௦); இவ்வழக்கம் முன்பு உண்டென்பதைப் பெருங்கதையிற் பரக்கக்காணலாம்.

௧௦௯. தண்மெல்லாம் - தண்மையெல்லாம்.

௧௧௦. பட்டாங்கு - உண்மை; "பட்டாங்கறிய" பு. வெ. ௧௭௪.

௧௧௧. விற்படும் வெப்பு - வெயில். வேட்டு - மணஞ்செய்து.

௧௧௨. வெம்மாலை - வெவ்விய மாலைக்காலம்.

௧௧௬. துய்ய - தூய: "துய்யசெம்பொற் கோயிற் சுடரெறிப்பக் கண்மூழ்த்து, வெய்யவன்றேர் மாவிடறும் வேங்கடமே" வேங்கடமாலை, ௯.

௧௧௭. நடையால் அன்னமன்னாள். ஏமமடல் - இன்பத்தைத் தருவதாகியமடல், "காம முழந்து வருந்தினார்க் கேம, மடலல்ல தில்லை வலி" (திருக்குறள், ௧௧௩௧): "பொருந்தாரை வேல்விழி தந்தவெங் காமப் பிணிதனக்கு, மருந்தா வதுநெஞ்ச மேயில்லை வேறு மடலன்றியே" தஞ்சை. ௧௦௧.

௧௧௯. தமது கருத்து முற்றுப்பெறாதவர்கள் மறுபிறப்பிலாவது அதனையடைய நினைத்து மலையேறிவீழ்தல் முதலிய செய்தல் பண்டைக்கால வழக்கமாதலின், 'பறம்பேறியும் பாய்வர்களே' என்றான்; "என்றலைவனை நனிகாணேன், தீயில் வீழ்கிலேன் திண்வரை யுருள்கிலேன் செழுங்கடல் புகுவேனே" (திருவா. திருச்சத. ௩௯); 'அருவரை பாய்ந்திறுக மென்பார்பண்டு' (பு. வெ. ௬௧); "மாமடலூர்வர் தவிர்ந்து பின்னும் வரையூர்வர்" (தஞ்சை. ௧௦௨); "வஞ்சவினைக் கொள்கலனு முடலைத் தீவாய் மடுக்கிலேன் வரையுருண்டு மாய்ப்பேனல்லேன், னஞ்சொழுகு வாளாலுங் குறைப்பேனல்லேன்" (திருவிளை. வாதவூரடிகளுக்கு. ௫௫). கிழி - கிழித்த துணி.

௧௨௦. எருக்கும் என்பும்; "நாளைவெண் பூளை முகிழெருக்கோ டென்பணிவேன் மடன்மேல் வருவேன்" தஞ்சை. ௧௦௩.

௧௨௧. துவ்வாவிடம் - பிறரால் உண்ணப்படாதவிடம். படம் - ஆடை.

௧௨௩. குடம்பையுள் ஆர் இரகு அன்றிற்பிள்ளையும். தூக்கணத்து ஒண்சினை - தூக்கணங்குருவியின் முட்டை.

௧௨௪. காக்கையைக் குயிலுக்குச் செவிலித்தாயென்றல் மரபு; "வருந்தி யீன்றாண் மறந்தொழிந்தாள் வளர்த்தாள் சொற்கேட் டில்கடிந்தாள், ...கருங்குயிலே" (சீவக. ௧௬௬௧); "உயிர்த்த பொழுதே நின்குரல்கேளாமு னேடிற் றீன்றதாய், நயச்சின் வளர்த்த தாய்குரல்கேட் டலுமே நடுங்கத் துரந்ததால்" (பிரபுலிங்க. பிரபுதேவர். ௬௩.) புல்லார்: சிலேடை.

௧௨௫. "கூறொரு பெண்ணையே கூட வேண்டுவார், வேறொரு பெண்ணையே வெட்டு வார்கொலோ" (௭௬) என்றார் அருணைக்கலம்பகத்திலும்.

௧௨௬. "களவரும்பா" (தஞ்சை. ௧௦௮) என்னுஞ் செய்யுளைப் பார்க்க.

௧௨௭. சிங்கக்குழவி மிக்க இளமையில் எதிர்ப்பட்ட யானையை அடுமென்பதை, "ஆளி நன்மா வணங்குடைக் குருளை, மீளி மொய்ம்பின் மிகுவலி செரு

க்கி, மூலைக்கோள் விடாஅ மாத்திரை ஞெரேரெனத், தலைக்கோள் வேட்டங் களிறட் டாஅங்கு'' பொருந. கஙக-சஉ.

கஉஅ. நடைசெய்யாள் - நடத்தல் செய்யாள். செய்யாள் செய்யா ளென்றது மடக்கணி.

கஙௌ. 'மிண்ணம் புலி' எனவும் பாடம். ஏலுமோ - பொருந்துமோ; ஏல், பகுதி; "பெருமைக்கும் வாய்மைக்கு மேலாது நீ காண்ட பெற்றிமையே", (உசு௦) என்பர் பின்னும்.

கஙக. இதன் பின்னிரண்டடிகள், "வெந்தபுண் வேலெறிந் தற்றால்" (கலி. அங), "வெந்த புண்ணிடை வேல்பட்ட வெம்மையான்" (கம்ப. இராவணன்சோக. க௦), "வெவ்வே லெறிந்த விழுப்புண்ணின் மீட்டும் வெதுப் பியதோர், செவ்வே லழைப்பவர் சீலமன்றே" (தஞ்சை. ககங) என்பவற்றின் கருத்தைப் பெற்றுவந்தன.

கஙஉ. தொன்றேய் - ஆணவமலமாகிய பிணியை.

கஙச. அருள - ஆயிரம் பொன்னை அருளிய. வீழியஞ் செங்கனி வாயாள் - சிவந்தவீழிப்பழம்போலும் வாயினையுடையாள்; "வீழிவாய் மடமயில" (நைட தம், நகர்நீங்கு. சு); வீழியென்பது விழுதியென இக்காலத்து வழங்கும்.

கஙரு. குளிர்தல் - தங்குதல்; 'கோமுத்தி யீசர் குளிர்துறைசை' (உஎ௦), "குறிதாம் பிறைமுடிக் கோமுத்தி யீசர் குளிர்துறைசை" (ஙகசு) என்பர் பின்னும்; "கூத்தாடிய குணமுடையோன் குளிருங்காவில" தேவாரம்.

கஙசு. முந்தூழ்-மூங்கில்; இச்சொல் உந்தூழெனவும் வழங்கும்; "ஊமுற் றலமரு முந்தூழ" (மலைபடு. கஙங). ஏலம் - மயிர்ச்சாந்து.

கஙஎ. சுரும்பாடு தும்பையார்: தும்பையில் வண்டு மொய்த்தல் இறை வன் அருளைப் புலப்படுத்துகின்றது; "வண்டுமொய்த்த தாரறும்பிணடி" (சீவக. டஎக) என்பதையும் அதனுரையையும் பார்க்க.

கஙஅ. குடங்கைக் கடங்காவிழி: "குடங்கையி னெடிய கண்ணால்" சீவக. கஉகூ௦.

கச௦. குளகக்கவி - பலபாட்டுக்களை ஒருவினையால் முடிப்பது; "குள கம் பலபாட் டொருவினை கொள்ளும்" (தண்டி. பொது:) தழையை இலையோடு முடித்தல் வேண்டுமென்பதில் தவறு இல்லையென்னுஞ் சொன்னயமும், தேற்ற வினையுங் காண்க.

கசஉ. 'என்மனமுந் துறைசையும் வாழ்': சுங-ஆம்பாட்டின் குறிப்பைப் பார்க்க.

கசங. அணைத்த நாயகனார் - அணைத்தெழுந்த நாயகனார்; "ஆனூர் துவச னணைத்தெழு நாயகன" (ஙஅரு) என்பர் பின்னும்; அணைத்தெழுந்த நாயகர் திருக்கோலமுமாயென்றது எப்படியும் உன்னை அடைக்கலங்கொள்வாரென்பதைப் புலப்படுத்துகின்றது.

கசச. அம்பல் - சிலர்தம்முட்கூறும்பழிமொழி. தீங்கொடும் இனியென்னை விடுப்பாய் - தீமைக்குப்பொறு, என்னைவிட்டுவிடு. [என்றுவ?

கசரு. வேய்வந்த தோள்: வந்த-ஒத்தவென்னும் பொருளது. மறுத்தது

கசசு. வனிததழை-வனிதரம்; "வண்டணை கொன்றை வனிய மத்த மருவிய கூவிள மெருக்கொடு மிக்க, கொண்டணி சடையார்" தேவாரம்,

கசஎ. பெரியோர்களளித்த பொருளை யானையிலேற்றி ஊர்வலஞ்செய்வித்து அப்பால் ஒருவர் அணிந்துகொள்ளுதல் மரபென்பதை இச்செய்யுள் புலப்படுத்துகின்றது.

கசஅ. ஆரத்தின் - முத்துக்களையுடைய. பொழிற்கு - பொழிலின்கண்; உருபுமயக்கம்.

கசகூ. ஆவி மூழ்கி - வாவியில்மூழ்கி; நீராடி. அலர் குற்று - பூக்களைப் பறித்து. சிலம்பெதிர்கூய்-மலையெதிர்கூவி; மலைமுழையில் எதிரொலியுண்டாகும்படி ஒலித்தலும் பாடுதலும் மகளிர் விளையாட்டினுள் ஒன்று; "சோதிகழ் சிலம்பசுஞ் சிலம்பப் பாடிச், சூரர மகளி ராடுஞ் சோலை" (முருகு. ௪௦-௪௧);"காமாவ மூழ்கி நறுமலர் குற்றுநந் தாவனத்துத, தேமா விளந்தளிர் செவ்வனங் கொய்து சிலம்பெதிர்கூஉய்,வாமா னெடுங்கண மடநதைநல் லாயதஞ்சைவாணன் வெற்பிற்,பூமா தவிப்பநதர் வாய்விளை யாடுகம் போதுகவே" தஞ்சை.கஉக.

கருo. உன் இன்மொழிககு.

கருக. ஆறககம் - சுவர்க்கம். பாரிசாதம் - ஐந்தருவில் ஒன்று. காமவல்லி - கற்பகதருவிற் படர்ந்துவளருமொருகொடி.

கருஉ. உலவாக்கிழிச் செம்பொற்றனும்-கெடாத ஆடையில் முடிந்துள்ள செவ்விய பொன்னுகிய பொருள்; 'உலவா' என்பது தனத்திற்கு அடை; தோணிபுரத்து இறையவனர் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்; "எழிற்றுறைசைக, கயலாய கணணிககுச் சொனனத் தியாகரிற் காணநலக"(உருக) என்பர் பின்னும்.

கருச. ஆயந்தன்னை எய்துக என்க.

கருரு. வடியிட்ட தேன் - வடித்ததேன். இணை - ஒப்பு. தோன்றிப் போது - காந்தட்பூ. கணபடியிட்ட - கணணுககு ஒப்பாக அமைக்கப்பட்ட; படி - பிரதியெனபதன் சிதைவு; "படிச்சநதமுமிது" என்பர்; திருச்சிற். ௩உ.

கருசு. தாவு - உறைவிடம்; வி. பார. காணடவ. ௪௫, ௪௬.

கருஎ. "பிறவா வடிவன் திருவெங்கை மேவும் பிரானெடுபோ, யுறவாருயிருற வேயாக்குஞ சததியை யொபபவின்று, குறவாணர் தங்கண் மடமாதை நீளனெடு கூடடுமென்,மறவா திரு மனனவா"(வெங்கைக். கசஉ),"தென்னையுறகோண முதற்குற ளீற்றையுஞ சேர்தனிச்சொ, றன்னையு நாபபணின்றெ கூட்டு மாசென தனமணியும், பொனனையும் வீசும் விநாயக பூபன் பொருப்பிடத்தில, நின்னையு மின்னையுங கூட்டுமெனையு நினைந்தருளே' (வியாசைக். கசச) எனபவற்றன் பொருளகள இசசெய்யுளிற்கூறிய சாரியை யுவமத்தை ஒதது விளங்குகின்றன.

கருகூ. விடாய் - தாகம். உம்பருண் - அமிர்தம்.

கசுo. ஓதுவாரென்பவர்கள் சைவவேளாளர்களில் தேவாரங்களைப் பண்ணேடு ஓதும் ஒரு பகுபபினர். துறைசையூரோதுவாரென்பதற்குத் துறைசையூரை ஓதுவாரென்றும், துறைசையிலுளள ஓதுவாரென்னும் பகுப்பினரென்றும் பொருளகொளக. மாலை - பூமாலை, மாலைககாலம்.

கசுக. வளை - சங்கம். சங்கத்திற்குக் குடம் உவமை; "குடவளைக் குலம்" (நைடத. நகர. க.) மாலைககாலத்திற் கோயில்வாயிலகளிற் சங்கமூதுதல மரபாதலின, வளையொலிகூர் மாலையென்றூர்; "மல்லிகையே வெணசஙகா

வண்டேத வான்கருப்பு, வில்லி கணைதெரிந்து மெய்காப்ப - முல்லையெனு, மென் மாலை தோளசைய மெல்ல நடந்ததே, புன்மாலை யந்திப்பொழுது" (நள,சுயம். கக.)வடவாநலம்-வடவைத்தீ. சூரியன் தேரிற்கட்டிய குதிரை ஒன்றென்பர் ஒரு சாரார்; ஏழென்பர் ஒருசாரார்; 'பச்சைமாவினமே' என்றதனால் இந்நூலாசிரியர் ஏழென்னும் கருத்தினரென்று தெரிகிறது; "இரவியந்தேரேழுமா விறுமாப்பற" (உகூச) என்பார் பின்னும்; "பச்சைமா ஏழு மேறப்போ யாறு மேறினர்" கம்ப. கையடை. உரு.

கசு௨. ஐம்புலன்களு மாரவினிதருந்தி: "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு, மொண்டொடி கண்ணே யுள" (திருக்குறள், கக0க) என்பதும், "ஈண்டு இன்பமென்றது, ஒருகாலத்து ஒருபொருளான் ஐம்புலனும் நுகர்தற்சிறப்புடைத்தாய காமவின்பத்தினை; இச்சிறப்புப்பற்றி வடநூலுட் போசராசனும் 'சுவைபல வென்று கூறுவார் கூறுக, யாம் கூறுவது இன்பச்சுவை ஒன்றனையுமே' என இதனை மிகுத்துக் கூறினான்" (திருக்குறள், களவியல், அவதாரிகை) என்பதும இங்கே அறியற்பாலன.

கசு௩. சூளாமணி - முடிமணி. வாளார் மடற்கண்டல்-வாளரம்போன்ற மடலையுடைய தாழையின். கடல் இரவில அடங்காமல ஒலிக்கும். பரதவர் கடலில இரவிற் படகிற்சென்று மீனைப்பிடித்துக்கொண்டு விடியற்காலத்திற் றிரும்புவாராகலின், 'எம்மையாதிணை யிடமில மீளும் தண்டுறை' என்றாள்.

கசுச. பூவரசு, பூவிலலா அரசென்று இரண்டுவகை மரங்களுள்ளன.

கசுசு. அலையிலும் புலலாப் பொழுதிலும் காவலர் எய்துவிப்பார்.

கசுஎ. இறுவி - கதிர்கொய்த தினைத்தாள்.

கசுஅ. கலைமேயவள-சரசுவதி. வாய்த்தால் - கிடைத்தால், வாயின்கண்ணுள்ள நா.

கஎ0. காட்சி - பந்தர்க்காட்சி. வேங்கைமரம் பூத்தால் தினையை அரிவாராதலின், தலைவியை இற்செறித்தலும், தலைவன வருதலின்மையும் உளவாமென்பது கருதது.

கஎ௩. உய்யானம்-சோலை. பொய்யாதொழுகும் புனற் பொன்னி: "பொன்னிநதிபெண ணீததமு மமென்பர் வாயசஞ்சாலும் பொய்ப்பதன்றால்" (உகரு) எனபர் பின்னும்.

கஎச. இனி யாரைப் பார்ப்பேம.

கஎரு. ஒருதாள், இருதாள், பலகால் என்பவற்றில் உள்ளநயம் உணர்தற்பாலது.

கஎஅ. அம்மனை யானவள் - தாயானவளுடைய.

கஎகூ. சஞ்சிதம் - பழவினைத்தொகுதி.

கஅ0. பமரம - ப்ரமரமென்பதன் சிதைவு; "பமர மடுப்பக் கடாமெடுத் தூற்றுமோர் பகடு" மீனாட்சியம்மை. காப்பு. ச.

கஅ௨. மார்க்கமென்பது எதுகைபற்றி மாரகமெனவந்தது; 'சற்ப மருங்கலை யாறுந்தரித்த சடிலா" திருமயிலைத்திரிபந்தாதி, உஅ.

கஅ௩. கஙகு - கழுகு, பருந்து; கங்கமென்பதன் சிதைவு.

கஅஎ. கோட்டுமுத்து - யானை பன்றி இவற்றின் கொம்புகளிற் றோன்றிய முத்துக்கள். குருவிந்தம் - ஒருவகை மாணிக்கம்.

கஅஅ. கறையடி - உரல்போன்ற அடியையுடைய யானைகள்; "உரற்காற் கரி" (ககூரு) என்பர் பின்; இரத்தம் தோய்ந்தகாலையுடைய யானைகளென்றுமாம்.

கஅகூ. ஒப்பினள் - உடன்பட்டாள்.

ககூ0. ஐந்தலை நாகம்: இஃது ஒருவகைப் பாம்பு; "ஐந்தலையரவின் சீற்றத் தாரழல்" (சீவக. எசஅ.) அலமேயல் - வருந்தாதே.

ககூக. நாமத்து ஐவேல் அண்ணல் - அச்சத்தைத் தருகின்ற அழகிய வேலையுடைய அண்ணலே. தாமத்து ஐம்பால் - மாலையையணிந்த ஐந்துபகுதியையுடைய கூந்தல்; ஐம்பாலினியல்பை "மைந்நூற்றனைய" (சீவக. உசநஎ) என்பதும் அதனுரையும் விளக்கும். தயாவினைப் பெறற்றென்னை விளையும்.

ககூஉ. குடம்பை - பறவைக்கூடு.

ககூங. தந்திவெண் கோட்டு வேலி - யானையினுடைய வெள்ளிய தந்தத்தாலாகிய வேலியையுடைய.

ககூச. வா - வருவாயாக; பொழிற்கு வாவென்க.

ககூரு. உரற்காற்கரி: "உரற்காலயானை" (குறுந். உகூஉ.) ஆகமச் சரக்கார் - சைவாகமங்களாகிய நல்ல பொருள்கள் நிரம்பிய; சரக்கு - பொருள்; 'சரக்கறைபோவென றனிநெஞ்சம்'' தேவாரம்.

ககூசு. இடையாவருக்குந் தெரியாய் - யாவருக்கும் தெரியாத இடையையுடையாய். மதி - சந்திரன்; உடையா - தோற்று. மதி அகன்றன்று. தலைமகளைத் திருமகளாகப் பாவித்தமையால், தாமரைப்பூவைத் தலைவியுறையுளாகக் கூறினன்; "பூட்டிடும் பொன்னுறை கோயிலுக் காயிரம் பொற்கதவு" (உ0ரு) என்பர் பின்னும்.

ககூகூ. பாகம் - பகுவாய்; குளிகை: இஃது ஆச்சரியத்தை உண்டுபண்ணும் ஆற்றலையுடையது. அப்போது என்பதற்கு அந்தக் காலமென்றும், அந்தப் பூவென்றும் பொருள் கொள்க; சுட்டை அயலுக்கு அடையாக்கினும் பொருந்தும்.

உ0உ. செய்ம்மோ - செய்; மோ: முன்னிலையசை. கண்படை செய்யென்க.

உ0ச. அச்சுறுத்துமுன்னே - அச்சம் செய்வித்தற்குமுன்னே; அச்சு - அச்சம்; "அணங்கொற்ற வச்சுறீஇயன்று" பு. வெ. எ.

உ0ரு. ஆட்டு உகந்து ஆடும் - உயிர்கள் ஆட்டச்செய்தலை மேற்கொண்டு தாம் ஆடியருளுகின்ற; "ஆட்டிடு வாளுக தானே யாவர்வாற் கடிமை செய்வாம்" (தனியூர்ப்புராணம், கடவுள். ச.) எல்லிவாரல் - இரவில்வாராதே. பொன் - திருமகள்; என்றது தலைவியை. திருமகளுக்குக் கோயில் தாமரைப்பூ; அதற்கு இதழ் ஆயிரமாகலின், ஆயிரம் பொற்கதவென்றருள். இக்கருத்து, இந்நூல் ககூசு-ஆஞ் செய்யுளிலும் வந்துள்ளது; "காமரை வென்ற கண்ணோன்" (திருச்சிற். கஙச) என்பதனாலும் அறியலாகும்.

உ0சு. நெல்லிமரங்களுள் ஒருவகை நெல்லியின்கனி அமுதமயமானதென்று கூறப்படும்.

௨௦௯. தமிழ்நாட்டு மன்னர்களாகிய சேர சோழ பாண்டியர்கள் முடி மன்னராதலின், இங்கே சோழனை 'மகுடமுடி வளவன்' என்றார்.

௨௧௦. தாண்டவம் - இறைவனது நடனம்.

௨௧௧. அளியார் மலர் - வண்டுகள் தேனையுண்ணும் பூ.

௨௧௨. என்னை அலைத்தனையே, துன்புற அலைத்தனையேயென்க.

௨௧௩. ஆர்ப்பரவஞ்செய்து - மிகமுழங்கி; "வார்கலைக ளார்ப்பரவஞ் செய்ய" (திருவா. திருவெம். ௧௨.) சங்கம் - கூட்டம், சங்கு. நகையால் - நகையோடு.

௨௧௪. அடப்பம்பொழில் - அடம்பமரத்தாலாகிய சோலை; இம்மரப் பெயர் அடும்பெனவும் வழங்கும். சிற்றிடைத்தன்மையொத்து யாவும் பொய்யா யினவாலென இயைக்க.

௨௧௫. கன்னிப்புன்னை - புதியபுன்னைமரம்; "கன்னி நறுஞாழல் கையி லேந்தி" (சிலப். ௭: ௯); "கருங்காவிச் செங்காவி" என்றது பொருண்முரண்.

௨௧௬. ஏதசாகரம் - துக்கக்கடல். சங்கேதம்-குறிப்பு; இது குழூஉக்குறி யெனவும் வழங்கும்; "சங்கேத மாம்பெயர் வேங்கை புரேசர்" வெங்கைக். ௬௪.

௨௧௭. விறப்பு அறியாமை - நடுக்கத்தைச்செய்யும் அறியாமை; "விறப் பக லுமையோர் பாகன்" திருநாகை. நாடு. ௨௨.

௨௧௮. மறி - மான்.

௨௧௯. காடி இருளிற் புற்றஞ்சோற்றைப் பெயர்த்தல், "ஈயற் புற்றத் தீர்ம்புறத் திறுத்த, குரும்பி வல்சிப் பெருங்கை யேற்றை, தூங்குதோற் றுதிய வள்ளுகிர் கதுவலிற், பாம்பு மதனழியும் பானாட் கங்குல்" (அகநா. ௮) என் பதனால் அறியலாகும்.

௨௨௨. புறச்சமயவாதிகள் தம்மட்கூடி மிக்கு முழங்குதலை, "சோமுத்தி யீசர் மெய்ந்நூற், லோசையிற் றேரப் பொறாமச்சர் பித்துறையொத்து" (௨௨௬) என்பதனாலும் பின்பு விளக்கினர். ஆய்துஞ்சினுலும் - தாய்துஞ்சினும்.

௨௨௩. சூரியனுதித்தற்கு முன்னாதாகச் சுக்கிரன் உதிக்குமாகலின், வெள்ளி கிழக்கே யுதிக்கும் வரையுமென்றார்; "வெள்ளி முளைத்த விடியல்" பு. வெ. ௨௦௬.

௨௨௪. நிதிவைப்பறைகாப்பவர்மான - பொற்றிரள்கள் வைக்கப்பட்டுள்ள அறையைக்காப்பவர் அவ்வறையைச் சூழ்ந்து முழங்கிக்கொண்டே பறைகொட்டி வளைந்துவருதலையொப்ப; "சல்லியங் கருவி சூழ்ந்து கண்படுக்கு மாடமுந், தெவ்வர் தந்த நீணிதி சேர்ந்த செம்பொன் மாடமும்" (சீவக. ௪௫௫.) ஊர் வளை காவலர் - ஊரைவளைந்து காக்குங்காவலர். ஓசையாகிய சங்கனல்.

௨௨௬. கூகை இருத்தற்குரியமரம் வாகை; "வாகை விரிந்துவெண் ணெற் றொலிப்ப மயங்கிருள் கூர்நடு நாளையாங்கே, கூகையொ டாண்டலை பாட" அம்மை மூத்ததிருப்பதிகம், ௫.

௨௨௭. பதாகை - பெருங்கொடி; இது படாகையெனவும் வழங்கும். பானு ளிரவில்-பாதியிரவில்; "பாம்பு மதனழியும் பானாட் கங்குலும்" (அகநா. ௮); "பானுளிரவினிற் றூதுகொண்டோன்" (திருவிளை. கடவுள், ௨௦.) சூட்டு-கோ

பூிச்சேவலின் தலையிற் செங்காந்தட் பூவைப்போன்றுள்ளதோருறுப்பு; "கொய்ம்மலர தோன்றிபோற் சூட்டுடைய சேவலும்" (சீவக. எ௩) முட்டாள்: இஃது இகழ்ச்சிக் குறிப்புமாம்.

௨௨௯. தொடக்கு - அன்பின் பிணிப்பு.

௨௩௧. நீவி - நீக்கி; "பொற்றோடு நிழன்மணிக் குழையு நீவி" (சீவக. ௪௮௮); நீவிச்செல்வமோவென வியைக்க.

௨௩௨. நடுக்கண்டு அன்னை யறியாதெனப் பிரித்துப் பொருள்கொள்க.

௨௩௩. மின்னே இனையல் - மின்போல்வாய் வருந்தாதே.

௨௩௫. பசலை - பிரிவால் உண்டாகிய வேறுபட்டநிறம்.

௨௩௬. ஈரத்து - அன்புடைமையால்.

௨௩௭. என்னை முறிவாங்கி ஆட்கொண்ட - அடியேனை அடிமையோலையெழுதுவித்து வாங்கி அடிமைகொண்ட; "ஆவணத்துடையா னடியார்களை", "ஆவணஞ்செய் தாளுங்கொண்டு" (தேவாரம்.) "என்னைமுன்னாளுடையான்" (திருச்சிற். எ); "ஆவணங் கோவணங் கொண்டடியார்தம்ம யாண்டவனே" திருவையாற்றந்தாதி.

௨௩௮. அலரினின்றும் வண்டு உகவென்பது ஒருசொன்னயம். இச்செய்யுளின் மூன்றுமடி மடக்கணி.

௨௩௯. ஆறுறுக்கப்புறமாய்நின்ற கோமுத்தியப்பர்: "ஐயாறினொடாறுக் கதீதன்" சீகாழிக்கோவை, ௧௫௮.

௨௪௧. எத்தாற் பிரிந்தவர்: "எத்திட்ட நெஞ்சுடைக் கள்வரைப் போற்றிமைத்து" (௮௬) என்றார் முன்னும். தொத்தாரமல - கொத்துகொத்தாகக் கவடுவிட்டெரியும் தீ. சுகமுளதா - இன்பமுண்டா? இல்லை.

௨௪௨. தோடு - பூமடல். காடு - மயானம்.

௨௪௩. அளைவா யரவு-புற்றின்கண்ணேயுள்ள பாம்பு. இறைவன் பூண்ட அரவ புற்றின்கணுள்ளதன்றாதலால், அளை அரவின சாதிககு அடை; "புற்று டரவணி புத்ரத்யாகர்" (௩௭௫) என்பதற்கும் இவ்வாறே கொள்க; "புற்றரவே யாடையுமாய்ப் பூணுமாகி" (தேவாரம்.) உளைவாய் - வருத்தத்துடன்.

௨௪௫. ஏதிலர் - அயலார். எங்காதாடு அழற்பகழி தைத்தலை மாணும் அச்சொல்.

௨௪௭. என்ன - என்று தாய்வினவ. ஆரணங்கு என்செய்வாள்.

௨௪௮. "ஒருவன் மலர், நாரின்றி யேதொடுந் தான்பெரு மாலை நணுகுறவே" என்பது சீகாழிக்கோவை, ௪௮௨.

௨௪௯. அளித்தமணி-நீ கையுறையாகக்கொடுத்த மாணிக்கத்தின். "கிளியாகமங்கள் கிளத்திட" என்றது, "சுகரதாவலாத்தமிழ வேதங்க ளோதுந்துறைசைநகர்" (௩௧௦) என்பதுபோன்றது.

௨௫௧. புன்கம்பூவிற்குப் பொரி உவமைகூறப்படும்; "பொங்கர் வெண்பொரி சிதறின புன்கினம்" சிலப். ௧௨: "செம்பான வேங்கை".

௨௫௨. மறையோர்க்குத் தாமரைமாலை யுரித்தாகலின், 'தார்மறையோர்' என்றார். அந்தணரையுஞ் சான்றோரையு முன்னிட்டு மணஞ்செய்வாராதலின், 'மறையோருடனீதுன்னின' என்றாள்.

உ௫௩. வேங்கைமரம்பூக்கச் சந்திரன் ஊர்கோள்கொண்டகாலம் மணஞ் செய்தற்குரியகாலமாதலின், 'ஆராயு நாண்மற்றென்' என்றாள்.

உ௫௪. பாண்டரங்கம் - இறைவனுடைய ஒருவகைக்கூத்து; இது, வானோராகிய தேரில் முன்னின்ற திசைமுகன் காணும்படி கலைமகள் வாசிக்க இறைவன் வெண்ணீற்றை அணிந்தாடியது (சிலப். சு: சச - ரு); இது பண்டரங்க மெனவும் வழங்கும்; "பண்டரங்கமாடுங்கால்" கலி. கடவுள்.

உ௫௫. கோல் - அம்பு. கூடல் - மதுரை. கண்ணார் - காதலர்களை உடைய. தயவு - தயை; "தயவுறு பிரத்தியாகாரமும்" பிரபோத. விவேகன் வனம். அ.

உ௫௬. "படாடம்பின், பிரசமலர் மணமாறாத் துறைவர்" (௬௦உ) என்பர் பின்னும். முட்டை - அன்னத்தின் முட்டையை.

உ௫௭. அங்கமாலை - என்புமாலை. பல வங்கம் - பல கப்பல்கள். இலவங்கம் - கிராம்புமரம்; "ஊரில வங்கமு மின்காநப்பூரமும்" (சீவக. ககூ௦௧); "கந்தமார் குழைமுகத் தலரில வங்கங் காட்டும்" காஞ்சி. நாடு. சரு.

உ௫அ. பராரை - பருமையாகிய அரை. ஆலி - நீர்த்துளி; "மைக்க ணில வாலி சிந்த வைகிய மங்கை" (நைடதம், கைக்கிளை. க); சிந்த இலைக்கு மென்க. பொருட்டால்: ஆல், அசை. பாலிப்பை - தருவாய்.

உ௫௯. வரல் - வாராதே. இற்பயம் - வீட்டிலுள்ளாருக்குளதாகும் அச்சத்தை. காவலர் - ஊர்காவலர்.

உசு௦. பெற்றிமை - தன்மை; "பிறவற முரைத்தோர் பெற்றிமை பெல்லாம்" மணி. உக: கசுக.

உசுக. வெண்குழை - சங்ககுண்டலம். எல்லி - இரவு. பாதாளம் மட்டு அவல் - பாதாளமளவும் பள்ளத்தையுடைய. இட்டிடை - சிறிய இடையை யுடையாள்.

உசுஉ. "தொழுந்துதிக் கைக்குப் புகலூ ரொருவெனுஞ் சொன்னவப்போ, தெழுந்துதிக் கைக்குறித் தெங்கள் பிரானெனு மீசனெனும், விழுந்துதிக் கைக் குன்ற மொன்றுரித் தோனெனும் வெண்ணெனப்பின், கொழுந்துதிக் கைக்குப் பகல்போன தென்னுமென் கோமளமே" (திருப்புகலூரந்தாதி) என்னுஞ் செய்யுளை இதன் பின்னிரண்டடிகள் ஒத்து விளங்குகின்றன. வெய்துயிர்க்கும் - வெய்துயிர்ப்பாள். விழுமென்பது முதலியவற்றிற்கும் இப்படியே பொருள்கொள்க.

உசுங. அக்காரம் - சருக்கரை. அரியேறு - ஆண்சிங்கம். வல்சி தேர் - உணவை ஆராய்கின்ற. வேரல் தூறு அகர் - மூங்கிற்புதர்களையுடைய வழியில். வாரல் - வாராதே. துடிக்கைக் காவலர் - உடுக்கைப்பறையைத் தாங்கிய கையையுடைய காவலர்.

உசுச. நறுமை - நன்மை; "கோமுத்தி நாதர் நறுந்துறைசை" (உகூ௦) என்பர் பின்னும்; அன்பின் புனல்-அன்பாகியபுனல். எண்ணும்-எண்ணுவாள்.

உசுரு. தவமேருவாந் தொண்டர் - தவத்தால் மேருமலையைப்போன்ற தொண்டர்; "மல்லன் மலையனைய மாதவருரை" (சீவக. உஎஅக) சிவம்-முத்தி. நவம் - புதுமை. அணிநலம் தொலைகின்றதால்: "மென்மாந் தளிர்வண்ணம் வெண்கொண்டலாகி மெலிபவள்" (உசுச) என்றார் முன்னும்.

உ௬எ. இத்தலத்தில் தருமதேவதை தவஞ்செய்து இறைவனுக்கு வாகனமாகிய விடையாயிற்றென்று புராணங்கூறுமாகலின், ஒற்றைப்பொருவிடைப் புத்ரத்தியாகர் என்றார்; "ஆவினருங் கன்றுறையு மாவடுதண் டுறையணைந்து" (பெரிய. திருமூல. ௬.) இதனால், இத்தலத்தை 'கோவடு' என்று சூதசங்கிதை கூறும்.

உ௬அ. தன்னாமம் - அற்பமும். தவிர்க்க அறியேம். செல்லும்: இது முன்னிலைப் பன்மையேவல்.

உ௬௯. சுடர் விளக்கன்ன மடந்தை கல்லாய்: "மனைக்கு விளக்க மடவாள்." என்பிடர் பிடித்து உந்தலின் - என்பிடரைப் பிடித்துச் செலுத்துதலால்; உலகவழக்கு இது.

உஎ0. அழுந்தச் சொல்லுமாறு ஏது என்க. அருள் நீர் பெய்கொண்டல் நீர்; நீர்: இது சிலேடைநயம்படநின்றது; "நீர்வந்தா லாசை நெருப்பவியுங் காணுமே" அருணைக். ௬௩.

உஎ௪. பதம் - பதவி. இம்மணற்குன்று, வான்நீண்டு மணற்குன்று, நெடுமணற் குன்றெனக் கூட்டுக. காண்டும் - காண்பேம். வா - வருவாயாக.

உஎ௫. கொங்குவந்து ஆர் - மணத்தையுடைய காற்றுப்பொருந்துகின்ற; வந்து - காற்று. இரிந்திட வந்தாரென்க.

உஎ௬. உழுவல் அன்பு - எழுமையுந் தொடர்ந்துவரும் அன்பு.

உஅ௪. தேரில் மணிகட்டியிருத்தல் மரபு; "மணிநா யாத்த மாண்வினைத் தேரன்" (அகநா.௪); சிலம்புஞ் சிலம்படி: மடக்கு. பருமம்-ஒருவகை மேகலை. பொங்கையில் - பொங்குகையில்; பொங்கும்பொழுது, "தயிலையி லேயிடர் துன்னையி லேதெவ்வர் சூழையிலே, பயிலையி லேயிருட் பாதியிலேபசும் பாலனத்தை, அயிலையி லேவய தாகையி லேநமக் கார்துணை சான், மயிலையி லேவளர் சிங்கார வேலர் மயிலையிலே" (தனிப்பாடல்) என்பதில் இத்தப்பிரயோகம் காணப்படுகின்றது.

உஅ௫. செருந்தியின்பூ பொற்காசு போல்வதாகலின், செருந்தி பொன்தருமென்றார். "செருந்திபொன் சொரிதருந் திருநெல் வேலியுறை செல்வர்தாமே" என்பது தேவாரம். "அன்பர் சென்றுழிமுள், ளிண்டுங் கழையும் பயிலும் வெங்கானியல் கேட்டுமிங்கோய், கண்டுங் கலங்கல்செல் லாதிந்த வூரெற் கழறலன்றே" (தஞ்சை. உ௬௬) என்பதன்பொருளை இதன் பிற்பகுதி ஒத்து விளங்குதல் காண்க. யான்படு நோயென்றது, தலைவன் காட்டுவழியிற் சென்று வருந்துகின்றானே என்னுந் துன்பத்தையே.

உஅ௬. எட்டாந் திருவுரு - அட்டமூர்த்தி; பிருதுவிமுதலிய எட்டுவடிவத்தையுடையார்; "பாரு நீரொரி பல்கதி ரிரவியும் பனிமதி யாகாச, மோரும் வாயுவு மொண்கனல் வேள்வியிற் றலைவனு மாய்நின்றார்" தேவாரம். அயரேல்-வருந்தாதே. செவ்வரக்கு உருக்கி விட்டாலன நெறி வெஞ்சுரம்-செவ்வரக்கையுருக்கிவிட்டாலொத்த வெப்பத்தையும் செந்நிறத்தையுமுடைய வெவ்விய பாலைநிலத்தில். அன்றில் விள்ளா முயக்கம் - அன்றிற் பறவையின் பிரியாதகலப்பை.

உஅஎ. கார்காலத்திற் கொன்றை பூக்கும், மயில் அகவும்.

உஅஅ. மலைநெல்லைவித்திய நம்மவர் அதற்கு மழைவேண்டி முருகக்கட வுளைத்துதித்தலாற் பெய்யுமழையேயன்றி இது கார்காலத்திற் பெய்யுமழை யன்றென்றாள்.

உஅகூ. துவர்ச்செங்கோடல் - செங்காந்தள்; துவர்ச்செம்மை: இருபெய ரொட்டு. உற்கை - கொள்ளி. கோபம் - இந்திரகோபப்பூச்சி. உங்கு-இங்கே. கொள்ளியைக்கண்டால் மழை நிற்குமென்றும் வெள்ளமடங்குமென்றுங் கூறு தல் இங்கே அறியற்பாலது.

உகூ0. வெருவரல்-அஞ்சாதே. துகிற்கொடி- துவசம்; இது வெளிப்படை.

உகூக. இன்பதுன்பம் அவர்க்குமுளவாமென்பது, "தோகைக்குந் தோன் றற்கு மொன்றாய் வருமின்ப துன்பங்களோ" (திருச்சிற். எக.) என்ற பெரியார் வாக்கின்பொருளைத் தழுவியது.

உகூஉ. கண்ணீர் குடங்கைவழியே வார.

உகூஙூ. இத்தலத்திற் பலசித்தர்கள் வாழ்தலினால், 'துறைசையில் வாழ் சித்தர்' என்றான். நவகோடிசித்தபுரமென்றும் இதற்கு ஒரு திருநாமமுண்டு. என்னுயிரென்றது, தலைவியை.

உகூச. இயம்பும்: இது முன்னிலையேவற்பன்மை.

உகூரு. புரி - முறுக்கிய. செஞ்சடைமேற் சலம்வைத்த. பொருமல் - அழுகை, துக்கம். ஓசையாகிய அமிர்தம். தான்வருதலைத் தெரிவித்தற்பொ ருட்டுத் தலைவன் வலம்புரிச்சங்கை முழக்கினன்.

உகூஎ. அ அயல நாட்டுழி - அந்த அயல்நாட்டில்.

உகூஅ. சுவையாரமிர்தன்ன சொன்னதியாகர்: "அடியார்க்கமுதன்" (திருவாசகம்.) கவையாரமனம் - பிளவுபட்டமனம்.

ஙூ00. முடியாறுகொண்ட - ஆறுமுடிகளைக்கொண்ட; கூக - ஆம் பாடற் குறிப்பைப்பார்க்க. முன்வணணம் ஆகுக.

ஙூ0க. சோமன்றலைக்கணி சொன்னதியாகர்: "சோமந் துணியைத் தலை மீது சுமந்ததென்னோ, தாமக்கருவைப் பதிக்கணவளர் தம்பிரானே" தனிப் பாடல்.

ஙூ0உ. பரசுதல் - துதித்தல்.

ஙூ0ஙூ. சிந்தை - வருத்தம்: "சிந்தைகூர்மனத்தையாகி" சீவக. ககஉச.

ஙூ0ரு. மரா - ஆச்சாமரம்; "தேம்படமலர்ந்த மராஅமெல் லிணரும்" (மலைபடு. சஉஅ.) பராய் - துதித்து.

ஙூ0சு. முதுக்குறைவு - பேரறிவு. பொதுக்குறை நீர்மணம் - சிறப்பாகிய மணம். தூஉய் - தூவி.

ஙூ0அ. சது - நான்கு; "சதுமுக மாகச் சேனை நடாத்தலைப் பெய்கவென் றான்" (சீவக. எசுசு.) மது ஏய் - தேனைபொருந்திய.

ஙூ0கூ. தோய்ந்த் - கலந்த. அவர்சொலலினும் பொய்வருமென்று அறி யேன். ஙூக0. தமிழ்வேதங்களைச் சுகங்கள் ஓதும் என்க.

ஙூகக. சேயழல் - செம்மையாகிய அழல்; "சேயச்செந் தவிசு நெருப் பென்றெழுஞ் சேடியார்" சீவக. உஙூசஅ.

௩௧௨. அவரே என துயிர்க்காவலரே.

௩௧௩. கா - சோலை. கைதவம் - வஞ்சனை.

௩௧௪. வேலைக்கரைமணற்கு ஒப்புறுங்கங்குல் - நிலைவையுடைய இரா.

௩௧௫. மடைத்தேங் குவளை: ௭௦-ஆம்பாட்டின் குறிப்பைப்பார்க்க. ஓர் புடை - ஒருபக்கம்.

௩௧௬. கண்ணும் பிறிதாய் மெய்யும் பிறிதாயெனக் கூட்டுக. கரியுண்ட வெள்ளிற்கனியென - வேழமென்னும் பெயரையுடைய நோயால் உள்ளீடு இழக்கப்பெற்ற விளாம்பழத்தைப்போல; "வேழந் துற்றிய வெள்ளிலேபோல்...தமியனுக", "வெஞ்சின வேழ முண்ட வெள்ளிலின் வெறிய மாக", "வெஞ்சின வேழ முண்ட விளங்கனி போன்று" (சீவக. ௨௩௨, ௧௦௨௪, ௧௧௨௨); "வெண்கோட்டுக களிறுண்டதோர் விளங்கனிபோல் வறிதா" (தஞ்சை.௫௬); "ஓர்மத யானை...மடப்பிடி வாயிற் கனிந்தவிழும், விளங்கனி நல்கக்கண் டானுங் கண் விளங்கனியே" (வெங்கைக். ௧௨௬); அந்நோய்க்கு வேழமென்னும்பெயர் இருத்தலால், யானையின பரியாயபபெயர்களையும் அதற்குரிய அடைமொழிகளையும் கவிகள் கூறுதல் மரபு.

௩௧௮. 'பங்கயப் பாதஞ்சூட்டும்' என்பது வகையுளியாய் இதில் வந்தது. ஏதென்ற சித்தம் - யாது என்ற கருத்து.

௩௧௯. இச்செய்யுள் எழுத்துச்சுருக்கமென்னும் அணியிலக்கணத்தின் பாற்படும்; 'காவிரி' எனனும் இப்பெயரை எழுத்துப்பெருக்கமென்னும் இலக்கணத்தில் அமைத்து ஒருவர் பாடியிருக்கின்றனர்:—"சோலையை யோரெழுத்தா லெனசொலலுந தொகைதன்மே, னீலப்பே ரெவ்வெழுத்தி னுனிரம்பு மாலைக், குடைவேந்தன் செனனி குலநதியின் பேரைக், கடைசேர்நத வோரெழுத்தாற் காண" நன். மயிலை. மேற.

௩௨௦. தண்ணீர் தன்னுள் அழுத்துதலால்.

௩௨௧. தோற்ற அப்பகைமையைத் தீர்க்கும்பொருட்டு.

௩௨௨. சீறுதல அரவிற்கு அடை. 'அன்று' என்பது ஐம்பான் மூவிடத்துக்கும் பொதுவென்பா, நேமிநாதமுடையார்.

௩௨௩. வாண்மதி - பிறை. நம்மாணிக்கக்கொம்பென்றது, தலைவியை.

௩௨௪. "கழுமல வூர்க்கம்பொ, னுயிரங் கொடுப்பர் போலு மாவடு துறையனுரே" தேவாரம்.

௩௨௫. மால் தறுகண்ணரின் - மயக்கத்தையுடைய தறுகண்மையை (அஞ்சாமையை) உடையார்போல.

௩௨௬. பரம்பு - பரவிய. பாரமாகிய கொண்டையையும் கொங்கையையுந்தாங்கி. போதும்போது - போகுங்காலத்தில்.

௩௨௭. வடவைக்கும்: உம்மை, உயர்வுசிறப்பு. இயைந்தன்று - உடன்பட்டது. அன்னத்தின் தூவி - அன்னச்சிறகு.

௩௨௮. அணைமலர்க்கு - அணையிற்பரப்பிய பூக்களுக்கு. பெண்துணையுடன் - உமாதேவியாருடன்.

௩௨௯. அந்தகாரி - அந்தகாசுரனுடைய பகைவர். அப்பிறப்பில் - பழம் பிறப்பில்.

௩௩௦. சிறந்தன்று - சிறந்தது. செந்நெல் செங்கருப்பம் பயிரிற்சிறந்த - நெற்பயிர்கள் கரும்புபோலவே சிறத்தற்கு இடமாகிய; "செந்நெலே கன்னல் காட்டச் சேர்ந்தயற் செறுவினின்ற, கன்னலே கமுகுகாட்டுங் கங்கைநீர் நாட" (வி - பாரதம், நிரைமீட்சி. ௧௦௫); செந்நெலாலும் கருப்பம் பயிராலும் சிறந்த என்றலும் ஆம்.

௩௩௧. கொன் - பயனில்லாமை. பயந்தார் - பெற்றோர். என்பும் அரவமும் புனைந்த.

௩௩௨. கங்காளர் - முழுவெலும்பை அணிந்தவர். பொங்கா - பொங்கி. நாவாற்சுடப்பட்டபுண்: "நாவினாற் சுட்டவடு" திருக்குறள், ௧௨௯.

௩௩௩. உத்தமனார் சுருதியின் - உத்தமனாருடைய திருவாக்காகிய வேதம்போல.

௩௩௪. நீங்கள் என்பது செய்யுளிலும் வழங்குகின்றது; "நீங்களு மவரு நேய நெறி முறை தவறாது" (வி. பாரதம், சூதுபோர். ௩௮.) அடைகுவித்து யான் எய்துவல்.

௩௩௫. கல் வேல் போலத் தைத்தல்: - "வெங்காட்டு அரமாய கற்றிரட் காற்றினவோ" (௩௫௫) என்பர் பின்னும்.

௩௩௭. நவபேதருமானார் - ஒன்பதுவகையாகிய திருவுருவத்தையு முடையார். அருவத்திருமேனி நான்கு, உருவத்திருமேனி நான்கு, உருவருவத் திருமேனி ஒன்று. நுதல வேர்வு நீவி - நுதலவேர்வையைத் துடைத்து; "நங் கையைத் தழீஇ நன்னுதல் நீவி" (பெருங். ௧. ௩௬: ௩௧௫.) ஐம்பாற்கு - கூந்தலுக்கு.

௩௩௮. அகளன் - அமலன். உம்பர்பிரான்மகள் - இந்திரன்மகளாகிய தெய்வயானை. அவன் மருகன்-முருகன். நீபத்தாடை-கடம்பமாலை; "மராஅத், துருள்பூத் தண்டார் புரளு மார்பினன்" முருகு. ௧௦ - ௧௧.

௩௩௯. இனன் - சூரியன். செல்லொணாது - செல்ல ஒண்ணாது. மரைப் பால் - மரையென்னும் மிருகத்தின்பால். வாமான் தசை - வாவுகின்ற மானின் இறைச்சி; "மரையான் கறந்த நுரைகொளம்பால், மான்றடி புழுக்கிய புலவு நாறு குழிசி" புறநா. ௧௬௮.

௩௪௦. மதி ஊருகின்றமதில். துங்கம் - மேன்மை.

௩௪௧. ஞானச்செல்வர் - ஞானாசிரியர்.

௩௪௨. கோகிலம் எங்குற்றது - தலைவி எங்கேசென்றாள்; "குயிலனைப் பேசுமெங் குட்டனெங்குற்றது", திருச்சிற். ௨௨௪.

௩௪௩. சமரம் - போர். விரும்பாரின் - விரும்பாதவரைப்போல. அன்னை - தாயே. வள்ளிலை - பெரிய இலை.

௩௪௪. முலையமிர்து - பால். கொளுத்தி - பொருத்தி. சலம் - தீவினை; "சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல" (திருக்குறள். ௬௬௦.) நஞ்சுகள் பல வாதலின், 'நஞ்சின் ஒன்றுஎனக்கண்டு' என்றாள். "மாறுவளவயல்" (தஞ்சை. ௩௨௫) என்னுஞ் செய்யுளின்பொருளை இச்செய்யுள் தழுவி வந்தது.

௩௪௫. "தோயமுறும்பாலை வன்னிக்கு விடுவாயென்றாள்" என்னுங்குறிப் புரை, "இராமேசுரத்திற்குப் போவனென்றாள்" (தனிப்பாடல்) என்பதை நினைப்பூட்டுகின்றது. சோலையம் பூங்குழல் - சோலையைப்போன்ற அழகிய பூவையணிந்த கூந்தலையுடையாள்; "கண்வேலையுங் கூந்தனெடுங்,காடுங் கடந்து வந்தான்" (வெங்கைக். ௫௭.) நென்னல் மாலையில் - நேற்றிரவில்.

௩௪௬. பைய நடந்தாளை யான்உய்யக் காட்டுதி.

௩௪௭. உன்னு - உன்னி. நின்பொன்னனவள் - நின்மகள்; "பொன் வரக் கண்டன" (௩௭௧) என்பர் பின்னும்.

௩௪௮. உன்மதி நன்றுநன்று: இஃது இகழ்ச்சிக்குறிப்பு; 'ஒன்றுநினைக்க' என்னுந்தொடர், "ஒன்றைநினைக்கின் அது வொழிந் திட்டொன்றாகும்" (நல்வழி, ௨௭) என்பதை நினைப்பிக்கின்றது.

௩௫௦. தெற்றியவார்சடை: "தெற்றார்சடைமுடியான்" திருவா. உயி ருண்ணி. ௫.

௩௫௧. அவையே அரங்கு கொண்ட - சபையையே ஆடிடமாகக்கொண்ட. வரங்கிடத்தல் - மகப்பேறு முதலியனவற்றைக்கருதினோர் செய்யும் ஒரு தெய் வவழிபாடு; "வரங்கிடந் தான்றில்லை யம்பலமுன்றிலம் மாயவனே" (திருச்சிற். ௮௬.) உள்ளினும் - நினைத்தாலும். வநதி - மலடி.

௩௫௩. கடமான் - ஒருவகை மான். நிணப்பலி - நிணத்தையுடைய பலி. இடுவல - இடுவேன்; "நிணப்பலியோக்குவன (திருச்சிற். ௨௩௫.) கொடி - காகம், பூங்கொடிபோல்வாளாகிய தலைவி.

௩௫௫. அரமாயகற்றிரட்கு-வாளரம்போன்ற கலவின் தொகுதிக்கு. அம் மனை - அம்மானை. பஞ்சி - பஞ்சு. ஆற்றினவோ - பொறுத்தனவோ; மெல் லடிகள் ஆற்றினவோ என்க; "பஞ்சிகாண நீட்டினும் பையெனப பையெ னவென், றஞ்சிப்பின் வாங்குமடி" (நாலடி. ௩௯௬) என்பது இங்கே நினைக் கற்பாலது.

௩௫௬. ஆடவரீர் - விளையாடுதற்கு வருமின். முத்தஞ்சூட வரீரென் னும் - முத்தமாலையைச் சூடுதற்கு வாருங்களென்று சொல்லுகின்ற. பாடகம்- காலணிகளுளொன்று; 'பாடகமான தொடர்பு' என்பது "பாடகம் போலச் சூழ்ந்த பழவினை" (சீவக. ௫௧) என்பதனாலும் அதன் உரையாலும், "உயிர் புகும்சட்டகம்" எனனும்கல்லாடச் செய்யுளிலுள்ள 'பழவினைபுகுந்த பாடகம் போல்' என்பதனாலும் அதன் உரையாலும் விளங்கும். எங்ஙன் - எங்ஙனமென் பதன் சிதைவு.

௩௫௭. வில் விலங்கும் புருவத்தாள் - தான் ஒப்பல்லவென்று வில் வில கிச்செல்வதற்குக் காரணமான புருவத்தையுடையவள்; "சிலைவிலங்கு நீள்புரு வம்" (யா-காரிகை உரை. மேற்.) என்பர். வில்கு ஒலமென்று அதிர்குரல்-மிரு கங்கள் ஒல்லென்று முழங்குகின்ற ஒலியை. கேடொறும் - கேட்குந்தோ றும். கோட்டிமலத் தொலவிலங்கை - துன்பத்தைச்செய்யும் பாசமாகிய பழையபிணிப்பை. விலங்கரகண் - மலையின்கண்.

௩௫௮. நீதை அறியார். "துறைசைப் பதிவைத்த நீபமன்னாள்" (௧௮௧) என்றார் முன்பும். தலைவியேந்திய பாவையைக்கண்ட நற்றாய, அதன் தனிமை

யைக்கண்டு சோர்வுறுவள் என்பதை, "இதுவென் பாவை பாவை யிதுவென், னலமரு நோக்கி னலம்வரு சுடர்நுதற், பைங்கிளி யெடுத்த பைங்கிளி யென்றி வை, காண்டொறுங் காண்டொறுங் கலங்க, நீங்கின ளோவென் பூங்க ணோளே" (ஐங்குறு. ௩௭௫) என்னும் அருமைச்செய்யுள் நன்கு விளக்குகின்றது.

௩௫௯. ஒள்ளொளி - மிக்க ஒளி. 'வெள்ளிவெற்பின் றௌள்ளொளிபாய்ந்த திகந்தமும்' என்பது நூலாசிரியருடைய சைவப்பற்றை நன்கு புலப்படுத்து கின்றது. அள்ளொளி - செறிந்த ஒளி. அணங்கல் - வருந்தாதே.

௩௬௦. வெப்பு அழல் ஆற்று - வெம்மையையுடைய நெருப்புமயமாகிய வழியில். சென்றனளே: ஏ, வினா. முக்கோல்பிடித்த முனிவர் முக்கோற்பகவ ரென்று வழங்கப்படுவர்; தொல். மரபு. சூ. ௭௦.

௩௬௧. "மன்னர் திருவு மகளி ரெழினலமுந், துன்னியார் துய்ப்பர் தகல் வேண்டா" (நாலடி. ௧௬௭) என்பது இதன் இறுதியடியின் பொருளை நன்கு விளக்குகின்றது.

௩௬௨. கண்டனையே: ஏ - வினா. புலியின் எயிறு இருந்தாலி - புலிப்பல் லைக்கோத்த பெரியதாலி; "புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி...கானவன் மகளே" அகநா. ௭.

௩௬௩. நீந்தியென்றாள், கடத்தற்கருமைபற்றி. "தான்றுயாக் கோங்கர் தள்ர்ந்து முலைகொடுப்ப, வீன்றாய்நீ பாவை யிருங்குரவே - யீன்றாண், மொழி காட்டா யாயினு முள்ளொயிற் றாள்சென்ற, வழிகாட்டா யீதென்று வந்து" (திணைமா. ௬௫) என்பதன் பொருளையும் சொல்லையும் இச்செய்யுள் தழுவி மிக அழகுபெற்றுள்ளது.

௩௬௪. கவை ஏய் அழல் - பிளவுபட்டு எரிதல் பொருந்திய நெருப்பு; "கவைக்கொழுந் தழல்" (திருவிளை. அவை. ௨.) வேடர்களால் அச்சமுற்றகளிறு. செம்பார் - சிவந்தபூமி; பாலைநிலமாதலின், இங்ஙனங் கூறப்பட்டது; "செவ் வரக் குருக்கிவிட் டாலன" (௨௮௬) என்றார் பிறரும்; "அரக்கத் தன்ன செந் நிலப் பெருவழி" அகநா. ௧௪.

௩௬௬. அன்னே - தாயே.

௩௬௭. தூண்டாற் கருஞ்சுடர் - தூண்டாவிளக்கு; "தூண்டா விளக்கின் சுடரனையாய்" (திருவாசகம்.) என்கால சிரிந்து சலித்தன. அற்புடன் - அன் புடன் வருபவர்களைப் பார்த்துப் பார்த்து என்கண்கள் ஒளியை யிழந்தன. இச்செய்யுள், "காலே பரிதப் பினவே கண்ணே, நோக்கி நோக்கி வாளிழந் தனவே, யகலிரு விசும்பின் மீனினும், பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே" (குறுந். ௪௪) என்பதன் பொருளைப்பெற்று அழகுற்று விளங்குதல் காண்க.

௩௬௮. பழுவம்-காடு. தரீஇ=தருவி-தேடி. அன்னை: அண்மைவிளி.

௩௬௯. காம்பு - மூங்கில்.

௩௭௦. வதுவைக்கு இசையாரை - விவாகத்திற்கு உடன்படாதவர்களை. அரசந்தரு - அரசமரம். அதுலன்னும்=அதுலனும் - ஒப்பில்லாத தலைவனும். கூறும்: இது முன்னிலை யேவற்பன்மை.

௩௭௧. பொன்வரக் கண்டன்ன-திருமகள் வரக்கண்டாலொத்த; பொன்-தங்கமுமாம்; "பொன்னு னவள்சுரத் தூடே விடலைபின் போயினளே" (௩௪௭) என்றார் முன்னும்.

௩௭௨. அரியோசை - வண்டுகளின் ஓசை.

௩௭௩, இன்னே - இப்பொழுதே; "இன்னே பெறுதிநீ முன்னிய வினை யே" மநுது. ௬௬.

௩௭௫. 'புற்றுடாவணி' என்பதன்பொருளை ௨௪௩-ஆம் பாட்டின் குறிப் புரையிற் பார்க்க. பற்று - கையைப்பற்றி; "அங்கைத் தலம்பற்றி" (௩௭௮) என்பர் பின்னும்.

௩௭௬. ஆன்றவர் - அந்தணர் சான்றோருள்ளிட்டார். காணிய - காண் பதற்கு. வருமென்று - வருவாளென்று.

௩௭௭. வன்னிமுன் - அக்கினியின் முன்னே. பொன்னாண் - மாங்கலிய சூத்திரம்.

௩௭௮. சங்கைப்படாது - ஐயமின்றி.

௩௮௧. ஏதும் திரிவின்றி - சிறிதும் வேறுபாடில்லாமல்.

௩௮௨. வாண்மின்-மின்னலாகியவாள். பகழிச்சோனைப் படைமுகில்-அம் பை இடைவிடாது பொழிதலையுடைய மறவர்சேனையாகிய மேகம். தேர்பருகி யென்றது தலைவனை; முகில் மின்னி இடித்துப்பரிதியைச் சூழ்கின்றதென் பது மற்றொருபொருள்.

௩௮௩. கணைத்தெய்வம் - பாணமாகிய தெய்வம். இராமனுடைய அக் கினிக்கணை முன்பு கடலைக் குடித்தாற்போல என்னுடையகணையும் இச்சேனைக் கடலை இல்லையாக்குமென்று தலைவன் கூறினன்.

௩௮௪. வேதத்துரகத்தின் - வேதமாகிய குதிரையைப்போல; "சண்ட மறைப் பரிதனக்கா தாரமாகித் தரிப்ப" (திருவிளை. நரிபரி. ௭௬.) எம்மையர் வில்லை வளைத்துத்தோன்ற. வென்றந்த - புறங்காட்டிய.

௩௮௬. சோபானம் - படி. நாதாந்தர் - நாததத்துவத்தைக் கடந்தவர். உழப்பு - முயற்சி; "உழப்பின்வாரா வுறுதிகளுளவோ" முதுமொழிக்காஞ்சி.

௩௮௭. வஞ்சினம் - சூள், சபதம்; ௨௭-ஆம் பாட்டிற்காண்க.

௩௮௮. அலர்வாளி - பழிமொழியாகிய பாணம். மலர்ப்பாணமென்பது மற்றொருபொருள். "அலராம் பெரிய சரந்தொடுப் பார்கெங் ககப்பட்டதே" (௪௦௧) என்பர் பின்னும்.

௩௮௯. விரகவிடத்தை - பிரிவாகிய விஷத்தை. கொக்கிறகம் பூவையும் தாளியறுகம்புல்லையுமணிந்த கனகத்தியாகர்; "கொக்கிறகு சென்னி யுடையான் கண்டாய்" (தேவாரம்); "தாளியறுகின்றாய்போற்றி" (திருவாசகம்); வெற் பர்தந்த மணியென்றது தலைவன் கையுறையாகக் கொடுத்தமணியை; சித்தகுளி கையென்பது மற்றொரு பொருள். பதமனு - சொல்லாகிய மந்திரம். மருந்து - ஔஷதம். விடவேகத்தை மணிமந்திர ஔஷதங்களால் வெல்லுதல் உண டென்பதை இச்செய்யுள் அழகுறப் புலப்படுத்துகின்றது.

௩௯௦. விடையப்பகை - ஐம்புலன்களாகிய பகையை. நரை - வெள்ளை. நார் - அன்பு. அவாத்திரை - ஆசையாகியகடல். உன் திருவுள்ளம் எங்கே நின்றது.

௩௯௧. நம் தண்கொடி என்றது, தலைவியை. முருகு - மணம். இதழ் - பூவிதழ், கீழுதடு. அன்னை: இஃது அண்மைவிளி. தலைவனுக்கு வண்டு உவமை. ஒருகொடி, முகையைக்காட்டி மலர்ந்து மணந்தோன்ற இதழால் தேனைத்தர ஒருவண்டு உண்டு மனமகிழுமென்பது மற்றொருபொருள்.

௩௯௩. சிரம் அங்கை ஆண்டவர் - பிரமகபாலத்தை அகங்கையில் ஏந்தியருளியவர்; சிரமம் கையாண்டவரெனப் பிரித்து படைப்பயிற்சியில் மிக்க தேர்ச்சியுள்ளவரென்று பொருள்கொள்ளுதலும் பொருந்தும்; "பையரவின் சூட்டிற் சிரமபத நாட்டினன்" (திருவேங்கடமாலை, க.) வரமங்கையாள் - வரத்தால் உதித்த மங்கைப்பருவமுடையாள்; "மங்கைப்பருவத்திவள்" (வெங்கைக்.) என்பர். கந்தரமும் - மேகமும். கந்தரமும்பொழிகவெவ்...தாரைகான்றிடும்' என்பது, "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யுமழை" (திருக்குறள், ௫௫) என்பதனை உட்கொண்டது.

௩௯௪. நின்மகடேஉத்தானும் - நின்மகளும்.

௩௯௫. பிறிதொரு தெய்வம்-வேறொரு தெய்வத்தை. தெம்முனைமாட்டு-பகைவரிடத்தில். தெவ்முனை: "திருந்தார் தெம்முனை" பு. வெ. ௫௮.

௩௯௬. பாவையர் - இங்கே பரத்தையர். மாது - தலைவி.

௩௯௭. உரியோன் - தலைவன்.

௩௯௮. கம்பம் - நடுக்கம். கொம்பர் - கொள்கொம்பு.

௩௯௯. உள்ளலரில்-நினையாதவரைப்போலே. மேதிப்பகடு-எருமைக்கடா.

௪௦௦. துவர் உந்து வாய் மங்கை - பவளத்தை, ஒப்பல்லவென்று தள்ளுகின்ற வாயையுடைய மங்கையே.

௪௦௧. இடங்கு எயில் - அகழியும் மதிலும். முல்லைநிலத்திற் றோன்றிய மான் சரந்தொடுப்பார்க்கு எங்கே அகப்பட்டது என்பது மற்றொருபொருள்.

௪௦௨. இல்லத்து - வீட்டில். நாண் - நாணம். [யார்.

௪௦௩. ஒள் நந்தி - ஒளியையுடைய நந்தியென்னுந் திருநாமத்தினையுடை

௪௦௪. சதிர் - திறமைப்பாடு.

௪௦௫. 'பிரிந்தவர் கூடினாற் பேச வேண்டுமோ' (கம்ப. மிதிலை.) என்பதை உட்கொண்டு, 'கலந்தார் பெறுநலங் கூறுந் தரமன்று' என்றார்.

௪௦௭. சேய் உதயம் - பிள்ளை உதித்ததை.

௪௦௮. நிலவிய - நிலைத்த, விளங்கிய.

௪௧௩. "வைகொண்ட வூசிகொற் சோரியின் விற்றெறம்பில் வண்ணவண்ணப், பொய்கொண்டு நிற்கலுற் றேபுலை யாத்தின்னி போந்ததுவே" (திருச்சிற். ௩௮௯) என்பதை இச்செய்யுளுடன் ஒப்பிடுக.

௪௧௯. கூத்து இது என்? கூத்தரில் ஆரியக்கூத்தரென்ற ஒருவகையாருண்மையின், கூத்தனை 'ஆரிய' என்றாள்.

௪௨௦. ஆடமணங்கூர்-நீராடுதலால் வாசனைமிக்க. [யாகிய மங்கையர்.

௪௨௩. சிவம் தரும்-முத்தியைக் கொடுக்கின்ற. சேடிச்சிறுமியர்-தோழி

சஉச. கத்தர்=கர்த்தர் - தலைவர். ஆயம் நீத்து - தோழிமாரை நீத்து.

சஉரு. 'அமிழ்தென்ன......யுவர்த்தனிர்' என்பது, "வேண்டியபோ துள்ளங்கைத் தேனனே ஞோர்மதலை தோன்றியபின், னுள்ளங்கைத் தேனு னுமக்கு' (தனிப்பாடல்) என்பதை ஒத்து இனிமை பயக்கின்றது.

சஉசு. செவ்வி - சமயம், அழகு. [கையாது - தலைவன் வருந்தாதபடி.

சஉகூ. கறுப்பென்பதற்கு மறுவென்றும் பொருள் கொள்க. ஊரன்

சஙஉ. ஓவிலர் - ஒழிதல் செய்திலர்; நன்னாளில் - முகூர்த்த தினத்தில்.

சஙச. கல்வி வாய்ந்தவர் வளராநிற்பர்.

சஙசு. இனி என்செய்கோ - இனி என்செய்வேனோ.

சஙஎ. மகரம் - ஒருவகை மீன். தகரம் - மயிர்ச்சாந்து.

சஙஅ. தேக்கம் - நிறைதல். அறப்புறங்கள் - தருமத்தின்பொருட்டு விடப்பட்டுள்ள இறையிலி நிலங்கள்; "அடிசில் வைக லாயிரம் மறப்புறங்க ளாயிரம்" (சீவக. எசு.) கட்டளை - விதி.

சஙகூ. மலங்காவுகை - மயங்காதபடி. நீலம் - கருமை.

சச0. கறை - விடம், கரியநிறம். இறைகொண்ட - தங்குதல்கொண்ட. மால் - மேகம். [காணிக்கை.

சசக. அல் உந்திய - இரவை ஒப்பல்லவென்று தள்ளிய. அடியுறை -

சசஉ. நீந்தா - கடக்கமுடியாத. மாந்தாவகை - இறவாத வண்ணம்.

சசங. நமர்-நந்தலைவர். சசச. கழலம் கருக. பனியினைக்கண்டிலரோ.

சசசு. 'உயிர்கட்கு அருந்துணையாய் நின்ற கோமுத்தி யீசர்': "அருந்துணையை யடியார்த மல்லல் தீர்க்கு மருமருந்தை" தேவாரம். [யுடையவர்.

சசஎ. சாந்தம் - சந்தனக்குழம்பு. ஏந்து அத்தன் - ஏந்திய கையை

சசஅ. எஃகம் - வேல். கோவாத முத்தனையாய் - துவாரம் செய்யப் படாத முத்துப்போல்வாய். [பனிபெய்ய.

சசகூ. தொனித்திடும் - முழங்கும். பனித்திரள் தூங்க - மிகுதியாகிய

சருக. நாவியங் குழலாய். [குமரி - பாற்கடலிற்றோன்றிய திருமகள்.

சருஉ. பகிரண்ட கோடி - வெளியேயுள்ள அநேக அண்டங்கள். திரைந்

சருங. வெண்டேர் - கானல்.

சருச. 'தமதன்பர்' என்பது "நினதடியார்" (திருவா.) என்பதுபோல நின்றது. வணங்காதவரின் - தொழாதவரைப்போல. திக்கு - ஆதரவு; 'திக்குவேறில்லை' (அருணகிரியந்தாதி), 'திக்குவேறில்லை நீயே' (அருணாசலகவி ராமாயணம், சுந்தர.) சிறைநிறைந்த கொக்கு - பக்கத்தில் நிறைந்துள்ள மாமரம்; இறகு நிரம்பப்பெற்ற கொக்கென்னும் பறவை.

சருஎ. பஞ்சாக்கர தேசிகன் மாமரபு வாழி - ஸ்ரீ நமச்சிவாய தேசிகருடைய பரம்பரைவாழ்க.

உ

கிளவிக்கொத்து.

பக்கம்.

அறத்தொடுநிற்றல்	௫௧
இடந்தலைப்பாடு	௮
இயற்கைப்புணர்ச்சி	௨
இரவுக்குறி	௩௦
இரவுக்குறி இடையீடு	௩௫
இல்வாழ்க்கை	௬௩
உடன்போக்கிடையீடு	௬௨
உடன்போக்கு	௫௩
ஒருவழித்தணத்தல்	௪௪
ஓதற்பிரிவு	௭௧
கற்பொடுபுணர்ந்தகவ்வை	௫௬
காவற்பிரிவு	௭௨
கைக்கிளை	௧
தன்மனைவரைதல்	௬௯
துணைவயிற்பிரிவு	௭௩
தூதிற்பிரிவு	,,
தெளிவு	௭
பகற்குறி	௨௭
பகற்குறி இடையீடு	௨௬
பரத்தையிற்பிரிவு	௬௫
பாங்கற்கூட்டம்	௬
பாங்கிமதியுடன்பாடு	௧௩
பாங்கியிற்கூட்டம்	௧௭
பிரிவுழிக்கலங்கல்	௭
பிரிவுழிமகிழ்ச்சி	,,
பொருள்வயிற்பிரிவு	௭௪
மீட்சி	௬௦
வரைதல்	௬௩
வரைதல்வேட்கை	௩௮
வரைவிடைவைத்துப்பொருள்வயிற்பிரிதல் ...	௪௯
வரைவுகடாதல்	௪௧
வரைவுமலிவு	௪௯
வன்புறை	௫

செய்யுண் முதற்குறிப்பகராதி.

செய்யுள்.	பக்கம்.
அக்குரகம்	55
அகளனெங்கோ	55
அங்குங்கும	73
அங்கோகழி	48
அடிகளெங்கோ	51
அடையார்புரஞ்	13
அணைமலர்க்கஞ்சி	54
அதரெதிர்	6
அந்நாள்வரு	57
அப்பற்ற	27
அம்பலம்புகு	29
அயிற்றிரி	59
அரங்கவை	58
அரக்தொட்ட	17
அரிதாங்குயி	39
அருங்கடி	38
அருளாவடு	17
அழுந்தவின்	44
அள்ளற்பழன	5
அளைவா	40
அறிந்தில	68
அறியாமை	34
அறைவாயி	41
அன்றுமென்பூ	57
அனமும்பிடியு	24
ஆசிலக்கன்னி	10
ஆட்டுகக்	34
ஆடவீர்	58
ஆடிச்சிவக்	69
ஆடுந்திரவி	70
ஆடுமென்றே	47
ஆயவெண்ணி	24
ஆயிரமென்	53
ஆயினங்கோ	24
ஆர்ப்பரவ	35
ஆரத்தலர்	39
ஆரகவென்	21
ஆராயுநாண்	42
ஆலடியார்	64
ஆவித்துணை	7
ஆவியொன்	69
ஆறுச்சின	40
ஆறேந்துசென்	16
ஆன்றவர்வந்து	61
ஆனூர்துவச	63
இகத்திலுமெய்	33
இங்கேதசா	36
இடர்கெடுத்தா	44
இடையாவரு	33
இணையார்திரு	20
இந்நானிலத்	74
இரவியந்தே	48
இருகோடிவர்	13
இருங்கல	66
இருங்கன்னி	5
இருந்தாமரை	2
இருநதாரணி	25
இருந்துணையா	73
இருமைக்கு	43
இலங்கியவா	25
இலவிதழ்	67
இழிவழிகாடி	42
இறைவனையாய்	31
இன்பார்துறக்	25
இன்றளவும்	50
ஈகையர்வா	37
ஈட்டும்வினை	49
உம்பர்க்கரசென்	15
உம்மைப்பிறவி	71
உமக்கேமுன்	19
உமையாளொனு	65
உயருந்தவத்	40
உயிரிற்சிறக்	54
உரக்கும்பன்	12
உரற்காற்	32
உருவார்வண்	35
உலம்பும்	47
உவருந்தி	66
உள்ளாரை	18
உள்ளீட்டினர்	22
உன்னருஞ்	44
எட்டாந்திரு	47
எண்கோட்டு	32
எண்ணிய	14
எண்ணும்பு	34
எம்பரமா	65
எம்போலிணங்	60
எளியார்க்கிரங்	35
என்பணி	74
என்புகல்	35
என்போடணி	62
என்னூதிய	25
ஏணித்தடங்	46
ஏதத்துட	68
ஏயும்விரக	64
ஏறேறுகோ	69
ஐயானன	67
ஐவனம்வித்	47
ஒண்ணந்தி	66
ஒருகேள்வி	52
ஒருதிருக்	55
ஒருவதுவை	60
ஒள்ளொளி	59
ஒற்றைப்பொரு	44
ஒன்றுயிரு	48
ஓங்கியசெம்	5
ஓங்குமெங்கு	23
ஓராழியங்கை	15
கங்கையஞ்	69
கட்டாரணி	3
கடப்பந்தொடை	36

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
கடுக்கண்ட	38	சலம்புரி	48	சேயானமே	15
சத்திகை	72	சீட்டர்கொண்	5	சேலாடுகண்	8
கமரேயிக்	63	சித்துக்கியான்	31	சேவார்பதா	37
கருங்காலத்	70	சிரத்தார்	44	சேவேறுசெம்	19
கருப்பாசங்	53	சிரமங்கை	64	சோரிந்தசொல்	38
கல்லாதுக	57	சிரமாலை	58	சொல்லும்பெரு	73
கலத்தார்	66	சிலவங்க	43	சொன்னலர்	27
கலராலறி	66	சிலைமேரு	28	சொன்னேசருக்	13
கலையேயமு	60	சீயாது	37	சோகந்தவிர்	33
கற்கண்டு	9	சீரியலா	26	சோணுடர்	5
கற்பாருமை	34	சீரேறுயர்	19	தக்கோர்பணி	14
கறைகொண்ட	72	சீரொப்பில்	8	தங்குவந்தார	45
காதரந்தீ	61	சீருடரவர்	53	தடக்கும்பராசி	15
காதாடும்வெண்	43	சுகந்தாவி	51	தடுத்துரையாத	38
காதும்பரச	19	சுடுங்கார்	73	தண்டாதகி	29
காந்திகொள்	59	சுத்தருக்கின்	48	தண்டுறைசை	60
காம்பார்வரை	60	சுராதிபர்	50	தண்ணங்குமுத	22
காயத்திரு	17	சுரும்பாடு	23	தண்ணூர்சிறு	68
கார்நாட்டு	19	சுரும்புறங்	70	தயங்கும்பிரசத்	43
காரொத்த	48	சுவையாரமிர்	49	தரையவர்	31
காரொன்று	41	சுழியொன்று	21	தலைவனெங்	64
காழிமன்ன	23	சுற்றியவார்	16	தவத்தின்பிக்	39
கிள்ளையஞ்	65	சுற்றுஞ்சடி	10	தவமேரு	44
கிளியாக	41	சூட்டம்பு	4	தழலத்தமே	75
குயிலாய	32	சூட்டழற்க	31	தழையெடுத்தா	25
குயிற்குல	7	சூடாமணி	18	தனத்தோட்டிணை	28
குவலையக்	33	சூலேந்துசெம்	10	தாயினுமின்ப	12
குழையேறு	23	சூழ்ந்தார்கலி	71	தாளையன்பர்	56
குறிதாம்பிறை	52	சூளாமணியெங்	72	திக்காடை	43
குனித்தருள்	74	சேங்காவி	34	திண்மூதரண	26
கூடத்தாடவல்	27	செங்கைத்	62	திருக்காவிரி	1[illegible]
கூற்றமுமஞ்சு	54	செக்காப்புல	71	திருத்தத்துறை	9
கூற்றுண்மை	45	செப்பகன்	59	திருநாணரவர்	53
கையாரநும்	62	செப்பறைபூண்	37	திருவாவடுதுறை	2
கையாழி	32	செம்பாதபத்	26	திருவீற்றிருந்த	46
கோங்குற்ற	56	செம்மலர்மா	3	திரையார்புனற்	16
கொய்யாள்	22	செய்யலர்வாச	39	தினைக்காடுகாக்	17
கோங்கேரின	18	செழிக்குந்துறை	25	தினைபோக	30
கோன்மாறி	42	செறிதேம்பொழி	36	தீவாயவெஃ	74
சத்தாமெம்	40	சென்னிக்கரு	36	துடியிடை	67
சதிர்கொண்ட	66	சேதாம்பல்	72	துண்டப்பிறை	2
சதுவேதர்	51	சேர்தற்கு	74	துத்தியராவணி	3
சரியோமது	61	சேவமுலேக்	51	துதிப்பார்	15

செய்யுள்.	பக்கம்.
துதியைப்பெறுங்	12
துப்பார்திரு	6
துய்யவெண்	20
துவ்வாவிட	21
துளரும்பொன்	46
துளவேயணி	11
துறந்தனரே	39
துறைஙீயுண்	26
தூண்டற்கரு	60
தூவேதவாசி	21
தெற்றியவார்	57
தென்கோகழி	67
தென்னரகூர்	22
தென்னவிர்	12
தென்னவடுதுறைச் செம்......சிலம்	8
தென்னவடுதுறைச் செம்......செழுங்	2
தேக்கர்தெரு	72
தேமாங்கனி	36
தேரணிவீதி	12
தேன்வருங்	11
தேன்றுஞ்சு	56
தேனக்கபூங்	62
தேனுங்கிழங்கு	26
தைக்கின்றவேர்	75
தொங்கலைம்	31
தொடுக்கும்	6
தொடைத்தே	52
தொண்டாரமை	45
தொத்திட்ட	16
தொம்மென	75
தொல்லாவடு	18
தொழக்கேத	37
தொழுதவர்க்	4
தொழும்புசெய்	17
தொனிகொண்ட	20
தோட்டார்கது	40
தோட்டெருக்	18
தோடேறுகள்	49
தோளுலிரண்	10
தோற்றமுங்கேடு	20
நகைத்கொடி	48

செய்யுள்.	பக்கம்.
கஞ்சமுதா	30
கஞ்சிக்கொடி	6
நடங்கொண்ட	12
நடத்திற்சிறக்	7
நடமேசெய	58
நத்துரையா	8
நந்தலைவாவி	32
நந்தாவளத்	25
நந்தித்தனி	49
நம்மனையாக்	30
நம்மாசிலாமணி	20
நல்லாவடுது...ளிக	13
நல்லாவடுது......நற்	'3
நல்லோர்பர	51
நலம்பாவுகம்	23
நவ்வியங்கை	70
நளியற்றவெஞ்	58
நற்பலதேவ	7
நற்றுய்க்கினி	61
நறைக்கோவை	1
நறையாரிதழியர்	20
நன்மானிடம்	•44
நன்னத்தின்	7
நாகத்திரு	3
நாவியம	28
நானேதுமெண்	8
நிதிவளர்கோ	55
நிரைதயுறும	41
நிரைக்கும்பகி	75
நிலக்கோர்பசும்	10
நிவந்தமராமர	55
நின்றுறைசை.	1
நீடுரின்கண்	53
நீதித்துறைசை	38
நீநதானெடும்	73
நீாகொணட	1
நீருண்டவார்	52
நீலார்முகின்	33
நெறிவார்குழலி	39
பஞ்சடிதாம	18
பஞ்சூட்டுமெல்	52
பண்ணையம்	42
பணிக்கடகம்	58

செய்யுள்.	பக்கம்.
பதவாரணத்த	15
பதியாதென்	16
பரசம்புயமலர்	50
பரம்புமலர்	54
பரிவேமருவி	62
பருக்குர்தன	14
பருங்கங்கு	30
பல்கியசீ	75
பல்லாரவண்ட	7
பற்றேதமி	57
பன்னுமத்தெய்	9
பனிச்சந்திர	11
பாட்டரியாலி	4
பாதலமோ	1
பாம்பிர்த்த	70
பாராட்டுசல்	67
பாரோர்விண்	27
பானத்தலா •	10
பானலம்போ	40
பிடிக்கத்தகு	24
பிடிவளமென்	35
பிரியாதவள்	17
பிறவாநெறி	6
பிறைவார்றுத	22
புகலுக்துதி	43
புயலாய்மி	55
புலைவிடையப்	64
புள்ளிப்புலியத	29
புனலுற்றபூ	71
பூமாரன்றே	56
பெண்ணுமை	14
பெருந்தவர்	62
பேதாதிபேதங்	63
பைஞ்சூரன்	33
பைம்போதி	11
பொருவென்	71
பொற்பயன்	43
பொற்றேர்	5
பொன்மறகோ	69
பொன்னணியாது	31
பொன்றேறி	16
போதார்புரி	73
போர்க்குஞ்சர	68

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
மகரக்கருங்	72	முடித்திட	22	வாடாதபோ	2
மஞ்சனமாட்டி	56	முடியாறு	49	வாமத்திலோர்	32
மடக்கொடி	68	முத்தமிழ்	9	வார்க்கும்ப	36
மடங்காத	23	முத்தலைவே	41	வார்தங்கு	28
மணந்தரு	61	முத்தியென்	15	வாழிதிருவா	75
மணிப்பார்த	41	முதிக்குறை	50	வானொன்று	45
மதிவைத்த	30	முற்றுமுலை	34	வானும்பரன்	64
மயில்போனட	11	முறுவற்படை	67	விடவாள்	27
மருக்கொண்டிட	47	மூன்வரக்கண்	61	விடைக்கண்	65
மருதாளுமூர	29	முன்னர்தடவரை	42	விடையார்	13
மருவளர்கோதை	75	முன்றுண்மறை	63	விண்ணுற்ற	4
மருவியகாதலர்	28	பூப்டாயிளை	6	விரையார்	67
மல்லார்மலை	26	மூலாகமங்	49	வில்லாரவே	21
மலங்காவகை	72	மூவாமுதல்வ	52	வில்விலங்கு	59
மழுவலனேர்தி	45	மூள்ளாவழலி	68	விழிகாட்டு	59
மழைதரு	14	மெய்வரக்	51	விளக்கமரு	11
மறைகட்கரிய	18	மெல்லதரத்	46	விற்படும்	19
மன்றேறி	28	மைப்போதன	50	விறப்பறியா	36
மன்னிருவாணி	9	மையார்கருங்	29	வீணர்க்கருமை	4
மனையநூவடு	20	மைவண்ணவார்	24	வீரியமாக	68
மாசிலைக்கா	8	வடிக்கணல்	19	வெங்கட்கரி	22
மாட்சியென்	28	வடியிட்ட	26	வெங்கான	55
மாண்டகுபூ	35	வடுப்பான்	24	வெட்டும்படை	37
மாணுர்கடு	53	வண்டார்	47	வெப்பார்வட	54
மாமன்றற்கை	49	வண்டிலதால்	9	வெள்ளாங்குரு	21
மாமேனிக்	14	வண்ணச்சடா	3	வெள்ளிப்பிறை	37
மாரனைநீறு	71	வயலாம்பல்	42	வேண்டும்பத	45
மாவேரிக்	46	வருணத்திற்	59	வேய்வந்து	24
மாற்கத்தரணி	30	வருமந்தமாதி	54	வேர்சூழ்ந்த	56
மின்னுக்கதிர்	6	வரையும்பொற்	64	வேலைநஞ்சு	57
மின்றேறு	23	வன்புடன்	54		

துணைவந்தவிநாயகர் துணை.